2015

# காலசுரபி

இதழ் – 06



## வரலாற்றுக் கழகம்

வரலாற்றுத்துறை

யாழ். பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலசுரபி

## இதழ் - 6
## 2014 / 2015

**இதழாசிரியர்கள்**

கோ. கிருஸ்ணானந்தி

க. மோகிலன்

**ஆசிரிய ஆலோசகர்**

கலாநிதி க. அருந்தவராஜா

வரலாற்றுக்கழகம்
வரலாற்றுத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்
இலங்கை
2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

மறைந்தும் எம் மனதை விட்டு மறையாத வாழ்நாள்

## பேராசிரியர் அமரர்.விநாயகமூர்த்தி சிவசாமி



மொழியில் புகழாகி
சமஸ்கிருதப் புயலாகி.................................... எம்
நினைவில் நிறைவான..................................
கல்வியில் கடலாகி....................................... எம்
நெஞ்சத்தில் நினைவான............................
வாழ்நாள் பேராசிரியர்
வி.சிவசாமி அவர்கட்கு
இவ்விதழ் சமர்ப்பணம்..................................!!

என்றும் உங்கள் நினைவுடன்.........................................
வரலாற்றுக் கழகம்
வரலாற்றுத்துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1



# யாழ்ப்பாணக் காசுகள்

இலக்கிய கலாநிதி வி.சிவசாமி

ஓய்வு பெற்ற சமஸ்கிருதப் பேராசிரியர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## அறிமுகம்

பழைய காலந்தொட்டு மனிதன் பயன்படுத்திவந்த சாதனங்களிலே நாணயமும் ஒன்றாகும். பண்டமாற்றில் மந்தைச்சிப்பிகள், சேகழி, உலோகத்துண்டுகள் முதலியன வெவ்வேறு காலங்களிலே மனிதனுக்குத் தேவையான பொருட்களைப் பெறுவதற்குப் பெறுமதியுள்ளனவாகப் பயன்படுத்தப்பட்டன. முடிவிலே நாணயம் உண்டாயிற்று. மனித நாகரிக வரலாற்றிலே குறிப்பாக பொருளாதார வரலாற்றிலே நாணயத்தின் தோற்றமும் வளர்ச்சியும் புரட்சிகரமான ஒரு சம்பவமாகும். இலங்கையிலே கி.மு. ஆறாம் நூற்றாண்டு தொட்டாவது நாணயங்கள் புழக்கத்திலிருந்து வந்தன. ஈழத்தின் பிற பகுதிகளைப் போலவே வடக்கிலுள்ள யாழ்ப்பாணக்குடாநாட்டிலும் நீண்டகாலமாக மனிதன் நடமாடி வருகின்றான் என்பதற்கு நாணயங்களும் சான்றாகும்.

## கிடைக்குமிடங்கள்

யாழ்ப்பாணத்திலே வெவ்வேறு காலத்தைச் சேர்ந்த நாணயங்கள் பல்வேறு தொகைகளிலே கந்தரோடை, வல்லிபுரம், நாகர்கோவில், புலோலி, மட்டுவில், நல்லூர், கோப்பாய், அச்சுவேலி, கொக்குவில், மானிப்பாய், பண்டத்தரிப்பு, தெல்லிப்பழை, தொல்புரம், வட்டுக்கோட்டை, அல்லைப்பிட்டி, மண்கும்பான், நாரந்தனை, புங்குடுதீவு, முதலிய இடங்களில் கிடைத்திருப்பினும் கந்தரோடை, வல்லிபுரம் ஆகிய இடங்களே இன்றைய நிலையிலே தொல்பொருளியற் களஞ்சியங்களாகும். கி.மு. ஆறாம் நூற்றாண்டு தொடக்கம் இக்காலம்வரை உள்நாட்டு வெளிநாட்டு நாணயங்கள் தொடர்ச்சியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலிரு இடங்களிலும் கிடைத்துள்ளன. பிற இடங்களிலே குறிப்பிட்ட ஒரு காலத்தைச் சேர்ந்த நாணயங்களே கிடைத்துள்ளன. பல இடங்களிலே கிடைத்துவரும் நாணயங்களைப் பற்றிய விபரங்களோ அவை எவ்வாறு மறைகின்றன என்பது பற்றியோ ஒன்றும் தெளிவில்லை. யாழ்ப்பாணத்திலே கிடைத்துவரும் நாணயங்களைப்பற்றி திரு.போல், இ. பீரிஸ், எச். டபிள்யூ கொட்றிங்ரன், முதலியார் செ.இராசநாயகம், சுவாமி ஞானப்பிரகாசர் போன்ற அறிஞர்கள் ஆராய்ந்துள்ளனர். பெருமழையின் பின்னரோ, நிலத்தினைப் பயன்படுத்தும் போதோ, கட்டிடத்திற்கு அத்திவாரம் வெட்டும்போதோ, மண் வெட்டும்போதோ, பல காசுகளும் பிற தொல்பொருளியற் சின்னங்களும் இன்றும் வெளிப்படுகின்றன.

**புராணஸ்**

இந்தியாவிலும் ஈழத்திலும் கிடைத்துள்ள காலத்தால் முந்திய பழைய நாணயங்கள் புராணஸ் (பழைய) என்ற வகையினைச் சேர்ந்தவை. இவை கராஷாபண என வடமொழியிலும் கஹாபனு எனப் பாளி மொழியிலும் கஹவணு என ஆதிச் சிங்கள மொழியிலும் அழைக்கப்பட்டன. இவை பொன், வெள்ளி, செம்பு, முதலிய உலோகங்களாலானவை. பரவலாக இந்தியாவிலும், ஈழத்திலும் இவ்வகைக் காசுகள் கிடைத்துள்ளன. யாழ்ப்பாணத்திலே கந்தரோடை, வல்லிபுரம் முதலிய இடங்களிலே கிடைக்கின்றன.

இவை பெரும்பாலும் நீள்சதுர வடிவின. பிந்திய காலத்தவை சில வட்டமானவை. ஒரு சில முட்டை வடிவின. தடிப்பும் கூடியவை. சராசரியாக 56 கிறெயின்ஸ் நிறை கொண்டவை. கந்தரோடையிலே கிடைத்தவற்றுட் சில வெள்ளியால் ஆனவை. சில வெள்ளிமுலாம் பூசப்பெற்ற செப்புக்காசுகள். சில முற்றாகவே செப்புக்காசுகள் பொற்காசுகளும் உண்டு. இவையனைத்தும் உலோகத் தகடுகளை நீட்டாக அடித்து வெட்டப்பட்டவை. தேவையாயின் அவற்றின் மூலை ஓரங்களும் வெட்டப்படும். முன்புறத்திலும், சிலவேளை இரு புறங்களிலும் இலச்சினைகள் குத்தப்படும். பின் புறத்தில் இலச்சினைகள் குறைவு அல்லது இல்லை. சிலவற்றில் ஒன்றுக்கு மேற்பட்ட இலச்சினைகள் அழுத்தமாகக் குத்தப்பட்டிருக்கும்.

இந்தியாவிலே கிடைத்துள்ள புராணஸ் காசுகளிலே முந்நூறுக்கும் மேற்பட்ட இலச்சினைகள் உள்ளனவாக அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர். இலங்கையிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைத்தவற்றிலே சூரியன், மிருகம், பறவை, ஸ்வதிகா மரம், பிறை, சக்கரம், சைத்யம் முதலியன காணப்படுகின்றன. இக்காசுகள் சுமார் கி.மு 1000 தொடக்கம் இந்தியாவிலே வழங்கிவருவதாகக் கூறப்பட்டிருப்பினும் இலங்கையிலே கி.மு ஆறாம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி.இரண்டாம் நூற்றாண்டு அல்லது சற்றுப் பிந்திய காலம்வரை நிலவின எனலாம். இவற்றைத் தொடக்கத்திலே சமயக்குழுவினர், வணிகக் குழுவினர் போன்றோர் வெளியிட்டனர். காலப்போக்கில் இவை மன்னரின் அனுமதியுடன் வெளிவந்தன. இதனாற்தான் சமயக்குறிகள், குழுக்குறிகள் இவற்றிலிடம்பெற்றன. இவற்றில் சில இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்டவை வேறு சில இலங்கையிலே வெளியிடப்பட்டவை.

இவ்வகை நாணயங்களோடும் குறிப்பாக அவற்றைத் தொடர்ந்தும் குத்தப்பட்ட இலச்சினைகள் ஒன்றாக வார்க்கப்பட்டு உருவாக்கப்பட்ட காசுகள் (Die struck coins) வெளிவந்தன. முதலில் ஒரு புறத்திலும் பின் இருபுறங்களிலும் இலச்சினைகளிடம் பெற்றன. பின்புறத்தில் அச்சுமூலம் அழுத்திய இலச்சினைகளும் உள்ளன. இக்காசுகளில் சில நீள்சதுரவடிவானவை, சில வட்டமானவை, வேறுசில நீண்டுருண்டவை. யானையும், ஸ்வஸ்திகாவும், பிற சின்னங்களும், முன்புறத்திலே தடிமேலே ஸ்வஸ்திகாவும் வேதிகையும், நந்திபாதமும் பிறையும் உள்ளன. சிலவற்றிலே புத்தசக்கரமும் சைத்யம் முதலியனவும் இடம்பெற்றுள்ளன. சிலவற்றின் முன்பக்கத்திலே வேதிகையிலுள்ள கொடித்தம்பத்தை நோக்கி யானையும் அதற்குமேலே வட்டமான கோவில் அல்லது தூணுள்ள வீடு அல்லது கொட்டில் போன்றவையும், வேறுசில சின்னங்களும் உள்ளன. இவை பழைய பாண்டியக் காசுகளாயிருக்கலாமெனத் திரு. போல். இ . பீரிஸ் கருதியுள்ளார். யானை பாண்டியரின் பழைய இலச்சினையாகும். சிலவற்றில் எருது காணப்படுகின்றது. பிடரிமயிரில்லாச் சிங்கம் பொறிக்கப்பட்டுள்ளன. நாணயம் மகாசேனன் காலத்தவையெனக் கொட்றிங்ரன் குறிப்பிட்டுள்ளார். கந்தரோடையிலே போல் இ . பீரிஸ் சேகரித்த காசுகளிலே இந்தியாவிலுள்ள மால்வாக் காசுகளிற் காணப்படும் உஜ்ஜயினி இலச்சினை (தர உள்ள இருவட்டங்கள்) யும் சதகணிச என்ற வாசகம் உள்ள காசு ஒன்றும் இருந்தது. இது சாதவாஹன காசாக இருக்கலாம்.

**லட்சுமி தகடுகள**

லட்சுமி பிளாக்குகள் அநுராதபுரம், சிலாபம், திஸ்ஸமஹாராம, நிந்தாவூர் போன்ற பிற இடங்களிலே கிடைத்திருப்பினும் யாழ்ப்பாணத்தில் கிடைத்தவையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்த்தியானவை எனப் போல் இ.பீரிஸ் குறிப்பிட்டுள்ளார். இவை நீள்சதுர வடிவானவை. ஈயம், செப்பு, இரும்பு, சிலிக்கா, நிக்கோல் முதலியன கொண்டுசெய்யப்பட்டவை. இவற்றின் முன்பக்கத்திலே தாமரையாசனத்திலே நிற்கும் நிலையிலே லட்சுமி விளங்குகிறாள். அவளின் இரு கரங்களிலும் கமலங்கள் திகழ்கின்றன. இரு மருங்கிலும் யானைகள் நீர் சொரிகின்றன. சிலவற்றிலே பின் புறமாக ஒளிவட்டம் காணப்படுகின்றது. இவ்வாறு கஜலட்சுமி அழகாக மிளிர்கின்றாள். பின்புறத்திலே வேதிகையிலுள்ள ஸ்தம்பத்தின்மீது ஸ்வஸ்திகா முழுநீளத்திற்கும் காணப்படுகிறது. இக்கஜலட்சுமி நாணயங்கள் வைஷ்ணவ சின்னமாகவும் விளங்குவன. லட்சுமி செல்வத்திற்கு இறைவி திருமாலின் சக்தி.

***சிங்கக்காசு***

பிடரி மயிருள்ள சிங்கம் பொறித்த சில காசுகள் கந்தரோடையிலே கிடைத்துள்ளன. சிங்கம் முன்பக்கத்திலும், மூன்று புள்ளிகளடங்கிய வட்டம் பின்பக்கத்திலும் காணப்படுகின்றன. ஒன்றின் பின்பக்கத்திலே கிளையுள்ள மரமுள்ளது. அழகிய சிறு காசு ஒன்றிலே சிங்கம், முக்கோண இலச்சினை என்பன முன்பக்கத்திலும், ஸ்வஸ்திகா பின்பக்கத்திலும் காணப்படுகின்றது. இக்காசு கி.பி. இரண்டாம் அல்லது மூன்றாம் நூற்றாண்டுகாலப் பல்லவக் காசு எனப் போல். இ.பீரிஸ் கருதினார். சிங்கம் பொறித்த மேற்குறிப்பிட்ட காசுவகை இலங்கையிலே அநுராதபுரம் போன்ற இடங்களிலே தென்னிந்தியாவிலும் பார்க்க அதிகமாகக் கிடைப்பதாலேயும், தேசிய சின்னமாகையாலும் இவ்வகை இலங்கைக்குரியதெனக் கொட்றிங்ரன் கருதினார். ஆனால் பல்லவ சின்னங்களிலே சிங்கம் பிரபல்யமாக இடம்பெற்றுள்ளது. இது பற்றிய விரிவான ஆய்வு அவசியம். பல்லவரும் இத்தகைய காசுகள் வெளியிட்டுள்ளமை குறிப்பிடற்பாலது. சமீபகாலத்தில் இது போன்ற சிங்கம் பொறித்த காசு திருக்கேதீஸ்வரத்திலும் கிடைத்தது. அதன் முன்பக்கத்திலே சிங்கமும், பின்பக்கத்திலே பூரணகும்பமும் அயலிரு புறங்களிலும் சிறு குத்துவிளக்கு போன்றவை காணப்படுகின்றன. இவ்வகை நாணயம் பல்லவக்காசு என டி.பி.ஹெற்றியாராச்சி என்ற அறிஞர் குறிப்பிட்டுள்ளார். சில காசுகளில் ஏரிக் கட்டுள்ள எருது நிற்கும் நிலையிலே முன்பக்கத்திலும், சக்கரம், மறுபுறமும் உள்ளன. பல்லவரின் பிரதான இலச்சினையாகவும் எருது மிளிர்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முக்கியத்துவம்**

மேற்குறிப்பிட்ட காசுகளிலே காணப்படும் ஸ்வஸ்திகா போன்ற சின்னங்கள் சைவம், பௌத்தம், வைணவம் போன்ற இந்திய சமயங்களுக்குப் பொதுவானவை. எருது போன்றவை சைவம் சார்பானவை. கிறிஸ்து ஆண்டிற்குச் சற்று முன், பின் காலத்திலே வடமேற்கு இந்தியாவிலாட்சிசெய்த இந்தோ - கிரேக்கர் குறிப்பாகக் குஷாணர் போன்றோர் நாணயங்களிலே எருது, சூலம் போன்ற சின்னங்கள் காணப்படுவதும் குறிப்பிடற்பாலது. லட்சுமி நாணயம் வைணவத் தொடர்பைக் காட்டுவதாம்.

**உரோமக்காசுகள்**

உரோமப் பேரரசிற்கும் (கி.மு. இரண்டாம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு வரை) இலங்கை, இந்தியா போன்ற கீழ் நாடுகளுக்குமிடையிலே நெருங்கிய வர்த்தகத் தொடர்புகள் குறிப்பாக கி.பி.முதல் ஐந்து நூற்றாண்டுகளிலே நிலவின. இதன் விளைவாகப் பெருந்தொகையான உரோமக்காசுகள் இந்நாடுகளிற்கு இறக்குமதியாயின. இவை பொன், வெள்ளி, செம்பு முதலிய உலோகங்களாலானவை. மேலும் தமிழ்நாட்டிலுள்ள புதுச்சேரியிலும் உரோமக்காசுகள் வெளியிடப்பட்டன. இந்தியாவினைப் போன்று இலங்கையிலும் அநுராதபுரம், சிகிரியா, கந்தரோடை, வல்லிபுரம், திருக்கேதீஸ்வரம் முதலிய பல இடங்களிலே உரோமக்காசுகள் கிடைத்துள்ளன. இந்நாணயங்களின் முன்பக்கத்திலே பொதுவாக இறந்த அல்லது சமகால உரோமப் பேரரசின் கிரீடம் தரித்த தலையும் அவரின் பெயரும் காணப்பட்டன. பின்பக்கத்திலே ஒன்று அல்லது மூன்று போர்வீரர் அல்லது சிலுவை முதலிய உருவங்கள் காணப்பட்டன.

கந்தரோடையிலே கிடைத்தவற்றுள் பெரும்பாலானவை கி.பி.நான்காம், ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. ஒகஸ்தஸ்சீசர் காலத்தனவும் (கி.பி.முதலாம் நூற்றாண்டு) சில கிடைத்ததாகத் தெரிகின்றது. இக்காசுகள் பொதுவாக செம்பாலானவை. விளிம்பிலே சுற்றிவரச் சிறு புள்ளிகள் உள்ளன. உரோமக்காசுகள் கி.பி.ஆறாம் நூற்றாண்டிலும் புழக்கத்திலிருந்தன. உரோமக்காசுகளைப் பின்பற்றியும் ஈழத்திலே காசுகள் வெளிவந்தன. மனித அதாவது அரசரின் வடிவம் தாங்கிய காசுகள் கி.பி 8ஆம், 9ஆம் நூற்றாண்டளவிலே வெளிவரலாயின. இதற்கு முற்பட்டகாலத் தென்னிந்திய அல்லது இலங்கைக் காசுகளிலே மனித வடிவம் இடம்பெற்றிருந்தது. ஆனால் வடஇந்தியக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குப்தர் காசுகளிலே மனிதவடிவமுண்டு. உரோமானிய சொலிடுஸ் என்பதை அடிப்படையாகக்கொண்டு இலங்கையிலே கலண்ட என்ற பொற்காசு வெளிவந்தது.

**இடைக்காலப் பாண்டியக்காசு**

(கி.பி.7-10ஆம் நூற்றாண்டுவரை) காலம்செல்லப் பாண்டியக் காசுகளிலே யானைக்குப் பதிலாக மீன் இலச்சினை இடம்பெற்றது. மீன் இலச்சினை பொறித்த சில நாணயங்கள் கந்தரோடையிலும் கிடைத்துள்ளன. ஒரு செப்புக்காசின் முன்பக்கத்திலே படுத்த நிலையிலே நந்தியும் பின்பக்கத்திலே இரு மீன்களும் உள்ளன. இது பாண்டியக்காசு.

**க' வணு**

பிந்திய அநுராதபுரக் காலத்தினைச் (கி.பி.6-10ஆம்நூற்றாண்டுவரை) சேர்ந்த நாணயங்களும் கஹவணு என அழைக்கப்படும். இவற்றிற் பல வகையுண்டு. இக்காலத்து நாணயங்கள் பொன், வெள்ளி, செம்பு ஆகியவற்றாலானவை. பெரும்பாலானவை பொற்காசுகளே. இவை வட்டமானவை. இந்நாணயங்களின் முன்பக்கத்திலே தோகி(வேட்டி), மேலாடை தரித்து கிரீடம் அணிந்து நிற்கும் நிலையிலே மனித அரசவடிவமுள்ளது. இடது கரத்தினை மடித்து ஏதோ (சக்கு அல்லது மலர்) வைத்திருக்கிறார். வலது கரம் தொங்குகிறது. சிலவற்றில் ஒரு புறத்திலோ இருபுறங்களிலுமோ விளக்குகள் காணப்படுகின்றன. புள்ளியுள்ள அல்லது இல்லாத நான்கு சிறு வட்டங்கள் உள்ளன. பின்பக்கத்திலே அரசர் இருக்கும் நிலையிலே காணப்படுகிறார். சிலவற்றில் சதுரக்கோடிழுத்த ஆசனம் உண்டு. இடது கரத்தினை முற்பக்கத்தினைப் போலவே வைத்திருக்கிறார். தோகி, கிரீடம் அணிந்துள்ளார். வலது கரம் முழந்தாளிலுள்ளது. இடப்புறமாக ஸ்ரீலங்காவிபரம் (அல்லது ஸ்ரீலங்கேஸ்வர) என்ற வாசகம் மூன்று வரிகளிலே நாகர் எழுத்திலுள்ளது. சில காசுகளிலே மன்னர் பிறை, அல்லது தாமரைமலர், சங்கு, மல்லிகைப்பூ, சக்கரம் போன்றவற்றினை, இடக்கரத்திலே முன்பக்கத்திலும் பின்பக்கத்திலும் கொண்டுள்ளார். இங்கு காணப்படும் மனித உருவம் காத்தற் கடவுளான திருமால் எனவும் சில அறிஞர் விளக்கமளிப்பர். நாடு காக்கும் மன்னரைத் திருமாலாக கொள்வதுண்டு "திறவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேன்" என ஆழ்வார் ஒருவர் குறிப்பிட்டுள்ளமை கவனித்தற்குரியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்குறிப்பிட்டதன் அரைவாசிக்காசு அர்த்த கஹவணு எனவும் காற்பகுதி பல அல்லது தெக எனவும் எட்டிலொன்று அக எனவும் கி.பி 8-10ஆம் நூற்றாண்டுவரை அழைக்கப்பட்டன. இவை சிறியவை. மேற்குறிப்பிட்ட காசிலுள்ள இலச்சினைகள் சில இவற்றிலும் உள்ளன. இவற்றிலே ஸ்ரீலங்கா என்ற வாசகம் நாகர் எழுத்திலுமுள்ளது. சிலவற்றிலே லட்சுமி நிற்கும் நிலையிலே தாமரை மலரிலே காணப்படுகிறார். மறுபுறத்திலே லட்சுமி என்ற வாசகமும் நாகர் எழுத்திலுமுள்ளது. வேறு சிலவற்றிலே அர்த்தசந்திரன், தாமரைப்பூ முதலியனவும் நந்தக அல்லது உரக அல்லது தரக அல்லது இரக அல்லது கரக என்ற வாசகம் நாகர் எழுத்திலும் காணப்படுகின்றது. இந்நாணயங்களிலே பெரும்பாலும் வட இந்திய நாகர் எழுத்துப் பயன்படுத்தப்பட்டதிலிருந்து இவை நாட்டு வர்த்தகத்திற்கும் பயன்படுத்தப்பட்டமை குறிப்பிடற்பாலது. நாகரி லிபி வடமொழியினை எழுதுவதற்கே பயன்படுத்தப்பட்டதாகும். இந்திய லிபிகளில் தாய் லிபியாக விளங்கிய பிராமி லிபியிலிருந்தே தற்கால இந்திய லிபிகள் அனைத்தும் பிரதேசவாரியாக வளர்ந்து, பிரதேச மொழிகளை எழுதுவதற்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. குப்தர் காலத்திலேயும், அதற்குப் பின்னரும் வடமொழியினை எழுதுவதற்கு வடஇந்தியாவில் உருவாக்கப்பட்டுவந்த லிபியே நாகரி லிபியாகும். வடமொழி இந்தியப் பொதுமொழியாக மட்டுமன்றி இலங்கை, தென்கிழக்காசியா, மத்தியஆசியா முதலியவற்றின் பொது மொழியாகவும் பல நூற்றாண்டுகளாக விளங்கிவந்தமை குறிப்பிடற்பாலது. மேற்குறிப்பிட்ட வகையினைச் சேர்ந்த நாணயங்கள் சில கந்தரோடையிலும் கிடைத்துள்ளன. இந்நாணயவகை குப்தர்கால (கி.பி4-6ஆம் நூற்றாண்டுவரை) நாணயச்சாயல் கொண்டவை. இவற்றிலே காணப்படும் உருவங்கள் குறிப்பாக மன்னர் உருவங்கள் சில குப்த நாணயவியலின் சாயலை நினைவூட்டுவன.

**மத்தியகால நாணயங்கள்**

கி.பி.பதினோராம் நூற்றாண்டு தொடக்கம் பதினாறாம் நூற்றாண்டு வரையுள்ள இலங்கையிலே வெளிவந்த நாணயங்களிலே பொதுவான அம்சங்கள் சிலவற்றைக் காணலாம். இவற்றின் முன்புறத்திலே அநுராதபுரகாலப் பிற்பகுதி நாணயங்களைப்போன்று நிற்கும் நிலையிலும் பின்புறத்திலே இருக்கும் நிலையிலும் மன்னர் காணப்படுகின்றார். பின்புறத்திலே மன்னருடைய பெயர் நாகரி லிபியிலே பொறிக்கப்பட்டுள்ளது. முன்னையவற்றினைப் போன்று நாணயத்தின் விளிம்பிலே சுற்றிவரச் சிறு புள்ளிகள் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னுடைய பெயரினை நாணயத்திலே முதன் முதலாகப் பொறித்த சிங்கள அரசன் முதலாம் விஜயபாகுவாகும். (1055-1110). இவனுக்கு முன் இலங்கையைக் கைப்பற்றி ஆண்ட சோழப் பெருமன்னர் (985-1070) குறிப்பாக முதலாம் ராஜராஜன் அநுராதபுர முடிவுகால ஈழ நாணயங்களை வெளியிட்டான். இவற்றிலே ஸ்ரீலங்காவிபுர என்ற வாசகம் காணப்பட்டது. ராஜராஜனின் பெயர் ஸ்ரீராஜராஜ என அதில் இடம் பெற்றது. இவ்வகை நாணயங்கள் இலங்கையிற் புழக்கத்திற்காக அடிக்கப்பட்டவையாம். ஆனால் ராஜராஜனுக்கு முன்பே ஈழக்காசுகள் தமிழகத்திலே வியாபாரத்திற்காக புழக்கத்திலிருந்தன. இவற்றை ஈழக்காசு எனவும் 'ஈழமனிதன்' பொறித்த காசு எனவும் தமிழகத்தில் அழைத்தனர். ராஜராஜன் தொடங்கிய முறையினைப் பின்பற்றி விஜயபாகு தன் பெயரிலே தரம் குறைந்த பொன், வெள்ளி ஆகியவற்றில் ஓரளவும் பெருமளவு செம்பிலும் காசுகளை வெளியிட்டான். இவற்றிலே மன்னர் பெயர் ஸ்ரீவிஜயபாகு என நான்கு வரிகளிலே காணப்படுகிறது.

இம்மன்னனுக்குப்பின் முதலாம் பராக்கிரமபாகு (1153-1186) அவனைப் போலவே தன் பெயரிலே (ஸ்ரீ பராக்கிரமபாகு) மூன்று உலோகங்களிலும் காசுகள் வெளியிட்டான். அவனுக்குப் பின் பொற்காசு, வெள்ளிக்காசு மிக அருமையாகவே பயன்படுத்தப்பட்டது. வெள்ளி முலாம் பூசிய செப்புக்காசுகளும் வெளிவந்தன. நிசங்கமல்லன் (1187-1196), சோடகங்கன்(1196-1197), லீலாவதி(1197-1200), சாஹஸமல்லன்(1200-1202), தம்மாசோகதேவ(1208) முதலியோருடைய செப்புக்காசுகள் பெருந்தொகையாக யாழ்ப்பாணத்திலும் கிடைத்துள்ளன. எடுத்துக்காட்டாகப் பண்டத்தரிப்பிலே லீலாவதியின் நான்கு நாணயங்களும், மட்டுவிலிலே லீலாவதியின் அறுபது காசுகளும், சாகஸமல்லனின் அறுபதுகாசுகளும் கிடைத்துள்ளன. கந்தரோடை, வல்லிபுரம், தொல்புரம், புங்குடுதீவு முதலிய இடங்களிலும் சாஹஸமல்லனின் காசுகள் கிடைத்துள்ளன.

தம்பதெனிய காலத்திய (கி.பி.13-14ஆம் நூ.) காசுகள் யாழ்ப்பாணத்திலும் பல இடங்களிலே கிடைக்கின்றன. பராக்கிரமபாகு (குறிப்பாக இரண்டாம் பராக்கிரமபாகு) (1236-1270) விஜயபாகு (குறிப்பாக நாலாம்) (1270-1272), புவனேகபாகு (குறிப்பாக முதலாம் புவனேகபாகு) (1272-1284) காலத்திய காசுகள் கந்தரோடை, வல்லிபுரம், அச்சுவேலி, தெல்லிப்பழை, புங்குடுதீவு முதலிய இடங்களிலே கிடைக்கின்றன. 1972இலே தெல்லிப்பழையிலே இம்மூன்று அரசரின் ஏழு நாணயங்கள் முட்டியொன்றிலே திரு.ஆ.சிவநேசச்செல்வன் அவர்களுக்குக் கிடைத்துள்ளன. ஆனால் இம்முட்டியிலிருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல நாணயங்கள் வேறு நோக்கங்களுக்காக உருவாக்கப்பட்டுவிட்டன. இம்மூன்று மன்னர் காலத்திலே யாழ்ப்பாணத்திலே கலிங்கர், சாவகர், தமிழர் ஆகியோரினாதிக்கம் நிலவியதாலே இக்காசுகள் வியாபாரத் தொடர்பாலேதான் இங்கு கொண்டுவரப்பட்டன.

கோட்டையரசனான ஆறாம் பராக்கிரமபாகுவின் (1412-1467) நாணயங்கள் பல கந்தரோடை, வல்லிபுரம், புலோலி, நல்லூர், கொக்குவில் முதலிய இடங்களிலே கிடைத்துள்ளன. இவனின் காசுகளிலே சிங்கமும் பொறிக்கப்பட்டுள்ளது. இவன் சில காலமாக (1450-1467) யாழ்ப்பாணத்தையும் இணைத்து ஆட்சி செய்தவன். இதனாலிவனின் காசுகள் பல கிடைக்கின்றன வியாபாரத்திற்கும் இவை கொண்டுவரப்பட்டிருக்கலாம்.

சேதுநாணயங்கள்

கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதி தொடக்கம் கி.பி.1619 வரை யாழ்ப்பாணத்திலே தமிழ் மன்னர் ஆட்சி செலுத்தினர். இவர்கள் ஆரியச்சக்கரவர்த்திகள் என்ற குடும்பப் பெயராலும் அழைக்கப்படுவர். இவர்கள் தமக்கெனத் தனிப்பட்ட நாணயவகையொன்றினை வெளியிட்டனர். இந்நாணயம் சோழப் பெருமன்னர் (கி பி10-13 நூ.), சமகாலச் சிங்கள மன்னர் நாணயங்களைப் பின்பற்றிவந்த புதிய வகையெனலாம். இதன் முன்பக்கத்திலே நிற்கும் நிலையிலே மன்னர் உருவமுள்ளது. அவர் கிரீடம், தோகி, மேலாடை முதலியன தரித்துள்ளார். இருபுறங்களிலும் குத்துவிளக்குகள் உள்ளன. சிலவற்றிலே சூலமும் உண்டு. இடது கரத்தினை உயர்த்திச் சங்கு அல்லது மலர் வைத்திருக்கிறார். பின்புறத்திலே கம்பீரமான தோற்றமுள்ள எருது படுத்த நிலையிலே காணப்படுகிறது. அரசன் மேலே இளம்பிறையும் செ (சே)து என்ற வாசகமும் உள்ளன. சமகாலச் சிங்கள மன்னர் காசுகளிலே அரசரின் பெயர் இடம்பெறாது. யாழ்ப்பாண அரசர் தம் பெயரைக் குறியாது சேது என்ற வாசகத்தையே கொண்டனர். இது அவர்களின் இலச்சினைகளில் ஒன்றாகும். ஆரம்பகால நாணயங்களிலே பின்புறமாக நந்தியில்லை. ஆனால் மன்னர் உருவம் உண்டு. சிலவற்றிலே அழகிய தாமரைமலர் நடுவில் நந்தி விளங்குகின்றது. இந்நாணயங்கள் பெரும்பாலும் செப்பு உலோகத்திலே வெளிவந்தன. ஆனால் சிறிய அளவிலே பொன், வெள்ளிக்காசுகள் வெளிவந்ததாகத் தெரிகின்றது. இவை நல்லூர், கோப்பாய், மானிப்பாய், அச்சுவேலி, கந்தரோடை, வல்லிபுரம், நாகர்கோவில், மண்கும்பான் முதலிய பல இடங்களிலே கிடைத்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சோழ, பாண்டியப்பேரரசு நாணயங்கள்**

(கி.பி.10-14ஆம் நூ வரை) ஆதிக்கத் தொடர்பாலும் கலாசார, சமய வியாபாரத் தொடர்பாலும் சோழப் பெருமன்னர், பாண்டியப் பெருமன்னர் நாணயங்கள் இலங்கையின் பிற பகுதிகளினைப்போன்று யாழ்ப்பாணத்திலும் கிடைத்துள்ளன. நாரந்தனையிலே முதலாம் ராஜராஜன் காலத்திய செப்புக்காசுகள் குவியலாகக் கிடைத்துள்ளன. இவற்றுள் இருபத்தெட்டுக்காசுகள் யாழ்ப்பாண நூதனசாலையில் உள்ளன. இவற்றோடு வெளிவந்த ஆறு சேரக்காசுகள் தேய்ந்து விட்டன. விபரங்கள் தெளிவில்லை. கந்தரோடை போன்ற இடங்களிலும் சோழக்காசுகள் கிடைக்கின்றன. இரண்டாம் பாண்டியப் பேரரசு காலத்தைய (கி.பி13ஆம் நூ.) செப்புக்காசுகள் கந்தரோடை, நல்லூர் முதலிய இடங்களிலே கிடைத்துள்ளன. இப்பாண்டியக் காசுகளில் ஒருபக்கத்திலே மன்னர் நிற்கும் நிலையில் உள்ளார். மறுபுறத்திலே இரு மீன்களும் மன்னர் பெயர் அல்லது விருதுப் பெயரும் காணப்பட்டன.

**வீரராயர்பணம்**

கி.பி.14-17ஆம் நூற்றாண்டுவரை தென்னிந்தியாவிலே பல இடங்களில் புழக்கத்திலிருந்த 'வீரராயர்பணம்' என்ற வகையினைச் சேர்ந்த பொற்காசுகள் சில கந்தரோடை, வட்டுக்கோட்டை முதலிய இடங்களிலே கிடைத்துள்ளன. இவை வியாபாரத் தொடர்பாலோ சமய, கலாசாரத் தொடர்பாலோ அல்லது அரசியல் தொடர்பாலோ கொண்டு வரப்பட்டிருக்கலாம்.

**குஜராத் காசுகள்**

அல்லைப்பிட்டியிலே 1922இலே 179 குஜராத் பொற்காசுகளடங்கிய சாடியொன்று கிடைத்ததாம். ஆனால் இவற்றின் விபரங்கள் தெரியவில்லை.

**சீனக்காசுகள்**

கி.பி.பன்னிரண்டாம் நூற்றாண்டினைச் சேர்ந்த சீனக்காசுகள் சிலவற்றினைக் கோவையாகக் கந்தரோடையினைச் சேர்ந்த திரு.சி.பொன்னம்பலம் ஆசிரியர் பெற்றுள்ளார். இக்காசுகளுக்கு நடுவிலே துளையுண்டு. இவை இலங்கை - சீன வியாபாரத் தொடர்பாலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுவரப்பட்டவை. மேலும் சமகாலச் சோழப் பேரரசிற்கும் சீனாவிற்குமிடையிலே வர்த்தகத் தொடர்புகள் நிலவியமையும் குறிப்பிடற்பாலது.

## அராபியக் காசுகள்

வல்லிபுரத்திலே மத்தியகால அராபியக் காசுகள் சில கிடைத்துள்ளன. அவற்றின் விபரங்கள் தெரியவில்லை. கொடிகாமத்திலே வெளிவந்த மகமதியக் காசுகளின் விபரங்களும் அறியப்படவில்லை.

## ஐரோப்பியக் காசுகள்

கி.பி.16ஆம் நூற்றாண்டிலே வந்துவிட்டாலும் போத்துக்கேயர் ஆதிக்கம் 17ஆம் நூற்றாண்டு முற்பகுதியிலேதான் யாழ்ப்பாணத்திலேற்பட்டது. (1619-1658) இவர்களைத் தொடர்ந்து டச்சுக்காரர் (1658-1796), பிரித்தானியராதிக்கம் (1796-1948) என்பன நிலவின. இலங்கையில் இவர்களாட்சிக்குட்பட்டிருந்த பிற பகுதிகளினைப் போன்று யாழ்ப்பாணத்திலும் இவர்களின் நாணயங்கள் பல கிடைக்கின்றன. இவற்றுள் பெரும்பாலானவை செப்புக்காசுகள். வெள்ளிக்காசுகளும் குறிப்பிடற்பாலன.

இவ் ஐரோப்பியர் தத்தம் தாய் நாடுகளிலேயுள்ள நாணயவியலைப் பின்பற்றிக் கைப்பற்றிய நாடுகளின் சூழ்நிலைக்கேற்ப நாணயங்கள் வெளியிட்டனர். போத்துக்கேயக் காசுகளிலே பொதுவாக முன்பக்கத்திலே மரபுவழிச்சின்னமும் (Coat of arms), சுற்றிவரப் புள்ளி வட்டமும், கோடாக அமைந்த வட்டங்களும் உள்ளன. பின்பக்கத்திலே முன்பக்கத்தினை போன்று வட்டங்கள் உள்ளன. நடுவே மரபுவழிச் சின்னமும் நேராக ஐந்து கோடுகளும், குறுக்காக இருகோடுமுள்ள சதுரமுள்ளன. இவற்றின் நடுக்கோடு உயர்ந்துள்ளது. இச்சதுரத்தின் இருபுறமுமிவை வெளியிட்ட ஆண்டு இரண்டாகப் பிரித்துப் பொறிக்கப்பட்டுள்ளது. இதில் காணப்படும் சின்னம் எனப்படும் சில நாணயங்களின் பின் பக்கத்திலே (John the Baptist ) என்ற ஞானியின் உருவமுண்டு. சிலவற்றிலே சதுரத்திற்குப் பதிலாக முட்டை வடிவக் கோடுகள் உள்ளன. நல்லூர், கந்தரோடை போன்ற இடங்களிலே போத்துக்கேயக் காசுகள் கிடைக்கின்றன.

சிறிய பெரிய வளைவுகளிலே டச்சுக்காசுகள் யாழ்ப்பாணத்திலே நல்லூர், கந்தரோடை, வல்லிபுரம், நாகர்கோவில் முதலிய இடங்களிலே கிடைக்கின்றன. இந் நாணயங்களின் ஒருபுறத்திலே டச்சுக்கிழக்கிந்தியக் கம்பனியை குறிக்கும் V.O.C



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்துக்களும், வெளியிட்ட ஆண்டும் காணப்படும். சிலவற்றிலே பெறுமதியினைக் குறிக்கும் தமிழ் எழுத்துக்கள் உள்ளன. சில காசுகளின் மறுபுறத்திலேதான் ஆண்டு காணப்படுகிறது. சிலவற்றிலே இலையுடன் மலர்வளையம் உண்டு. புள்ளிகள் உள்ளன. சிலவற்றிலே சிங்காசனத்தை நோக்கிய கொடிகள், சிங்கங்களும் உள்ளன. டச்சுக்காரர் இலங்கையிலே யாழ்ப்பாணம், கொழும்பு முதலிய இடங்களிலும் இந்தியாவிலே மதுரை, நாகபட்டினம் போன்ற இடங்களிலும் வெளியிட்ட காசுகள் கிடைத்துள்ளன. நாகபட்டினக் காசுகளின் முற்புறத்திலே வீரராயர் பணத்திற்போன்று தேய்ந்துபோன மனித உருவமுண்டு. பின்பக்கத்திலே நாகபட்டினம் எனத் தமிழில் எழுதப்பட்டுள்ளது. பட்டேவிய நாணயமும் கிடைக்கிறது. யாழ்ப்பாணத்திலே சேது நாணயங்கள், மத்தியகாலச் சிங்கள மன்னர் நாணயங்கள், டச்சு நாணயங்கள் ஆகியனவே மிகக் கூடுதலாகக் கிடைப்பதாகக் கொட்றீங்ரன் குறிப்பிட்டுள்ளார்.

பிரித்தானிய மன்னர், கிழக்கிந்தியக் கம்பனி வெளியிட்ட நாணயங்கள் கிடைக்கின்றன. இலங்கையில் பிரித்தானியர் பத்தொன்பதாம் நூற்றாண்டு பயன்படுத்திய காசுகளிலே முடி தரித்த மன்னர் தலையும், பெயரும் ஒரு புறத்திலும் மறு புறத்திலே யானையும் ஆண்டும் காணப்படும் காசு குறிப்பிடற்பாலது. ஐரோப்பியர் காசுகளிலே ஆண்டு குறிப்பிட்டிருப்பது கவனித்தற்பாலது.

இவ்வாறு நெடுங்காலமாகப் பல்வேறு காசுகள் யாழ்ப்பாணத்திலே புழங்கி வந்தமையினை ஓரளவாவது அறியலாம். இலங்கையின் பிறபகுதிகளோடும் அயலிலுள்ள இந்தியா குறிப்பாகத் தமிழகத்துடனும் மேற்கே உரோமப் பேரரசு, அராபிய, ஐரோப்பா முதலிய நாடுகளுடனும் கிழக்கே சீனா முதலிய நாடுகளுடனும் யாழ்ப்பாணம் தொடர்புகொண்டிருந்ததை நாணயங்கள் ஓரளவாவது எடுத்துக்காட்டுகின்றன.

தொடர்ச்சியான வரலாற்று இலக்கிய மரபோ, சாசனவியல் மரபோ கிடைக்காமையாலே பூரணமற்றிருக்கும் யாழ்ப்பாண வரலாற்றின் சில இடைவெளிகளை நிரப்புதற்காவது நாணயவியல் உதவும். ஆனால் துரதிஷ்டவசமாக யாழ்ப்பாணத்திலே கிடைக்கும் காசுகள் செவ்வனே ஒன்று சேர்க்கப்படுவதில்லை. சில காசுகள் அவற்றின் உலோகப் பெறுமதிக்காக உருக்கப்படுகின்றன. புதிய நாணயங்களுக்காகப் பழைய காசுகள் பிறநாட்டவர்க்கும் உள்நாட்டவர்க்கும் விற்கப்படுகின்றன. எஞ்சியவையே திரு.சி.பொன்னம்பலம் போன்ற சில தனிப்பட்டவர்களின் சேகரிப்புக்களிலும், நூதனசாலைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேகரிப்புக்களிலும், வெளிநாடுகளிலுள்ள நூதனசாலைகளிலும், தனிப்பட்டவர் சேகரிப்புக்களிலுமுள்ளன யாழ்ப்பாணக்காசுகள் முறைப்படி ஆராயப்பட வேண்டும். யாழ்ப்பாணத்தில் அண்மையிலே தோற்றுவிக்கப்பட்டுள்ள யாழ்ப்பாணத் தொல்பொருளியற் கழகம் யாழ்ப்பாணத்தை தொல்பொருளியலைப் பேணிக்காப்பதிலும், அது பற்றிய தகவல்களையும் முக்கியத்துவத்தினையும் பொது மக்களுக்கு எடுத்துக்காட்டுவதிலும் ஈடுபட்டு வருகின்றது. எமது பூர்விக வரலாறு துலங்குவதற்கு நாணயவியலும் அவசியம்.

**பிற்சேர்க்கை**

பூநகரித்துறையில் லட்சுமி பிளக்குகள் மத்திய கால இலங்கை அரசர்களான புவனேகபாகு, பராக்கிரமபாகு, சகாஸமல்லன் காசுகள் சேதுநாணயங்கள் பிரித்தானிய போத்துக்கேய, டச்சு நாணயங்களும் கிடைத்துள்ளன. (1974-1975) இவை க.கிருஷ்ணமூர்த்தி DR.O விடம் உள்ளது.

**உசாத்துணை**


1. Codringtion H.W., (1924) *Ceylon Coins and Currency*, Colombo.
2. Elliot Sir Walter ., (1886) *Coins of Southern India* , London
3. Morgan E.V., (1965) *A History of Money Pelican original*. Great Britan.
4. Pieris P.E., (1919) *Nagadipa II Coins*, Journal of the Royal Asiatic Society Ceylon Branch. Vol. 72.
5. Sircar D.C., (1968) *Studies in Indian Coins*. Deli.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2



# வரலாறு என்றால் என்ன?

சி.கஜேந்தினி

வரலாறு (சிறப்புக்கலை)

நான்காம் வருடம்

## அறிமுகவுரை

வரலாறு என்பது மனிதப் பரிணாமத்துடன் பெருமளவிற்கு நெருக்கமான தொடர்புகளைக்கொண்ட ஒரு துறையாகும். இப்பதமானது மனிதர்கள் ஒவ்வொருவரும் தங்களுடைய வாழ்க்கையில் நாளாந்தம் மேற்கொண்டுவருகின்ற செயற்பாடுகளை உள்ளடக்கியதாகக் காணப்படுகிறது. இது முறையான காரண - காரிய அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்டுக் காலஒழுங்கில் முன்னெடுத்துச் செல்லப்படுகின்ற உண்மையான சம்பவங்களின் தொகுப்பாக உள்ளது. வரலாற்றைக் கற்கும்போது வரலாற்று நிகழ்வுகளின் ஊடாக உண்மையைத் தேடிச் செல்வதும், அதனூடாகச் சிறந்த வரலாற்றுப் பாரம்பரியத்தை ஆக்கிக்கொள்ளவும் முடிகின்றது. உண்மையில் வரலாறு என்றால் என்ன? என்பதற்கான விடையைப் பல அறிஞர்களும் பல்வேறு கோணங்களில் ஆராய்ந்தனர். ஆனால் அத்தகைய விளக்கங்கள் யாவும் இறுதியானவை அல்ல என்பது பின்வந்த அறிஞர்களின் கருத்தாகும். எனவே இக்கட்டுரையின் மூலமாக வரலாறு என்றால் என்ன? என்பதற்குப் பல்வேறு அறிஞர்கள் கூறிய வரைவிலக்கணங்கள் பற்றியும் வரலாற்றைக் கற்பதனால் ஏற்படுகின்ற பயன்பாடுகள் பற்றியும் நான் ஆராய முயல்கின்றேன்.

வரலாறு என்பது நம்பத்தகுந்த துணைகொண்டு ஆராயப்படுகின்ற கலை. காலத்துக்குக் காலம் வளர்ந்து வருகின்ற கல்வி. உலகில் எவருக்கும் எவற்றிற்கும் ஒரு வரலாறு உண்டு. எவரும் எவையும் வரலாறின்றி உலகில் இருக்கமுடியாது. மனிதன் ஏனைய உயிர்வாழ் சக்திகளிலிருந்து வேறுபட்டவன். பகுத்தறிவு கொண்டவன். சுயமாகச் சிந்திக்கும் ஆற்றல் படைத்தவன். கூடி வாழ்கின்றவன். அவனது நடத்தைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலருக்கு வழிகாட்டியாகவும் பாடமாகவும் காணப்படுகின்றன. இவை எல்லாவற்றினையும் விடவும் மனிதன் கடந்தகால, நிகழ்கால சம்பவங்களினை அறிந்துகொள்ளவும் ஆசைப்படுபவன்.

வரலாறு என்பது எளிமையான ஒரு சொல். ஆனால் அதன் பொருள் கடினமான தன்மை கொண்டது. இதனைச் சிலர் சரித்திரம் எனக் கூறுவர். இது இஸ்ரரி என்ற கிரேக்க மொழியிலிருந்து பெறப்பட்டது. அம்மொழியில் "இஸ்ரோறியா" எனப் பயன்படுத்தப்பட்ட வார்த்தையே ஆங்கில மொழியில் History எனப்பட்டது. 'இஸ்ரோறியா' என்பதன் பொருள் விசாரணை மேற்கொள்ளல் ஆகும். அந்தவகையில் விசாரணையின் மூலம் கிடைக்கின்ற இறுதிவடிமான தகவல்கள், அறிவு என்பனவையே வரலாறு எனப்படுகிறது.

**வரலாற்றின் ஆரம்பம்**

கிரேக்கர்களே தலைசிறந்த நாகரிகத்தினை உலகிற்கு வழங்கியதுடன் பிற்கால நாகரிகங்களுக்கெல்லாம் வழிகாட்டியாகவும் இருந்தனர். அதுமட்டுமன்றி அவர்கள் கொண்டிருந்த சிறப்புக்களிலொன்று அவர்களே முதன் முதலில் வரலாற்றினை எழுதியவர்கள் என்பதும், அதற்கு முதன் முதலாக வரைவிலக்கணம் வகுத்தவர்கள் என்பதுமே. வரலாறு மனிதனைப் பற்றி மட்டுமே ஆராய்கின்றது. உயிருள்ள, உயிரற்ற ஏனையவற்றின் வரலாற்றை ஏனைய இயல்கள் ஊடாக அறியமுடியும். கிரேக்கத்தில் வாழ்ந்த ஹெரடோரஸ் (Heradorous) (கி.மு 484 – 425) என்பவரே வரலாற்றின் தந்தையாகக் கொள்ளப்படுகின்றார். அவர் கிரேக்க மொழியில் பயன்படுத்திய Istoria என்ற சொல்லின் அடிப்படையில் History என்ற ஆங்கிலப்பதமும், வரலாறு என்ற தமிழ்ப்பதமும் உருவாகியது. மனிதர்கள் செய்துவந்த ஒவ்வொரு செயலும், அவர்கள் மனதால் கருதிய ஒவ்வொரு எண்ணமும், நாம் அவற்றைச் சரிவரத்தெரிந்து கொள்வதற்கு வேண்டிய ஆதாரங்களும் காலமுறைப்படி இருந்தால் அவை வரலாறாக மாற்றமடைகின்றது. அரசியல் திட்டங்கள், கோட்பாடுகள், மதக்கொள்கைகள், வேதாந்தங்கள், விவசாயம், கைத்தொழில், வாணிபம் முதலியவைகளும், மனிதர்களுடைய ஊண், உடை, உறையுள், நடத்தை, விளையாட்டு முறைகள் முதலியன எல்லாமே வரலாறு என்ற வரையறைக்குள் அடங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாறு என்பதற்குப் பல்வேறு வரலாற்றாசிரியர்களும், ஆய்வாளர்களும் பல்வேறுபட்ட வரைவிலக்கணங்களை வகுத்து வரலாற்றைச் செம்மைப்படுத்தியுள்ளனர். சிலர் வரலாற்றைத் துல்லியமான இலக்கணத்தால் வரையறுத்து அதனை விளக்க முற்படச், சிலர் வரலாற்றின்மீது தங்களது கோபங்களை வெளிப்படுத்தி அதனைத் தவறாகவும் வரையறுத்துள்ளனர். ஆனால் இதுவரையிலும் எந்தவொரு நபராவது வரலாறு என்றால் என்ன? என்று துல்லியமாக விளக்கவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. அவர்கள் தரும் விளக்கங்களும் ஒன்றுக்கொன்று முரண்பட்டதாகவே காணப்படுகின்றன. இருப்பினும் அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய விடையாகவோ, விளக்கங்களாகவோ, வரைவிலக்கணங்களாகவோ இவை காணப்படவில்லை.

**வரைவிலக்கணங்கள்**

கிரேக்கர்களே உலகில் முதன் முறையாக வரலாற்றினை எழுதி அதனைப் படித்து அதன் பயனை உணர்ந்தவர்கள். வரலாறு என்றால் என்ன? என்பதற்கு முதன் முறையாக இலக்கணம் வகுத்தவர்களும் இவர்களே. அந்தவகையில் கிரேக்கத் தத்துவஞானியாகிய ஹெரடோரஸ் என்பவர் வரலாறு பற்றிக் கூறும்போது "வரலாறு என்பது ஆராய்ச்சிகளின் விளைவாகப் பெறப்பட்டிருக்கும் தகவல்கள்" என்று கூறினார். அதாவது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களின் ஆராய்ச்சியின் பின்புலமாகக் கிடைக்கும் உண்மையான முடிவுகளே வரலாறு என்பது இவருடைய வாதம்.

"வரலாறு என்பது சான்றுகள் மூலமாக விளக்கும் தத்துவமே" என்று கி.மு 6ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கிரேக்கத் தத்துஞானியாகிய டயோனிசியஸ் (Dionysias) கூறுகிறார். இவரின் கருத்துப்படி வரலாறு பெரிய மனிதர்கள் பற்றிய உண்மைகளையும், அவர்களுடைய செயற்பாடுகள் பற்றிய தகவல்களையும் சேர்த்து வைத்துள்ளது. இந்த உண்மைகளும், செயற்பாடுகளும் பல தத்துவங்களை உலகிற்கு வெளிப்படுத்துகின்றன. மேலும் இந்தத் தத்துவங்கள் இவரைப் பொறுத்தவரை வரலாறு என்றால் என்னவென்று கூறாமல் இயல்புகளையே எடுத்துக்காட்டியுள்ளமை வரவேற்கத்தக்கதாக இல்லை.

கிரேக்க நாட்டில் வாழ்ந்த தலைசிறந்த தத்துவஞானியான அரிஸ்ரோட்டில் (Aristotle) என்பவர் வரலாறு எனப்படுவது "பொதுவான மிகவும் முக்கியமான பொருள்களைப் பார்க்கினும் விஷேடமானதுடன் நிர்வகிக்கப்படும் இலக்கியத்தின் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளையைப் போன்றது என்றும், மாற்றமுடியாத கடந்தகால நிகழ்வுகளைப் பற்றிய ஒரு தொகுப்பு" என்றும் கூறினார். அதாவது மனிதன் அவனுக்கு விருப்பமற்ற எதை வேண்டுமாயினும் (குடியிருப்பு, குடியுரிமை, மதம், மொழி, கலாசாரம், மனைவி, வேலை) மாற்றலாம். ஆனால் கடந்த காலத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளின் ஒரு பகுதினைக்கூட அவனால் மாற்றமுடியாது என்றார்.

காசார் (Cassar) என்பவர் வரலாறு என்பது "சரியான உண்மையான சாட்சியங்களை அறிமுகப்படுத்தக்கூடிய திருத்தமான அல்லது சரிநுட்பமான வரம்பற்ற ஒன்றாகும்" எனக் குறிப்பிடுகின்றார். அதாவது வரலாறானது இதுதான் என்று தீர்க்கமான முடிவுகளைக் கூறுவதுடன் அம்முடிவுகளுக்கு எல்லையே இல்லாத ஒரு பரந்த பரப்புக் கொண்டது என்றும் அவர் வாதிடுகின்றார். வரலாறு எனப்படுவது "சாத்தியமான எப்போதும் விபரிக்கக்கூடிய பல அறிக்கைகளின் திருத்தமான ஒரு படைப்பு" என்றும், அவை வைத்திருக்கக் கூடிய நிகழ்ச்சிகள் பற்றிய கதையே வரலாறு என்றும் தூசிடைடஸ் (Thusidides) குறிப்பிடுகிறார். அதாவது மனிதன் தனது வாழ்க்கையில் நடக்கின்ற ஒவ்வொரு நிகழ்ச்சிகளையும் மனதில் வைத்திருப்பதில்லை. முக்கியமான சம்பவங்களை நினைவில் வைத்திருக்கும்போது அது வரலாறாக உருவெடுக்கின்றது என்பது இவரது கருத்தாகிறது.

எந்த ஒரு தகவலும் மதிப்பீடு செய்யப்பட வேண்டும் என்றும் அதனூடாகப் பெறப்படும் தகவல்களே உண்மைத்தன்மை வாய்ந்ததாக இருக்கும் என்றும் உணர்ந்த சாள்ஸ் வி லெனிலொய்ஸ் (Chales.V.Lanlois) என்ற அறிஞர் வரலாறு எனப்படுவது பிறிதொரு விசேடமான, முனைப்பான ஒரு செய்தி அல்லது நிகழ்வுகள், சம்பவங்களின் ஒட்டுமொத்த கூட்டே என்கிறார். 1809ஆம் ஆண்டில் விதெம் வொண் ஹம்போல்ட்ற் (Withelm Von Humboldt) எனும் அறிஞர் வரலாறு என்பது நடந்த நிகழ்ச்சிகளின் பின் மறைந்திருக்கும் பல உண்மைகள், எண்ணங்களை வெளிக்கொணரும் அல்லது தேடிக்கண்டுபிடிக்கும் ஒரு செயல் என்றும் வரலாற்று ஆசிரியர்களின் மூலமாகக் கலந்தாலோசனை செய்யப்பட்ட ஒரு பாடமே வரலாறு என்றும் கூறினார். அதாவது கடந்தகால நிகழ்வுகளின் பின்புலமாகப் பலரது எண்ணத்தூண்டல்களும் அவற்றினூடாக நோக்கப்படும் உண்மைகளையும் சமூகத்தில் வெளிக்கொணர்ந்து அதனூடாக மற்றவர்களையும் விழிப்படையச்செய்யும் ஒன்றே வரலாறு என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்குலறி (Macaulay) என்பவர் வரலாறு என்பது "கடந்த காலங்களை மீட்டுக்கொண்டு வரும் ஒரு சார்பான முயற்சிகளின் சிந்தனைகளைத் திரும்பத்திரும்ப குறிப்பிடும் ஒரு வரைவிலக்கணமே" என்று கூறுகின்றார். அதாவது கடந்தகாலத்தின் நிகழ்வுகளைத் தேடிப்பார்பதற்கு ஒரு உந்து சக்தியாக வரலாறு தொழிற்படுகிறது என்றார். வரலாற்றிற்கான வரைவிலக்கணங்களில் விஞ்ஞானபூர்வமான கருத்துக்களும் இடம்பெறுகின்றன. இவ்வாறான கருத்தை முதன்மைப்படுத்தி ஹாபேர்ட் பொக்ஸர் அடம் (Harbert Baxter Adam) என்பவர் வரலாறு எனப்படுவது "விஞ்ஞான பூர்வமாகவும், சரித்திர ரீதியாகவும் ஏற்பாடு செய்யப்பட்டு உருவாக்கப்பட்ட மிக உயர்ந்தளவு செல்வாக்குகளின் தோற்றப்பாடே ஆகும்" என்றார். மேலும் ஜொக்சன் ரோமர் (Jocbson Turmer) என்பவர் "ஒரு வரலாற்றின் அடிப்படை மூலாதாரமான உண்மை யாதெனில் பிறிதொரு கண்டத்தில் ஏற்படுத்தப்படும் குடியிருப்புப் போன்று விசாலமானதாகும்" என்றும் கூறினார். அதாவது ஒரு இடத்தில் வாழ்வதை விடுத்து வேறொரு இடத்தில் நம் வாழ்க்கையை விஸ்தரப்படுத்தலைப் போல் வரலாற்றுத் தகவல்களையும் பல இடங்களில் பெற முயற்சிப்பதாகும் என்றார்.

பேர்டினன்ட் லொட் (Ferdinand Lot) என்பவர் "வரலாறு என்பது தற்காலத்து வழிவகைகளின் தீர்க்கமான சிந்தனைகளாக அமையும் மிகத் தலைசிறந்த ஒரு ஆரம்பப்புள்ளி" என்றார். வரலாறு என்பது "விஞ்ஞான ரீதியாக வளர்க்கப்பட்ட பல பழைய சிறந்த நிகழ்ச்சித் தொடர்களை மீண்டும் மீண்டும் ஞாபகப்படுத்திப் புத்துயிர் அளிப்பதே" என்று ஜோசேப் செலிகர் (Joseph Scalliger) கூறுகிறார். அத்துடன் ஜே.பி.பியூரி (J.B.Bury) என்பவர் வரலாறு என்பது "ஒரு விஞ்ஞானமே அதற்கு அதிகமுமில்லை குறைவுமில்லை" என்றார். ஆனால் இது முற்றிலும் உண்மை என்று கருதமுடியாது. வரலாற்றிற்கு அடிப்படையாக நிற்கும் மூல ஆதாரங்கள் அவை உள்ளபடியே எல்லோரும் அறிந்து பயன்படுத்தும் விதத்திலே வெளியிடுவதில் விஞ்ஞான முறைகளைப் பின்பற்றுதல் மிக இன்றியமையாதது ஆகும்.

ஆர்.ஜி.கொலிங்வூட் (R.G Collingwood) என்பவர் வரலாறு என்பது "ஒரு மனிதனானவன் யார்? அவன் என்ன செய்திருக்கின்றான்? போன்ற போதனைகளைக் கற்பிக்கிறது" என்றார். அதாவது வரலாற்றின் மூலமே மனிதனின் தோற்றம், பரிணாம வளர்ச்சி, கடந்து வந்த பாதைகள் என்பன தெளிவாக்கப்படுவதுடன் வரலாற்றுக் காலத்திற்கு முன் அவன் என்ன செய்தான் என்பதனையும் ஒழுங்குமுறைப்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறப்படுகிறது என்றார். மேலும் வரலாறு என்பது ஏனைய பாடங்களின் ஒரு சிறப்பான நுழைவாயில் என்றும் வரலாற்றின் நோக்கம் ஒரு குறித்த செய்தியின் ஒரு நிலையைப் பற்றித் தெளிவாக அறிந்துகொள்ளல் என்றும் அவர் கூறினார்.

பிறட்லி (Bardley) என்பவர் வரலாறானது "வெவ்வேறு நிலமைகளில் பலவாறாகச் செயற்படும் மனித வர்க்கத்தின் ஒரு சிறந்த கதை" எனக் குறிப்பிடுகின்றார். அதாவது "வரலாறு மனிதனுடன் தொடர்பு கொண்டது மட்டுமல்லாது அவனுடைய வாழ்க்கையை வெவ்வேறு திசைகளில் ஆராய்கின்ற துறை" என்றும் கூறினார். மேலும் ட்றெவிலியன் (Trevalian) என்பவர் "வரலாறு என்பது ஒரு தனிப்பட்ட பாடமல்ல. இது பல பாடங்களின் சேர்க்கை" ஆகுமெனக் குறிப்பிடுகிறார்.

E.H Carr என்பவர் "கடந்தகாலத்திற்கும் நிகழ்காலத்திற்கும் இடையே நடைபெறுகின்ற முடிவடையாத ஓர் உரையாடலே" வரலாறு என்று கூறுகின்றார். இவரது கருத்துப்படி இது வரலாற்றறிஞருக்கும் அவரது சான்றுகளுக்குமிடையிலே நடைபெறுகின்ற பரஸ்பர செயற்பாடுகளெனக்குறிப்பிட்டுள்ளார். வரலாறு தொடர்பான தனது கருத்துக்கள் பலவற்றை இவர் வரலாறு என்றால் என்ன? (What is History) என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். இவர் ஒரு வரலாற்றாளன், என்பவன் தனது முக்கிய கடமையாகச் சான்றுகளை சேகரித்து, அவற்றைத் தற்கால மாற்றங்களுக்கேற்ப விளக்கமளித்து, எதிர்காலத்தைப் புரிந்து கொள்ளச்செய்பவராக இருக்க வேண்டும் எனக் கூறுகின்றார். இவருடைய இக்கருத்துத் தெளிவற்றதாகவே உள்ளது. உண்மையிலே கடந்த காலத்தினைப் பற்றிச் சரியான வகையில் அறிந்துகொண்டால்தான் நிகழ்காலத்தை நன்கு விளங்கிக்கொள்ள முடியும்.

இங்கிலாந்து நாட்டின் வரலாற்றாசிரியரான பிரான்ஸிஸ்பகன் (Francis Bacon) வரலாறு என்பது "மனிதனை ஞானியாக்குகிறது" என்றார். அதாவது வரலாற்று நிகழ்வுகளிலிருந்து ஒரு மனிதன் நல்ல பாடங்களைக் கற்றுக்கொண்டு தனது வாழ்க்கையைச் செம்மைப்படுத்த முடியும் என்றார். மேலும் ஸ்டுவர்ட் பிகொட் (Stuard Becott) என்பவர் "புராதனகாலம் தொடக்கம் இன்றையகாலம் வரையிலும் மனிதகுலத்தின் கடந்த காலத்தைக் கற்பதுதான் வரலாறு" என்றார். அதாவது மனிதனையும் அவன்சார் செயற்பாடுகளையும் புரியவைப்பதே வரலாறாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாறு என்பது "ஒரு யுகத்தில் எழுதிப்பாதுகாத்து வைக்குமளவிற்குப் பெறுமதி மிக்க விடயங்களை அதற்கு முன்னையயுகம் ஒன்றிலிருந்து தேடிக்கண்டுபிடித்துக் கொள்வதாகும்" என்று பேர்க்ஹாட் குறிப்பிடுகிறார். அதாவது வரலாறானது தொல்லியல் சான்றாதாரங்களின் மூலம் பேணப்படும் ஒரு துறை என்பதைத் தெளிவுபடுத்தினார். மேலும் பேராசிரியர் ஜென்பிறி [Professor Jen Fry] என்பவர் வரலாறு என்பது "ஒரு பாடமாகவும் அது குறித்த காலத்தில் ஏற்பட்ட வேகமான மாற்றங்களைச் சிறந்த முறையில் வழங்குவதாகவும் உள்ளது" என்று வரலாறு பற்றிக்கூறினார்.

"வரலாறு என்பது ஒரு வர்க்கப் போராட்டம்" என்று கார்ள்மார்க்ஸ் (Karlmarks) கூறுகின்றார். இவரின் கருத்துப்படி ஒரு நாட்டின் வரலாறு அந்த நாட்டின் வர்க்கப் போராட்டத்தின் விம்பமே. அதாவது எந்த ஒரு சமுதாயத்திலும் பொருளாதார அடிப்படையில் மக்கள் ஏழைகள், செல்வந்தர்கள் எனப் பிரிக்கப்படுவர். செல்வந்தர்கள் மேலும் பணத்தைப் பெறவும் ஏழைகள் மென்மேலும் சலுகை பெறவிரும்புவதாலும் இவ்விரு வர்க்கத்திற்குமிடையே நடைபெறும் பேராட்டமே பின்னர் வரலாறாக பரிணமிக்கிறது என்றார்.

வரலாறு என்பது "மாற்றம் பற்றியும் அம்மாற்றத்திற்கான காரணம் பற்றியும் ஆராய்வதே" என்று மெண்டிஸ் (Mendis) குறிப்பிடுகிறார். மேலும் வரலாற்றறிஞர் பணிக்கர் (Panicker) "அதிகாரத்திற்கான போராட்டத்தைப் பிரதிபலிக்கும் தன்மைகள் கொண்டது வரலாறு" என்றார். இங்கிலாந்து அறிஞர் தோமஸ் கார்லைல் (Thomas Carlyne) கருத்துப்படி "சாதனை படைத்த மனிதர்களின் சுயசரிதையே வரலாறு" என்பதாக அமைகின்றது. அதாவது எந்த ஒரு நாட்டு வரலாற்றிலும் அந்நாட்டில் வாழ்ந்து சாதனை நிகழ்த்திய மனிதர்களுடைய சுயசரிதைகள் நிறைந்து காணப்படுகிறது என்றார்.

வரலாறு என்பது "கடந்தகால அரசியல் சார்ந்ததாகும்" என்று பேராசிரியர்.ஜோன் சிலி (Proffessor John Silly) கூறுகின்றார். இவரின் கருத்துப்படி கடந்தகால அரசியல் கூறுகளான பேரரசை நிறுவுதல், விரிவுபடுத்தல், போர்கள், நிர்வாக முறைகள், அரண்மனை வாழ்க்கைமுறை போன்ற அரசியல் தன்மையே வரலாறு என்பதாக அமைகிறது. அத்துடன் இதில் இவர் பொருளாதார, சமூக, கலாசாரக் காரணிகள் பற்றி குறிப்பிடாமை குறைபாடாகும். பேராசிரியர் லீகி (Proffessor Legay) வரலாறு என்பது "நன்நடத்தை விதிகளின் விளக்கம்" என்றார். வரலாறு மனிதனுக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிப்பினையை வழங்குகிறது. வரலாற்றினூடக அறக்கருத்துக்கள், நீதிக்கதைகளை அறிந்து கற்றுக்கொள்ள முடிவதுடன் தவிர்க்க வேண்டிய சில விடயங்களை தெரிந்து அதனடிப்படையில் மனிதன் செயற்படவும் இது உதவுகிறது என்றார். இருப்பினும் இவர் அரசியல், பொருளாதார, சமுதாய விடயங்களை தனது வரைவிலக்கணத்தினூடாகத் தெளிவுபடுத்தவில்லை.

இவ்விதமாகப் பல அறிஞர்கள் வரலாற்றிற்கு நல்ல பெறுமதியான வரைவிலக்கணங்களைக்கூறிய போதிலும் அறிஞர்கள் சிலர் வரலாற்றினை எதிர்மறைப் பொருளில் கொண்டு நோக்கியும் உள்ளனர். அந்தவகையில் வோல்ட்ரேயர் (Voltaire) என்பவர் குற்றங்களும் துர்அதிஸ்டமும் நிறைந்த வர்ணனை என்றும் நமது பழைய வரலாறு என்பது ஒப்புக்கொள்ளப்பட்ட கற்பனைகள் என்பதைத் தவிர அதற்கு மேலாக எதுவும் இல்லை என்றும் கூறினார். மேலும் எர்வெட் கிப்பன் ( Erved Gibbon) என்பவர் வரலாறு என்பது மனிதனின் தவறுகள் முட்டாள்தனமான செயல்களின் தொகுப்பு என்றும் கூறியுள்ளார். நெப்போலியனின் (Napolean) கருத்துப்படி ஏற்றுக்கொள்ளப்பட்ட கட்டுக்கதையின் தொகுப்பே வரலாறு என்றும் ஹென்றிபோட் (Henry Fort) என்பவர் வரலாறு என்பது புரியாத புதிர் என்றும் என்றும் கூறினர். இவர்களைப் போலவே பிடர் (Piddor), ரூசோ (Rousou), ஜேம்ஸ் ஜொம்ஸ் (James Jomes) மற்றும் மோர்லி (Morely) போன்ற பல அறிஞர்கள் வரலாறு தொடர்பான எதிர்மறையான கருத்துக்களை முன்வைத்தமை குறிப்பிடத்தக்கது.

**பயன்கள்**

ஒரு மனிதன் வரலாற்றினைப் படிப்பதன் மூலம் பல பயன்களைப் பெறுகின்றான். கடந்தகாலத்தில் நடைபெற்ற சம்பவங்களினை சான்றுகளின் துணையுடன் தெரிந்து கொள்ள வரலாறு உதவுவதுடன் அது நிகழ்காலத்தில் நடக்கின்ற சம்பவங்கள் மட்டுமன்று எதிர்காலத்தினைப் பற்றிய ஊகங்களை மேற்கொள்வதற்கும் உதவுகின்றது. மனிதனுக்கு வரலாற்றில் நடைபெறுகின்ற சம்பவங்கள் வழிகாட்டியாக அமைகின்றன. இதனைப் பின்பற்றி அவன் தன் வாழ்வினை சீரமைத்துக் கொள்கின்றான். புகழ்பெற்ற தலைவர்களின் வரலாற்றினை முன்மாதிரியாகக்கொண்டு அவர்கள் தம் வாழ்வில் சந்தித்த சவால்கள், இடையூறுகள் என்பவற்றை எவ்வாறு சமாளித்துச் சாதனை படைத்தார்கள் என்பதை அறிந்துகொள்கின்றான். இதன்மூலமாக வருங்காலங்களில் அவன் தனக்கு நேர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கின்ற சில தீங்கான செயல்களைத் தவிர்த்துக் கொள்ள முடியும். அதுமட்டுமல்லாமல் வரலாறு மக்களிடத்திலே நல்ல பல கருத்துக்களைப் பரப்புகின்றது. நல்ல குணங்கள் கொண்டவர்களின் வரலாறு மக்களுக்குச் சிறந்த நன்னெறிக் கருத்துக்களைத் தருகின்றது.

வரலாற்றுக் கல்வியின் மூலமாக ஒருவருடைய அறிவு விருத்தியடைவது மட்டுமன்றி வரலாறானது மனித முன்னேற்ற நடவடிக்கைகளின் பதிவாகக் காணப்படுகின்றது. மனிதனுடைய பரிணாம வளர்ச்சியின் ஒவ்வொரு நிலையினையும் வரலாறு கூறுகிறது. மேலும் வரலாறானது தவறுகள் ஏற்படுவதனைத் தடுக்க உதவுவதுடன் அத்தவறுகளைத் திருத்திக்கொள்ளவும் வாய்ப்பினையும் வழங்குகிறது. அதுமட்டுமல்லாமல் வரலாறானது நாட்டில் அமைதியினை ஏற்படுத்த உதவுகின்றது. வரலாறு யாரால் எவ்வெப்போது ஊக்குவிக்கப்பட்டனவோ அக்கால கட்டங்களிலெல்லாம் நாட்டில் அமைதியும் வளர்ச்சியும் ஏற்பட்டுவந்தமை குறிப்பிடத்தக்கது. மேலும் வரலாற்றின் மூலம் எதுவும் நிரந்தமற்றது என்பதனை அறியமுடிவதுடன் வரலாறானது மக்களாட்சிக் கருத்துக்களை அதிகம் வலியுறுத்துவதையும் காணலாம்.

**நிறைவுரை**

வரலாறு தொடர்பாகப் பல்வேறு அறிஞர்கள் கருத்துக்களை வழங்கியபோதிலும் வழங்கப்பட்ட கருத்துக்கள் எவையும் உறுதியான கருத்துக்களாக அமையவில்லை. காரணம் இவை ஒவ்வொன்றிலும் ஏதோ ஒரு வகையில் குறைபாடுகள் இருக்கத்தான் செய்கின்றன. இவ் வரைவிலக்கணங்கள் தெளிவற்றவையாகவும் ஒவ்வொரு அறிஞரும் தத்தம் கண்ணோட்டத்துடன் தம் கால சூழ்நிலைக்கேற்பவே வரலாற்றிற்கான வரைவிலக்கணத்தைக் கொடுத்திருந்தார்கள் என்பதும் தெட்டத்தெளிவாக உண்மையாகிறது. பொதுப்பட வரலாறு என்பது கடந்தகால நிகழ்வுகளின் தொகுப்பாக அமைவதையே குறிக்கின்றதென்ற கருத்து ஓரளவிற்குப் பொருத்தமுடையதாக இருக்கும் என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உசாத்துணை

தமிழ்

1. அருந்தவராஜா,க., (2011) *வரலாற்று வரைவியல்,* அஞ்சு வெளியீட்டகம் , நல்லூர்.

2. கலைக்களஞ்சியம்.

**English**

1. Carr,E.H., (1961) *What is History*, London.

2. *Encyclopedia Britanica*, 2012.

3. Majumdar,R.C., (1970) *Historiography in Modern India*, Bombay.

4. Rajayan,K., (1993) *History in Theory and Method,* Madurai.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3



# யாழ்ப்பாண மன்னர்கால வரலாறுசார் படைப்பாகிய கைலாயமாலை பற்றிய ஒரு ஆய்வு

பா.டிலக்ஷனா

வரலாறு (சிறப்புக்கலை)

இரண்டாம் வருடம்

## அறிமுகவுரை

ஈழத்துத் தமிழ் மக்களின் வரலாற்றுணர்வினை எடுத்துக்காட்டுவனவாகக் குறிப்பிடத்தக்க வரலாறுசார் படைப்புக்கள் அவர்கள் மத்தியில் எழுந்துள்ளன. தமிழர்களுக்கெனத் தனியானதொரு அரசுருவாக்கம் நிகழ்ந்தகாலம் முதற்கொண்டே இவ்வாறான படைப்புக்கள் தோன்றியிருத்தல் நோக்கத்தக்கதாகும். கைலாயமாலை, கோணேசர்கல்வெட்டு, வையாபாடல், பரராசசேகரன் உலா, இராசமுறை என்பன யாழ்ப்பாணத்தரசர் காலத்திலும் யாழ்ப்பாண வைபவமாலை, மட்டக்களப்பு மான்மியம் என்பன ஐரோப்பியர் ஆட்சிக்காலத்திலும் தோற்றம்பெற்ற வரலாறுசார் படைப்புக்களாகும். பத்தொன்பதாம், இருபதாம் நூற்றாண்டுகளில் உரைநடை வளர்ச்சி பெற்றதைத் தொடர்ந்து தமிழர் வரலாற்றை மட்டுமன்றி அவர்களின் சமயம், கலை, இலக்கியம் சமூகம் சார்ந்த வரலாறுகளையும் பதிவுசெய்து வைக்கும் முயற்சிகள் பல மட்டங்களிலும் நிகழ்ந்துள்ளன. இவையாவற்றையும் இச்சிறு ஆய்வுக்கட்டுரையில் அலசுவது பொருத்தமற்றதாகையால் யாழ்ப்பாண மன்னர் காலத்தில் முகிழ்வுற்ற வரலாற்றுணர்வு பற்றி மட்டுமே இங்கு சூழ்ந்து நோக்கப்படுகின்றது.

பதின்மூன்றாம் நூற்றாண்டுக்கும் பதினேழாம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியை பொதுவாக யாழ்ப்பாண மன்னர்கள் காலம் எனக் கூறிக்கொண்டாலும் யாழ்ப்பாணக் குடாநாட்டில் மட்டுமே யாழ்ப்பாண மன்னர்களின் செல்வாக்கு இருந்து வந்தது. ஏனைய குடாநாட்டை அடுத்துள்ள வன்னிப் பெருநிலப்பரப்பிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருகோணமலை, மட்டக்களப்பு, புத்தளம், கற்பிட்டி எனும் தமிழர் வாழ் பிரதேசங்களிலும் தனித்தனியான சிற்றரசுகள் தோற்றம் பெற்றிருந்ததைக் காணமுடிகின்றது. இங்கனம் தமிழர் வாழ் பிரதேசங்களில் உருவாகிய உறுதியான அரசியற் பின்புலத்தில் அங்கு சிறந்த இலக்கியப் படைப்புக்கள் தோன்றத் தொடங்குகின்றன.

அக்காலப்பகுதியில் எழுந்ததாக அறியப்படும் இலக்கியங்களுள் மேலே சுட்டப்பட்ட நான்கு படைப்புக்களும் வரலாறுசார் ஆதாரங்கள் என வியந்து கூறத்தக்க வகையில் அமைந்துள்ளன. இவற்றுள் கைலாயமாலை என்னும் நூல் பலவிதமான இடைச்செருகல்கள், சேர்க்கைகள், பாடபேதங்கள் என்பவற்றுடன் இணைந்த நிலையில் கிடைக்கப் பெற்றுள்ளன. இந்நூலில் காணப்படும் இவ்வாறான இடையீடுகளே மேற்படி இலக்கியங்களின் தோற்றக்காலம் தொடர்பான பல முரண்பாடான கருத்துக்களுக்கு வழிகோலி இருப்பதைக் காணலாம். இத்தகைய இக்கைலாயமாலை எனும் நூலின் தோற்றபின்புலத்தை நோக்கின் பாண்டிய மன்னரின் படைத்தளபதிகளாக ஈழத்துக்கு வந்தவர்களே ஆரியச்சக்கரவர்த்திகள். இவர்கள் ஏலவே வடபுலத்தை ஆட்சி செய்து வந்த மன்னரை அல்லது மன்னர்களைப் புறங்கண்டே அப்பகுதியின் ஆட்சியாளர்களாக மாறியிருக்க வேண்டும். இந்நிலையில் தமக்கு வடபுல அரசின் மீதுள்ள உரிமையை எடுத்துக்காட்டவேண்டி வரலாறுசார்ந்த விடயங்களைப் புலமையாளர்களைக் கொண்டு தொகுப்பிக்க முயன்றிருக்கலாம்.

அதாவது குறிப்பிட்ட ஒரு சமூகத்தினர் தமது சமூக நிலைப்பாடு பற்றியும் அதன் புவியியற்களம் பற்றியும் சிந்திக்கத் தொடங்கும்போது வரலாற்றுணர்வு ஏற்படுகின்றது. அதாவது தம்மை நிலையான குழுவினராகக் கொள்ளும்போதுதான் வரலாறு தோன்றும். இது ஆட்சியாளர்களின் வர்க்க நிலைப்பட்ட உணர்வாக முகிழ்க்கும் என்பர். இக்காலத்திலேயே யாழ்ப்பாண வரலாற்று மூலங்களென இன்று கொண்டாடப் பெறும் கைலாயமாலையும் தோன்றியது எனப் பேராசிரியர் க.சிவத்தம்பி குறிப்பிடுவது இங்கு நோக்கத்தக்கதாகும்.

*"ஈழத்தமிழர் மத்தியில் மேற்கிளம்பிய வரலாற்றுணர்வு யாழ்ப்பாண மன்னர்கால படைப்பான கைலாயமாலை எனும் நூலில் எவ்வளவு தூரம் பதிவாகியுள்ளது என்பதனை துணிந்து நோக்குவது இவ்விடத்தில் அவசியமானதொன்றாகும்."*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தவகையில் யாழ்ப்பாண மன்னர்கால வரலாறுசார் படைப்புக்களில் ஒன்றாகிய கைலாயமாலை எனும் நூலை விரிவாக அலசி ஆராய்வோமானால், இக்கைலாயமாலை என்னும் நூல் முத்துராஜக்கவிராஜர் என்பவரால் செய்யப்பட்டதாக அந்நூலின் ஈற்றிலே அமைந்துள்ள வெண்பா குறிப்பிடுகின்றது. கி.பி 1604 க்கும் கி.பி 1619 க்கும் இடைப்பட்ட காலத்தில் அல்லது அதற்குச் சற்றுப் பின்னதாக இந்நூல் தோன்றியிருக்கலாம் என முதலியார் செ.இராசநாயகம் கருதுவது ஏற்புடையது போல் தோன்றுகின்றது. இந்நூலானது பின்வரும் இரண்டு முக்கியமான நோக்கங்களைக் கொண்டது.

1. முதலாம் சிங்கையாரியனின் முடிசூட்டுவிழா பற்றியும் அரசின் நிர்வாக ஒழுங்கமைப்பைக் கட்டமைத்தமை பற்றியும் விபரித்தல்.

2. சிங்கையாரியன் நல்லூரில் கட்டுவித்த கைலாசநாதர் ஆலயம் பற்றியும் அங்கு நடைபெற்ற குடமுழுக்கு விழா பற்றியும் வர்ணித்தல்.

இவற்றுள் சிங்கையாரின் பெருமை பேசும் முதற்பகுதி மெய்க்கீர்த்தி உலா என்னும் பிரபந்த அமைப்புக்கள் ஒன்று கலந்த வகையில் பாடப்பட்டுள்ளது. இப்பகுதியிலேயே யாழ்ப்பாணத்து அரசன் காலத்தைச் சேர்ந்ததும் அதற்கு சில காலங்களுக்கு முற்பட்டதுமான வரலாறுசார்ந்த தகவல்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. முதலாம் சிங்கையாரியனுக்கு முன்னதாகவே யாழ்ப்பாணத்தில் காணப்பட்ட அரசு உருவாக்கம் தொடர்பான தகவல்கள், சிங்கையாரியன் யாழ்ப்பாண இராச்சியத்துக்கு மன்னனாகியதன் பின்னணி, அவனது படோபமான பட்டாபிஷேகம், உலாச்சிறப்பு என்பன மிக விலாவரியாக இங்கு பாடப்பட்டுள்ளது.

சிங்கையாரியனுக்கு முற்பட்ட யாழ்ப்பாண அரசு உருவாக்கம் பற்றிய தகவல்கள் என்ற வகையில் மாருதப்புரவீகவல்லி, யாழ்பாடி என்போருடன் தொடர்புபட்ட கதைகளை கைலாயமாலை எடுத்துக்காட்டுகின்றது. யாழ்ப்பாணத்து அரசுருவாக்கம் தொடர்பாகத் தன் காலத்துக்கு முன்னர் நிலவிவந்த சில கர்ணபரம்பரைக் கதைகள் அல்லது ஐதீகங்களை மையப்படுத்தியே மேற்படி விடயங்களை முத்துராஜர் பாடியுள்ளார். ஏறத்தாழ இதேவிடயங்களே வையாபாடலின் தொடக்கத்தில் காணப்படுவதை நோக்கும்போது மேற்படி ஐதீகங்கள் மக்கள் மத்தியிலும் அக்காலப் புலவர்கள் மத்தியிலும் பெற்றிருந்த செல்வாக்கினைக் காணலாம். வரலாற்றுத் தொடர்ச்சியைக் கட்டமைத்துக் கொள்ளுகின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கிலும் யாழ்ப்பாணத்து அரசரின் பழமையை வலியுறுத்தும் வகையிலும் மேற்படி கதைகளை வையாபுரி ஐயரும், முத்துராஜகவிராஜரும் சேரத்திருக்க இடமுண்டு. இக்கதைகளூடாக யாழ்ப்பான அரசின் தொடக்க வரலாற்றைத் தேடமுடியாவிட்டாலும் கூட ஆரியச் சக்கரவர்த்திகளின் வருகைக்கு முன்னிருந்த அரசுருவாக்கம் தொடர்பான செய்திகளை அறியக்கூடியதாக இருப்பது பெரியதொரு வரப்பிரசாதம் ஆகும்.

சிங்கையாரியன் யாழ்ப்பாணத்துக்கு வந்ததன் பின்னணி பற்றியும் விசேடமான சில தகவல்களை கைலாயமாலை தருகின்றது. யாழ்பாடி அல்லது கவிராஜன் காலத்துக்குப் பின்னதாக யாழ்ப்பாண அரசினை ஆள்வதற்கென்று எவரும் இல்லாத பின்னணியில் அதனை ஆளவும் நிர்வகிக்கவுமென பாண்டிமழவன் என்பவனால் சிங்கையாரியன் அழைத்துவரப்பட்டதாகக் கைலாயமாலை கூறுகின்றது. யாழ்பாடிக்கு பின்னர் உருவான அரசியல் வெற்றிடம் பற்றி முத்துராஜக்கவிராஜர் இலக்கியச் சுவை தோன்றப் பின்வருமாறு பாடியுள்ளார்.

*"கவிராஜன் காலங்கழிய – அவிர்கிரண*
*சந்திரனில் லாதவெழிற் றாரகைபோல் வானரசாரர்*
*இந்திரனில் லாத விமையவர்போல – விந்தை*
*கரைசேரிம் மாநகர்கோர் காவலரண் செய்யுந்*
*தரையரச னின்தாழ் தளம்ப"*

யாழ்ப்பாணத்து அரசையாள அரசர் இல்லாததினாலேயே சிங்கையாரியன் வரவழைக்கப்பட்டான். எனக் கைலாயமாலை தரும் தகவல்கள் நம்பிக்கைக்குரியனவல்ல. அன்றியும் அவை இரண்டாம் பேரரசுப்பாண்டியர்காலச்சாசனங்களுடன் முரண்படுகின்றன. சிங்கையாரியனின் வருகைக்கு ஒரு காரணத்தைக் கற்பிக்க வேண்டி முத்துராஜக் கவிராஜர் இக்குறிப்பைத் தன்நூலில் சேர்த்திருக்க வேண்டும். அன்றியும் தமிழ் நாட்டிலிருந்து வந்த சிங்கையாரியனுக்கு யாழ்ப்பாண அரசில் உரிமையும் ஆள் தகுதியும் வழங்கும் ஒரு முயற்சியாகவும் இதனைக் கருதலாம்.

இலங்கையின் வடபகுதியில் பன்னிரெண்டாம், பதின்மூன்றாம் நூற்றாண்டுகளில் காணப்பட்ட பாண்டிய மேலாதிக்கப்படர்ச்சிகள், படையெடுப்புக்கள் ஆரியச்சக்கரவர்த்திகளின் ஆதிக்கச் செல்வாக்குகள் முதலான தகவல்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைக்கப்பட்டு ஒரு அமைதியான அரசமாற்றம் பற்றி முத்துராஜர் இங்கு பேசவிழைகின்றார். தொடர்ந்து வரும் பகுதிகளில் சிங்கையாரியனின் குல, குடிப்பெருமைகள், அழகு, சௌந்தர்யம், வெற்றி என்பவற்றை அவர் அடுக்கிக் கொண்டு செல்வதையும், அவன் நல்லூரில் கட்டுவித்த அரண்மனையின் எழிலார்ந்த தோற்றம், படாடோபமான முடிசூட்டுவிழா என்பவற்றை வர்ணித்துக் செல்வதையும் நோக்கின் முத்துராஜர் சமகால ஆளும் வர்க்க நலனில் கொண்டிருந்த அக்கறை எமக்குப் புலனாகின்றது.

சிங்கையாரியனின் முடிசூட்டு விழவைத் தொடர்ந்து யாழ்ப்பாண இராச்சியத்தின் நிர்வாகத்தை அவன் ஒழுங்கமைத்த முறை பற்றி முத்துராஜர் தரும் தகவல்கள் முக்கியம் வாய்ந்தவை. ஏறத்தாழ உண்மையான தகவல்களை மையமாகக் கொண்டே தமிழ்நாட்டிலிருந்து சிங்கையாரியனால் வரவழைக்கப்பட்டு யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் தமது அடிமைக்குடிகளுடன் குடியேற்றப்பட்ட வேளாளப் பிரபுக்கள் யாழ்ப்பாண இராச்சிய நிர்வாகத்தின் முதுகெலும்புகளாக விளங்கியமை பற்றி கைலாயமாலை குறிப்பிடுகின்றது. பிரபுக்கள் குடியேறிய இடங்கள் அவர்களது குடி, குலமரபுகள், அவர்களுக்கு என வழங்கப்பட்ட சின்னங்கள், விருதுப்பெயர்கள் என்பன பற்றியெல்லாம் முத்துராஜர் இந்நூலில் மிகவிரிவாகப் பேசுகின்றார். நிர்வாக நடவடிக்கைகளை இலகுபடுத்த யாழ்ப்பாண இராச்சியம் பாகுபடுத்தப்பட்டிருந்த முறை நிர்வாகப் பொறுப்புக்கள் கையாளப்பட்டிருந்த வகை என்பன பற்றியும் கைலயமாலையில் சுட்டப்படுகின்றது. ஒட்டுமொத்தத்தில் யாழ்ப்பாண மன்னர்காலம் பற்றிய தகவல்கள், ஐதீகங்கள், இலக்கிய மாயைகள் என்பனவற்றுடன் கலந்திருந்த விடயங்களை கைலாயமாலை கூறிச்சென்றாலும் யாழ்ப்பாண மன்னர்கால வரலாற்றினைக் கட்டமைத்துக் கொள்வதில் அதன் பங்களிப்பு தவிர்க்க முடியாததாகவுள்ளது.

**நிறைவுரை**

எனவே மேற்கூறிய விடயங்களைத் தொகுத்து நோக்கின் கைலாயமாலையானது ஈழத்தமிழர் மத்தியில் காணப்பட்ட வரலாற்றுணர்வினை ஓரளவுக்கு இனங்காட்டியுள்ளது. எனினும் இவற்றை முழுமையாக வரலாற்றுப் படைப்புக்களாகக் கொள்ளமுடியாதுள்ளது. மாறாக இவற்றை வரலாறுகள், படைப்புகளாகக் கொள்வதே பொருத்தம் போல் தோன்றுகின்றது. சிங்கையாரியன் குளக்கோட்டன் என்போரின் பீடும் பெருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடையும் மனிதாபிமானமும் பற்றிப் பேசவிழைந்த இவ்இலக்கியம் தம் நோக்கின் ஒருபகுதியாக மேற்படி ஆட்சியாளர்களது காலப்பகுதியுடன் தொடர்புபட்ட வரலாற்றுத் தகவல்களை பதிவு செய்துள்ளன. இத்தகவல்கள் நம்பிக்கைக்குரியவை என ஏற்றுக்கொள்வதற்கில்லை. இந்நூலின் ஆசிரியர் தாம் கேட்டறிந்தவற்றை வைத்துக்கொண்டே இதனைப் படைத்துள்ளார். அது மட்டுமல்லாது இடையிடையே இட்டுநிரப்பல்கள், இடைச்செருகல்கள் என்பவற்றை பயன்படுத்தியிருப்பது இலக்கியத்தின் தனித்தன்மையை பாதித்து இருப்பதைக்காணலாம். எவ்வாறாயினும் மேற்படி இலக்கியம் இருள் சூழ்ந்த ஈழத்தமிழர் வரலாற்றை ஓரளவுக்கேனும் ஒளிமயமாக்கியுள்ளது என்பதில் இருவேறு கருத்துக்களுக்கு இடமில்லை. இதனால்தான் பிற்காலத்தில் ஈழத்தமிழர் வரலாற்றை எழுதியவர்களும் எழுதுகின்றவர்களும் தவிர்க்கமுடியாமல் இவ்விலக்கியத்தை பிரதான மூலமாக ஏற்றனர். இது ஈழத்தமிழரின் சமய, பொருளாதார, பண்பாட்டு வரலாறு சார்ந்த பல தகவல்களைத் தரும் புதையலாக இருந்தது. இவற்றை உரிய முறையில் நோக்கின் ஈழத்தமிழரின் வரலாறு பண்பாடு சார்ந்த எத்தனையோ பல புதிய செய்திகளை வெளிச்சத்துக்குக் கொண்டுவரமுடியும் என்பதில் ஐயமில்லை.

**உசாத்துணை**


1. இராசநாயகம், செ., (1939) *கைலாயமாலை ஆராய்ச்சி முன்னுரை*, சாந்தி அச்சுக்கூடம், சென்னை.
2. சிவத்தம்பி, க., (1978) *ஈழத்தமிழ் இலக்கியம்*, தமிழ்ப்புத்தகாலயம், சென்னை.
3. சிவலிங்கராஜா, எஸ்., (2001) *ஈழத்துத் தமிழ் இலக்கியச் செயல்நெறி*, தனலக்குமி புத்தகசாலை, யாழ்ப்பாணம்.
4. மனோகரன் துரை., (1997) *இலங்கையில் தமிழ் இலக்கிய வளர்ச்சி*, கலைவாணி புத்தகநிலையம், கண்டி.
5. ஜம்புலிங்கம் பிள்ளை, சே.வே., (1939) *கைலாயமாலை*, சாந்தி அச்சுக்கூடம், சென்னை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முதலாம் இராஜராஜசோழனும் காந்தரூர்ச்சாலைப் போரும் - ஒரு வரலாற்று நோக்கு

கோ.கிருஷ்ணானந்தி
வரலாறு (சிறப்புக்கலை)
நான்காம் வருடம்

## அறிமுகவுரை

தென்னாசியாவின் வரலாற்றுப் பாகத்தில் மத்திய காலமானது பல திருப்பங்கள் நிறைந்த காலப்பரப்பாக விளங்கியிருந்தமையை சான்றுகள் எடுத்துக்காட்டுகின்றன. வடஇந்தியாவிலும் தென்னிந்தியாவிலும் அரசியல் திருப்பங்களை ஏற்படுத்தியிருந்த நிலமானிய சமூக உடமைப் பொருளாதார நிறுவனங்கள் தோற்றுவிக்கப்பட்டு அவற்றின் தலைமைத்துவத்தில் அரசியல் பண்பாட்டு விழுமியங்களை முன்னகர்த்தி செல்லப்பட்ட முறைமை மத்தியகால இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்டது. தென்னிந்திய நிலப்பரப்பில் சோழமண்டலத்தில் உருவான அக்கொள்கை தொண்டைமண்டலத்திலும் பின்னர் பாண்டிய, சேர மண்டலங்களையும் ஒன்றிணைத்து இறுதியாக துங்கபத்திரா நதியின் தென் எல்லை வரைக்கும் நிலமானிய சமூக உடைமை நிறுவனங்களை அடிப்படையாகக்கொண்ட அரசியல் கோட்பாடுகளை நடைமுறைப்படுத்தித் தந்த காலப்பரப்பாக சோழர் காலம் அமைந்துகொண்டதென்றால் மிகையாகாது. அத்தன்மை வாய்ந்த சோழர் காலத்தில் வீரமும் திறமையும் கொண்ட பல மன்னர்கள் தமிழகத்தை ஆட்சிசெய்தனர். அத்தகைய மன்னர்களுள் சோழ அரசினை ஒரு பேரரசாக விஸ்தரித்தவன் என்ற வகையில் முதலாம் இராஜராஜசோழன் முக்கியத்துவம் வாய்ந்தவனாவான். தனது வீரத்தினாலும் திறமையினாலும் பல படையெடுப்புக்களை நிகழ்த்தி ஆட்சிப்புலத்தை பரந்தளவில் விஸ்தரிக்கச் செய்தவன் இம்மன்னன். அந்தவகையில் அவனால் மேற்கொள்ளப்பட்ட போர்களில் முக்கியத்துவம் வாய்ந்த போர் என அறிஞர்களால் கருதப்படும் "காந்தரூர்ச்சாலைப் போர்" பற்றி விதந்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இப்போர் குறித்து அறிஞர்களதும், கல்வெட்டுக்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்பேடுகள் போன்ற சான்றுகளினதும் கருத்துக்களையும் மையமாகக்கொண்டே இக்கட்டுரை அமைக்கப்பட்டுள்ளது.

**முதலாம் இராஜராஜ சோழன்**

தென்னிந்தியாவில் பல்லவர் ஆட்சிக்கால முடிவில் ஏற்பட்ட திருப்புறம்பியம் போரின் வெற்றியைத் தொடர்ந்து தமது ஆட்சியை அங்கு நிலைநிறுத்தியவர்கள் சோழ வம்சத்தவர்கள் ஆவர். பெரும் பேரரசுமுறையொன்றை தென்னிந்தியாவில் தஞ்சாவூரை தலைநகராகக்கொண்டு தோற்றுவித்தவர்கள் இச்சோழவம்சத்தின் வழிவந்த மன்னர்களே என்பதும் குறிப்பிடத்தக்கது. இவ்வம்சத்தவர்களின் வழிவந்தவர்களில் சோழ அரசை ஒரு பெரும் பேரரசாக மாற்றிய பெருமை முதலாம் இராஜராஜனையே சாரும் என்றால் அது மிகையாகாது. மேலும் சோழ சாம்ராஜ்யத்தினை தென்னாசியப் பிராந்தியங்களில் நிலைநிறுத்தியதுடன் வங்கக்கடலையே சோழ வாவியாக்கி ஆட்சிபுரிந்த மன்னன் முதலாம் இராஜராஜ சோழன் என்பதும் அவதானிக்கத்தக்கது.

உத்தம சோழன் இறந்தபின் சுந்தர சோழனுக்கும் அவனது பட்டத்தரசியான வானவன் மாதேவிக்கும் இரண்டாவது மகனாக சோழர் குடியில் வந்துதித்தவனே முதலாம் இராராஜசோழன். இவனால் கட்டுவிக்கப்பட்ட தஞ்சை இராஜராஜேஸ்வரத்திலும் இவனது பட்டத்தரசி திருவையாற்றில் கட்டுவித்த உலோகமாதேஸ்வரத்திலும் திங்கள் தோறும் சதய நாளில் சிறப்பாக விழா நடைபெறுவதற்கு **நிவந்தங்கள்** விடப்பட்டிருந்தமை இவன் சதய நாளில் பிறந்தவன் என்பதனை அறியப்படுத்துகின்றது. கி.பி 985இல் இராஜராஜசோழன் மன்னாக முடிசூடப்பட்டு அரியணை ஏறி கி.பி 1014 வரை சோழநாட்டை திறம்பட ஆட்சி செய்ததால் இராஜராஜசோழன் பற்றி அறிந்துகொள்வதற்குப் பல இலக்கியங்களும்,கல்வெட்டுக்கள், மெய்க்கீர்த்திகள், செப்பேடுகள் போன்ற தொல்லியல் ஆதாரங்களும் இவனால் கட்டுவிக்கப்பட்ட கோவில்களும் இவன் பெயரில் அமைந்த பல்வேறு இடங்களும் சான்றுகளாகின்றன.

**காந்தருர்ச்சாலைப் போரும் இராஜராஜசோழனும்**

முதலாம் இராஜராஜசோழன் அரியணை ஏறியதும் தன்னாட்சிக் காலத்தில் பேரரசு விஸ்தரிப்புக் கொள்கையில் மும்முரமாக ஈடுபட்டுப் பல நாடுகளைச் சேர்ந்த அரசர்களுடன் போரிட்டு அவர்களின் நாடுகளைக் கைப்பற்றிய அவன் தனது காலபேரரசுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரப்பினை விரிவடையச் செய்தான். இவன் பல போர்களில் ஈடுபட்டபோதிலும் அப்போர்களில் பெற்ற வெற்றிகளைவிட "காந்தளூர்ச்சாலை" என்ற இடத்தின் மீதான போரும் அதில் அவன் அடைந்த வெற்றிகளுமே முதன்மையானதாகக் கருதப்படுகின்றன. காந்தளூர் என்ற இடத்தை மையமாகக் கொண்டு இப்போர் நடைபெற்றமையால் இது "காந்தளூர்ச்சாலைப் போர்" எனப் பெயர்பெற்றது. போர் நடைபெறும் இடங்களின் பெயராலே போர்கள் அழைக்கப்படுவதன் பின்னணியில் இப்போருக்கு இப்பெயர் ஏற்பட்டிருக்கலாம் எனக்கருத இடமுண்டு.

இராஜராஜ சோழனின் மெய்க்கீர்த்திகளில் அவன் "காந்தளூர்ச்சாலை கலமறுத்தருளி" என சிறப்பிக்கப்படுகின்றான். இதற்குக் காரணம் இப்போரில் அவன் பெற்ற வெற்றியே ஆகும். இத்தொடர் இவனது 4ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுக்களிலிருந்து காணப்படுவதனால் இப்போர் இம்மன்னனின் கன்னிப் போராக இருக்கலாமென வரலாற்றறிஞர்கள் கருதுவர்.

## பிற படையெடுப்புக்கள்

முதலாம் இராஜராஜ சோழனின் காந்தளூர்ச்சாலைப் போரினைப் பற்றி ஆராய முன்னர் அவனது பிற படையெடுப்புகள் பற்றி நோக்குவது அவசியமாகும். இம்மன்னன் காந்தளூர்ச்சாலைமீது மாத்திரம் போர் தொடுத்து வெற்றி பெறவில்லை. பல போர்களிலும் ஈடுபட்டுத் தனது விஸ்தரிப்புக்கொள்கையை நடைமுறைப்படுத்தினான். குறிப்பாகப் பாண்டி நாட்டுப் போரில் பாண்டிய மன்னனைத் தோற்கடித்து பாண்டிநாட்டையும் கொல்லம், குடமலை, உதகை, நுளம்பாடி, கங்கவாடி, தடிகைபாடி, தலைக்காடு போன்ற இடங்களிலும் போரிட்டு அவற்றைக் கைப்பற்றினான். தொடர்ந்து சாளுக்கியர்மீதான போரும் இலங்கைக்குப் போர் தொடுத்து அதனைக் கைப்பற்றி அதற்கு ஈழமான மும்முடிச்சோழ மண்டலம் எனப் பெயரிட்டும், "முந்நீர்ப்பழந்தீவு பன்னீராயிரம்" எனப்பட்ட மாலைதீவுகளைக் கைப்பற்றியமையும் இம்மன்னனின் பிற படையெடுப்புக்களுக்கு எடுத்துக்காட்டுகளாகும். இதனை இவனது 29ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டு பின்வருமாறு கூறுகின்றது.

*"திருமகள் போல பெருநிலச் செல்வியும்*
*தனக்கேயுரிமை பூண்(ட)மை மனக்கொளக்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*காந்தளூர்ச்சாலை கலமறுத்தருளி*

*வேங்கநாடும் கங்கபாடியும்*

*நுளம்பாடியுந் தடிகை பாடியுங்*

*குடமலை நாடும் கொல்லமும் கலிங்கமும்*

*எண்டிகை புகழ் தர ஈழமண்டலமுந்........"*

இம்மன்னன் இத்தகைய இடங்கள்மீது போர் தொடுத்து வெற்றிகள் பல பெற்றபோதும் அவனது காந்தளூர்ச்சாலைப் போர் முக்கியத்துவம் பெறுவதற்கு அப்போரின் தனித்துவமே காரணம் எனலாம். முதலாம் இராஜராஜனால் மேற்கொள்ளப்பட்ட முதல் போர் எது என்பது குறித்து அறிஞர்கள் மத்தியில் பல்வேறு வாதப்பிரதிவாதங்கள் நிகழ்ந்துவருகின்றன. முதன் முதலில் இவன் மேற்கொண்ட திக்விஜயமானது தென்பாண்டி நாட்டுடனே ஆரம்பிப்பதாக திருவாலங்காட்டுச் செப்பேடுகள் கூறுகின்றன. பிற நாட்டு மன்னர்களான பாண்டியரும், சேரரும், சிங்களவரும் என்றுமே சோழரை எதிர்த்துப் போரிடுவது என உடன்படிக்கை செய்திருந்தார்கள். இராஜராஜன் காலத்திலும் இவ் உடன்படிக்கை நடைமுறையில் இருந்தது. எனவே இராஜராஜன் முதலில் பாண்டியன்மீதும் பின் சேரன்மீதும் போர் தொடுத்ததாகவும் அதன்போது அமரபுசங்கன் பாண்டிய அரியணையையும், பாஸ்கர ரவிவர்மன் சேரநாட்டு அரியணையையும் அணிசெய்து வந்தனர். ஆகையால் முதலாம் இராஜராஜன் தொடக்கத்தில் கேரளத்தில் விழிஞம் என்ற இடத்தைக் கைப்பற்றிப் பின் காந்தளூர்ச்சாலைமீது போர் தொடுத்தான் என மறுத்துரைக்கின்றனர். அதற்கு அவர்கள் "காந்தளூர்சாலை கலமறுத்தருளிய கோ இராசகேசரிவர்மன்" என்ற தொடர்களே தனியொரு மெய்க்கீர்த்தியாக இம்மன்னனின் கல்வெட்டுச் சிலவற்றுள் காணப்படுகின்றன என்றும் காந்தளூர்ச்சாலைப் போரே இவனது முதற்போர் என்றும் வாதிடுகின்றனர்.

முதலாம் இராஜராஜனின் இத்தகைய படையெடுப்புக்களின்போது இம்மன்னனின் மகனான முதலாம் இராஜேந்திர சோழன் என்பவன் பக்கபலமாக நின்று வெற்றியீட்டிக் கொடுத்தான் எனவும் இராஜராஜனே இராஜேந்திரனை "மாதண்ட நாயகன்" எனும் பதவியிலமர்த்திச் சிறப்பித்தான் எனவும் கருத்துக்கள் நிலவுகின்றன. மேலும் இராஜராஜன் தவிர முதலாம் இராஜேந்திரன், இராஜாதிராஜன், முதலாம் குலோத்துங்கன் மற்றும் பாண்டியர் மரபில் சடாவர்மன், பராந்தக பாண்டியன் போன்றோர்களும் காந்தளூர்ச்சாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலமறுத்த செய்தியை கூறிக்கொள்கின்றனர். விக்கிரமசோழன் உலா, குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ், கலிங்கத்துப் பரணி போன்ற இலக்கியங்களில் இவர்களது காந்தளூர்ச்சாலை படையெடுப்புப் பற்றிய செய்திகள் கூறப்பட்டுள்ளன.

**போருக்கான பின்னணி**

எக்காலத்திலும் போரொன்று இடம்பெறுவதற்கு ஒன்றோ அல்லது பல காரணிகளோ அமைந்திருப்பது யதார்த்தமாகும். அந்தவகையில் காந்தளூர்ச்சாலைப் போர் இடம் பெற்றமைக்கான காரணம் யாதென அறிதல் அவசியமாகும். முதலாம் இராஜராஜசோழன் சோழ நாட்டின் மணிமுடி புனைந்து கொண்டவுடன் அண்டை நாடுகளை வென்று எல்லைகளை விரிவுபடுத்தும் செயலில் ஈடுபடலானனான் என்பது நாம் அறிந்ததாகும். எனவே இராஜராஜனின் படையெடுப்புக்குக் காரணமாகக் கூறப்படும் செய்தியும் இம்மன்னனின் பேரரசுப்பான்மை முனைப்பை சுட்டிக்காட்டுவதாகவே உள்ளது. இராஜராஜன் ஏதோ ஒரு அலுவலிற்காக சேர அரசனிடம் ஒரு தூதனை அனுப்பியிருந்தான். அத்தூதன் யார் என்பது பற்றியறியச் சான்றுகள் இல்லை. ஆனால் சேரமன்னர் அத்தூதனின், தூதினை மறுத்தது மட்டுமின்றி அரச நெறிக்கு முற்றிலும் மாறுபட்ட வகையில் தூதனை அவமதித்து அவனை உதகையிலிருந்த சிறைக் கூடத்தில் இட்டுத் துன்புறுத்தினான். இச்செய்தி கேட்ட இராஜராஜனின் செயலே சேர நாட்டை எரித்தொழித்தது. இப்பின்னணியிலேதான் கி.பி 988 இல் காந்தளூர்ச்சாலைப் போர் இடம்பெற்றது என்பதனை அறியலாம்.

**போர் பற்றி அறிய உதவும் சான்றுகள்**

காந்தளூர்ச்சாலை என்பது இன்றைய திருவனந்தபுரத்தின் ஒரு பகுதி என்பது பலராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட கருத்தாகும். உண்மையில் அது அந்நகருக்குத் தெற்காக 16 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள ஓர் இடமாகும். முதலாம் இராஜராஜனின் மெய்க்கீர்த்திகள் அனைத்தும் அம்மன்னனின் பெயருக்கு முன் "காந்தளூர்ச்சாலை கலமறுத்தருளி" எனும் அடைமொழிச்சொல்லைக் கொண்டே விளங்குகின்றன. இவ் அடைமொழிச் சொற்கள் இவனது 4ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டுக்களிலேயே காணப்படுகின்றன. இவ்விருது எந்த நிகழ்ச்சியைக் குறிப்பிடுகின்றது என்பது பற்றி ஆய்வாளர்களிடையே ஆழ்ந்த கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன. இவனால் மேற்கொள்ளப்பட்ட ஏனைய போர்களைவிட காந்தளூர்ச்சாலைப் போரில் பெற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றியானது ஆய்வாளர்கள் மத்தியில் மிகவும் பிரபல்யமாகப் பேசப்படுவதற்கு காந்தரூர்ச்சாலைப் போரின் முக்கியத்துவமே காரணமாகும். எனவேதான் ஏனைய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட போர்களினை முதன்மைப்படுத்தாமல் காந்தரூர்ச்சாலைப் போரை முதன்நிலைப்படுத்துவதுடன் காந்தரூர்ச்சாலை என்ற இடம் குறித்துப் பல கருத்து வேறுபாடுகளை முன்வைக்கின்றனர். காந்தரூர்ச்சாலைப் போர் பற்றி அறிஞர்களது கருத்துக்கள் வாயிலாகவும், கல்வெட்டு மற்றும் செப்பேடுகள் வாயிலாகவும் அறியலாம்.

**அறிஞர்களது கருத்துக்கள்**

முதலாம் இராஜராஜன் காந்தரூரில் மணிமண்டபம் ஒன்றினைக் கட்டினான் என்ற கருத்தே முதலில் நிலவியது. பின் அரச கலம் ஒன்றைத் துண்டாக்கினான் என்ற ஒரு கருத்தும் ஆய்வாளர்களிடையே தோன்றியது. காந்தரூர்த் துறைமுகத்தில் மன்னன் கலங்(கப்பல்)களை அழித்தான் என்பதனையே வரலாற்றறிஞர்கள் பலரும் ஏற்றுக்கொள்கின்றனர்.

கவிமணி தேசியவிநாயகம்பிள்ளை அவர்கள் "மன்னன் காந்தரூர் உணவுசாலையில் உணவு வழங்கவேண்டிய முறையை நிர்ணயித்து திட்டம் செய்தார்" என புதிய விளக்கம் ஒன்றினைத் தந்தார். எனினும் இவ்விளக்கம் பொருத்தமானதாகத் தோன்றவில்லை. ஏனெனில் உணவுத்திட்டம் செய்யபட்ட முறையை இராஜேந்திரனும், இராஜாதிராஜனும், முதலாம் குலோத்துங்கனும் மறுமுறையும் மாற்றவேண்டிய தேவையில்லை. அத்துடன் இவர்களும் காந்தரூர்ச்சாலை கலமறுத்த விருதை ஏற்றுக்கொண்டுள்ளனர்.

திரு.கோபிநாதராவ் என்ற அறிஞர் திருவனந்தபுரத்தின் ஒரு பகுதியான வலியசாலை என்ற இடமே காந்தரூர் எனக்கூறுகின்றார். மேலும் அவர் "காந்தரூர் அறச்சாலையில் சோறிடுவதை இராஜராஜன் நிறுத்திவிட்டான்" என்ற கருத்தினை முன்வைத்தார். எனினும் சில ஆய்வாளர்கள் இதனை ஏற்றுக்கொள்ளவில்லை. ஏனெனில் சோறிடுவதை நிறுத்தியதை "அருளிய" எனக் குறிப்பிடுவதில்லை என்பது அவரது வாதமாகும்.

D.N சுப்பிரமணியம் அவர்கள் "காந்தரூர்ச்சாலை ஒரு கல்வி நிறுவனமாக இருந்திருக்கலாம் எனக் கருதுகின்றார். இதற்கு கருநந்தடக்கள் செப்பேட்டுச் சாசனத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறப்பட்டுள்ள குறிப்புக்களை ஆதாரமாகக் கொண்டுள்ளார். அக்கல்வெட்டின் குறிப்பின் பிரகாரம் பார்த்திவசேகரபுரத்துச்சாலை என்பது மாணவர்கள் தங்கிக் கல்வி கற்று வந்த நிறுவனம் என்பது வெளிப்படை. ஆகவே இதைக்கொண்டு இச்சாலைக்கு முன்மாதிரியாக அமைந்திருந்த காந்தரூர்ச்சாலையும் ஒரு கல்வி நிறுவனமாக இருந்திருக்கலாம் எனக் கருதுகின்றார். மேலும் இவ்விரு சாலைகளிலும் மாணவர்கள் தங்கியிருந்து உணவு உட்கொண்டு கல்வி பயின்று வந்துள்ளனர். தற்காலத்துப் பல்கலைக்கழகங்களுக்கு இவற்றை ஒப்பிடலாம் எனவும் பிறருடைய தலையீடு எதுவுமின்றி இச்சாலைகள் நடைபெற்று வந்தன என்றும் இவர் கருத்துத் தெரிவிக்கின்றார்.

நடனகாசிநாதன் என்பவர் "கலமறுத்த" என்பதில் வரும் கலத்தை முகத்தலளவயையாகக் கொள்ள வேண்டும் எனக்கூறுகின்றார். இதனால் காந்தரூர்ச்சாலை எனும் பள்ளிக்கு இத்தனை கலம் ஆசிரியருக்கு இத்தனை கலம், மாணவர்களுக்கு என வரையறுக்கப்பட்டது எனக்கொள்ளலாம்.

பூ.சுப்பிரமணியம் என்பவரது கருத்துப்படி காந்தரூர்ச்சாலை என்பது திருவனந்தபுரத்தின் ஒருபகுதியான வலியசாலை என வழங்கப்படுகின்றது. "வேலைக்கெழு காந்தரூர்ச்சாலை" என்ற தொடர் இது கடற்கரைப்பட்டினம் என்பதால் சுட்டுகின்றது. ஆகவே இராஜாராஜன் இக்காந்தரூர்ச்சாலை எனும் இடத்தில் சேரனுடன் போரிட்டு அவர்தம் கப்பற்படையை அழித்து அருள்செய்தார் எனப் பொருள்படுகின்றது. அதேநேரம் காந்தரூரில் அமைந்த வேதப்பாடசாலையே காந்தரூர்ச்சாலையாகும். அதன்படி அச்சாலையில் பயில்வதற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையே கலமறுத்தல் எனக் கொள்ளப்பட்டது. அதாவது இந்தக் கல்வியைப் பயில இத்தனை மாணவர்களுக்கு இடமளிக்கப்பட்டது என்ற எண்ணிக்கையை இன்ன கல்வி பயில்வோருக்கு ஒதுக்கப்பட்ட கலம் இத்தனை என்பதாகவே குறிக்கப்பட்டது என இருவகைப்பட்ட கருத்துக்களை முன்வைக்கிறார். அதாவது "வேலைக்கெழு காந்தரூர்ச்சாலை" என்ற தொடர் கடற்கரைப் பட்டினத்தையும், கப்பற்படையை முதலாம் இராஜராஜன் அழித்தான் என்பதால் விளங்குவதாகவும் "காந்தரூர்ச்சாலை கலமறுத்தருளி" என்பது அச்சாலையில் கல்வி பயில்வோருக்கு இடத்தை வரையறை செய்தான் என்பதனை விளக்குவதாகவும் இவர் கூறுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தரேச வாண்டையார் என்பவர் காந்தளூர்ச்சாலையிலுள்ள கப்பல்களை அழித்தருளி என்ற திரண்ட பொருளைக் கொண்டது எனக் கூறுகின்றார். சாலை என்பது உணவு அளிக்கும் இடம் விடுதிகலம் என்பது, உண்ணும் பாத்திரம் அருளி என்பது அருள்செய் எனப் பொருள் கொண்டு காந்தளூரிலிருந்த உணவளிக்கும் விடுதியில் இத்தனை பேருக்குத்தான் உணவு அளிக்கலாம் என வரையறை செய்யப்பட்டது என ஒரு சாரார் கூறுகின்றனர். ஆனால் இவ்வாறு கூறுவதில் பொருட் சிறப்பு இல்லை. சேரமன்னர் முதலாம் இராஜராஜ சோழனுக்குப் பகை மன்னர் என்பதால் அச்சேரர்களுடைய கப்பல் படைகளை அழித்துப் பின் வேண்ட அருள்செய்தான் என்பதே பொருத்தமாகும் எனக்கூறுகிறார். மேலும் இவ்வாறு கலமறுத்த செயலுக்கு முதலாம் இராஜாதிராஜன், பராந்தக பாண்டியன் காலக் கல்வெட்டுக்களில் சான்றுள்ளது எனவும் ஆலத்தூர்தேச சுரப்புக்காட்டில் குளத்தின் கீழ் காந்தளூர்ச்சாலை மாதேவர்க்கு வரம்போக எனும் கல்வெட்டுப் பகுதியால் காந்தளூர்ச்சாலை என்பது ஊரின் பெயர் எனப் பெறுகிறது என்பதனால் சாலை என்பதனை தனியாகப் பிரித்து நோக்கவேண்டியதில்லை எனவும் கூறுகின்றார்.

வே.தி செல்வம் என்பவர் பலதரப்பட்டவர்களை ஆதாரமாகக்கொண்டு பின்வருமாறு கூறுகின்றார். காந்தளூர்ச்சாலை படைக்கலங்களின் தளமா என்று ஐயம் எழுந்துள்ளது. எனவே படைக்கலங்களை உடைத்தான் அல்லது வெற்றி கிட்டிய பின் காந்தளூர்ச்சாலையில் ஒழுங்கு விதிகளை மாற்றியமைத்தான் என மாறுபட்ட விளக்கங்கள் தோன்றியுள்ளன எனக்கூறும் இவர் 'கேரள தேசத்தின் தெளிவற்ற பகுதிகள்' (மலையாளம்) என்ற நூலையும் தஞ்சைக் கல்வெட்டுக் குறிப்பினையும் ஆதாரமாகக் கொண்டு காந்தளூர்ச்சாலை கலமறுத்த என்ற சொற்றொடர் காந்தளூரிலிருந்த வைதீக நிலையத்தை சீர்செய்து உதவி அளித்தான் என்பதே பொருத்தமாகும் என்கிறார்.

Dr.K.K பிள்ளை அவர்கள் கலமறுத்த என்ற சொல்லை வரையறுக்கப்பட்ட என்ற பொருளில் பயன்படுத்தியுள்ளார். இராஜராஜசோழன் பார்த்திவகேசரபுரத்திலிருந்த சாலையைப் போலவே அதற்கு முன்மாதிரியாக அமைந்திருந்த காந்தளூர்ச்சாலையும் தனது ஆணையின் கீழ்க்கொண்டு வந்து அவ்விடமிருந்த படைப்பலத்தை குறைத்து சாலையின் நடைமுறையில் மாறுதல் செய்து சாலையை சீர்திருத்தியிருக்க வேண்டும் எனக்கூறுவதுடன் முதலாம் இராஜராஜ சோழனின் மெய்க்கீர்த்திகள் "காந்தளூர்ச்சாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலமறுத்தருளிய" எனும் சொற்றொடர் அவனது சிறப்பான பணிகளைக் குறிக்கின்றன எனக்கொள்வதே பொருத்தமாகும் எனக்கூறுகிறார்.

T.V சதாசிவபண்டாரத்தார் கருத்துப்படி காந்தரூர்ச்சாலை ஒரு கடற்கரைப்பட்டினம் என்றும் சேர மன்னனுக்கும் சோழ மன்னனுக்கும் பெரும்போர் அங்கு நடைபெற்றதெனவும் அப்போரில் சேர மன்னனின் கப்பல் படைகள் அழிக்கப்பட்டுவிட்டன என்றும் இதனையே காந்தரூர்ச்சாலை கலமறுத்தருளி என்ற தொடர் புலப்படுத்தி நிற்பதாகக் கூறுகிறார். மேலும் அவர் முதலாம் இராஜராஜன் காந்தரூர்ச்சாலை கப்பல்களை அழித்து உதகையில் இருந்த கோட்டை மதில்கள், கோபுரங்கள், மாளிகைகளையும் தன் படைகள் மூலம் தகர்ப்பித்து எஞ்சியவற்றையும் அரிகொளுவிச் சூறையாடினான் என்பது இவர் கருத்தாகும்.

**கல்வெட்டு, செப்பேட்டுச் சாசனங்கள்**

காந்தரூர்ச்சாலையில் என்ன நடந்தது என்று தெரியவில்லை. ஆனாலும் கருநந்தடக்கள் செப்பேட்டில் அரசன் சிறிது சிறிதாக மின்சிறை எனும் ஊர்ச்சபையாரிடமிருந்து சில விளைநிலங்களைப் பெற்றான் என்றும், அதற்கீடாக வேறு சில நிலங்களை அளித்தான் என்றும் அந்நிலங்களைக் கொண்டு பார்த்திவசேகரபுரம் எனும் கிராமத்தை நிறுவி அக்கிராமத்தில் விஷ்ணுபட்டார்க்கு ஒருகோயிலை எழுப்பினான் என்றும், காந்தாரூர் மரியாதையால் தொண்ணூற்று ஐவர் சட்டர்க்கு ஒரு சாலையையும் செய்து கொடுத்தான் என சில குறிப்புக்கள் கூறுகின்றன. மேலும் அச்செப்பேட்டில் இச்சாலைக்குச் செய்த கலத்தில் "பவிழிழிய சரணத்தார் உடைய கலம் நாற்பத்தைந்து தயித்திரிய சரணத்தார் உடைய கலம் முப்பத்தாறு, தலவகார சரணத்தார் உடையகலம் பதின்னான்கு இனிவரும் கலம் மூன்று சரணத்தார்க்கும் ஒப்பாது" என்ற குறிப்பும் காணப்படுகின்றது. எனவே பார்த்திவசேகரபுரத்து சாலை என்பது மாணவர்கள் தங்கி கல்வி கற்றுவந்த நிறுவனம் என அறியமுடிவதால் அதைக்கொண்டு இச்சாலைக்கு முன்மாதிரியாக அமைந்திருந்த காந்தரூர்ச்சாலையும் ஓர் கல்வி நிறுவனமாக இருந்திருக்க வேண்டுமென்பது அறிஞர்கள் கருத்தாகும். இவ்விரு சாலைகளிலும் மாணவர்கள் தங்கியிருந்து உணவு கொண்டு கல்வி பயின்று வந்துள்ளனர். கல்வெட்டுக்களில் காணப்படும் சாலை, சாலா போகம் எனும் சொற்கள் அக்கல்வி நிறுவனங்களையும் அவற்றுக்கு வழங்கப்படும் நிவந்தங்களையுமே குறிப்பனவாக கொள்ளவேண்டியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்திவசேசரபுரத்து சாசனம் வேறு சில செய்திகளையும் தெரிவிக்கின்றது. அவ்வூர்ச்சாலையில் கல்வி பயிற்றுவித்த ஆசிரியர்கள் சேர, சோழ, பாண்டியரின் ஆட்சியில் பங்குகொள்ளும் பயிற்சியும் அறிவும் பெற்றவர்களாக இருக்கவேண்டும் என்றும் வேதவியாகரணங்கள் மட்டுமன்றி அரசியலிலும் போர்களிலும் பெறவேண்டிய பயிற்சியை மாணவர்கள் சுவடிகளின் வாயிலாகவும் நடைமுறையிலும் அளிக்கப்பட்டு வந்தன என்றும் அச்சாசனத்தில் கூறப்பட்டுள்ளது. காந்தருர்ச்சாலையும் பார்த்திவசேகரபுரத்துச்சாலையும் அரசாங்கத்தின் பொருளுதவி இன்றியே நடைபெற்றிருக்க வேண்டும் இதிலிருந்து கல்விச்சாலையில் படைக்கலங்களும் வைக்கப்பட்டு பயிற்சியளிக்கப்பட்டு வந்துள்ளன என்பது புலனாகும்.

தஞ்சை மாவட்டம் கோயில் தேவராயன் பேட்டைக் கல்வெட்டில் "கலமறுத்த" என்ற சொல் ஆளப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு இராசகேசரியுடைய 14ஆம் ஆட்சியாண்டில் நாட்டப்பட்டது. ஆண்டுதோறும் மார்கழி மாதம் திருவாதிரை நாள் இரவு திருச்சேனூர் மகாதேவர் முன்பு *"ஜைமினிகள் சாமவேதத்து மேற்பாதத்து ஒரு துருவும் கீழ்ப்பாதத்து ஒரு துருவும் கரைப்பறிச்சுப்பட்டம் கடத்துப் பிழையாமே சொன்னார்க்குப் பரிசளிக்க ஒருவன் இருபது காசு முதலுக்கு ஆண்டு கிடைத்த பலிகை மூன்று காசையும், ஒரு கால் கொண்டார் அல்லாதவரை மெய்க்காட்டு தீட்டினார் எல்லாரும் தம்பில் அஞ்சு புரியினும் சொல்லிக்கலமறுத்து நல்லாராயினர் ஒருவர்க்கு எம்பெருமானே அருளவேண்டும்"* என்பதே ஏற்பாடு. முன்னைய ஆண்டுகளில் பரிசுபெற்றவர் பின்னைய ஆண்டுகளில் போட்டியிட முடியாது என்பது இதனால் அறியப்படுகிறது. போட்டியில் வெற்றிபெற்றவர் *"கலமறுத்து நல்லார் ஆனார் ஒருவர்"* என்று கல்வெட்டில் குறிப்பிடுகின்றார். இவ்விடயத்தில் கலமறுத்து என்ற சொல்லுக்கு சாசனத்தால் அல்லது ஓலையால் அல்லது ஓயாமல் வரையறுக்கப்பட்டது என்ற பொருள் பொருத்தமானது எனக்கொள்ள வேண்டும்.

திருச்சி மாவட்டம் காமரசவல்லியில் கிடைத்த இராஜராஜன் கல்வெட்டில் "கலமறுத்த" என்ற சொல் ஆராயப்பட்ட வாதத்தை சுட்டிக்காட்டி கலமறுத்த என்ற சொல்லுக்கு "பிறை நீக்கி ஓதிய" எனப் பொருள்கூறுகிறார் நடன காசிநாதன்.

**போரின் முக்கியத்துவம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாம் இராஜராஜன் ஆட்சிக்காலத்தில் அவன் பெற்ற வெற்றிகளில் காந்தளூர்ச்சாலை வெற்றி முக்கியம் பெற்றதொன்றாகும். இம்மன்னனது ஆட்சியின் தொடக்கத்திலேயே அவனுக்கும் காந்தளூர்ச்சாலை அறங்காவலர்களுக்குமிடையே வேறுபட்ட கருத்துக்கள் தோன்றியிருக்க வேண்டும். அச்சாலை நடைமுறையில் தான் தலையிட்டு சில சீர்திருத்தங்களைச் செய்ய அம்மன்னன் முனைந்திருக்கலாம். அரசுக்கும் அதன் திட்டங்களுக்கும் கட்டுப்படாமல் இயங்கிவந்த காந்தளூர்ச்சாலை அவனுடைய தலையீட்டை வெறுத்து அவனுக்கு எதிர்ப்புக்காட்டியிருக்கலாம். ஆகையால் அப்பேரரசன் தன் படைவலிமையைப் பயன்படுத்தி அச்சாலையை தன் வழிக்குத் திருப்பிக் கொண்டு வந்தான் என அறிகின்றோம்.

கருநந்தடக்கன் செப்பேடுகளில் சாலை நிறுவிய ஆண்டு கி.பி 868 என குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அதில் பொறிக்கப்பட்டுள்ள வடிவம் கி.பி 868 ஆம் ஆண்டுக்குப் பிந்தியதாகக் காணப்படுகிறது. எழுத்துவடிவமும் இராஜராஜன் காலத்திற்குரிய தமிழ் எழுத்து வடிவமாக உள்ளது. அம்மன்னன் காலத்திற்கு முன் வட்டவடிவ எழுத்துக்களே அப்பகுதியில் வழக்கில் இருந்துள்ளன. அச்சாசனம் கருநந்தடக்கன் காலத்திற்குரியதாக இருந்திருக்குமானால் அது வட்டெழுத்தில் பொறிக்கப்பட்டிருக்க வேண்டும். இக்காரணத்தாலும் வேறு சில காரணங்களினாலும் இச்சாசனமும் முதலாம் இராஜராஜன் காலத்தில் கருநந்தடக்கன் பெயரில் வேறு ஒரு மன்னன் பொறித்துக் கொடுத்ததாகக் கொள்ளவேண்டும்.

இம்மன்னன் போரிட்ட ஏனைய இடங்களைவிட சேரரிடமிருந்த காந்தளூர்ச்சாலை ஒரு கடற்படைத்தளமாகும். அதன் முழு ஆற்றலையும் அழிக்க வேண்டுமானால் நிலப்படை மட்டும் போதாது. கடற்படையும் வேண்டும். கடற்கடம்பரை வேரறுத்த பண்டை நாள் சேரர் காலம் முதல் சோழர்காலம் வரை சேரரின் பெருஞ்சிறப்பும் பேராற்றலும் கடற்படையாகவே இருந்தது. பாண்டியர், சோழரிடமும், பல்லவரிடமும் கூட பெருங்கடற்படை இருந்தபோதும் அவை பாதுகாப்புக்குப் பயன்படவில்லை. சேரருக்கோ நிலத்திசையில் சையமலையில் பேரரண் இருந்தபடியால் கடற்படை புதுவலுவூட்டும் கருவியாக இருந்தது. சேரரை எவர் வென்றாலும் நீடித்து ஆட்சி செய்யமுடியாததன் காரணம் இதுவேயாகும். இராஜராஜன் சேரரின் இந்நிலையான ஆற்றலை அழிக்க எண்ணினான். இத்தகைய ஆற்றல்கொண்ட சேரரிடமிருந்த கடற்படைத்தளமான காந்தளூர்ச்சாலையை இம்மன்னன் வெற்றி கொண்டமையானது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு முக்கியம் வாய்ந்த திறமையான செயலாகும். இதனாலேயே இவனால் மேற்கொள்ளப்பட்ட இப்போர் சிறப்புப் பெறுகின்றது. இக்காந்தரூர்ச்சாலையைக் கைப்பற்றுவதற்காக முதலில் பாண்டி நாட்டைக் கைப்பற்ற எண்ணி தனது கடற்படையை குமரியைச் சுற்றிக் கடல்வழி செலுத்தினான் எனக் கூறப்படுகிறது. இவ்வாறான ஆற்றல் வாய்ந்த காந்தரூர்ச்சாலை கடற்படைத்தளத்தை இம்மன்னன் கைப்பற்றியமையால் தான் மெய்க்கீர்த்திகள் இவனை "காந்தரூர்ச்சாலை கலமறுத்தருளிய" எனப் புகழ்கின்றன என்பதனை நாம் அறிகின்றோம். இம்மன்னனுக்கு இவ்விருது சூட்டப்பட்டமை மிகச்சரியானதே எனவும் எம்மால் ஊகித்துக்கொள்ள முடிகின்றது.

சான்றுகளின் அடிப்படையில் காந்தரூர்ச்சாலை என்பது சிறந்த கடற்படைத்தளமாக விளங்கியதுடன் வேதம், போர்ப் பயிற்சி, அரசியல் ஆகியவை கற்பிக்கப்பட்ட தன்னாட்சி பெற்ற ஒரு கல்விச்சாலை என்பது தெளிவாகிறது. முதலாம் இராஜராஜன் தன் ஆட்சிக்காலத் தொடக்கத்திலேயே சோழநாட்டு எல்லையை விரிவுபடுத்தத் தொடங்கினான். தொடக்கம் முதல் அரசனுக்கும் கேரளத்துக் காந்தரூர்ச்சாலை நிர்வாகிகளுக்கும் மன வேறுபாடுகள் இருந்தன. கன்னியாகுமாரி பகுதியிலிருந்த சாலைகல் ஸ்ரீவல்லப பெருஞ்சாலை எனப் பெயர் சூட்டினான். அதேபோலவே காந்தரூர்ச்சாலையையும் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர விரும்பினான். ஆனால் தன்னாட்சி பெற்ற அச்சாலை அடங்க மறுத்தது. எனவே இராஜராஜ சோழன் தன் படைவலிமையால் அதனை தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தமை அவனது வீரத்தினை வெளிப்படுத்துவதாக உள்ளது. இத்தகைய இவனது செயலே இவன் காலத்தில் இப்போர் முக்கியம் பெறக்காரணமாகும். இப்போர் முக்கியத்துவம் பெறக் காந்தரூர்ச்சாலையின் தனிப்பட்ட சிறப்பே இராஜராஜன் காலத்தில் இடம்பெற்ற பிற போர்களை பின்தங்க வைத்து முன்னனியில் நிற்கக் காரணமாகும். இதுவே முதலாம் இராஜராஜனின் அரசியல் சாதனைகளுள் தனித்துவமானதாகும்.

**நிறைவுரை**

மேற்கூறப்பட்டவற்றைத் தொகுத்து நோக்கும்போது சேரரின் திறமைக்கு சான்றாக விளங்கிய வலிமைமிக்க ஒரு கடற்படைத்தளமாகவும் போர்ப்பயிற்சி, வேதம், அரசியல் போதிக்கும் கல்வி நிலையமாகவும் விளங்கிய காந்தரூர்ச்சாலையை முதலாம் இராஜராஜன் தனது வீரத்தினாலும் திறமையினாலும் வெற்றிகொண்டான் எனக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளமுடிகிறது. அத்துடன் தனது ஆள்புல விஸ்தரிப்பினை நடைமுறைப்படுத்தும் பொருட்டு அவனால் மேற்கொள்ளப்பட்ட முதலாவது படையெடுப்பாகவும் அதில் அவன் அடைந்த வெற்றியும் சோழப்பேரரசினை நிர்வகித்த மன்னர்களுள் முதலாம் இராஜராஜனை தனித்துவப்படுத்தி நிற்கின்றன எனலாம். அவன் தனது ஆள்புல விஸ்தரிப்பினை கேரளத்திலிருந்து தொடங்கினான் என்பதற்கு காந்தளூர்ச்சாலைப் போர் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

**உசாத்துணை**

**தமிழ்**


1. அப்பாத்துரையார், கா., (2001) *தென்னாட்டுப் போர்க்களங்கள்*, நாதன் வெளியீட்டு நிறுவனம், சென்னை.
2. சதாசிவபண்டாரத்தார், T.T., (2003) *பிற்கால சோழர் சரித்திரம்*, அண்ணாமலைப் பதிப்பகம், சென்னை.
3. சுந்தரேசவாண்டையார், வை., (2008) *முப்பது கல்வெட்டுக்கள்*, அறிவுப் பதிப்பகம், சென்னை.
4. சுப்பிரமணியம், பூ., (1983) *மெய்க்கீர்த்திகள்*, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
5. திருநாவுக்கரசு, மு.க.த.ச (1975) *1ஆம் இராஜராஜ சோழன்*, தமிழ்நாட்டுப்பாடநூல் நிறுவனம், சென்னை.
6. பிள்ளை,K.K., (1972) *தமிழக வரலாறும் பண்பாடும்*, தமிழ்நாட்டுப்பாடநூல் நிறுவனம், சென்னை.

**English**

7. Nilakandasastri, K.A., *A History of South India*, Madras.
8. Nilakandasastri, K.A.,(1955) *The Cholas*, Unicersity of Madras.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5



# வடஇலங்கையின் அரச உருவாக்கத்தில் நாகவம்சத்தின் செல்வாக்கு

வ.கிருதுஷா

வரலாறு (சிறப்புக்கலை)

நான்காம் வருடம்

## அறிமுகவுரை

இலங்கையில் காணப்பட்ட அரசுகளின் வரிசையிலே வடஇலங்கையில் தோற்றம் பெற்ற யாழ்ப்பாண அரசும் குறிப்பிடத்தக்க வகையில் அமைந்து காணப்படுகின்றது. யாழ்ப்பாண அரசின் தோற்றத்திற்கு ஆதிமூலமாக இருந்தவர்கள் நாகர்கள். இலங்கையில் கி.மு 3ஆம் நூற்றாண்டில் இருந்து அநுராதபுரம் பலம்மிக்க அரசியல் மையமாக விளங்கிய காலத்தில் அதன் வட, தென் பகுதிகளில் குறுநில மன்னர்கள் அல்லது சிற்றரசர்களாக விளங்கிய சிலரது ஆட்சி நடைபெற்றது. இவ்வாறு ஆட்சி புரிந்த இவர்கள் பற்றி அறிவதற்கு உள்நாட்டு, வெளிநாட்டு இலக்கியங்கள், சாசனங்கள், தொல்பொருள் சான்றுகள் போன்றன உதவுகின்றன. அந்தவகையில் இலங்கையின் பல பகுதிகளில் நாகர் குடியிருப்புக்கள் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. அவற்றில் தெவிநுவர, நாகர்கோயில், திருக்கோயில், நாகதுறை, மணிபல்லம், மதவாச்சி, ஜம்புகோளம், வல்லிபுரம், குருந்தன்குளம், மிகுந்தலை, நாகசதுக்கம், கதிரமலை மகாதீர்த்தம் போன்றன குறிப்பிடத்தக்கன. இப்பின்னணியில் இலங்கைத் தமிழரிடையே பழைய காலத்தில் அரசமரபு தோன்றியிருந்ததை பல்வேறு சான்றுகளுடன் காணமுடிகின்றது. அந்தவகையில் வடபகுதி அரச வம்சத்தினுடைய செல்வாக்கானது இலங்கையின் ஆதிகால வரலாறு பொறுத்து மிகமுக்கியமானதாகக் கருதப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியச்சான்றுகள் என்ற ரீதியில் பிறநாட்டு இலக்கியமான மகாபாரதம் ஈழத்தின் வடபகுதியில் இருந்த நாகர்களது அரசு பற்றிய தகவலைத் தருகின்றது. அவ்வகையில் பஞ்சபாண்டவர்களில் ஒருவனான அர்ச்சுனன் தீர்த்தயாத்திரை மேற்கொண்டு இந்தியாவின் பல திருத்தலங்களைத் தரிசித்தவாறு தெற்கு நோக்கி வந்ததாகவும் அவ்வேளை அர்ச்சுனன் நாக இளவரசியான சித்திராங்கை என்பவளைச் சந்தித்து அவளை மணந்ததாகவும் அதில் கூறப்படுகின்றது.

மகாவம்சம் எழுதப்பட்ட காலத்துக்கு 400 ஆண்டுகள் முற்பட்ட காப்பியமான மணிமேகலை யாழ்ப்பாணத்தை நாகநாடு, சம்புத்தீவு, மணிபல்லவம் போன்ற பெயர்களால் குறிப்பிடுகின்றது. மணிமேகலையில் குறிப்பிடப்படும் நாகபுரம் இன்றைய கந்தரோடை என இனங்காணப்படுகிறது. மணிமேகலை நாகநாட்டை தமிழர்கள் வாழும் நாடாகவும் புராதன யாழ்ப்பாணத்தை புண்ணியரசன், அணைவாணன் ஆகிய தமிழ்ப்பெயர்கொண்ட நாகமன்னர்கள் ஆட்சி புரிந்ததாகவும் குறிப்பிடுகின்றது. மேலும் சிலப்பதிகாரத்தில் கண்ணகி, அவளது தந்தை ஆகியோரின் சிறப்புக்களை எடுத்துரைக்கும் பகுதியில், புகார் நகரின் சிறப்பினை எடுததுக்காட்டும்போது இந்நகர் நாகநாட்டின் சிறப்புக்களை ஒத்தாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நகரில் நாகர்களே வாழ்ந்தனர். அத்துடன் மணிமேகலையில் நாகநாட்டு அரசன் மகளான பீலிவளை என்பவள் சோழநாட்டிற்குச் சென்று கிள்ளி வளவன் என்ற சோழநாட்டு இளவரசனை மணந்த செய்தி குறிப்பிடப்படுகிறது. இக்குறிப்புக்கள் அனைத்தும் வடஇலங்கையிலே நாகஅரசு ஒன்று இருந்த செய்தியை எடுத்துக்காட்டுகின்றன.

கி.மு 6ஆம் நூற்றாண்டில் விஜயன் வரும்போது நாகர்களின் பிரதான இடமாக இருந்தவை ஈழத்தின் வடபகுதியும் வடக்கில் இருந்து மேற்குக் கரையோரமாகக் களனி வரையுள்ள பகுதிகளும் ஆகும். இவை அத்தருணத்தில் நாக இராசதானிகளாக இருந்தன. இங்கு வாழ்ந்த மக்கள் நாகரிக வளர்ச்சி கொண்டவர்களாகவும் தமக்கென்று அரசுகளைக் கொண்டவர்களாகவும் இருந்ததை மகாவம்சம் கூறுகின்றது. அவற்றில் புத்தர் மூன்று முறை இலங்கைக்கு வந்ததாகவும் கூறப்பட்டுள்ளது. ஒருமுறை வந்தபோது வடபகுதியில் மகோதரன் என்ற ஆட்சியாளன் ஆட்சி செய்ததாகவும் களனியில் சூளோதரன் என்ற மற்றொரு நாகமன்னன் ஆட்சி புரிந்தாதகவும் இருவருக்கும் இடையில் ஓர் இரத்தினம் பதித்த சிம்மாசனத்திற்கு ஏற்பட்ட பிணக்கை அவர் தீர்த்துவைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தச் சிம்மாசனத்தில் இருந்து அவர்களுக்கு உபதேசம் செய்ததாகவும் கூறப்படுகின்றது. இதனை மணிமேகலையும் குறிப்பிடுகின்றது.

கி.பி 14ஆம் நூற்றாண்டில் சிங்கள மொழியில் எழுதப்பட்ட சமதரமலங்கார் என்ற நூலில் கூறப்பட்டுள்ள ஒரு உபகதையில் இலங்கையின் தெற்குப் பகுதியிலுள்ள மகாமத்திலிருந்து பறந்து வந்த ஒரு ஆண் காக்கைக்கும் வட பகுதியான மணிநாகதீபத்திலிருந்து வந்த ஒரு பெண் காக்கைக்கும் இடையில் ஏற்பட்ட காதலும் திருமண நிகழ்வும் கூறப்படுகின்றது. இதன் மூலம் நாகதீபத்தில் ஓர் ஆட்சி நடைபெற்றது என்பது ஊகிக்க முடிகிறது.

"ராஜவலிய" என்ற சிங்கள நூல் மணிநாகதீபத்தினை புராதன யாழ்ப்பாணத்தின் புகழ்பெற்ற பௌத்த மையம் எனக்கூறுகின்றது. இவற்றை ஆராய்ந்த கொடகும்புர "மணிநாகதீப" என்ற நகரம் பண்டைய கந்தரோடை என உறுதிப்படுத்துகின்றார். அநுராதபுரத்திலே தனது அரசுரிமையை இழந்த அபயநாகன்(கி.பி 285 – 293) நாகதீபததிற்குச் சென்று அங்குள்ள பல்லதித்தத் துறைமுகத்திலிருந்து கடல் மார்க்கமாக இந்தியாவிற்குச் சென்ற சம்பவத்தை மகாவம்சம், சூளவம்சம் ஆகிய பாளி நூல்கள் எடுத்துரைக்கின்றன.

மேலும் கி.பி2ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட கிரேக்க, உரோம நூல்களில் நாகதீப என்ற ஓர் இடம் இலங்கையில் முக்கிய கரையோரப்பட்டினங்களில் ஒன்றாக குறிப்பிடப்படுகின்றது. கிரேக்க மற்றும் உரோமர்கள் வரைந்த தேசப்படங்களில் இவ்விடம் இலங்கையின் வடக்கில் காட்டப்பட்டுள்ளது.

அடுத்து கி.பி14ஆம் நூற்றாண்டில் எழுதப்பெற்ற "நல்பொத்த" என்ற சிங்கள இலக்கிய நூலில் இடம்பெறுகின்ற கதுறுகொட என்ற பதம் கந்தரோடையைக் குறித்து நிற்கின்றது என அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். கதுறுகொட என்ற பெயர் பழைய நாகமன்னர்கள் தம் தலைநகருக்கு இட்ட பெயர் எனவும் காதுரு எனும் பதம் மலையை உணர்த்தி நின்று இன்று அது கதிரமலை என வழங்கப்படுகின்றது எனவும் சிலர் குறிப்பிடுகின்றனர். இதன் மூலம் விஜயன் வருவதற்குப் பல நூற்றாண்டுகள் முன்னமே கந்தரோடை நாக மன்னர்களது தலைநகரமாக விளங்கியதைக் கந்தரோடையில் கிடைத்த அழிபாடுகள் உணர்த்துகின்றன எனலாம். இராஜநாயகம் அவர்கள் தமிழ் இலக்கியங்களில் வரும் கதிரமலையைக் கந்தரோடையுடன் தொடர்புபடுத்திக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தரோடையானது தலைநகராக விளங்கியிருக்கலாம் என்பதை எடுத்துக்காட்டியுள்ளார். இவ்வாறு பல இலக்கிய ஆதாரங்களின் மூலமாக யாழ்ப்பாண அரசின் தோற்றத்தில் நாகர்களின் செல்வாக்கு இருந்தமையினை அறிந்துகொள்ள முடிகின்றது.

பல கல்வெட்டுக்கள் இந்நாகரின் சிறப்புப் பற்றிக் கூறுகின்றன. சங்ககாலத்திற்கு சமமான காலத்தில் இலங்கைத் தமிழரிடையே அரசமரபு தோன்றியிருந்ததனை கி.மு 3ஆம் நூற்றாண்டில் இருந்து பயன்பாட்டிற்கு வந்த பிராமிக் கல்வெட்டுக்களில் வரும் ஆய், வேள் பருமக போன்ற பட்டப்பெயர்கள் உறுதி செய்கின்றன. இதிலிருந்து கி.மு 3ஆம் நூற்றாண்டிலிருந்து தமிழ் அரசு ஈழத்தில் உருவாக்கம் பெற்றதனை அறியமுடிகிறது.

பாளி இலக்கியங்கள் வடஇலங்கையை நாகதீபம் என்ற பெயரில் குறிப்பிடுவதைக் காணலாம். அதேபோன்று பாளி இலக்கியங்களில் இலங்கையின் பூர்வீக குடிகளான இயக்கர், நாகர் போன்ற இனத்தவர்களைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளன. இதுவரை காலமும் பாளி இலக்கியங்களில் குறிப்பிடப்பட்ட நாகர்கள் பற்றிய செய்தி ஐதீகமான செய்தியாக நோக்கப்பட்டு வந்தது. இருப்பினும் அண்மைக்காலத் தொல்லியல் ஆய்வுகள் நாகர்களை வரலாற்று உதயகால மக்களாக எடுத்துக்காட்டி இருப்பதனைக் காணலாம். சிரான்தெரணியாகல என்ற அறிஞர் இலங்கையில் குறுனிக் கற்காலத்தை முடித்து வரலாற்று உதயகாலத்தைத் தொடக்கி வைத்த மக்களாக நாகர்களைக் குறிப்பிடுகின்றார்.

பாளி நூல்களில் கி.பி 7ஆம் நூற்றாண்டுவரை நாகதீபத்தினுடைய வரலாறு மறைக்கப்பட்ட நிலையே காணப்படுகின்றது. இப்பாளி நூல்கள் அநுராதபுர அரசிற்கும் தென் இலங்கைச் சிற்றரசர்களுக்கும் இடையிலான அரசியல் உறவு பற்றி விரிவாகக் கூறுகின்ற அதேவேளை மிகக் கிட்டிய தூரத்தில் உள்ள நாகநாட்டு அரசு பற்றிக் குறைந்தளவேனும் குறிப்பிடவில்லை. கி.பி 7ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் அநுராதபுரத்திற்கும் வட இலங்கைக்கும் இடையிலான ஒரு சில உறவுகள் பற்றிப் பாளி நூல்கள் கூறினாலும் அவை நாகநாட்டில் இருந்து அநுராதபுர அரசுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட படையெடுப்புக்கள் மற்றும் கிளர்ச்சிகள் பற்றிய செய்திகளாகவே காணப்படுகின்றன. இச்சான்றுகள் அநுராதபுர அரசியல் வட்டத்திற்குள் உட்படாதவகையில் நாகநாட்டில் தமிழ் அரசு ஒன்று தோன்றி வளர்ந்ததை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துக்காட்டுகின்றன. மேலும் கந்தரோடை, மாதோட்டம் போன்ற இடங்களில் கிடைத்த ஐந்து சிங்களக் கல்வெட்டுக்கள் நாகதீபத்தில் சிங்கள மன்னர்கள் அடைந்த வெற்றிக்குச் சான்றாகக் கூறப்படுகின்றன. ஆனால் இவை இலங்கையின் நீண்ட வரலாற்றில் தற்காலமாகப் பெற்ற வெற்றிகளாகக் கருதப்பட வேண்டும் எனப் ப.புஸ்பரட்ணம் குறிப்பிடுகின்றார்.

இலங்கையின் வடபகுதியானது பாளி இலக்கியங்களில் நாகதீபம் எனவும் தமிழ் இலக்கியங்களில் நாகநாடு, பணிபல்லவம் என்ற பெயர்களாலும் அழைக்கப்பட்டுவந்ததைக் காணலாம். கி.பி 6ஆம் நூற்றாண்டின் பின் இப்பகுதியானது பாளி இலக்கியங்களில் உத்தரதேசம் என்ற பெயரால் வழங்கப்பட்டதைக் காணலாம். இலங்கையின் வடபகுதியானது நாகதீபம் என அழைக்கப்பட்டதை கி.பி 4ஆம் நூற்றாண்டிற்குரிய வல்லிபுரப் பொற்சாசனம் ஊர்ஜிதம் செய்கிறது. கி.பி 2ஆம் நூற்றாண்டில் வசப மன்னனுடைய காலத்தில் நாகதீபத்தினை அவன் வல்லிபுரத்திலிருந்து நிர்வாகித்தான் என்பதும் குறிப்பிடத்தக்கது.

வடமத்திய மாகாணத்தில் கிடைத்த ஒரு தமிழ்ப் பிராமிக் கல்வெட்டில் "நாகநகர்" பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. இக்கல்வெட்டைப் பரிசீலித்த கலாநிதி ரகுபதி அவர்கள் இது கந்தரோடையைக் குறிப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். இவ்வகையில் வடஇலங்கையில் காணப்பட்ட கந்தரோடையைத் தலைநகராகக்கொண்டு அரசொன்று ஆளுகைக்கு உட்பட்டு வளர்ந்து செல்வதையும் கதிரமலை என்னும் தலைநகரானது சோழப் படையெடுப்புடன் சிங்கை நகருக்கு மாற்றமடைந்ததையும் காணலாம். யாழ்ப்பாண வைபவமாலை குறிப்பிடுகின்ற கதிரமலையை ஆட்சிசெய்த உக்கிரசிங்கன் சோழ இளவரசியை மணந்து சிறிதுகாலம் ஆட்சிசெய்த பின்னர் தலைநகரை சிங்கை நகருக்கு மாற்றியதாகக் குறிப்பிடும் செய்தி சோழப்படையெடுப்பின் விளைவாக தலைநகர் மாற்றம் பெற்றதை எடுத்துக்காட்டுகின்றது. இச்சிங்கைநகரானது ஆரியச்சக்கரவர்த்திகளால் நல்லூரில் அரசு அமைக்கும் வரை காணப்பட்டதைக் காணலாம். இதன் மூலமாக யாழ்ப்பாண அரசின் உருவாக்கத்தில் நாகர்களின் செல்வாக்கு புலனாகின்றது.

குடுமிய மலைக் கல்வெட்டில் வரும் "நாகநாடு" யாழ்ப்பாணம் உள்ளிட்ட வட இலங்கையின் பரந்த பிரதேசத்தைக் குறிப்பிடுகின்றது. இலங்கையில் கிடைத்த பிராமிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாசனங்களில் இருந்து வடஇலங்கையின் அரச உருவாக்கத்திற்கு நாகஅரசவம்சம் செல்வாக்குச் செலுத்தியதை அறியமுடிகின்றது. இவ்வகையில் இலங்கையில் கிடைத்த நான்கு பிராமிச் சாசனங்கள் நாக மன்னர்கள் பற்றிக் குறிப்பிடுகின்றன. வடஇலங்கையில் வவுனியாவில் உள்ள புளியங்குளம் என்னும் இடத்தில் கிடைத்த பிராமிச் சாசனம் இராஜநாக என்பவன் பற்றியும் அவனது மகளான அனுரதி பற்றியும் குறிப்பிடுகின்றது. இச்சாசனத்தின் மூலம் வட இலங்கையில் நாகமன்னர்களுடைய ஆட்சி இடம்பெற்றதை அறிந்துகொள்ள முடிகின்றது. இது தவிர தென் இலங்கையில் கிடைத்த பிராமிச்சாசனம் ஒன்றில் குருநாகன் என்ற பதம் இடம்பெற்றதை அறியமுடிகிறது.

வட இலங்கையில் நிலவிய நாகஅரச வம்சத்தினுடைய ஆட்சி பற்றி அறிவதற்கு நாணயங்கள் பெரிதும் உதவுவதைக் காணலாம். இந்நாக மன்னர்களுடைய ஆட்சி வடஇலங்கையில் மட்டுமன்றித் தென்இலங்கையிலும் இடம்பெற்றுள்ளது. இதற்கு அக்குறுகொட என்ற இடத்தில் கிடைத்த நாணயத்தில் திசபுரச நாகராஜன் என்ற பதம் இடம்பெற்றிருப்பதைக் காணலாம். அதேபோல் வடஇலங்கையில் உடுத்துறை என்னும் இடத்தில் கிடைத்த நாணயம் ஒன்றில் "நாகபூமி" என்ற வாசகம் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. இந்நாணயம் வடஇலங்கையில் நாகவம்சம் ஆட்சி புரிந்ததையும் அவர்களது ஆட்சிப் பிரதேசம் நாகபூமி என அழைக்கப்பட்டதையும் எடுத்துக்காட்டுகின்றது.

அடுத்து வடஇலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட நாணயங்களில் நாகநாடு என வாசிக்கக்கூடிய எழுத்துக்கள் இருப்பது சுட்டிக்காட்டப்படுகிறது. இந்நாணயங்களை வடஇலங்கையில் ஆட்சிசெய்த நாகஅரச வம்சத்தினர் வெளியிட்டு இருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. இது தவிர வடஇலங்கையில் கிடைத்த நாணயங்களிலிருந்து அவற்றின் வடிவமைப்புத் தோற்றம், குறியீடுகள், சின்னங்கள் போன்றன அடிப்படையில் வேறுபட்டு தனித்துவமான நாணயங்களாகக் காணப்படுகின்றன. எனவே இந்நாணயங்களை வடஇலங்கையில் ஆட்சிசெய்த சுதேச தமிழ் மன்னர்கள் வெளியிட்டிருக்கலாம் என ப. புஸ்பரட்ணம் குறிப்பிடுகின்றார்.

அடுத்து கந்தரோடையில் கிடைத்த நான்கு வெள்ளி நாணயங்களில் நாகசின்னம் பொறிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் நாக மன்னர்கள் கந்தரோடையைத் தலைநகராகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு வடஇலங்கையில் ஆட்சி புரிந்ததையும் அவர்கள் நாணயங்கள் வெளியிடும் அளவிற்கு இறைமை பெற்று இருந்ததையும் அறியமுகின்றது.

இலங்கைமீது படையெடுத்த சோழ மன்னர்கள் தாம் வெற்றி கொண்ட நாடுகளின் பெயரில் நாணயங்களை வெளியிட்டு வந்தனர். அவ்வகையில் 1ஆம் பராந்தக சோழனின் 38ஆவது ஆண்டுக் கல்வெட்டு அம்மன்னனை "ஈழமும் மதுரையும் கொண்ட கோப்பரகேஸ்வரி வர்மன்" எனக் குறிப்பிட்டுள்ளது. அவ்வகையில் 1ஆம் பராந்தக சோழன் ஈழத்தினை வெற்றி கொண்டதன் நினைவாக "ஈழக்காசு" என்ற பெயரில் நாணயங்களை வெளியிட்டதாக அறியப்படுகின்றது. மேலும் அவனால் வெளியிடப்பட்ட நாணயங்கள் சிலவற்றில் உரக என்ற பெயர் இடம்பெற்றுள்ளது. இந்த உரக என்ற வடமொழிச் சொல்லுக்கு தமிழில் நாகர் போன்ற பொருள் காணப்படுகின்றது. 1ஆம் பராந்தகச் சோழனது காலத்தில் வட இலங்கை ஈழம் என அழைக்கப்பட்டதாகவும் அரசவம்சம் ஆட்சி செய்த வடஇலங்கையை வெற்றி கொண்டதாலேயே இவன் "உரக" எனப்பெயர் கொண்ட நாணயங்களை வெளியிட்டான் எனவும் கருதப்படுகின்றது. எனவே இச்சான்றுகளின் ஊடாக சோழப்படையெடுப்பிற்கு முன்னர் வடஇலங்கையில் நாகர்களுடைய ஆட்சி இடம்பெற்றதை அறியமுடிகிறது.

இவை தவிர ஆனைக்கோட்டையில் கண்டெடுக்கப்பட்ட கி.மு 3ஆம் நூற்றாண்டுக்குரிய "கோவதன்" என்ற வெண்கல முத்திரையும் பூநகரியில் கண்டுபிடிக்கப்பட்ட ஈழவேளான், ஆய், வேள் ஆகிய கி.மு 3ஆம் நூற்றாண்டுக்குரிய தமிழ்ப் பிராமி எழுத்துக்கள் கொண்ட மட்பாண்ட ஓடுகளும் இவை தமிழ் பேசும் மக்கள் வாழ்ந்த பண்டைக்காலப் பிரதேசங்கள் என்பதையும் யாழ்ப்பாணத்து நாகர்கள் தமிழ்மொழியையே பேசியும் எழுதியும் வந்த மக்கள் என்ற உண்மையையும் கூறிநிற்கின்றன.

## நிறைவுரை

பொதுவாக தொகுத்து நோக்கும்போது இலங்கையின் ஆரம்பகால வரலாற்றில் நாகர்கள் முக்கியம் பெற்ற ஒரு குழுமமாக இருந்திருக்கின்றனர். வடஇலங்கையில் நாகர்களுடைய செல்வாக்கினை ஆதாரங்கள், சாசனங்கள, நாணயங்கள், தொல்பொருட் தடயங்கள் மற்றும் அறிஞர்களின் கூற்று மூலமாக எடுத்துக்கூறலாம். கி.பி 13ஆம் நூற்றாண்டில் நல்லூரைத் தலைநகராகக் கொண்டு அரசு ஒன்றை அமைப்பதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னரே இலங்கையில் நாகவம்சத்தினர் வடஇலங்கையை மையமாகக் கொண்டு ஆட்சி செய்ததை அறியமுடிகின்றது. இவ்வகையில் வட இலங்கையில் நாகதீபத்தில் நாகர்கள் தனித்துவமான இனமாக வாழ்ந்ததோடு, அவர்கள் தமக்குள் ஓர் அரசியல் அமைப்பையும் ஏற்படுத்தி இருந்தனர் என்பதனையும் அறியமுடிகின்றது. அந்தவகையில் யாழ்ப்பாண அரச உருவாக்கத்திற்கு நாகஅரச வம்சத்தினரின் பங்களிப்பானது குறிப்பிடத்தக்க வகையில் அமைந்தததென்றே கூறவேண்டும்.

**உசாத்துணை**


1. இந்திரபாலா, கா., (2006) *இலங்கையில் தமிழர்*, குமரன் புத்தகம், சென்னை.
2. ஏகநாயகவல்லி, சிவராஜசிங்கம்., (2003) *ஈழவரலாற்றுப் பதிப்பு*, Arrow Web Publishers,Toronto.
3. கணபதிப்பிள்ளை, க., (2000) *இலங்கைவாழ் தமிழர் வரலாறு*, குமரன் புத்தகம், சென்னை.
4. சிற்றம்பலம், சி.க., (1993) *யாழ்ப்பாண தொன்மை வரலாறு*, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு, யாழ்ப்பாணம்.
5. புஸ்பரட்ணம், ப., (1993) *பூநகரி தொல்பொருள் ஆய்வு*, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு, யாழ்ப்பாணம்.
6. தியாகராஜா, எஸ்., (2004) *ஈழத்தமிழரின் ஆதிச்சுடுகள்*, தேசம் வெளியீடு, லண்டன்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6



# வீரப்பெண்மணி இராணி வேலுநாச்சியார்(கி.பி 1780-1789)

சி. மங்களரூபி
(கட்டுரையாளர)
வரலாற்றுத்துறை



வேலு நாச்சியர்

## அறிமுகவுரை

ஆங்கிலேயர்களின் மேலாதிக்கம் இந்தியாவில் பரவிக்கொண்டிருந்த அக்காலச் சூழலில் துணிந்து வாளேந்தி அந்நியர்களுக்கு எதிராகப் போராடி சிவகங்கையினை மீட்டு இந்திய வரலாற்றில் அழியாத புகழைப் பெற்றவர் வேலுநாச்சியார். பெண்கள் வெளியில் தலைகாட்ட முடியாத அக்காலகட்டத்தில் சிறந்த தளபதிகளையும் அமைச்சர்களையும்கூட வைத்துக்கொண்டு ஹைதர் அலியினுடைய ஆதரவுடன் மக்களின் உதவியுடன் சிவகங்கையினை தன்வசப்படுத்தினார். அவ்வகையில் அவரது ஆட்சிக்காலம் குறுகியதாக இருந்தாலும் அக்காலம் முழுவதும் ஆங்கிலேயப்படைகளுக்கு சவாலாகவே திகழ்ந்தார்.

ஆங்கிலேயராதிக்கத்திற்கெதிராகத் தொடக்க காலங்களிலிருந்து இந்தியர்கள் பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டு வந்தனர். இவ்வாறு ஆங்கிலேயர்களுக்கு எதிராக நடைபெற்ற போராட்டங்கள் யாவுமே சுதேச ஆட்சியாளர்களினாலும் சமகாலத்தில் அங்கு செயற்பட்டுவந்த தனிப்பட்ட இயக்கங்களினாலுமே மேற்கொள்ளபட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. ஆண்கள் மட்டுமன்றிப் பெண்களும் வீரத்துடன் அந்நியர்களை விரட்டுவதற்கான இத்தகைய அந்நிய எதிர்ப்புப் போராட்டங்களில் ஈடுபட்டனர். இவர்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜான்சி இராணி, இராணி மங்கம்மா, தில்லையடி வள்ளியம்மை, கல்பனாதாத், பரீதிலதா, சுனிதீ சௌத்திரி, துர்க்காதேவி, வசந்தாதேவி, மாதங்கிளி, மேடம் காமா, அருணா ஆசப்அலி, இராணி வேலுநாச்சியார் போன்ற பல வீரப்பெண்மணிகள் குறிப்பிடத்தக்கவர்கள். அந்தவகையில் கி.பி1857 இல் இந்தியாவில் நடைபெற்ற சிப்பாய்களின் புரட்சியில் ஈடுபட்டு மரணத்தினைத் தழுவிய வடநாட்டினைச் சேர்ந்த இலட்சுமிபாயினை வரலாறு தெரிந்த எவரும் அறியாமலிருக்கமாட்டார்கள். ஆனால் அவருக்கும் முன்னதாகவே தமிழ்நாட்டில் ஆங்கிலேய ஏகாதிபத்தியத்திற்கு எதிராகப் போராடி வெற்றிபெற்ற முதல் பெண் என்ற பெருமையினை இராணி வேலுநாச்சியார் பெற்றுக்கொள்ளுகின்றார்.

உண்மையில் புலியினை முறத்தினால் அடித்துத் துரத்திய தமிழ்நாட்டுப் பெண்கள் என்ற பெருமையுடன் மட்டும் நிற்காமல் புலியினை அடித்துக் கொன்றவர் தமிழ்நாட்டுப் பெண் என்ற தமிழ்நாட்டுப் பெண்களின் வீரத்தினை உலகளவிற்குக் கொண்டுசென்றவர் வேலுநாச்சியார். சுருக்கமாகச் சொல்லப்போனால் கி.பி18ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேய ஆட்சியிலிருந்த இந்தியாவின் விடுதலைக்காக ஆயுதமேந்திப் போராடிய முதல் பெண் போராளி என்ற பெருமையினையும் இவர் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

### பிறப்பும் இளமைக்காலமும்

தமிழ் நாட்டின் தென்பகுதிகளிலொன்றான இராமநாதபுரத்திலுள்ள சக்கந்தி என்ற சிறிய கிராமத்தில் கி.பி1730இல் வேலாயி எனப்பட்ட வேலுநாச்சியார் பிறந்தார். இராமநாதபுரத்தின் மன்னரான செல்லமுத்து எனப்பட்ட இரகுநாதசேதுபதியும் சிவகங்கை சக்கந்தி முத்தாள் நாச்சியார் என்பவளும் இவரது பெற்றோர்கள்.

இளவயதிலிருந்தே சகல துறைகளிலும் பிரகாசித்து வந்தவர் வேலுநாச்சியார். அதாவது அவர் சமஸ்கிருதம், ஆங்கிலம், மலையாளம், கன்னடம், தெலுங்கு, உருது போன்ற பத்து மொழிகளில் பேசக்கூடிய வல்லமை பெற்றிருந்தார். அதுமட்டுமன்றி போர்க் கலைகளான வாள் வீச்சு, அம்பு எறிதல், சிலம்பம் ஆடுதல், குதிரையேற்றம் ஆகிய கலைகளிலும் சிறந்து விளங்கினார். இவர் கற்ற கலைகள், அறிந்த மொழிகள் யாவும் பிற்காலத்தில் இவருக்கு உதவின. குறிப்பாக இக்கட்டான நேரத்தில் ஹைதர் அலியினைச் சந்தித்த சமயத்தில் அவருடன் உருது மொழியில் உரையாடி அவருடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராட்டினையும் அனுதாபத்தினையும் பெற்றமை குறிப்பிடத்தக்கது. பாடல்கள் பாடுவதிலும் கலைகளை இரசிப்பதிலும் அவருக்கு நிகர் அவரேதான். மகாபாரதம், இராமாயணம் போன்ற இதிகாசங்களையும் அறிந்திருந்தார். சிறந்த ஞாபகசக்தியினையும் பேச்சாற்றலையும்கூடக் கொண்டிருந்தார். இவை எல்லாவற்றினையும்விட மன உறுதியென்பது இவரிடம் ஏராளமாகவே இருந்தது.

## வீரச்செயல்கள்

வேலுநாச்சியாரின் வீரச்செயல்கள் பற்றி நாடே அறிந்த வரலாறுகள் பல உண்டு. இவர் தன்னுடைய 13ஆவது வயதில் அரண்மனையில் நடைபெற்ற சிலம்பாட்டப் போட்டியில் தன்னுடைய திறமையினை வெளிக்காட்டியிருந்தார். ஆண்களுடன் மோதிய இவர் அவர்களது சிலம்புகளைக் காற்றில் பறக்கவிட்டார். இப்போட்டியில் இவரது குருவான வெற்றிவேலுடன் மோதி அவரையும் சிலம்பாட்டத்தில் தோற்கடித்துத் தன்னுடைய வீரத்தினை வெளியுலகிற்குப் பறைசாற்றினார். இதன் மூலமாகக் குருவினை மிஞ்சிய சீடனாக மாறினார் வேலாயி.

சிவகங்கையின் முதலாவது மன்னராகச் சசிவர்ணதேவர் என்பவர் கி.பி1730இல் ஆட்சிப்பொறுப்பினை ஏற்றுக்கொண்டார். அவருக்கும் அவரது மனைவியான பூதக்கா நாச்சியாருக்குமிடையிலே முத்துவடுகநாதர் என்பவர் பிறந்தார். இவர் இளவரசராக இருந்த சமயத்தில் அரண்மனையின் கருவூலத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த நகைகள் களவாடப்பட்டன. இவ்வாறு கொள்ளையிடப்பட்ட நகைகளைக் கைப்பற்றி அதனை மன்னரிடம் மீட்டுக்கொடுத்தார் வேலாயி. இவரது வீரத்தினைப் பாராட்டிய அரசர் இளவரசராக இருந்த முத்துவடுகநாத தேவருக்கும் வேலாயிக்கும் கி.பி1746இல் மணமுடித்து வைத்தார். திருமணத்திற்குப் பின்னர்தான் வேலாயி என்ற அவருடைய நாமம் வேலுநாச்சியார் என மாற்றங்கண்டது. அன்று தொடக்கம் சிவகங்கைசீமைக்கு குடிபெயர்ந்தார் இவர்.

வேலுநாச்சியாரின் திருமணம் நடைபெற்ற மறுநாள் அவருடைய தந்தையார் மகளது வேண்டுகோளின் பிரகாரம் சிவகங்கை அரண்மனைக்குக் குதிரையொன்றினை அனுப்பிவைத்தார். ஒருதடவை அதன்மீது அமர்ந்த வேலுநாச்சியார் மக்களை நோக்கிக் கையினை அசைத்தவாறு பயணம் செய்தபோது. திடீரென அவரது கட்டுப்பாட்டினை மீறிய குதிரை வேகமாக ஓடிச்சென்று காட்டுக்குள் நின்றது. அதன்மீது ஆத்திரமடையாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலுநாச்சியார் அதனைத் தடவிக்கொடுத்து மன்னிப்போம், மறப்போம் என்ற கொள்கையினைப் பின்பற்றினார். அக்கட்டத்தில் அப்பிரதேசத்தில் நிகழ்ந்த ஒரு சம்பவத்தினை அவரால் அவதானிக்க முடிந்தது. அதாவது அப்பகுதியில் பெண்ணொருவர் அழுதபடி பஞ்சாயத்துக்கூட்டத்தில் நின்றதனை அவதானித்து அதுபற்றி அவளிடம் விசாரித்தபோது தன்மீது பொய்யான குற்றச்சாட்டுப்போடப்பட்டதாகக் கூறினாள். அத்தருணத்தில் அங்கு சென்று தன்னுடைய சாட்டையினால் குற்றம் சுமத்தியவன்மீதும் சாட்சிக்காரன்மீதும் அடித்தாள். அடிதாங்க முடியாத அவர்கள் இருவரும் தமது குற்றத்தினை ஒப்புக்கொண்டனர். தன்னை ஏமாற்றிய குதிரையினைச் சாட்டையினால் அடிக்காத இவர் அநீதி நடந்த இடத்தில் அச்சாட்டையினைப் பயன்படுத்தி நீதி வழங்கிய நிகழ்வானது பலரதும் பாராட்டினைப் பெற்றது.

வழமையாக முத்துவடுகநாதரும் வேலுநாச்சியாரும் இயற்கையின் அழகினை இரசிப்பதற்காக உலாவருவதனை பொழுதுபோக்காகக் கொண்டிருந்தனர். அவர்கள் இவ்வாறு ஒருதடவை குற்றாலச்சாரலை அனுபவிக்கச் சென்ற சமயத்தில் புதருக்குள் மறைந்திருந்த புலியொன்று முத்துவடுகநாதரின்மீது பாய்ந்தது. இக்கட்டத்தில் உடனே செயற்பட்ட வேலுநாச்சியார் புலியின் அடிவயிற்றில் ஓங்கிப் பலமான உதையினை மேற்கொண்டார். தொடர்ந்து நிலைகுலைந்த புலி வேலுநாச்சியாரின்மீது பாய்ந்தது. புலியுடன் மோதிய அவர் இறுதியில் அதனைக் கொன்றார். இச்சம்பவத்தில் பாதுகாப்பிற்குச் சென்ற மருது சகோதரர்களும் துணிவுடன் செயற்பட்டனர். கணவனது உயிரினைக் காப்பாற்றத் தன்னுடைய உயிரையும் துச்சமாக மதித்துப்போராடியவர் வேலுநாச்சியாரென்பது இச்சம்பவத்தின் மூலமாகப் புலனாகின்றது.

**விடுதலைப்போர்**

அமைதியாக இருந்த சிவகங்கைப் பிரதேசத்திற்கு ஆற்காட்டு நாவாப் முகமதுஅலியின் மூலமாக ஆபத்து வர ஆரம்பித்தது. சுசிவர்ணதேவருக்குப் பின்னர் முத்துவடுகநாதர் கி.பி1750இல் சிவகங்கையின் மன்னராகப் பதவியேற்றார். ஆட்சியில் அமர்ந்த அரசருக்கு பிரதானி தாண்டவராயம்பிள்ளை, இராணி வேலுநாச்சியார், மருது பாண்டியர்கள் போன்றவர்கள் இறுதிவரை விசுவாசிகளாக இருந்து பணியாற்றினர். ஆட்சியிலும்சரி பொருளாதார சமூக நலப் பணிகளிலும்சரி இவர்கள் அரசனுடன்கூடவே இருந்து தொண்டாற்றினர். நீண்டகாலமாக ஆற்காட்டு நவாப்பிற்கு முத்துவடுகநாதர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்பம் செலுத்த மறுத்து வந்தார். இந்நிலையில் கி.பி1772இல் நாவாப்பின் கோரிக்கையின் பிரகாரம் ஆங்கிலேயத் தளபதியான ஜோசப் ஸ்மித் என்பவனது தலைமையில் ஆங்கிலேய-நவாப்பின் கூட்டுப்படைகள் சிவகங்கையினை நோக்கி வந்தன. காளையர் கோயில் என்ற இடத்தில் இரு பகுதியினர்களுக்குமிடையிலே நடைபெற்ற போரில் முத்துவடுகநாதர் கொல்லப்பட்டார். படைவீரர்களிலும் இழப்புக்களைச் சிவகங்கை சந்தித்தது. தொடர்ந்து சிவகங்கை ஆங்கிலேயர்களின் பிடிக்குள் சென்றது. நவாப்பின் மகன் சிவகங்கையினை நிர்வாகஞ் செய்தான்.

இக்கட்டத்திலிருந்துதான் வேலுநாச்சியாரின் ஆங்கிலேயர்களுக்கெதிரான பழிவாங்கும் படலம் ஆரம்பிக்கின்றதெனலாம். கணவரது இழப்பு அவரால் தாங்க முடியாத இழப்பாகக் காணப்பட்டது. காளையர் கோயிலில் நேரில் கண்ட பிணக் குவியல்கள் அவரால் தாங்க முடியாத நிகழ்வாக அமைந்தது. சிவகங்கையினைவிட்டு மகள் வெள்ளச்சி, தாண்டவராயம்பிள்ளை, மருது சகோதரர்களுடன் வெளியேறிய இவர் திண்டுக்கல்லில் தஞ்சமடைந்திருந்தார். பின்னர் விருப்பாச்சிப் பாளையம் பாளையக்காரர் கோபால நாயக்கரிடம் அடைக்கலம் பெற்றார். அமைச்சர் தாண்டவராயம்பிள்ளையின் அறிவுரையின் பிரகாரம் மைசூர் அரசர் ஹைதர் அலியினது உதவியினைப் பெற்றுச் சிவகங்கையினை மீட்கின்ற முயற்சியில் இறங்கினார். சிவகங்கையிலிருந்து தப்பித்துவந்த மக்கள் பலருக்கு மருது சகோதரர்கள் பயிற்சியளித்தனர். அவர்களுக்கான இரகசியக்கூட்டங்களை வேலுநாச்சியார் விருப்பாச்சிப் பாளையத்தில் நடத்தினார். சிலர் விருப்பாச்சிப் பாளையத்தில் நிரந்தரமாகவே வேலுநாச்சியாருக்குப் பாதுகாப்பினை வழங்கும்பொருட்டுத் தங்கிவிட்டனர்.

ஹைதர் அலியினைப் பெறுத்தவரை அவனது பரம எதிரிகளாக ஆங்கிலேயர்களும் நவாப்பும் காணப்பட்டனர். இதனால் இவர்கள் இருவரையும் எதிர்ப்பதற்கு அவன் யாருடனும் கூட்டுச் சேருவதற்குத் தயாராக இருந்தான். இது ஹைதர்அலிக்கும் அவர்களைப் பழிவாங்குவதற்கான சந்தர்ப்பமாகவும்கூட அமைந்தது. இவனிடமிருந்து காலாட்படை, குதிரைப்படை என்பனவற்றினைப் பெறுவதற்குத் தாண்டவராயம்பிள்ளை கடிதமொன்றினை வரைந்தார். இந்நிலையில் வயது முதிர்ந்த அவர் நோயினால் மரணிக்க நேரடியாகவே திண்டுக்கல்லில் ஹைதர்அலியினைச் சந்தித்த வேலுநாச்சியார் உருதுமொழியில் அவனுடன் உரையாடி அவனை ஆச்சரியப்பட வைத்தார். திண்டுக்கல்லில் ஆண்வேடமணிந்தே இவனைக் காணச் சென்றமை குறிப்பிடத்தக்கது. இவருடைய வீரத்தினையும் பேச்சாற்றலையும் கண்ட ஹைதர்அலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரடியாகவே அவருக்கு உதவ முன்வந்தான். விருப்பாச்சிக் கோட்டையில் போருக்கான பயிற்சியும் அவர் வணங்குவதற்கு இராஜேஸ்வரி அம்மன் சிலையினையும் ஹைதர்அலி வழங்கினான். இதிலிருந்து வேலுநாச்சியாரின் வீரத்தின்மீது ஹைதர்அலி கொண்டிருந்த நம்பிக்கையினைப் புரிந்துகொள்ள முடிகின்றதெனலாம்.

**போர் வெற்றிகள்**

தன்னுடைய படைகளுக்கு பயிற்சிகள் வழங்கிப் போருக்கான ஆயுதங்களைச் செய்ததன் பின்னராகச் சிவகங்கையினைத் தம்மிடம் ஒப்படைக்குமாறு பல தடவைகள் நவாப்பிடம் வேலுநாச்சியார் வேண்டுகோள் விடுத்தபோதும் நவாப் அதுபற்றி எவ்விதமான சாதகமான பதிலையும் அவருக்கு வழங்கவில்லை. சூழ்நிலையும் அவருக்குச் சாதகமாக இருப்பதனை அறிந்த கம்பனியினர் தாம் சிவகங்கையினை ஒப்படைப்பதாகவும் பதிலுக்கு மருது சகோதரர்களைத் தம்மிடம் ஒப்படைக்க வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டனர். இச்செய்தியானது வேலுநாச்சியாருக்கு மேலும் ஆத்திரத்தினை உண்டாக்கிய நிலையில் வேறு வழியின்றிப் போருக்குத் தயாரானர்.

கி.பி1780 ஐப்பசித் திங்கள் ஐந்தாம் நாள் வேலுநாச்சியாரின் தலைமையில் திண்டுக்கல்லிலிருந்து சிவகங்கையினை நோக்கிப் பெரும்படையொன்று புறப்பட்டது. ஹைதர்அலி 5000 குதிரைவீரர்களையும் 5000 போர் வீரர்களையும் பீரங்கிப்படையொன்றினையும் உதவிக்கு அனுப்பிவைத்தார். இவருடைய தாக்குதலினால் நிலைகுலைந்த நவாப்பினுடைய படைகள் நாலா பக்கமும் சிதறியோடின. ஆங்கிலேயத் தளபதி ஜோசப் ஸ்மித் பின்வாங்கினார். தொடர்ந்து காளையர் கோயில் பிரதேசம் இவரால் கைப்பற்றப்பட்டது. அங்கே வீரக்கல்லொன்றினை நாட்டிய இவர் தமது திருமாங்கல்யத்தினை முதலாவது காணிக்கையாகச் வைத்துக் கணவருக்கு அஞ்சலி செலுத்தினார். தொடர்ந்து காளையர் கோயிலில் பூசைக்கான ஏற்பாடுகளையும் செய்தார். தற்போது இவ்வாலயமானது கொல்லங்குடி வெட்டையர் காளியம்மாள் கோயில் என்ற பெயரினால் அழைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து மதுரை கோச்சடை என்ற இடத்தில் நவாப்பினுடைய படைகளையும் மானாமதுரையில் ஆங்கிலேயப்படைகளையும் வேலுநாச்சியார் தோற்கடித்தார்.

காளையர் கோயிலைக் கைப்பற்றிய வேலுநாச்சியார் சிவகங்கைப் பகுதி முழுவதனையும் கைப்பற்றுவதற்கான நடவடிக்கையில் தொடர்ந்து ஈடுபட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹைதர்அலியினால் வழங்கப்பட்ட நவீன ஆயுதங்கள் அவருக்கு இந்நோக்கத்தினை நிறைவேற்றுவதற்குப் பெருமளவிற்குக் கைகொடுத்தது. சிவகங்கையிலும் திருப்பத்தூர் பகுதியிலும் கம்பனியின் படைகளும் நவாப்பினுடைய படைகளும் நாலா பக்கங்களிலும் பரவி நின்றமை வேலுநாச்சியாருக்குச் சவாலாகக் காணப்பட்டது. இதனால் இவற்றினைத் தோற்கடிப்பதற்குப் படையினை இரண்டாகப் பிரித்து ஒன்றிற்குச் சின்ன மருதுவினையும் மற்றைய படைக்குப் பெரிய மருதுவினையும் தளபதியாகப் போட்டு பெரிய மருதுவுடன்கூடவே வேலுநாச்சியாரும் புறப்பட்டார். சின்ன மருதுவின் தலைமையில் சென்ற படை திருப்பத்தூரில் ஆங்கிலேயப்படைகளைத் தோற்கடித்தது.

விஜயதசமி அன்று சிவகங்கை அரண்மனைக்குள் இருக்கின்ற இராஜேஸ்வரி அம்மனைச் சிவகங்கைப் பகுதியிலுள்ள பெண்கள் கூட்டமாகச் சென்று வழிபடுவது வழக்கமாக நடைபெற்றுவந்தது. இதனால் வேலுநாச்சியார் தாக்குதல் நடாத்துவதற்கு மாறுவேடத்தில் அரண்மனைக்குள் நுழைவதெனத் திட்டம் தீட்டப்பட்டது. கோட்டையின் நிலாமுற்றத்தில் கம்பனிப்படையினர் ஆயுதங்களை வழிபாடு செய்யும் பொருட்டுக் குவியலாக வைத்திருந்தனர். இந்நிலையில் வேலுநாச்சியாரின் படையிலிருந்த குயிலி என்ற பெண் விளக்கிற்காக வைத்திருந்த நெய்யினைத் தன்னுடைய உடலிலே ஊற்றிக்கொண்டு வைக்கப்பட்டிருந்த ஆயுதக்குவியலுக்குள் குதித்தாள். இதன்போது பல ஆங்கிலேயப் படைவீரர்கள் கொல்லப்பட்டதுடன் அங்கே அடுக்கிவைக்கப்பட்டிருந்த ஆயுதங்களும் அழிக்கப்பட்டன. தொடர்ந்து ஆங்கிலேயத் தளபதி பன்ஜோர் சிவகங்கையினை நேச நாடாக மாற்றுவதற்கு உடன்படிக்கை செய்வதாக வாக்களித்தமையினைத் தொடர்ந்து கைதியாக்கப்பட்ட அவன் விடுதலை செய்யப்பட்டான். தொடர்ந்து கி.பி1780இல் சிவகங்கையின் அதிகாரபூர்வ இராணியாகப் பொறுப்பேற்றார் வேலுநாச்சியார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வேலுநாச்சியாரின் அரண்மனை**

வேலுநாச்சியாரின் நிர்வாகமானது சிவகங்கைச்சீமையில் சிறப்பான வகையில் நடைபெற்றது. மக்களது குறைகளை உடனுக்குடன் கேட்டறிந்து பரிகாரத்தினை வழங்கினார். கி.பி1790இல் தன்னுடைய மகள் வெள்ளைச்சிக்குப் பட்டத்தினைச் சூட்டித் தன்னை ஆட்சியிலிருந்து விடுவித்தார். ஆனால் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட விபத்தொன்றில் கி.பி1792இல் வெள்ளைச்சி மரணமடைந்தார். கி.பி 1793இல் வெள்ளைச்சியின் மகள் குழந்தை நாச்சியாரும் இறந்த சமயத்தில் விருப்பாட்சிப்பாளையம் சென்று அங்கே நிரந்தரமாக வேலுநாச்சியார் தங்கினார். பின்னர் கி.பி 1796இல் வேலுநாச்சியார் அங்கேயே மரணமடைந்தார். தொடர்ந்து அவருடைய உடலுக்கு உடையார் தேவர் இறுதிக்கிரியையினைச் செய்தார்.

**வேலுநாச்சியாரும்-மருதுசகோதரர்களும்**

வேலுநாச்சியாரின் வரலாற்றினையோ அல்லது சிவகங்கையின் வரலாற்றினையோ கற்பவர்கள் எவரும் மருது சகோதரர்களை விலக்கிவிட்டுச் செல்ல முடியாது. முத்துவடுகநாதரின் விருப்பத்திற்குப் பாத்திரமாக அமைந்த இவர்கள் இருவரும் வேலுநாச்சியாரையும் அவளது மகளையும் இறுதிவரையும் காப்பாற்றி வந்தவர்கள். கணவன் இறந்த தருணத்தில் உடன்கட்டை ஏற முற்பட்ட வேலுநாச்சியாரின் மனத்தினை மாற்றி அவளை வரலாற்றில் இடம்பெறச் செய்தவர்கள் இவர்கள். சிறந்த விசுவாசிகள். இதன் காரணமாகத்தான் ஆட்சிப் பொறுப்பினைத் துணிந்து வேலுநாச்சியார் தான் உயிருடன் இருக்கின்றபோதே கையளித்தாரென்பது குறிப்பிடத்தக்கது. ஆங்கிலேயர்களுக்கெதிரான போராட்டத்தில் ஆங்கிலேயர்கள் பலருக்குச் சிம்மசொப்பனமாகத் திகழ்ந்த வீரர்கள் இவர்கள்.

வேலுநாச்சியாருடைய காலத்தில் அவரால் மேற்கொள்ளப்பட்ட மக்கள் நலப்பணிகள் பற்றிய விபரங்கள் எவற்றினையும் அறிந்துகொள்ள முடியவில்லை. இவருடைய காலத்தின் பெரும்பாலான பகுதிகள் மறைந்து வாழ்வதும் போர் செய்வதுமாகக் காலங்கழிந்தது. இவருக்குப் பின் ஆட்சிப்பொறுப்பினை ஏற்ற மருது சகோதரர்களது காலத்தில்தான் சிவகங்கையில் குறிப்பிடத்தக்க சில அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நிறைவுரை

வேலுநாச்சியார் அவருடைய ஐம்பதாவது வயதில் தன்னுடைய கணவனைக் கொன்ற ஜோசப் ஸ்மித்தினையும் தளபதி பான் ஜோரையும் தோற்கடித்தார். வேலுநாச்சியார் தான் கைப்பற்றிய நாட்டிற்குப் பெரிய மருதுவினைத் தளபதியாகவும் சிறிய மருதுவை அமைச்சராகவும் நியமித்தார். கி.பி1780-1789 வரை ஆட்சியில் இருந்தார். கி.பி1789இல் ஆட்சிப்பொறுப்பினை மருமகனுக்கு மாற்றிக்கொடுத்தார். தன்னுடைய 64 ஆவது வயதில் மரணமடைந்தார். வேலுநாச்சியாரின் வீர வரலாறானது பின்வந்த விடுதலைப்போராட்ட வீரர்களுக்கு முன்மாதிரியாக அமைந்தது. தன்னுடைய 50ஆவது வயதில் வாளேந்திப் போர் செய்து ஆங்கிலேயர்களைத் தோற்கடித்த முதல் பெண்ணாக இந்திய வரலாற்றில் சிறப்புப் பெறுகின்றார்.புரட்சிப் பெண்ணை பாரதியின் கூற்றுக்கு முன்னதாகவே அன்றைய தமிழகம் கண்டது.

### உசாத்துணை

**தமிழ்**

1. சஞ்சீவி, ந.,(2014), *மானங்காத்த மருதுபாண்டியர்கள்*, புத்தா பப்ளிகேசன்ஸ், சென்னை.
2. மங்கையற்கரசி, கு.,(2011), *மருது பாண்டியர் வரலாறும் வழிமுறையும்*, புத்தா பப்ளிகேசன்ஸ், சென்னை.

**English**

1. *The Hindu*, 10.08.2010
2. *The Hindu*, 24.12.2007.
3. *The Hindu*, 14.08.2010.
4. *The Hindu*, 09.03.2015.
5. http://*en.wikipedia.org*/wiki/Velu_Nachiyar



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7



# கம்பளை இராசதானிக்கால கட்டட மரபில் எம்பக்க தேவாலயம்

சி.சிவராஜினி

வரலாறு (சிறப்புக்கலை)

இரண்டாம் வருடம்

### அறிமுகவுரை

தென்மேற்கு நோக்கிய இடப்பெயர்வு கால இராசதானிகளில் கம்பளை இராசதானியும் ஒன்றாகும். கம்பளையைத் தலைநகரமாக 4ஆம் புவனேகபாகு மாற்றினான். இக்காலப்பகுதியில் வெளிநாட்டு வர்த்தகங்கள் சிறப்பாக இடம்பெற்றது. 4ஆம் புவனேகபாகுவின் பின் ஆட்சிப்பீடமேறிய 5ஆம் புவனேகபாகு சமய, கலை ரீதியாக கம்பளை இராசதானியை மேம்படுத்தினான். அத்தோடு பழைய கட்டடங்களை புதுப்பிப்பதிலும் ஆர்வம் செலுத்தினான். கம்பளை இராசதானிக் காலத்திலே யாழ்ப்பாண அரசன் ஒருவன் ஆரியச்சக்கரவர்த்திகளின் உதவியோடு கம்பளையை கைப்பற்றியதாக சிங்கள வரலாற்று இலக்கியங்கள் கூறுகின்றன. 5ஆம் புவனேகபாகுவின்பின் ஆட்சிப்பீடமேறிய 3ஆம் விக்கிரமபாகு அழகக்கோனார் என்பவரின் ஆலோசனைப்படி தலைநகரத்தைமாற்றத் திட்டமிட்டிருந்தான். எனினும் இக்காலப்பகுதியில் படையெடுப்புக்கள் இடம்பெற்றதாகவும் தெரியவருகின்றது. கம்பளை இராசதானியானது குறுகியகாலம் இலங்கையின் இராசதானியாக விளங்கியபோதிலும் இங்கு கட்டடக்கலை அம்சங்கள் சிறப்புப்பெற்று விளங்கின என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### கட்டடக்கலை

கம்பளை இராசதானிக்காலத்திலே எழுச்சி அடைந்த கலையம்சங்களில் முக்கியமானதாகக் குறிப்பிடப்படுவது கட்டடக்கலை ஆகும். இங்கு கருங்கல்லாலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்கல்லாலும் கட்டப்பட்ட பல கட்டடங்கள் நிறுவப்பட்டன. ஆட்சியாளர்களும்,மக்களும் இதற்கு ஆதரவு வழங்கினார். இக்காலத்தில் எழுந்த கட்டடக்கலையை பிரதானமாக இருவகைப்படுத்தலாம்.

1. பழைய சிங்கள மரபு

2. இந்தியக்கலை மரபு

என்பனவாகும். பழைய சிங்கள கட்டட மரபு என்பது அனுராதபுர, பொலநறுவைக் காலத்தில் கட்டடப்பட்ட கட்டடங்களை அடியொற்றி அமைக்கப்பட்டவையை நியம்கம்பாய இக்காலத்தில் எழுந்த பழைய மரபிலான கட்டடம் ஆகும். இதனைவிட லங்காதிலக விகாரையிலும் சில பழைய மரபிலான கட்டடக்கலை அம்சங்கள் காணப்படுகின்றன. இந்தியக்கலை மரபில் அமைந்த கட்டடங்களில் ஒரு சில வட இந்தியக் கட்டடங்களாகவும் வேறு சில தென்னிந்திய மரபில் அமைந்த கட்டடங்களாகவும் காணப்படுகின்றன. கடலாதெனிய, லங்காதிலக விகாரைகள் இந்திய மரபிலான மண்டப அமைப்பு, தூண் அமைப்பு போன்றவற்றைக்கொண்டு காணப்படுகின்றன. வியோயத்பாய கட்டடம் பழைய சிங்கள மரபில் அமைந்தபோதும் இந்திய மரபிலான மண்டப அமைப்பு காணப்படுகிறது.

எம்பக்க தேவாலயம் மரச்செதுக்கல் வேலைப்பாட்டையும், கருங்கல் சிற்ப வேலைப்பாட்டையும் கொண்டுள்ளது. இதில் தென்னிந்திய மரபிலான சிற்ப வேலைப்பாடுகள் காணப்படுகின்றன. வடஇந்திய மரபிலான மிருகங்கள், பறவைகள் போன்றவற்றின் உருவங்கங்கள் மிகவும் அழகானவையாகக் காணப்படுகின்றன. இவ் எம்பக்க தேவாலய உருவாக்கம் தொடர்பாக புனைவுக்கதைகள் காணப்படுகின்றன. அதுமட்டுமல்லாமல் அதன் வரலாறும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இக்கட்டடக்கலையில் மிளிரும் சிறப்பம்சங்கள் மற்றும் தேவாலயத்தின் கட்டமைப்பு அதாவது உட்கட்டுமானங்கள், அதில் காணப்படும் சிற்ப வேலைப்பாடுகள் என்பன முக்கியமானவையாக காணப்படுகின்றன. இத்தேவாலயத்தைப் பராமரிப்பதற்காகவும் பல பங்குக்காரர்கள் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

**வரலாற்று ஐதீகம் (புனைவு)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்பக்க தேவாலயம் உருவானது தொடர்பான கொஞ்சப்புனைவுகளுடன் கூடிய கதை ஒன்று காணப்படுகின்றது. முன்பு ஒரு காலத்தில் எம்பக்க கிராமத்திற்கு அருகாமையில் (பெரபறை)வாத்தியக்காரன் கடுமையன குஷ்டரோகத்தால் அவதியுற்ற போது தன்னை இந்த நோயின் அவலத்திலிருந்து மீட்டெடுக்கும்படி அவன் கந்தனிடம் தவஞ்செய்து நேர்திக்கடன் வைத்தான். அதைத்தொடர்ந்து அவனுக்கு அந்த நோயிலிருந்து சுகம் கிடைத்தது. அதனால் மகிழ்ச்சியடைந்த அவன் வருடந்தோறும் கதிர்காமத்திற்குச் சென்று பூஜை வழிபாடுகள் செய்து கந்தப்பெருமானை வழிபட்டு வந்தான். எனினும் வயதாக வயதாக தன்னால் கதிர்காமத்திற்கு சென்று கந்தப்பெருமானை வழிபட முடியுமா? என்ற சிந்தனை அவனை வாட்டியது. ஒருநாள் இத்தகைய கவலையுடன் அவன் கந்தப் பெருமானை வணங்கிவிட்டு கோயிலுக்கருகாமையில் இருந்த கதிர மரத்தடியில் உறங்கிப்போய் விட்டான். அன்று இரவில் அவன் கனவில் வந்த முருகன் கவலையை விட்டு ஊருக்கு போகும்படியும் ஊரில் நல்ல தகவல் கிடைக்கும் என்றும் அருளிச் சென்றார். கந்தப்பெருமானில் நம்பிக்கை கொண்டிருந்த அவன் நிம்மதியுடன் ஊர் திரும்பினார். ஊர் திரும்பியவருக்கு ஒரு விசித்திரமான செய்தி கிடைத்தது. எம்பக்க என்ற கிராமத்து தச்சன் ஒருவன் கதிர மரம் ஒன்றைத் தரிசித்தபோது ஐந்நூறு அடி உயரத்திற்கு அதில் இருந்து இரத்தம் வடிந்தது. உடனே அவ்விடத்திற்கு சென்ற வாத்தியக்காரன் கதிர்காமக்கந்தன் தனக்கு காட்சியளித்துச் சொன்ன செய்தியை கூறத் தச்சன் அறுசுவையுடன் உணவு படைத்தான். வாத்தியக்காரன் பெரவாத்தியம் இசைத்து வழிபடத்தொடங்கினான். இன்றும்கூட இங்கு 3 வேளை பூஜை வழிபாடுகள் உணவுப்படையலுடனும், பெரவாத்திய இசையுடனுமே நடைபெறுகின்றது. கோயிலின் பிரதான மண்டபமானது விசாலமாகவும், பெர வாத்தியம் இசைக்கவும், ஆடிப்பாடவும் ஏற்ற விதத்தில் வசதியாக அமைக்கப்பட்டுளமை குறிப்பிடத்தக்கது.

கம்பளைக் காலத்தில் எம்பக்க தேவாலயத்தின் வரலாறானது இலங்கையின் கலை இலக்கிய வளர்ச்சி. தொடர்பாகப் பலசிறப்புக்களைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. எம்பக்க தேவாலயமானது கம்பளைக்காலம் மட்டுமல்லாமல் இலங்கை வரலாற்றிலும் கட்டட சிற்பக்கலைக்கு மிகவும் பிரசித்தி பெற்றதாக காணப்படுகின்றது. குறிப்பாக சீதாவாக்கை காலம் முதல் கம்பளை அரசுகாலத்தில் அழகக்கோனார் என்ற தமிழ் கோனார்கள் அரசஅதிகாரத்தில் செல்வாக்கு செலுத்தியிருந்தனர். அத்துடன் இக்காலப்பகுதியில் இந்தியாவில் முஸ்லிம் அரசர்களின் ஆதிக்கம் பெருகியபோது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்தச்சர்களும், மரச்சிற்ப கலைஞர்களும் இலங்கையில் வந்து குடியேறினர். இவர்களைக் கொண்டே அரசர்கள், விகாரைகள், தேவாலயங்கள் என்பவற்றை அமைத்தனர். இதனடிப்படையிலேயே எம்பக்க தேவாலயமும் அமைகக்கப்பட்டது. இவ் எம்பக்க தேவாலயம் உருவாக்கப்பட்டமைக்கான ஓர் வரலாறும்கூறப்படுகின்றது.

கி.பி 1370ஆம் ஆண்டு கம்பளை இராச்சியத்தை 3ஆம் விக்கிரமபாகு மன்னன் ஆட்சி செய்த போது எம்பக்க என்ற இடத்தில் வழிபாடுகள் இடம்பெற்று வருவதைக் கண்ணுற்று அங்கு ஒரு தேவாலயத்தை அமைக்க நன்கொடையும், உதவி உபகரணங்களையும் செய்துள்ளான். பின்னர் இத்தேவாலயத்தைக்கண்டு களிக்க மன்னன் தனது பல்லக்கில் திரும்பிச் செல்ல முற்பட்டபோது பல்லக்கு ஒரு பக்கம் ஒடிந்து சாய்ந்து கொண்டதால் தொடர்ந்து செல்ல முடியவில்லை. இதனை வெறுமனே சாதாரண நிகழ்வாக கருதாத மன்னன் யானைத்தந்தங்களுடனும், வெள்ளிப்பூச்சுக்களுடனும் கூடிய அந்த விலையுயர்ந்த பல்லக்கினை மேற்படி தேவாலயத்துக்கே அன்பளிப்பு செய்தான் என்று சொல்கிறது இக்கோவிலின் வரலாறு.

இப்பல்லக்கு இன்று வரையும் பூஜைப்பொருளாக இருந்து வந்துள்ளதுடன் இன்று இக்கோயிலின் அரும்பொருட்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது. அதன் பின்னரும் அரசன் தனது பட்டத்துக்கு ராஜ குஞ்சரங்களின் தந்தங்களை அக்கோயிலுக்கு வழங்கியதுடன் தேவாலயத்தின் பணிக்கென 67 பேரை நியமித்தான். இன்றும் இக்கோயிலின் நிர்வாகத்தை அரத்தன பணிக்கி என்ற பெர வாத்தியக்கார வம்சத்தினரே கவனித்து வருகின்றனர். இக்கோயிலின் பூந்தோட்டத்தினை கவனித்துக்கொண்டிருப்பவர்கள் கங்காணி வீட்டு (கங்காணி கெதர) பரம்பரையினர் ஆகும். பிரதான நிர்வாகிகளாக விதானை ஒருவரும், வண்ணக்குரால் என்பவரும், நிலமேயால் நியமிக்கப்பட்டுள்ளனர். கம்பளை வரலாற்றுக்காலம் இலங்கை வரலாற்றாசிரியர்கள் இலங்கை வரலாற்றில் கம்பளைக் காலத்துக்கு அதிக முக்கியத்துவம் வழங்குவதில்லை என்றாலும் இக்காலத்தில் இடம்பெற்ற பல நிகழ்வுகள் இப்போதும் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேஷ்டியவை.

குறிப்பாக இலங்கையின் கலை, இலக்கிய வளர்ச்சி தொடர்பான சிறப்புக்கள் இக்காலத்தில் பதியப்பட்டுள்ளன. இலங்கை வரலாற்றில் கம்பளைக்கால கட்டிடங்கள் சிறப்பாக காணப்படுகின்றன. கண்டிக்கும், கம்பளைக்கும் நடுவில் உள்ள எம்பக்க,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லங்காதிலக, கடலாதெனிய ஆகிய தேவாலயங்கள் சிறப்பு வாய்ந்தனவாக காணப்படும் அதேவேளை, இதில் திராவிட கட்டடக்கலை மரபுகளும் காணப்படுகின்றன. இவற்றில் புத்த பெருமானின் சிலையுடன் விஷ்ணு(உட்புல்லவன்), விபீசனன், ஸ்கந்தகுமார(முருகன்), கணேசர்(கணபதி), ஆகியவர்களின் சிலைகளும் புறச்சுவர்களில் வைத்து நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

தேவாலயத்தில் பணி செய்பவர்களாக பத்து பங்குகாரர்கள் காணப்படுகின்றன.

1. கங்காண வீடு
2. வீதியே வீடு
3. முல்கம்பல வீடு
4. கற்பலகை வீடு
5. மனந்திவெல
6. சியம்பலாகொட
7. ரன்கம
8. தும்பக்கே
9. தொடந்தெனிய
10. தலவத்துரு

இவர்கள் இணைந்து விமரிசையாக வருடாந்த பெரஹெர வைபவத்தை செய்து வருகின்றார்கள். இது எம்பக்க தேவாலயத்தில் காணப்படும் சிறப்பம்சமாகும்.

## கட்டடக்கலையில் மிளிரும் கலையம்சங்கள்

தேவாலயத்தின் கட்டடத்தொகுதி 8 பிரிவுகளைக் கொண்டுள்ளது. அவற்றில் ரிட்டாகெதர (ஆபரணயங்கள் வைக்கும் அறை), மற்றும் சிங்காசன மண்டபம் என்பன தேவாலயத்திற்கு வெளியில் அமைக்கப்பட்டுள்ளன. ஏனைய வால்கட(நுழைவாயில்), மகாதேவாலயம்(கீழ் தேவாலயம்), முழுத்தென்கெய(மண்டபம்), அட்டுவ(நெற்களஞ்சியம்), புதுகெய(புத்தபெருமான் கோயில்), என்பனவும் காணப்படுகின்றன. தேவாலயத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலை வேலைப்பாடுகள் கொண்ட சிங்காசன மண்டபம் தேவாலயத்திலிருந்து கொஞ்ச தூரத்தில் நுழைவாயிலுக்கருகே காணப்படுகின்றது. சற்றே மேட்டு நிலத்தில் சிங்காசன பீடம் அமைக்கப்பட்டுள்ளது. பெரஹெர காலத்தில் தேவ ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டு மன்னன் சிங்காசனத்திலிருந்து வீதி வலத்தை கண்டு களிப்பான் என்று சொல்லப்படுகின்றது. கோவில் வளவுக்குள் பிரவேசிக்கும் நுழைவாயில், வாயில் மண்டபம் என்பது மிகுந்த வேலைப்பாடுகளுடன் பொருந்திய தூண்களைக்கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. வித்தியாசமான கூரை அமைக்கப்பட்டு அவற்றுக்கு மேல் துண்டு துண்டுகளாக சிவந்த ஓடுகள் நேர்த்தியாக பொருத்தப்பட்டுள்ளன. இந்த நுழைவாயிலில் மண்டபத்தின் மரத்தூண்களில் இரட்டை அன்னப்பறவைகள், யானைக்குஞ்சரம், நாகணவாய்ப்பறவை, நீண்ட தந்தங்களைக் கொண்ட யானை, தாய் சேய் அரவணைப்பு வைரவர் போன்ற உருவங்கள் நுண்ணிய கலை வேலைப்பாடுகளுடன் செதுக்கப்பட்டுள்ளன.

**தேவாலயத்தின் அமைப்பு**

இங்கு காணப்படும் பிரதான தேவாலயம் 5 வேறான கட்டடங்களை உள்ளடக்கியதாக அமைக்கப்பட்டுள்ளது. அவையாவன:

1. பெர வாத்தியக்கார மண்டபம்
2. சந்தனக்கூடம்
3. இடைக்கூடம் அல்லது மத்தியகூடம்
4. பிரித் ஓதும் மண்டபம்
5. கர்ப்பக்கிரகம் அல்லது பிரதிஷ்டா மாளிகை

இதில் பெர வாத்தியக்கார மண்டபம் என்றழைக்கப்படும் முன் மண்டபம் சற்று நீண்டதும், அகலமானதுமாகும். இதன் நீளமான பக்கத்தில் நான்கு தூண்களும் கூரையைத் தாங்கி நிற்கின்றன. அதனைத்தவிர உட்புறம் நான்கு பக்கத்திலும் வரிசையாக மொத்தம் 32 தூண்கள் மேலும் கூரையை தாங்கி நிற்கின்றன. கூரையைத் தாங்கும் தூண்களுக்கும் கூரைகளுக்கும் இடையில் இணைப்புப் பாலங்களாக, சமாந்தரங்களாக இடதுபுறமாகவும், வலதுபுறமாகவும் 7 ஜோடித்தூண்கள் கிடையாய்ப் பொருத்தப்பட்டுள்ளன. கூரையின் அகலவாக்கில் 12 பராலைகளும், நீளவாக்கில் 66



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பராலைகளும் பொருத்தப்பட்டுள்ளன. இவற்றைத்தவிர கூரையின் இறங்கு பிரதேசத்தைப் பிரித்து அவற்றில் இருபுறமும் நீளவாக்கில் 41 பராலைகளும் காணப்படுகின்றன. மேற்படி எல்லாத்தூண்களும் இந்தியாவின் கேரளத்திலிருந்து தருவிக்கப்பட்ட நன்கு முற்றிய வேங்கை மரங்களில் இருந்து குடைந்தெடுக்கப்பட்டுள்ளன என்று கூறப்படுகின்றது.

இச்சித்திர வேலைப்பாடுகளை உருவாக்குவதற்கு தலைமைச் சிற்பியாக செயற்பட்டவர் தெல்மட தேலேந்திர மூலாச்சாரியார் என்றும் இவர் விஜய நகர சாம்ராஜ்ஜியத்தின் இறுதிப்பகுயில் இலங்கைக்கு புலம்பெயர்ந்தவர் என்றும் கூறப்படுகின்றது. இவர் திராவிட கட்டடப்பணியில் சிறப்புத்தேர்ச்சி பெற்றவர். அவரது தலைமையின்கீழ் நூற்றுக்கணக்கான சிற்பிகள் இத்தூண்களில் மரச்சிற்ப வேலைப்பாடுகளை செய்துள்ளனர்.

அகலவாக்கில்12 பராலைகளும் பொருத்தப்பட்டுள்ளன. இந்தப் பராலைகள் அனைத்தும் கூரையின் உச்சியில் இருந்து நாலாபுறமும் விரிந்து ஒரு குடையை விரித்து வைத்த மாதிரி கூரையை தாங்கி நிற்கும் கிடையான தூண்களின் மேல் இறுக்கமாக பிணைக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் கூரையின் உச்சியில் குருப்பாவை என்றழைக்கப்படும் உத்தரத்தில் பிணைக்கப்பட்டிருக்கும் கலை அம்சம் கொண்ட பூமடலுடன் செதுக்கப்பட்டுள்ள இத்தகைய குருப்பாவையுடன் கூடிய உத்தரத்தூண் வேறு எங்குமே கிடையாது என்று சொல்லப்படுகிறது. ஆதலால் இதனை எம்பக்க தேவாலயத்துக்கு மட்டுமே உரித்தான விசேட கலையாக கருதுகின்றனர். அதன் மற்றுமொரு சிறப்பம்சம் எந்த விதமான இரும்பு ஆணி வகைகளும் பாவிக்கப்படாமல் முற்றிலும் மரப்பொறிமுறை வேலைப்பாடுகளை மட்டுமே கொண்டு முழுக்கூரையும் அமைக்கப்பட்டுள்ளமையே ஆகும்.

மரச்சிற்பக்கலை, உயர்தொழிநுட்பங்கள் கோவில் எங்கும் பொங்கிப்பிரவகித்து கிடந்தாலும் பெரவாத்தியக்கார மண்டபம் என்றழைக்கப்படும் முன் மண்டபமே கலைச்சிருஷ்டியின் அச்சாணியாக திகழ்கிறது. முன் சொன்னபடி இம்மண்டபத்தில் கானப்படுகின்ற கலை நுணுக்க வேலைப்பாடுகளை பின்வருமாறு பிரிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. ஒரு தூணில் 4 என 32 தூண்களில் காணப்படும் மரச்சித்திர செதுக்கல்கள் - 128

2. ஒரு தூணில் 8 என 32 தூண்களில் காணப்படும் சீவல் மரச்செதுக்கல்கள் - 256

3. தூண் உச்சியில் செதுக்கப்பட்டுள்ள அலங்கார தாமரை மலர் வடிவங்கள் - 64

4. உத்தரத்தூண் மரச்சித்திர செதுக்கல்கள் - 30

5. உத்தர கிடைத்தூண் மரச்சித்திர செதுக்கல் - 36

**நிறைவுரை**

மேற்கூறப்பட்டவற்றை தொகுத்து நோக்கும்போது எம்பக்க தேவாலயமானது கம்பளைக் காலத்தில் மட்டுமல்லாது இலங்கை வரலாற்றிலும் மிகவும் பிரசித்தி பெற்றதாகும். அதாவது மரச்செதுக்கல வேலைப்பாட்டிற்கு சிறப்பு வாய்ந்த கட்டடமாக இது காணப்படுகின்றது. இத்தேவாலயத்தில் அமைந்த மரச்செதுக்கல் வேலைப்பாடு மட்டுமல்லாது சிற்ப வேலைப்பாடுகளும் இதன் தூண்களின் அமைப்பும் அதில் காணப்படும் தெய்வாம்சம் பொருந்திய கலைப்படைப்புக்களும் சிறப்பானவை என்று கூறினால் அது மிகையாகாது. ஏனெனில் இடப்பெயர்வு கால இராசதானிக்காலத்தில் அதாவது குறுகிய காலம் இராசதானியாக காணப்பட்ட கம்பளையில் இவ்வாறு ஒரு தேவாலயம் அமைக்கப்பட்டமை வியப்பிற்கு உரியதாகும். இங்கு வடஇந்திய கட்டட மரபும், தென்னிந்திய கட்டட மரபும், காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இன்றும் இக்கட்டடம் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இதற்கு காரணம் அக்கட்டடம் சிறப்பாக அமைக்கப்பட்டதோடு அதனைப் பராமரிப்பதற்கு அலுவலர்களை நியமித்தமையும் ஆகும். ஆகையால் தான் இன்றுவரை இத்தேவாலயம் கட்டட சிற்ப, மரச்செதுக்கல் வேலைப்பாடுகளுடனும், அழகுடனும் மிளிர்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உசாத்துணை

### தமிழ்

1. கிருஷ்ணராசா, செ., (2011) , இலங்கை பண்பாட்டு பரிணாமத்தின் அடிப்படைகள்,*A.B Creat and publishers.*

*English*

2. *Sherman, E., (1994), A History of far Estern Art, A Times mirror company.*

3. *www.thinakaran.lk/2013/09/16*

*heading:* கம்பளை இராசதானியின் வரலாற்றுச்சின்னம், செதுக்கல், கலை வேலைப்பாடுகள் கொண்ட எம்பக்க தேவாலயம்

4. *Chenthoo.blogspot.com/search/*கண்டி

*heading:* இலங்கை வரவாற்றில் கம்பளைக்கால முருகன் கோயில் எம்பக்க-தமிழர் கலையும் கடவுளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8



# ஐக்கிய அமெரிக்க வரலாற்றில் ஆபிரகாம்லிங்கன்- ஒரு பார்வை

செ.கோபிகா

வரலாறு (சிறப்புக்கலை)

இரண்டாம் வருடம்

## அறிமுகவுரை

உலக வரலாற்றில் தனக்கென சிறப்பான தடத்தினை பதித்துள்ள நாடுகளில் வொசிங்டனைத் தலைநகராகக் கொண்ட அமெரிக்காவும் ஒன்றாகும். கொலம்பசினால் கண்டுபிடிக்கப்பட்ட அமெரிக்கா படிப்படியாக பல்வேறு அரசியல், சமூக, சமய, பொருளாதார பண்பாட்டுச் செல்வாக்கிற்கு உட்பட்டு வளர்ச்சி பெற்று ஏனைய நாடுகளை விஞ்சும் அளவிற்கு ஏகாதிபத்தியமாக எழுச்சி பெற்றது. இத்தகைய சிறப்பினைக்கொண்ட அமெரிக்காவின் அரசியல் வரலாற்றில் பல அரசியல் தலைவர்கள் ஆட்சி புரிந்தனர். அந்த வகையில் அமெரிக்க ஜனாதிபதிகளுள் மிகவும் புகழ்பெற்றவரும், அடிமைமுறையை ஒழித்தவருமான ஆபிரகாம்லிங்கன் அமெரிக்க வரலாற்றில் மட்டுமன்றி உலக வரலாற்றிலும் சிறப்பிடம் பெறுகின்றார். இவர் தனது சொற்பொழிவுகளால் அமெரிக்கர்களை கவர்ந்ததுடன், அடிமைகளுக்கெதிரான போராட்டத்தில் ஈடுபட்டு அதில் வெற்றியும் கண்டார். இவர் தனது பதவிக்காலத்தின் போது உள்நாட்டுக்கொள்கையில் தீவிரத்தன்மை காட்டியதுடன், வெளிநாட்டுக்கொள்கையினையும் சிறப்புற வகுத்திருந்தார். இவ்வாறாக ஐக்கிய அமெரிக்காவின் வரலாற்றில் மனிதாபிமானம், நேர்மை, கருணை, என்பவற்றின் துணைகொண்டு புத்திசாதுரியத்துடன் செயற்பட்ட தலைவராக ஆபிரகாம்லிங்கன் உலக வரலாற்றில் இன்றளவும் நினைவு கூரப்படுகின்றார்.

## வாழ்க்கை வரலாறு

1809 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 12 ஆம் திகதி, தோமஸ் லிங்கன் தச்சுத்தொழிலாளியின் மகனாக ஆபிரகாம்லிங்கன் கென்டகி மாநிலத்தில் பிறந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் சிறுவயதிலேயே தனது தாயாரினை இழந்ததுடன், இளவயதிலிருந்தே பல்வேறு துன்பங்களை சந்திக்க வேண்டியேற்பட்டது. சிறுவனாக இருந்த போது தந்தையின் பணிகளில் ஆபிரகாம்லிங்கன் உதவியாக இருந்ததுடன் பின்னர் வறுமையின் காரணமாக பல்வேறு தொழில்களையும் செய்தார். குறிப்பாக மரம் வெட்டுதல், வீடுகட்டுதல், படகுவிடுதல் போன்ற வேலைகளை மேற்கொண்டார். ஆபிரகாம்லிங்கன் தனது ஓய்வு நேரத்தில் எழுதப்படிக்க கற்றுக்கொண்டு பின்னர் சட்டம் படித்து பட்டம் பெற்றார். 1836 இல் வழக்கறிஞர் பதவியை ஏற்க முன்னர் பண்டகசாலை நடாத்தியும், அஞ்சல் அதிபராக பணியாற்றியும், செவ்விந்தியர்களுக்கு எதிராக நடைபெற்ற போரில் இராணுவவீரராகவும் பணியாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. பின்னர் இவர் வழக்கறிஞர் பதவியில் இருந்து கொண்டு அரசியலில் ஈடுபாட்டினைக்காட்ட முயன்றார்.

## அரசியலில் பங்கு

இவர் நியூசேலத்தில் வாழ்ந்த காலத்தில் (கி.பி 1831-1837) அரசியலில் ஈடுபாடு கொண்டு பொதுப்பணியில் இறங்கினார். இல்லினாய்ஸ் சட்ட மன்றத்தின் வேட்பாளராக கி.பி 1832 இல் இவர் தேர்தலில் நின்றார். தேர்தலை கவனிக்காமல் வடஇல்லினாய்ஸிலும் நடைபெற்ற போரில் பங்கு கொண்டார். எனவே தேர்தலில் தோற்றுவிட்டார். எனினும் போரில் ஈடுபட்டது பிற்காலத்தில் இவருக்கு பலனளித்தது. அதன்படி விக்கட்சியின் சார்பாக இல்லினாய்ஸ் சட்ட மன்ற உறுப்பினராக 8 வருடங்கள் பணியாற்றியதுடன் 1846 இல் பிரதிநிதிகள் சபையின் உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். தொடர்ந்து அடிமை முறையை ஒழிப்பதை அடிப்படையாக கொண்டு உருவான குடியரசுக்கட்சியில் உறுப்பினராக இணைந்து கொண்டார்.

அடிமைகள் எதிர்நோக்கிய துன்பத்தைக் கண்ட லிங்கன், அடிமை முறையை ஒழிக்கப்பாடுபட்டார். இது குறித்து அவர் நிகழ்த்திய சொற்பொழிவுகள் அவருக்கு புகழைத் தேடிக்கொடுத்தது. இதன் பின்னணியில் 1861ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஆபிரகாம்லிங்கன் குடியரசுக்கட்சியின் சார்பில் அமெரிக்க ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் தனது பதவிக்காலத்தில் பல்வேறு சிக்கல்களை எதிர்கொள்ள நேரிட்டது. அதன்படி ஆபிரகாம்லிங்கனது தேர்தலுக்கு பின்னர் அடிமை முறை பற்றிய சிக்கல் தலைதூக்கியதுடன் இதன் காரணமாக உள்நாட்டில் பல்வேறு குழப்பங்களும், போர்களும் ஏற்பட வழிகோலியது எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தென்மாநிலங்கள் பிரிந்துபோதல்**

ஆபிரகாம்லிங்கனின் தேர்தலுக்கு பின் அடிமை முறை பற்றிய சிக்கல் தலை தூக்கியது. அடிமை முறையை ஆதரித்த தென்மாநிலங்கள், குடியரசுக்கட்சியைச் சார்ந்தவர் குடியரசுத் தலைவராக தேர்ந்தெடுக்கப்படுவாரேயாயின் ஒன்றியத்திலிருந்து பிரிந்து போய் விடுவதாக அச்சுறுத்தின. அதன்படி முதலில தென்கரோலினாவும் பின்னர் மிசிசிப்பி, புளோரிடாவும், அலபாமா, ஜோர்ஜியா, லூசியானா, டெக்சாஸ் போன்றனவும் ஒன்றியத்திலிருந்து பிரிந்து சென்றன. இவ்வாறான நெருக்கடியான நேரத்தில் பதவியேற்ற ஆபிரகாம்லிங்கன்

1 தென்மாநிலங்களில் காணப்படுகின்ற அடிமை முறையில் தலையிடுகின்ற எண்ணம் இல்லை.

2 கூட்டாட்சி அரசாங்கத்திலிருந்து எந்த மாநிலமும் பிரிந்து செல்ல முடியாது.

3 கட்டாயப்படுத்தப்பட்டாலன்றி படைவலுவினை பயன்படுத்துதல் கூடாது.

போன்ற கொள்கைகளை மாநிலங்களின் ஐக்கியத்தை பேணும் முகமாக வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

**உள்நாட்டுப்போர்**

ஆபிரகாம்லிங்கனுடைய காலத்தில் ஏற்பட்ட உள்நாட்டுப்போர் முக்கியமானதாகும். தென்கரோலினாவிலுள்ள சார்ளஸ்டன் துறைமுகத்திற்குள் அடங்கியிருந்த சம்டர் கோட்டை ஐக்கிய அமெரிக்காவிற்கு சொந்தமானது. தென்னமெரிக்காவானது சம்டர் கோட்டையை தன்னிடம் ஒப்படைக்குமாறு கோரியதுடன் கோட்டைக்கு வந்த தளபாடங்களையும் அது தடுத்து நிறுத்தியது. சம்டர் கோட்டையை எவ்விலை கொடுத்தாயினும் பாதுகாப்பதென லிங்கன் முடிவு செய்தார். இதன் பிரகாரம் ஆயுதங்கள், படைகளை அனுப்பி அதனைப் பலப்படுத்திக்கொண்டார். இதனையறிந்த தென்கரோலினா கோட்டையைத் தாக்க முனைந்த சமயத்தில் போர் ஆரம்பித்தது. ஆபிரகாம்லிங்கனது படைகள் தென்மாநிலங்களிலுள்ள கடற்கரைகளை முற்றுகையிட்டன. அமெரிக்க மக்களிடமிருந்து மூன்றாண்டுகள் இராணுவத்தொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிய 42,000 வீரர்களை திரட்டியதுடன், நிலையான படைகளின் எண்ணிக்கையையும் இவர் பெருக்கிக்கொண்டார். படைகளைத் திரட்டும் உரிமை காங்கிரசுக்கேயன்றி குடியரசுத் தலைவருக்குரியதன்று என்ற சட்டத்தை அறிந்திருந்த ஆபிரகாம்லிங்கன் காங்கிரசின் ஒத்துழைப்புடன் நாட்டின் ஐக்கியத்தை காப்பது அரசியலமைப்புத்திட்டத்தின் கோட்பாடுகளை காப்பதை விட முக்கியமானது என எண்ணிச்செயற்பட்டார்.

### அடிமைமுறை ஒழிப்பு

அமெரிக்காவில் அடிமை ஒழிப்பிற்கு ஆதரவாக நீண்ட காலமாக ஆபிரகாம்லிங்கன் குரல் கொடுத்து வந்ததுடன், இவர் பதவியேற்ற காலத்தில் பல நெருக்கடிகள் அவரை சூழ்ந்து காணப்பட்டதால் இவ்விடயமாக அவரால் உடனடியாக முடிவுகள் எதனையும் எடுக்க முடியவில்லை. கூட்டாட்சியின் ஒற்றுமையை பேணுமுகமாக அக்காலப்பகுதியில் இவர் அடிமை முறையினை ஏற்றுக்கொண்டதுடன் கூட்டாட்சிக்கு ஆதரவு வழங்கிய கென்டகி, மிசௌரி, மேரிலாந்து, டெலவெயர் போன்றவற்றின் உணர்ச்சிகளுக்கு மதிப்பளித்து அந்நேரத்தில் அடிமைமுறைக்கு எதிராக எந்த விதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. இவ்வாறாக அடிமைமுறை பற்றிய போக்கினை ஆபிரகாம்லிங்கன் தன் திறமையால் நகர்த்திச்சென்றார்.

### புதிய சட்டங்கள்

லிங்கனின் நிர்வாகத்தின் போது பல புதிய சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. அவை போர் தொடர்பானவை அல்ல. அச்சட்டங்களுள் சில இன்றும் நடைமுறையிலுள்ளன. அந்த வகையில் கி.பி 1862 இல் நாணயச்செலவாணிச்சட்டம் நிறைவேற்றப்பட்டு, காகிதப்பணம் செலவாணிக்கு வந்தது. காகிதப்பணத்தை அமெரிக்காவில் பொன்னாகவோ, வெள்ளியாகவோ மாற்ற இயலாது. இக்காகிதப்பணத்தின் மதிப்பு கூட்டாட்சி அரசின் மதிப்பை பொறுத்திருந்தது. போருக்கு பின்னர் காகிதப்பணம் பெரும் அரசியல் கொந்தழிப்புக்கு அடிகோலியது.

மேலும் கி.பி 1862 இல மனையகச்சட்டம் இயற்றப்பட்டு 5 ஆண்டுகள் பொது நிலத்தில் குடியேறி அங்கு நிலையாக வாழ்ந்து அதனை உருப்படியாக வளர்த்து முன்னேற்றம் செய்திருந்தால் அவர் 160 ஏக்கர் வரையுள்ள நிலத்தை மனையகத்திற்காக வைத்துக்கொள்ள இம்மனையகச்சட்டம் வழிசெய்தது.. போருக்குப் பின்னர் அடிமைமுறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலவி வந்த மாநிலங்களின் இடையறாத எதிர்ப்பினால் இச்சட்டம் நிறைவேற்றப்பட முடியாமல் தோல்வியுற்றது. இவ்வாறு குடியேற்றியவர்கள் அடிமைமுறை இல்லாத மாநிலத்தவர்களாக இருந்தமையால் சுதந்திர மாநிலங்கள் மிகுதியாகும் என்ற அச்சத்தால் தென்மாநிலங்கள் அகன்றபடியால் இச்சட்டம் எளிதாக நிறைவேற்றப்பட்டது.

மேலும் ஆபிரகாம்லிங்கனுடைய காலத்தில் அட்லாண்டிக் பெருங்கடல் முதல் பசுபிக் பெருங்கடல் வரை இரும்புப்பாதை அமைக்கப்பட்டது. காங்கிரஸ் கி.பி1862 இல் யூனியன் பசுபிக் இரும்புப்பாதை நிறுவனத்திற்கும் கி.பி 1864 இல் மத்திய பசுபிக் இரும்புப்பாதை நிறுவனத்திற்கும் பட்டயம் வழங்கியதால், கிழக்கில் அட்லாண்டிக் பெருங்கடற்கரையிலிருந்து மேற்கில் பசுபிக் பெருங்கடற்கரை வரை இரும்புப்பாதைகள் போடப்பட்டன. கண்டங்களுக்கும் இப்பெரும் இரும்புப்பாதையை அமைக்க பொது நிலங்களும், ஒப்பந்தங்களும் வழங்கப்பட்டன.

கி.பி 1862 இல் அறிமுகப்படுத்தப்பட்ட போரில் நிலமானியச்சட்டமானது பெருமளவு மேலலையினரின் எண்ணிக்கைக்கு தக்க மானியமாக வழங்கி வேளாண்மையையும், தொழிநுட்பகலைகளையும் வளர்க்க உதவி செய்தது. 1863 இல் கொண்டு வரப்பட்ட பிறிதொரு முக்கிய சட்டமாக தேசிய வங்கிச்சட்டம் காணப்படுகின்றது. இதன்படி நாடெங்கும் நம்பிக்கை வாய்ந்த வங்கிகள் உருவாக்கப்பெற்றன. இவ்வங்கிகள் காகிதப்பணத்தை செயற்படுத்தின. கூட்டாட்சி அரசின் பத்திரங்கள் கொடுக்கப்பட்டன. தேசிய வங்கிச்சட்டமானது போருக்குத் தேவையான பொருளைத் திரட்ட உதவியது. இவ்வாறு ஆபிரகாம்லிங்கனின் காலத்தில் உள்நாட்டில் பல்வேறு சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

போரின் போது இரு புதிய மாநிலங்கள் அமெரிக்க ஐக்கிய நாட்டின் மாநிலங்களாக மேற்கு வெர்ஜீனா, நெவாடா, ஆகியன ஒன்றியத்துடன் இணைந்தன. அடிமை ஒழிப்புச் சட்டத்திற்காக அரசியலமைப்புச் சட்டத்தை திருத்த நான்கில் மூன்று பங்கு மாநிலங்கள் ஆதரவாக வாக்களிக்க வேண்டும். எனவே இப்புதிய மாநிலங்கள் அவ்வாறு வாக்களித்தமையால் அரசியலமைப்புத்திருத்தம் கி.பி 1865 இல் டிசம்பர் மாதம் 18 ஆம் நாள் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இவ்வாறாக ஆபிரகாம்லிங்கன் தனது காலத்தில் உள்நாட்டுச் சட்டத்தில் பல்வேறு மாற்றங்களை கொண்டு வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆபிரகாம்லிங்கனின் வெளிநாட்டுக்கொள்கை

யுத்தம் நடைபெற்ற காலங்களில் அயல் நாடுகளுடனான ஆபிரகாம்லிங்கனது உறவு நல்ல நிலையில் காணப்படவில்லை. இருந்த போதும் இவர் தன்னுடைய புத்தசாதுரியத்தின் மூலமாக அவற்றை சமாளித்து பாரிய யுத்தங்கள் நடைபெற இருந்த நிலையினைத் தடுத்தார். ட்ரண்ட் என்ற ஆங்கிலேயக்கப்பலில் பிரயாணம் செய்வதற்கு கூட்டரசின் விசேட ஐரோப்பியத் தூதுவர்களான மாசன், ஸ்லைடெவ் ஆகியோரை அமெரிக்காவின் யுத்தக்கப்பல்கள் தடுத்தன. இதனைப் பிரித்தானியா கண்டித்த சமயத்தில் இவ்விடயத்தில் ஆபிரகாம்லிங்கன் நேரடியாக தலையிட்டு அவர்களை ஐரோப்பா செல்வதற்கு அனுமதித்தார்.

மெக்சிக்கோவை 3 ஆம் நெப்போலியன் ஆக்கிரமித்த சமயத்தில் வெறும் கண்டனத்துடன் மட்டும் இவர் நின்று கொண்டார். தெற்கு கூட்டாட்சிக்குப் பிரித்தானியா ஆதரவு தெரிவித்து கப்பல்களைக் காட்டிக் கொடுத்த சந்தர்ப்பத்தில் அமெரிக்கத்தலைவர் அடெம்ஸ் மூலமாக தொடர்பு கொண்டு ஏற்பட இருந்த சண்டையை தடுத்தார். ஆபிரகாம்லிங்கனின் அமைச்சரவையில் வெளிவிவகார அமைச்சராக இருந்த சிவர்ட், குடியரசுக்கட்சியில் லிங்கனை விட மூத்த தலைவராகவும் , நியூயோர்க் மாநிலத்தின் ஆளுனராகவும் இருந்தவர். இருப்பினும் லிங்கன் தலைவர் என்ற முறையில் வெளிநாட்டுக் கொள்கையை உருவாக்குவதிலும் அதனை அமுல்படுத்துவதிலும் தன்னுடைய மேற்பார்வையை செலுத்தி வந்தார்.

தென்னக அரசுடன் போர் தொடங்கியதிலிருந்து முதல் 18மாத காலம் வெளிநாட்டுத்தொடர்பு ஏற்படுமோ என்ற அச்சம் நடுவண் அரசுக்கு நிலவியது. அத்துடன் உள்நாட்டுப் போரால் வல்லரசான இங்கிலாந்துக்கு வெளிநாட்டு வாணிபம் பாதித்தது. இதன் பின்னணியில் வடபுல அரசின் கடல் முற்றுகையால் தென் மாநிலங்களிலிருந்து இங்கிலாந்துக்கு வந்த பருத்தி இறக்குமதி தடைப்பட்டது.

மேலும் போர் ஆரம்பித்த காலத்திலிருந்தே வெளிநாட்டு அரசுகள் தென்னக அரசை தனிநாடாக அங்கீகரித்து விடுமா என்ற அச்சம் ஆபிரகாம்லிங்கனுக்கு நிலவியது. இக்கால கட்டத்தில் ரஷ்யாவின் மன்னரான 2 ஆம் அலெக்ஸாண்டர் அமெரிக்காவின் மீது நட்பு செலுத்தி வந்தார். அதேவேளை 1861 ஆம் ஆண்டில் 2 ஆம் அலெக்ஸாண்டர் ரஷியாவில் பண்ணையடிமைகளை விடுவிக்கும் நிலச்சீர்திருத்தத்தில் ஈடுபட்டிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே வெளிநாட்டுக்கொள்கையில் கூட ஆபிரகாம்லிங்கன் அடிமைமுறை ஒழிப்பிற்கு சாதகமான நாடுகளுடன் தனது நட்புறவை பாராட்டிய தன்மையை காணலாம்.

**இரண்டாம்முறை குடியரசுத்தலைவராக ஆபிரகாம்லிங்கன் தேர்ந்தெடுக்கப்படல்**

1864 இல் குடியரசுக் கட்சியினர், மக்களாட்சி கட்சியினரின் ஆதரவுடன் ஆபிரகாம்லிங்கனை இரண்டாவது தடவையாகவும் தேர்தலில் நிறுத்தினர். இத்தேர்தலில் 400,000 வாக்குகள் வித்தியாசத்தில் ஆபிரகாம்லிங்கன் வெற்றி பெற்றார். 1865ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் குடியரசுத்தலைவராக இரண்டாம்முறை தேர்ந்நெடுக்கப்பட்டு பதவிப்பொறுப்பை ஏற்ற போது உள்நாட்டுப்போர் முடியும் தறுவாயில் இருந்தது. இரண்டாம்முறை தலைவராக பதவியேற்ற போது லிங்கன் ஆற்றிய உரையின் இறுதிச் சொற்கள் உலகப்புகழ் படைத்தவை. லிங்கன் தன் இறுதிச்சொற்களைப் பேசி முடித்த போது போரும் பெரும்பாலும் முடிவுக்கு வந்திருந்தது. இவர் அமைதிக்கான திட்டங்களை தீட்டி வந்ததுடன், மீண்டும் தென்மாநிலங்கள் ஐக்கிய அமெரிக்க நாட்டுடன் இணைய வேண்டுமென விரும்பி, அவற்றை இணையுமாறு வரவேற்றார். போரினால் ஏற்பட்ட மனக்கசப்பை மறந்து விடும்படியும் இவர் வேண்டினார். இவ்வாறு தன்னால் இயன்ற வரை ஐக்கிய அமெக்காவின் ஒற்றுமைக்காக ஆபிரகாம்லிங்கன் பாடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

**நிறைவுரை**

தம் தலைமையின் கீழ் நாட்டின் ஒற்றுமை காக்கப்பட்டதை லிங்கன் உயிருடன் இருக்கும் போதே கண்டு மகிந்தார். தன்னுடைய வாழ்கைக்காலத்தில் பல சிக்கல்களை எதிர்நோக்கிய ஆபிரகாம்லிங்கன் நிதானம், பொறுமை, இராஜதந்திரம் போன்றவற்றை கடைப்படித்து அரசியலில் வெற்றியீட்டியதுடன் அரசியலில் மனிதாபிமானத்தை கடைப்பிடித்தார். உள்நாட்டுப்போரினை வெற்றிகரமாக நடத்தி அமெரிக்காவின் ஒருமைப்பாட்டை பாதுகாத்ததுடன் வெளிநாட்டுக் கொள்கையையும் திறம்பட வகுததிருந்தார்.

மேலும் அமெரிக்கவில் மக்களாட்சியை ஏற்படுத்தியதுடன் மக்களால் மக்களுக்காக அமைக்கப்பட்ட அரசு உலகில் என்றைக்குமே நிலைத்திருக்கும் என்பதை இவர் நீடித்த வாக்காக கொண்டிருந்தார். இவ்வாறு ஆபிரகாம்லிங்கனுடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதவிக்காலமானது பெருமளவில் அடிமைமுறையை ஒழிப்பதிலும், பிரிந்து சென்ற மாநிலங்களை ஒன்றிணைப்பதிலுமே கழிந்தது. ஆபிரகாம்லிங்கனின் சீர்திருத்த கருத்துக்களும், மக்களாட்சி தத்துவமும், அடிமைத்தன ஒழிப்பும் அடிமட்ட மக்களிடம் எழுச்சியை உண்டாக்கியது. அமெரிக்க குடியரசில் அடிமைத்தனத்தை ஒழித்த முதல் குடியரசுத் தலைவர் என்ற பெருமைக்குரிய ஆபிரகாம்லிங்கனை 1868 இல் Jhon Wilks Booth என்ற மனிதத் தன்மையற்றவர் சுட்டுக்கொன்றார்.

**உசாத்துணை**


1 அருந்தவராஜா, க., (2002), *அமெரிக்க ஐக்கிய வரலாறு*, அஞ்சு வெளியீட்டகம், நல்லூர்.

2. ஆலாலசுந்தரம், இர., (1981), *ஐக்கிய அமெரிக்க வரலாறு*,GRS பதிப்பகம், பாண்டிச்சேரி.

3. செங்கல்வராயன், இர., (2005), *ஆபிரகாம்லிங்கன்*, அறிவுப்பதிப்பகம், சென்னை.

4. நம்பி ஆரூரன், கு., (1975), *அமெரிக்க ஐக்கிய நாட்டின் வரலாறு*, சென்னை வெளியீடு, சென்னை.

5. பாலசுப்ரமணியம், டி., (1978),*அமெரிக்க ஐக்கிய நாட்டின் வரலாறு*, தமிழ்நாட்டுப்பாட நூல் நிறுவன வெளியீடு.

6. *www.Enwikepedia.org/Abrahamlingon.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9



# இடைக்கால ஐரோப்பாவில் வணிகம்

சாந்தினி அருளானந்தம்

சிரேஷ்ட விரிவுரையாளர்,

வரலாற்றுத்துறை,

பல்கலைக்கழகம்

கி.பி 5ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி 15 ஆம் நூற்றாண்டு வரையான காலப்பகுதி ஐரோப்பிய வரலாற்றில் இடைக்காலம் எனக் குறிப்பிடப்படுகின்றது. இக்காலத்தில் ஐரோப்பாவில் நிகழ்ந்த வரலாற்றுச் சம்பவங்கள் பல ஐரோப்பியநாடுகளின் எழுச்சிக்கும், சிறப்புக்கும் வழிவகுத்திருந்தமையை அவதானிக்கலாம். கி.பி 5 ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் உரோமப் பேரரசின் தலைமைத்துவத்தின் கீழ் இருந்த பிராந்தியங்கள் அரசியல், பொருளாதார பண்பாட்டு உயர்நிலைப் பெற்றிருந்தாலும், கி.பி.4 ஆம் நூற்றாண்டின் இறுதிக்காலகட்டத்தில் ஏற்பட்ட ஜேர்மனிய இனக்குழுக்களின் படையெடுப்புக்கள் அவற்றைச் சீர்குலைத்தன. ஆயினும் காலப்போக்கில் படையெடுப்பாளர்கள் ஐரோப்பாவின் பல பிரதேசங்களிலும் தங்கி, ஐரோப்பா புதிய பாதையில் பயணிக்க வழிவகுத்தனர். படையெடுப்பாளர்களால் கொண்டு வரப்பட்ட அம்சங்களும் சுதேச அம்சங்களும் கலப்புற்ற நிலையில் ஐரோப்பாவில் பல்வேறு மாற்றங்கள் ஒன்றன் பின் ஒன்றாக ஏற்படத் தொடங்கியதைக் காணலாம். அவற்றில் பிரதான அம்சமாக வணிகம் அமைந்திருந்தமையை அவதானிக்கலாம்.

வணிகம் என்பது குறிப்பிட்ட ஒருபொருளையோ, அன்றிப் பல பொருட்களையோ கொடுத்து, ஒருபொருளையோ அன்றிப் பல பொருட்களையோ பெற்றுக்கொள்வதைக் குறிப்பதாகும். இவ்வணிகம் ஆரம்பத்தில் பண்டமாற்று முறையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுப் பின்னர் பண அடிப்படையில் விரிவடைந்ததை சான்றுகள் எடுத்துக் காட்டுகின்றன. நாடுகளுக்கிடையில் தொடர்பு ஏற்படுத்தும் வகையிலும் பண்பாட்டுப் பரிமாற்றத்தின் பின்னணியிலும் வணிகம் முக்கிய பங்காற்றியிருப்பதை அவதானிக்க முடியும். பண்டைய நாகரிகங்களுக்கிடையே நடைபெற்ற வர்த்தகம் பற்றிய சான்றுகள் பெறப்பட்டு வரும் பின்னணியில் நோக்கும்போது வணிகம் நீண்டகாலமாக பிரதானமான ஒரு பொருளாதார நடவடிக்கையாக இருந்து வந்ததைக் காணலாம். சுமேரிய நாகரிகத்தில் சிந்துவெளி முத்திரையொன்று வணிகத்தின் பின்னணியில் கிடைத்திருப்பதும், எகிப்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகரிகத்தில் சிந்துப் பிராந்தியத்தின் தேக்கமரங்கள் பயன்படுத்தப்பட்டிருப்பதும் உதாரணங்களாகக் கூறத்தக்கவையாகும்.

ஐரோப்பாவில் பீனீசியர் எனப்பட்டோர் கடல் வணிகத்தில் சிறந்திருந்தனர். மத்தியதரைக்கடலை ஒட்டிக் காணப்பட்ட ஒடுங்கிய கடற்கரையை கொண்டிருந்த பொனீசியா, விவசாயத்திற்கு வாய்ப்பானதாக அமையவில்லை. அம்மக்கள் நாட்டைவிட்டுப் புலம்பெயர்வதற்கு உயர்ந்த லெபனான் மலைகளும் தடையாக இருந்தன. இந்நிலையில் இவர்கள் கடல் வணிகத்தின் மூலம் தமதிருப்பை நிலைநிறுத்த முற்பட்டனர். விரைவிலேயே பழைய உலகின் மிகப்பெரிய வணிகர்களாக பீனிசியர்கள் மாறினர். கி.மு 1000 – கிமு 700காலப்பகுதியில் செல்வாக்குப் பெற்றிருந்த பீனிசியர்கள் கடலில் செல்லும் கப்பல்களை உருவாக்கினர். இக்கப்பல்கள் சிறியவையாகவும் கடலில் பயணம் செய்வதற்கு அச்சமற்றவையாகவும் அமைக்கப்பட்டிருந்தன. மத்தியதரைக்கடல் முழுவதற்கும் இவை பயணித்தன. பிரித்தானியாவிலிருந்து தகரத்தைப் பெறுவதற்கும், ஆபிரிக்காவை சுற்றி வருவதற்கும் இக்கலங்கள் பயன்பட்டனவென்பது பலரது கருத்தாகும்.

பீனீசியர்கள் அக்காலத்தில் வீடு கட்டுவதற்காக பண்டைய மக்கள் பயன்படுத்திய Cedar மரங்களை லெபனான் மலைகளில் இருந்துபெற்று பிறநாடுகளுக்கும் கொண்டு சென்று விற்றனர். அதேவேளை வேறுநாடுகளில் இருந்து பலவிதமான உலோகங்களைப் பெற்றுக்கொண்டனர். இவர்களால் உருவாக்கப்பட்ட ஊதா நிறச்சாயத்திற்கு பண்டைய உலகில் மிகுந்த மதிப்பும் விலையும் கொடுக்கப்பட்டிருந்தது. ஏனெனில் அக்கால அரசர்கள் ஊதா நிற ஆடையையே பயன்படுத்தியிருந்தனர். அதிக செல்வாக்குடன் நடைபெற்ற மேற்கூறியவாறான வர்த்தகம் எகிப்திய, ஹிட்டைட்ஸ் ஆட்சியாளர்களால் இடையூறுகளுக்கு உட்படுத்தப்பட்டபோதும் அவற்றை எதிர்கொண்டு வணிக நடவடிக்கைகளை பீனிசியர் முன்னெடுத்திருந்தனர். இவர்களுடைய நகர அரசுகள் யாவும் பிரதான வர்த்தக துறைமுகமாகவும் நகராகவும் விளங்கிய Trye என்ற நகரை மையப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. பீனிசியர்கள் உருவாக்கிய குடியேற்றங்களும் வர்த்தகத்தையே அடிப்படையாகக் கொண்டிருந்தமையைக் காணலாம். சிசிலி, காடினியா, மெல்டா, தூரக்கிழக்கில் ஸ்பெயின் போன்ற நாடுகளிலும் வட ஆபிரிக்காக்கரையில் 300நகர்களிலும் இவர்களது செல்வாக்கு காணப்பட்டதாக எடுத்துக்காட்டப்படுவதை நோக்கின் வர்த்தக உலகில் இவர்கள் பெற்றிருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னேற்றத்தையும், அக்காலஐரோப்பாவில் அதன் மூலம் பெற்ற முதன்மையையும் அறிந்து கொள்ளலாம்.

இவர்களைத் தொடர்ந்து மத்தியதரைக்கடலை மையப்படுத்திய வகையில் உரோமர்களின் வர்த்தகநடவடிக்கைகள் முக்கியத்துவம் பெற்றிருந்தன. இவர்களது காலத்தில் ஐரோப்பாவுக்கும் பிறநாடுகளுக்கும் இடையிலான வர்த்தகம் மேலோங்கி இருந்தமையை அவதானிக்கலாம். குறிப்பாக இலங்கை, இந்தியா, தென்கிழக்காசியா, சீனா போன்ற நாடுகளுடன் உரோமர்கள் வர்த்தக உறவினை மேற்கொண்டிருந்தமைக்குச் சான்றுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. மும்மரமாக நடைபெற்ற இவ்வணிகம் ஜேர்மனிய இனக்குழுக்களின் படையெடுப்புக்கள், உரோமப் பேரரசின் வீழ்ச்சி என்பவற்றைத் தொடர்ந்து பலவீனமடைந்தது. ஆயினும் கி.பி 11 ஆம் நூற்றாண்டளவில் மீளவும் வர்த்தக நடவடிக்கைகள் ஐரோப்பாவில் புத்துயிர்ப்புப் பெறத் தொடங்கியிருந்தன. இவ் வர்த்தகம் படிப்படியாக பெற்றுக்கொண்ட செழிப்பினால் நகரங்களின் உருவாக்கமும், அதனைத்தொடர்ந்து பல்வேறு மாற்றங்களும் ஐரோப்பாவில் ஏற்படலாயின. இந்த விருத்தியே உலக அரங்கில் ஐரோப்பா முன்னிலை பெறவும், ஐரோப்பிய நாகரிகம் பிறநாடுகளில் குறிப்பாக கீழைநாடுகளில் செல்வாக்குச் செலுத்தவும் பின்னணியாக இருந்ததெனலாம்.

கி.பி 9 ஆம் - 13 ஆம் நூற்றாண்டுக் காலத்தில் நிலமானிய முறை ஐரோப்பாவில் நில்வியபோது நிலங்கள், உற்பத்திகள், சேவைகள் முதன்மை பெற்றிருந்தன. இடைக்கால ஐரோப்பாவின் ஆரம்பகாலத்தில் அரசியல், நிர்வாகம், பொருளாதாரம், சமுதாயம் என எல்லா நிலைகளும் நிலமானியத்தையே பின்னணியாகக் கொண்டிருந்தன. இந்நிலையில் அதிகாரத்தையும் மதிப்பையும் பெற்றிருந்த நிலப்பிரபுக்கள் தங்களது நிலங்களை தம் மூத்த வாரிசுகளுக்கே உரிமையாக்கியதால் அவர்களது மற்றைய பிள்ளைகள் வணிக நடவடிக்கைகளுக்குச் சாதகமான வழிகளில் செயற்பட்டதாகக் கூறப்படுகின்றது. இவர்கள் வர்த்தகத்தையும், வர்த்தகர்களையும் ஆதரித்ததுடன் கைத்தொழில்களின் பெருக்கத்திற்கும், வர்த்தகச்சந்தைகளின் உருவாக்கத்திற்கும், வர்த்தகப்பாதைகளின் மீள்திறப்பிற்கும் வழிவகுத்திருந்தனர். இதனால் ஐரோப்பாவில் வர்த்தக நடவடிக்கைகள் முன்னைய காலத்தைப்போல முக்கியமான ஒரு துறையாக விருத்தியடையத் தொடங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான விருத்திகள் வர்த்தகத்தில் ஏற்பட்டிருந்தாலும், சில தடைகளையும் ஐரோப்பியர்கள் எதிர்கொள்ள வேண்டியிருந்தன. பணத்தட்டுப்பாடு, சீரற்ற பாதைகள், பாலங்கள், கடலிலும் தரையிலும் எதிர்கொண்ட கொள்ளைகள், பலதரப்பட்ட வரிச் சுமைகள், வீதி, பாலங்களைப் பயன்படுத்துவதற்காக பிரபுக்களின் வரி அறவீடுகள், திருச்சபையின் சட்டங்கள் ( இவை அதிகவருமானத்தை ஈட்டவோ வாங்கும் பொருட்களை உயர்விலைக்கு விற்கவோ அனுமதிக்கவில்லை), கடன் பணத்திற்காக அதிக வட்டியைப் பெற்றமை, புதிய வர்த்தகப்பாதைகள் கண்டுபிடிப்பதற்கான தடை போன்றன ஐரோப்பாவில் மத்திய காலத்தில் ஆரம்பம் வரை காணப்பட்டாலும் படிப்படியாக அவை தளர்வுற்றதையும் காணலாம்.

11ஆம் நூற்றாண்டில் ஜேர்மன், இத்தாலியர் போன்றோர் மத்தியதரைக்கடலில் முஸ்லிம்கள் பெற்றிருந்த வர்த்தக மேலாதிக்கத்தை வீழ்ச்சியடையச் செய்தனர். சிலுவை யுத்தங்கள் கிறிஸ்தவ முஸ்லிம் மதத்தினரிடையே சமயோசிதமாக ஆரம்பிக்கப்பட்ட வேளையில், அப்போர் அண்மைக்கிழக்கின் வர்த்தகத்தையும் மறுமலர்ச்சியடையச் செய்ததாகவும் கூறப்படுவது குறிப்பிடத்தக்கது. அராபியர்களது கலங்கள் போகப் பொருட்களை (Luxary Goods) செங்கடல், பேசியா, குடா போன்ற பகுதிகளுக்கு கிழக்கிலிருந்து கொண்டு வந்தன. அங்கிருந்து கரவன்கள் மூலம் அவை அலக்சாண்டியா, அக்கி, ஜோப்பா போன்ற துறைமுகங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டன. இத்துறைமுகங்களிலிருந்து பிசா, ஜெனோவா, வெனிஸ் போன்ற இடங்களை சேர்ந்த வியாபாரிகள் வழியிலுள்ள சந்தைகளினூடாக சிலுவை யுத்தத்தின் பின் ஏற்பட்ட அரசுகளின் துறைமுகங்களான ரையர், சிடான் ஆகியவற்றுக்கு கொண்டு வரப்பட்டன. இவற்றுடன் ஆரம்பகாலத்தில் மத்தியதரைக்கடல் பகுதியிலிருந்து ரோஹேன் ஆற்றின் மேற் பகுதி வரையான பாதையும் இக்காலத்தில் முக்கியத்துவம் பெற்றுக் காணப்பட்டது.

14 ஆம் நூற்றாண்டினை அடுத்து வேறிரு வர்த்தக மார்க்கங்கள் பிரபல்யம் அடையத்தொடங்கின. ஜிப்ரோல்டர் நீரிணையினூடாக மத்தியதரையுடன் ஐரோப்பாவின் எல்லா கடற்பாதைகளும் இணைக்கப்பட்டிருந்ததுபோல, மத்திய ஐரோப்பா அல்பைன்ஸ் கணவாயினூடாக வட இத்தாலியிலிருந்து பழைய தரை வழிப்பாதை யொனறும் விரிவாக்கம் பெற்றிருந்தது. இவ்வேளையில் வெனிஸ் மற்றும் இத்தாலிய நகர்களிலிருந்தும் Brenner போன்ற கணவாய்களினூடாக வர்த்தக புகழ்பெற்றிருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Champagne சந்தையுடனும் வணிகநடவடிக்கைகள் செழிப்புற்றிருந்தன. இந்த ஐரோப்பிய வர்த்தகப்பாதைகளில் Astute பிரபுக்களினால் அமைக்கப்பட்ட சந்தைகள் மட்டுமன்றி கடைத்தெருக்களும் ஏராளமாகக் காணப்பட்டன. இவற்றில் வட ஐரோப்பா, இத்தாலி போன்ற இடங்களிலிருந்து வந்த வர்த்தகர்களும், வர்த்தகப்பொருட்களும் சந்தித்துக்கொண்டமை குறிபிடத்தக்கது. இப்பின்னணியில் நகரங்களும் தோற்றம் பெறலாயின. நகரசதுக்கங்களில் அல்லது சுவர்களில் மூடப்பட்ட சந்தைகளில் கிழமைக்கு ஒன்று அல்லது இரண்டு தடவைகள் ஒன்று கூடும் மையங்கள் காணப்பட்டன. உள்ளூர் விவசாயிகளும் கைவினைத் தொழிலில் ஈடுபட்டோரும் தமது உற்பத்திகளை இங்கு விற்பனை செய்தனர். புனிதமான நாட்களில் கடைத்தெருவின் மையங்களிலும் கடைத்தெருக்கள், நகரின் எல்லைப்புறங்களிலும் வர்த்தக நடவடிக்கைகள் நடைபெற்றன. இவை தூரதேசத்து வணிகர்களை மிகவும் கவர்ந்தன. அவ்வகையில் பிரான்சில் இருந்த Champagne சந்தையை ஒத்த சந்தைகள் சர்வதேசவர்த்தகத்தில் பிரதானமான மையங்களாக மாற்றமடைந்தன.

11ஆம் 12ஆம் நூற்றாண்டுகளில் ஏற்பட்ட செழிப்பினால் படிப்படியாக சந்தைகளும், வர்த்தக ஒன்றுகூடல் மையங்களும் வளர்ச்சியடைந்தன. இவற்றினால் கவரப்பட்ட வர்த்தகர்களதும், பிறரதும் தொகை இவ்விடங்களில் அதிகரிக்கத்தொடங்கின. சிறப்பாக திறமைமிக்க தொழில் வினைஞரும், சிறப்புத் தகைமைகளைக் கொண்டோரும் நகரங்களை நாடினர். இவ்வாறாக தோற்றம் பெற்ற புதிய நகரங்கள் பெரும்பாலும் வர்த்தகத்தை மேற்கொண்டிருந்த பெருந்தெருக்களையும் ஆறுகளையும் அண்டி உருவாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

வர்த்தகத்தின் மூலம் எழுச்சியடைந்த நகரங்களில் இத்தாலிய நகரங்கள் குறிப்பிடத்தக்கனவாக அமைகின்றன. இடைக்காலத்தில் மத்தியதரைக்கடற் பிராந்தியம், அதற்கு அப்பால் காணப்பட்ட வர்த்தக மார்க்கங்களில் இத்தாலியர்கள் முக்கியபங்கினை வகித்திருந்தனர். கி.பி 900 -1000 காலப்பகுதியிலேயே இத்தாலிய வணிகர்கள் மத்திய கிழக்குடன் தொடர்புகளை ஏற்படுத்தியிருந்தனர். இத்தாலிய நகர அரசுகளான வெனிஸ், ஜெனோவா, பிஸா என்பன கொன்ஸ்சாந்துநோபிளிலும், சிரியா, பாலஸ்தீனம், வட ஆபிரிக்காவிலும் வர்த்தக உரிமைகளைப் பெற்றிருந்தன. சிலுவை யுத்தங்கள் நடைபெற்ற காலப்பகுதியில் இத்தாலிய நகர அரசுகளிலிருந்து புனிதபோருக்காக வீரர்களைக் கொண்டு சென்ற கப்பல்கள் திரும்பி வரும்போது கிழக்குப்பகுதியிலிருந்து பொருட்களைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு வந்தன. இப்பொருட்கள் வட இத்தாலியினூடாக அல்ப்ஸ்மலையைக் கடந்து மத்திய மற்றும் வட ஐரோப்பாவை சென்றடைந்தன. இப்பாதைகளில் காணப்பட்ட லொம்பாடி, தென்பிரான்ஸ், ஜேர்மனி ஆகியன செல்வந்த நகரங்களாக வளர்ந்தன. வட ஐரோப்பாவைப் பொறுத்தவரை கி.பி 1000க்கு முன்னரே viking வர்த்தகர்கள் கிழக்கிலிருந்து பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்காக kiew விலிருந்து கஸ்பியன் கடல் மற்றும் கொன்ஸ்சாந்துநோபிளுக்கு ஒழுங்கு முறைப்படி சென்று வந்தனர். தாம் கொண்டு வந்த பொருட்களை வட ஐரோப்பிய நகரங்களில் விற்பனை செய்தனர். கி.பி 1100அளவில் ஜேர்மன் வர்த்தகர் பால்டிக், அத்திலாந்திக் கரை வழியாக வர்த்தகத்தில் ஈடுபட்டது போல 1200அளவில் இத்தாலிய வர்த்தகர்கள் அத்திலாந்திக் கரையூடாக வர்த்தகத்தில் ஈடுபட்டனர். வெனிஸ், ஜெனோவா போன்ற இடங்களிலிருந்து புறப்பட்ட கப்பல்களுக்கு Flanders முக்கியமான தளமாக விளங்கியது. இவ்விடம் வர்த்தகப் பாதைகள் சந்திக்கும் முக்கியமான மையத்தில் விளங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. 1200களில் இம்மையம் ஐரோப்பாவின் கம்பளி ஆடை வர்த்தகத்தின் தலைமையிடமாக மாற்றமடைந்தது. இதனால் அங்கு காணப்பட்ட Gleing, Burges என்பன சனத்தொகையிலும் செல்வச்செழிப்பிலும் எழுச்சி பெறலாயின. ஆசியாவிலிருந்து வாசனைத்திரவியங்கள், மருந்துப்பொருட்கள், வாசமூட்டிகள், நிறமூட்டிகள், விலையுயர்ந்த இரத்தினக்கற்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன. மத்தியகிழக்கு நாடுகள் துணிகள், மருந்துகள், தானியங்கள், பழங்கள் முதலியவற்றைப் பரிமாறிக் கொண்டன. ஐரோப்பா இக்காலத்தில் பலவிதமான ஆசியப் பொருட்களுக்காகப் பரிமாற்றப் பொருட்களை வழங்கியது.

பால்டிக்கடல், வடல் கடல் போன்ற பகுதி கனில் ஹம்பேக், லுபெக் பிறிமன் என்பன முக்கியமான வர்த்தக நகரங்களாயின. இவ்வாறான வர்த்தக நகரங்கள் உருவாக்கம் பெற்ற நிலையில், வணிகம் உச்சநிலை அடைந்தபோது , வணிகத்தையும், வணிகர்களையும், வணிகப்பாதைகளையும் பாதுகாக்கின்ற சங்கம் ஒன்று உருவாக்கப்பட்டமை சிறப்பான அம்சமாகும். குறிப்பாக ஜேர்மனியில் பலம்வாய்ந்த அரசொன்று காணப்படாத நிலையில் அங்கு ஒரு சங்கம் ஒன்று உருவாக்கப்பட்டது. இது ஹன்ஸ் (Hanse) எனப்பட்டது. Hunseatic leaque எனப் பெயர் பெற்ற இவ்வமைப்பில் 70நகரங்களுக்கு மேல் அங்கம் வகித்தன. கி.பி 1300, 1400களில் வடமேற்கு ஐரோப்பிய வர்த்தகத்தின் மீது இவ்வமைப்பு வலிமையான செல்வாக்கைச் செலுத்தியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Hunseatic சங்கமானது நிரந்தரமான வர்த்தகத் துறைமுகங்களை அங்கத்தவர்களுக்கென ஒதுக்கியிருந்தது. இவை Flanders ஸ்கண்டிநேவியா, இங்கிலாந்து, ரஷ்யாவில் காணப்பட்டன. இச்சங்கத்தில் அங்கத்துவம் வகிக்கும் ஒருவர் அதன் விதிகளை மீறினால் சலுகைகளிலிருந்து விலக்கப்படுவர். சிலவேளைகளில் இதன் அங்கத்தவ நகர்களிடையே வர்த்தக உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்காக சிறயஅளவிலான சண்டைகளும் நடைபெற்றதாக அறியமுடிகின்றது. வணிகத்துக்குப் பாதுகாப்பு வழங்குவதுடன் பொருட்களின் அளவு, தரம், வர்த்தகர்களின் ஆர்வத்தை முன்னேற்றுதல், பயிற்சிகளை வழங்குதல், உறுப்பினர்களின் நலச்சேவைகளை கவனித்தல், என்பன முக்கியமான பணிகளாக இருந்தாலும் வெளியிலிருந்து ஏற்படும் போட்டிகளிலிருந்து உறுப்பினர்களைப் பாதுகாத்தலே பிரதான பணியாக இருந்தது. தங்களுடைய உரிமைகளை நிலை நாட்டுவதில் பாரம்பரியமாக அதிகாரத்தைக் கொண்டிருந்த பிரபுக்களுக்குச் சவாலாக வணிகர் சங்கம் வலுப்பெற்றிருந்தமையும் கவனிக்கத்தக்கது.

வணிகத்தின் விருத்தியினால் தோன்றிய வலிமையான நகரங்கள் பிரபுக்களின் கட்டுப்பாடுகளிலிருந்து சுதந்திரத்தை அனுபவிக்கக்கூடியனவாகின. இவை சுயாட்சி உருவாக்கம், சமூகங்களின் சுயபாதுகாப்பு முதலியவற்றை மேற்கொண்டபோது அவை கொம்யூன் அமைப்புக்களாயின. உள்ளூர் பிரபுக்கள் சிலருடன் செய்து கொண்ட பேச்சு வார்த்தைகளின் பிரகாரம் கொம்யூன்களின் வர்த்தகநடவடிக்கைகளினால் கிடைக்கும் வருமானத்தினை அவர்களும் பங்கீடுசெய்து கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டமை முக்கியமான அம்சம் எனலாம். சில சந்தர்ப்பங்களில் பிரபுகளுடன் செய்யப்படாத ஒப்பந்தங்களினால் முரண்பாடுகள் ஏற்பட்டமையும் தவிர்க்கமுடியாததாக இக்காலத்தில் இருந்தமை கவனத்தில்கொள்ளத்தக்கதாகும். இதே வேளை இடைக்கால வணிகத்தினால் படிப்படியாக பணத்தை வழங்கி வர்த்தகத்தை மேம்படுத்தும் உதவுனர்கள் தோற்றம் பெற்றனர். வணிகம் தொடர்பான ஆவணங்களும் பேணப்பட்ட ஆரம்பித்தன. மேலும் வங்கி முறை வட இத்தாலிய கொம்யூன்களில் வளர்ச்சியுற்றமை குறிப்பிடத்தக்கதாகும். 12ஆம் நூற்றாண்டிலேயே இம்முறையின் அடிப்படையில் பணத்தைப் பாதுகாத்தல், கடன் வழங்குதல், பணப் பரிமாற்றம் செய்தல், என்பன மேற்கொள்ளப்படத் தொடங்கின. புளோன்ஸில் மெடிசிகளுக்குரிய வங்கி இடைக்காலத்தில் முன்னணியாகத் திகழ்ந்து போப்புக்களினதும், ஐரோப்பிய அரசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பத்தினதும் நிதிகளைக் கையாண்டதுடன் ,இராணுவ நடவடிக்கைகளுக்கும், சில வகையான வரிகளைப் பெறுவதற்கும் உதவியதைக் காணலாம்.

இடைக்காலத்தில் நடைபெற்ற பல்வேறு சம்பவங்களில் ஒன்றாக விருத்தியுள்ள வணிகம் ஐரோப்பாவில் நீண்ட கால வரலாற்றைக் கொண்டதாகும். பண்டைய உரோம –கிரேக்க காலங்களில் செழிப்புற்றத் தொடங்கிய வர்த்தகம் படையெடுப்புக்களினால் தடைப்படுத்தப்பட்ட போதும், பின்னர் படிப்படியாக எழுச்சியுற்று மேலும் விரிவாக்கம் பெற்றதோடு நகரங்களின் தோற்றத்திற்குச் சாதகமாக அமைந்தமையினைக் காணலாம். இத்தகைய நகரங்களின் எழுச்சி மக்களின் வாழ்க்கையில் குறிப்பிடத்தக்களவில் முன்னேற்றத்தை ஏற்படுத்தின. நாடுகளுக்கிடையில் தொடர்புகள் வலுப் பெற்றன. பிரதேசங்களுக்கிடையயேயான தனித்துவங்களில் ஒரளவுக்குத் தளர்வுகள் ஏற்படத் தொடங்கி , மற்றைய சமூகங்களுடன் தொடர்புகளைப் பேணுவதற்கு வணிகம் பெருமளவுக்குப் பங்களிப்புச் செய்தது. வணிகமும், அதனால் ஏற்பட்ட விருத்திகளும் 16ஆம் நூற்றாண்டில் இன்னொரு புதிய காலகட்டத்தை தோற்றுவிக்க வழி வகுத்தது. குறிப்பாக நவீன காலம் ஆரம்பித்து வைக்கப்பட்டதைக் காணலாம். கீழைநாடுகளில் வர்த்தக ஆதிக்கத்தைப் பெறுகின்ற ஐரோப்பியரின் அபிலாசையானது, அவற்றைத் தமது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வரவும் தூண்டியமை குறிப்பிடத்தக்கதாகும்

**உசாத்துணை.**

1. Alex woolf, (2008)., *A Short History of the world* , Arcturus publishing Limited, London .

2. Daniel, (1947)., *The Arabs & Medieval Europe,* Norman.

3. Holmes, (1988)., *Georage*, The oxford Medieval Europe.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10



# எகிப்திய நாகரிகத்தின் அறிவியல் வளர்ச்சி

ஆ.ருபனா

வரலாறு (சிறப்புக்கலை)

மூன்றாம் வருடம்

## அறிமுகவுரை

உலகில் தோன்றிய நாகரிகங்களில் எகிப்திய நாகரிகமும் ஒன்றாகும். கிறிஸ்து பிறப்பதற்கு சுமார் நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நாகரிகப் பாதையில் நடைபோடத் தொடங்கிய எகிப்தியர்கள் அரசியல், பொருளாதாரம், சமூகம், கலை ஆகிய பல்வேறு துறைகளிலும் பாராட்டும் படியான முன்னேற்றம் அடைந்திருந்தனர். "நைல்நதியின் கொடை" என வர்ணிக்கப்படும். எகிப்திய நாகரிகத்தினர் உலகிற்கு வழங்கிய கொடைகளிலொன்றாகக் கருதப்படுவது அவர்களுடைய தொழில்நுட்பம் ஆகும். எகிப்தியர்களின் தொழில்நுட்ப சிறப்பினை பிரமிட்டுக்கள், மம்மி உருவாக்கம், கணித முறைகள், மருத்துவம், கப்பல் கட்டும் தொழில் போன்ற பல்வேறு அம்சங்களினூடாக அறிந்துகொள்ளலாம். இவர்களது தொழில்நுட்ப அறிவின் சிறப்புக்களை இக்கால தொழில்நுட்பவியலாளர்களால்கூட அறிந்திருக்க முடியாமை வியப்புக்குரியதாகும். பல ஆயிரம் ஆண்டுகளைக் கடந்து இன்றும்கூட இவை மிகுந்த கம்பீரத்துடன் காட்சியளிக்கின்றன. அந்தவகையில் எகிப்தியர்களின் தொழில்நுட்ப அறிவானது மிகவும் சிறப்பானதாக போற்றப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பிரமிட்டுக்கள்

பிரமிட் என்ற வார்த்தை இன்று எகிப்து தேசத்தின் அடையாளமாகக் காணப்படுகின்றது. பிரமிட்டானது சாதாரண மக்களை மட்டுமல்லாமல் பொறியியல் வல்லுநர்களையும் வியக்கவைக்கின்ற கட்டடக்கலையாக உள்ளது. ஏழு உலக அதிசயங்களில் பிரமிட்டும் ஒன்றாகும். பிரமிட் என்றால் கூம்பு வடிவம் என்பது பொருள். இதன் அடிப்பகுதியானது சதுரமாக இருக்கும். மேலும் இதனது நான்கு சரிவான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கோணப் பகுதிகள் உச்சியில் ஒன்றாக இணையும். எகிப்தியர்கள் கி.மு 2500 ஆம் ஆண்டளவில் மனிதனின் இறப்பிற்குப் பிறகும் வாழ்க்கை உண்டு என நம்பினர். எனவே எகிப்தில் மன்னர்கள், மகாராணிகள், மந்திரிகள், குருமார்கள் என்பவர்கள் இறந்த பின்பு அவர்கள் பயன்படுத்திய ஆபரணங்கள், பொருட்கள் ஆகியவை இறப்பிற்குப் பிந்திய வாழ்விற்கு அவர்களுடன் சேர்த்துப் புதைக்கப்பட்டன. இறந்த பிறகும் வாழ்க்கை உண்டு என்ற அசைக்க முடியாத நம்பிக்கையால் எகிப்திய மன்னர்கள் இறந்தபின்பு அவர்களது உடல்களைப் பதப்படுத்தி இத்தகைய பிரமிட்டுக்களில் அவர்களது உடல்களை வைத்தனர். மன்னர் உயிருடன் இருந்தபோது அவர் பயன்படுத்திய விலை உயர்ந்த ஆபரணங்கள், வைரம், தங்கம், வெள்ளி, உணவு, தானியங்கள் ஆகியவை அவரது இறப்பிற்குப் பிந்திய வாழ்க்கைக்காக அவருடன் சேர்த்துப் புதைக்கப்பட்டன. மன்னர்கள், மகாராணிகள், மந்திரிகள், மதகுருமார்கள் ஆகிய அனைவருக்கும் அவர்களுடைய தகுதிக்கேற்ப தனித்தனியே மன்னருக்கு அருகாமையிலேயே பிரமிட்டுக்கள் கட்டப்பட்டன.

பிரமிட்டுக்கள் அனேகமாக இரண்டரை மில்லியன் சுண்ணாம்புக் கற்களைக் கொண்டு கட்டப்பட்டுள்ளன. இந்தப் பிரமிட்டுக்களில் காணப்படுகின்ற ஒவ்வொரு கல்லும் இரண்டு தொன் எடை கொண்டதாகும். இதில் நமக்கு ஆச்சரியம் என்னவென்றால் எகிப்து தேசத்திலுள்ள ஒவ்வொரு பிரமிட்டும் அதன் கட்டமைப்பில் ஒரு டிகிரிக்கும் குறைவாக வடதுருவத்தின் நேர்கோட்டில் அமைந்திருப்பதே. எந்த ஒரு தொழில்நுட்ப முன்னேற்றமும் இல்லாத அக்காலத்தில் இந்த அதிசயம் எவ்வாறு சாத்தியமாயிற்று என்று வரலாற்று ஆய்வாளர்கள் ஆச்சரியப்படுகின்றனர். இப்பிரமிட்டுக்கள் 4500 ஆண்டுகளுக்கு முந்தியது எனவும் இதன் அருகே உள்ள ஸ்பிங்ஸ் எனப்படும் சிலை 12000 ஆம் ஆண்டுகளுக்கு முந்தியது என்றும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். கீசா என்ற பிரமிட் தொகுதி எகிப்தின் தலைநகரான கெய்ரோவின் எல்லைப் பகுதியில் கிசா மேட்டுநிலப் பகுதியில் உள்ளது. பண்டையகால நினைவுச் சின்னங்களை உள்ளடக்கிய இப்பகுதி நைல் நதிக்கரையில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. பழைய கிசா நகரிலிருந்து இது 5மைல் தொலைவில் உட்புறமாக பாலைவனப் பகுதியொன்றில் அமைந்துள்ளது. மேலும் இது கெய்ரோவின் மத்தியிலிருந்து தென்மேற்காக 15மைல் தொலைவில் காணப்படுகின்றமையும் அவதானிக்கத்தக்கது. இந்த நெக்ரொப்போலிஷ் நகரம் பல பிரமிட்களை உள்ளடக்கிய தொகுதியாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூஃபுனின் பிரமிட் எனப்படும் பெரிய பிரமிட்டும் காஃபா பிரமிட் எனப்படும் சிறிய பிரமிட்டும் இவற்றிற்கு தென்மேற்கில் 100மீற்றர் தொலைவில் நடுத்தர அளவுள்ள மென்காவின் பிரமிட்டுக்களும் இதன் தென்மேற்கில் 100மீற்றர் தொலைவில் உள்ள சில சிறிய பிரமிட்டுக்களும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தன.

ஸ்பிங்ஸ் எனப்படும் மனிதத்தலையும் சிங்க உடலும் கொண்ட சிலை இப்பகுதியின் கிழக்கில் கிழக்குத் திசையைப் பார்த்தபடி உள்ளது. இன்றைய எகிப்தியர்கள் இந்த ஸ்பிங்ஸ் சிலை காஃப்ரேயுடையது என்று நம்புகின்றனர். இந்த அரச குடும்பத்துச் சிலைகளுடன் பல உயர் நிலை அரச அதிகாரிகளின் சிலைகளும் காணப்படுகின்றன. கிசா நகரில் இருக்கும் பெரிய பிரமிட் சுமார் 476அடி உயரமானது. அது 13.63ஏக்கர் நிலப்பரப்புக் கொண்டது. அதில் 5, 90, 712கற்கள் பயன்படுத்தப்பட்டிருப்பதாகக் கணணிக் கணக்கீடுகள் கூறுகின்றன. கற்களின் எடை ஒவ்வொன்றும் இரண்டில் இருந்து முப்பது தொன் வரையுள்ளன. இந்தக் கற்களை தூரத்திலிருக்கும் மலைப்பகுதிகளில் இருந்து எப்படிக் கொண்டுவந்தார்கள்? உச்சியை எட்டும்போது கற்களை 400அடிகளுக்கு மேல் தூக்கிக்கொண்டு போயிருக்க வேண்டுமே? அவர்களிடம் கிரேன் மாதிரி எந்திரம் இருந்ததா? ஒரு இலட்சம் தொழிலாளிகள் இருபது வருடம் பணியாற்றியிருந்தால் மட்டுமே பெரிய பிரமிட் உருவாகியிருக்கும் என்பது கட்டடக்கலை வல்லுனர்களின் கணிப்பாக உள்ளது.

பிரமிட்டுக்களுக்குள் இராஜா, இராணிகள் அக்கால முக்கியஸ்தர்கள் போன்றவர்களது மறைவிற்குப் பின் மம்மிகளாக உடல் கெடாதவாறு பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இந்த உடல்கள் இன்றுவரை கெட்டுப் போகாமல் இருக்கின்றன. பிரமிடடுக்களின் கூம்பு வடிவமே இதற்குக் காரணம் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றார்கள். வீடுகளைச் சாதாரணமாகச் சதுர, செவ்வக வடிவங்களில் கட்டியவர்கள் பிரமிட்டுக்களை மட்டும் கூம்பு வடிவத்தில் கட்டினார்கள். இதனை ஆராய்ச்சியாளர்கள் பல ஆண்டுகள் செய்த பரிசோதனைகளின் அடிப்படையில் தரும் விளக்கங்கள் நம்மை பிரமிக்க வைக்கின்றன. பிரமிட் வடிவ அறைக்குள் காய்கறிகள் பழங்களை வைத்தால் மற்ற அறைகளில் வைத்த காய்கறிகளைவிட அதிக நாட்கள் கெடாமல் இருக்கின்றன. இதற்குக் காரணம் கூம்பு வடிவ அமைப்பே என்பது அவர்களது கருத்தாகும். மேலும் இது சுற்றுப்புறத்திலிருந்து ஒருவித மின்காந்த ஆற்றலை உள்வாங்குகின்றது. பிரமிட்டின் உச்சப்பகுதி, அந்த ஆற்றலை பிரமிட்டின் உட்பகுதியில் ஒரே சீராக பரவ வைக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுதான் இரகசியம் என்கின்றார்கள் ஆய்வாளர்கள். பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் எகிப்தியர்களுக்கு இந்த விஞ்ஞான உண்மை எப்படித் தெரிந்தது, புரிந்தது என்பது ஆச்சரியமாக இருக்கின்றது.

**கணிதம், வணிகம், விஞ்ஞானம், பொறியியல்**

பிரமிக்கத்தக்க பிரமிட் கோபுரங்களையும், சிற்பக் கோயில்களையும் அரச மாளிகைகளையும் கட்டிமுடிக்க எகிப்தியர்கள் நுணுக்கமான கணித விஞ்ஞான அறிவினையும், வானியல் யூகத்தினையும், விஞ்ஞான அறிவினையும் பொறியியற் திறமையையும் கொண்டிருந்ததாகத் தெரிகின்றது. பண்டைய எகிப்தில் ஓராண்டின் காலத்தையும், நாட்களையும், நேரத்தையும் அளவிட அவர்களால் கணித விதிகள் பயன்படுத்தப்பட்டன. நேர்கோடுகள், பல்வேறு கோணங்கள், வட்டம், வளைவு, சதுரம், நீள்சதுரம், பரப்பளவு, கொள்ளளவு, உயர்ந்த தூண், பிரமிட் போன்ற சதுரக் கூம்பகம், கோயில் ஆகியனவற்றினைத் துல்லியமாக அமைப்பதற்குக் கணித விதிப்பாடுகள், பொறியியல் நுணுக்கங்கள் என்பன சீராகக் கடைப்பிடிக்கப்பட்டுள்ளன. 4000 ஆண்டுகளுக்கு முன்னதாகவே எகிப்தியர்கள் நாட்கள், மாதங்கள், வருடம் போன்றவற்றினைக் குறிப்பிடுகின்ற ஆண்டு நாட்காட்டியைத் தயாரித்து வந்திருக்கின்றார்களென்பது குறிப்பிடத்தக்கது.

கல்துறைப் பொறியியல் (Stone Technology), கட்டமைப்புப் பொருளியல் (Structural Engineering) போன்ற துறைகளில் எகிப்தியர்கள் வல்லவர்கள். இத்தகைய முற்போக்குக் கட்டடங்களை பண்டைக்கால எகிப்தியர்கள் முதலில் எப்படித் திட்டமிட்டார்கள். பிறகு எப்படிக் கட்டினார்கள் என்றுகூடத் தற்போது நம்மால் தெளிவாக ஊகிக்க முடியவில்லை. நமக்குப் புரிவதும் சிரமமாக உள்ளது. எகிப்தியர் வரைகோணக் கணிதம் (Geometry), இரசாயனம் (Chemistry), மருத்துவம் (Medicine), உடல் பகுப்பு (Anatomy), இசை (Music) ஆகியவற்றை நன்கு அறிந்து பயன்படுத்திவந்தார்கள். 4000ஆண்டுகளுக்கு முன்னரே வட்டத்தின் நிலை எண்ணான "பை" (Constant Pi = 3.14 (22/7)) என்பதைப் பற்றி எகிப்தியர்கள் விளக்கமாக அறிந்திருந்தனர் என்று ஜேர்மன் மேதை கார்ல் - ஹெச் என்பவர் கூறுகின்றார்.

விஞ்ஞான, பொறியியல் முறைகளைப் பயன்படுத்தி நைல் நதி நாகரிகத்தை மேம்படுத்திய பண்டைக்கால எகிப்தியர்தான் முதன் முதல் கணித விதிகளை பின்பற்றிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாந்தர் என்று வரலாற்றில் அறியப்படுகின்றது. Chemistry என்றும் இரசாயனப் பதமே எகிப்தியச் சொல்லான Alchemy இரசவாத முறையில் இருந்து வந்தது என்று அறியப்படுகின்றது. இவர்கள் மருத்துவம், பயன்பாட்டுக் கணிதம் ஆகியவற்றிலே மிகுந்த தேர்ச்சி பெற்றவராகக் காணப்பட்டனர். புராதன பப்பிரஸ் (Papyrus) இலைக் காகிதங்களில் எழுதப்பட்டுள்ள ஏராளமான எகிப்திய காவியங்களில் இருந்து பல்வேறு மருத்துவ முறைகள் கண்டுபிடிக்கப்பட்டாலும் இவை எப்படி இரசாயனக் கணிதமுறையில் கலக்கப்பட்டன என்னும் விளக்கங்கள் காணப்படவில்லை. எகிப்தியர்கள் இரசாயனம், மருத்துவம் மட்டுமின்றி வானவியல், பொறியியல், பொதுத்துறை ஆளுமை போன்ற துறைகளிலும் தெளிவான அறிவியற் கருத்துக்களைக் கொண்டிருந்தனர்.

**மம்மிக்கள்**

அவ்வுலகில் வாழ அவர்களுக்கு இப்பூவுலக உடல் தேவைப்படுவதனால் இறந்த அரசர்களின் சடலங்களைப் பாதுகாப்பது அவசியம் என்ற நம்பிக்கை இருந்தமையாலும் அரசர்களின் சடலங்கள் பதனிடப்பட்டன. இறந்தவர்களின் உடலைப் பதப்படுத்த எப்படி எவ்வெவ் முறைகளைப் பயன்படுத்தினார்கள் என்பதனை அடுத்து நோக்குவோம். முதலில் இறந்தவரின் உடலைத் தனியாக ஒரு கூடாரத்திற்கு எடுத்துச்சென்று மரணக் கட்டிலில் அவரைக் கிடத்திப் பேரீட்சை மதுவாலும், நைல்நதி நீராலும் அலம்புவார்கள். உடலின் இடது பக்கத்தினை வெட்டி உள்ளே இருக்கும் பகுதிகளை வெளியே எடுப்பார்கள். பின்னர் நுரையீரல், கல்லீரல், வயிற்றுப்பகுதிகள், குடல் பகுதிகள் எடுக்கப்பட்டு கல் உப்பில் பதப்படுத்தப்படும். இதயம் அறிவின் இருப்பிடமாக கருதப்பட்டதால் அது உடலுக்குள்ளே இருக்கும். ஒரு நீண்ட வளைந்த கம்பியை மூக்கின் வழியாக விட்டு உடைத்து மூளையை எடுத்து விடுவார்கள். பின்னர் உடலில் உள்ள ஈரப்பதத்தை நீக்குவதற்காக உடல் நாட்ரான் எனப்படும் கல் உப்பால் மூடப்படும். உடல் வெட்டப்படும் போது வரும் இரத்தம், சதை ஆகியவற்றைத் தனியாகச் சேகரித்து வைத்து மம்மியை அடக்கம் செய்யும்போது அதனுடன் வைத்துவிடுவார்கள்.

நாற்பது நாட்கள் கழித்து உடலை மறுபடியும் நைல்நதி நீரால் கழுவி அதன்மீது வாசனை எண்ணெய்களைத் தடவுவார்கள். உடல் இப்பொழுது தனது ஈரப்பதத்தை முழுவதுமாக இழந்திருக்கும். தேவையான உலர்ந்த உடல் உறுப்புக்களைத் தனியாக எடுத்து கனோபிக் ஜார் (Cano pic Jars) எனப்படும் ஜாடிகளில் தனித்தனியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைக்கப்படும். இந்த ஜாடிகளும் உடலுடனேயே சேர்த்துப் பாதுகாக்கப்படும். பின்னர் உடலுக்குள் உமி, காய்ந்த இலைகள், துணிகள் எனச் சில பொருட்களை வைத்து மூடுவர். இப்பொழுது உடல் துணியால் மூடுவதற்குத் தயாராகி விட்டது. உடலில் நறுமணம் வீசும் திரவியங்கள் மற்றும் எண்ணெயைத் தடவி உடலைப் பிசின் தடவிய துணியால் இறுக்கமாகச் சுற்றுவார்கள். தலை, கைகள், கால்கள், உடற்பகுதி என்பன தனித்தனியாகச் சுற்றப்படும். சுற்றிய துணியின் நடுவே அமுலட் எனப்படும் ஒரு பதக்கத்தை வைப்பார்கள். அது இறந்தவர்களுக்கு அடுத்த உலகத்தில் துணையாக இருக்கும் என்பது அவர்களின் நம்பிக்கை. உடலைத் துணியில் கட்டிக் கொண்டிருக்கும்போது மதகுரு, இறந்தவரின் தலைக்கு அருகே நின்றுகொண்டு சில புனித வார்த்தைகளை உரக்கக் கூறிக்கொண்டிருப்பார். இது கெட்ட சக்திகளை விலக்கும் என்பது அவர்களது நம்பிக்கை.

கைகளையும், கால்களையும் இறுக்கமாகக் கட்டிய பின் கட்டிய கைகளுக்கு நடுவே "இறந்தவரின் புத்தகத்தில்" உள்ள சில வரிகளை பைபிரிஸ் தாளில் எழுதி வைத்து விடுவார்கள். பின்னர் ஒரு வெள்ளைத் துணியை வைத்து உடல் முழுவதும் போர்த்திவிட்டு "ஒசிரிஸ்" கடவுளின் படத்தை அந்தத் துணியில் வைத்து நன்றாக இறுக்கமாகக்கட்டி அதன் மேலே படங்கள் வரையப்பட்ட ஒரு மரப்பலகையை வைத்து மூடி அலங்காரம் செய்யப்பட்ட முதல் பெட்டியினுள் வைத்து மூடி விடுவார்கள். அரசன் என்றால் இந்த முதல் பெட்டி தங்கம் அல்லது வேறு விலை உயர்ந்த பொருள் கொண்டு செய்யப்பட்டதாகத் தான் இருக்கும். பின்னர் அதனை இரண்டாம் பெட்டிக்குள் வைத்து மூடி விடுவார்கள். மம்மி இப்போது தயாராகி விட்டது. இவ்வளவும் முடிந்து தனது இறுதிப் பயணத்திற்குத் தயாரான மம்மியை உறவினர்கள் மக்களின் பார்வைக்காக வைப்பார்கள். கடைசியாக அவர்கள் அழுது முடிந்து இறுதிச் சடங்குகள் முடிந்ததும் "வாய்திறக்கும்" சடங்கு என ஒன்று நடத்தப்படும். அப்போது இறந்தவருக்குக் கடைசியாக உணவு, தண்ணீர் என்பன கொடுக்கப்படும். பின்னர் அலங்காரப் பெட்டியை எடுத்துக்கொண்டு இறந்தவர் அரசன் என்றால் அவரவர்க்குரிய பிரமிட்டுக்குள்ளும் மற்றவர்கள் என்றால் அவரவர்க்குரிய இடத்திலும் வைப்பார்கள் பின் அவர் உபயோகித்த பொருட்கள், ஆபரணங்கள், உணவு என எல்லாவற்றையும் வைத்துப் பிரமிட்டின் வழியை மூடிவிடுவார்கள். இவ்வாறு பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் உருவாக்கிய மம்மிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமக்கு இன்றும் அழியாமல் கிடைக்கின்றன. இது எகிப்திய அறிவியலுக்கும் மதத்திற்கும் இடையே காணப்படும் நெருங்கிய தொடர்பை எடுத்துக்காட்டுகின்றது.

கப்பல் கட்டும்பணி

எகிப்தியர்கள் கப்பல் கட்டும் தொழிலிலும் சிறந்து விளங்கியுள்ளனர். எகிப்தியர்களின் வாழ்க்கையில் நைல்நதியின் பங்கு மிகப் பெரியதாகும். இவர்களால் கப்பல் கட்டும் தொழில் உருவாக்கப்பட்டமைக்கு முக்கிய காரணம் போக்குவரத்து ஆகும். இவர்கள் ஆரம்பத்தில் Papyrus reeds இல் இருந்து சிறிய படகுகளை உருவாக்கினார்கள். சிறிது காலத்தின் பின்னர் மிகப் பெரிய அளவில் படகுகளை உற்பத்தி செய்தனர். படகுகள் பல வகையில் உருவாக்கப்பட்டன. சில படகுகளில் சமையல் செய்யும் வசதிகூட செய்யப்பட்டிருந்தது. எகிப்தியர்கள் மிகப்பெரிய படகுகள் மூலம் கடல் வாணிபத்தில் ஈடுப்பட்டமையையும் காணமுடிகின்றது.

நிறைவுரை

நைல்நதிப் பள்ளத்தாக்கு மக்களின் அறிவியலை வெளிப்படுத்தும் வகையில் பிரமிட்டுக்கள், கணிதம், மருத்துவம், மம்மி உருவாக்கம், கப்பல் கட்டும் தொழில் போன்றன காணப்படுகின்றன. இவை கிறிஸ்துவுக்கு முன் 4000 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த எகிப்திய மக்களால் உருவாக்கப்பட்டவை என்றால் அது வியப்புக்குரியதாகவும் அதிசயம் மிக்கதாகவும் விளங்குகின்றது. மேலும் இத்தகைய கணித அறிவும், மருத்துவ அறிவும், கட்டிட தொழில்நுட்பத்திறனும் இன்றைய மக்களாலும் பாராட்டப்படத்தக்க வகையில் அமைந்துள்ளது. அதுமட்டுமன்றி இத்தகைய தொழில்நுட்ப அறிவை இவர்கள் எங்கிருந்து பெற்றுக்கொண்டார்கள்? எவ்வாறு இவற்றை உருவாக்க முடிந்தது? போன்ற வினாக்களுக்கு இன்றும் விடை காணமுடியாத அளவிற்கு எகிப்தியத் தொழில்நுட்பம் தலைசிறந்து விளங்குகின்றது என்றால் அது மிகையாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உசாத்துணை


### தமிழ்

1. கந்தையா, ந.சி., (1950) *மறைந்த நாகரிகங்கள்*, அமிழ்தம் பதிப்பகம், சென்னை.
2. கமலா, க., (2006) *உலக நாகரிகம் வழங்கிய நாடுகளும் வரலாறும்*, நர்மதா பதிப்பகம், சென்னை.
3. கௌசிகன், ம., (2004) *உலக மகாநாகரிகங்கள்*, கங்கைப் புத்தக நிலையம், சென்னை.

### English

1. Starr, G., (1991) *A History of The Ancient World*, Oxford University Press, London.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11



## வரலாற்றில் நாகப்பட்டினம் - ஒரு பார்வை

சி.சிவனேஸ்வரன்
வரலாறு (சிறப்புக்கலை)
நான்காம் வருடம்

### அறிமுகவுரை

உலகில் வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்த பல இடங்கள் காணப்படுகின்றன. அவற்றில் ஒன்றாக தென்னிந்தியாவின் கிழக்குக்கரையில் அமைந்துள்ள துறைமுக நகரமாகிய நாகப்பட்டினத்தினையும் குறிப்பிடலாம். சுமாராக 9.4சதுர கிலோமீற்றர் பரப்பளவைக்கொண்ட இவ்விடமானது பல நூற்றாண்டுகளாகப் பல வரலாற்று நிகழ்வுகளுடன் தொடர்புபட்ட பிரதேசமாக விளங்கிவருகின்றது. படரிதித்த, நெகமா, நாகானை, நாகானனம், நாகை, நாகப்பட்டினம் எனப் பலபெயர்களால் இவ்விடம் அழைக்கப்பட்டு வருகின்றமை நாகபட்டினத்தின் வரலாற்றுத் தொன்மையை நமக்கு வெளிக்காட்டுகிறது. இந்நகர் மார்க்க போலா–பட்டன் (Patan) என்றும் ரசிதுத்தீன் - மலிபட்டன் (Malifattan) எனவும் இட்சிங் - நகவதனா (Naga-Wadana) எனவும் தொலமி– நிக்கவ்வா (Nikawa) எனவும் அவர்களது குறிப்புக்களில் குறித்துள்ளமை இந்நகரமானது வரலாற்றில் சிறப்புப் பெற்றுக்காணப்பட்டமையை வெளிக்காட்டுகின்றது.

சங்ககாலமாகக் கூறப்படும் காலமானது தமிழில் முதன் முதலில் இலக்கிய ஆதாரங்கள் கிடைக்கும் காலப்பகுதியாகிய கி.மு 3 – கி.பி 3 வரையான கால பகுதியினைக் குறிக்கும். சான்றாதாரங்களில் நாகபட்டினத்தைப் பற்றிய நேரடிக் குறிப்புக்கள் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனால் நாகபட்டினத்திற்கு அருகில் இருக்கும் வாஞ்சூர், கீழ்வேலூர் ஆகிய இடங்களில் முதுமக்கள் தாழிகள் பல கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகக் கோகுல் சேஷாதிரி என்பவர் குறிப்பிடுகின்றார். இதனால் சங்ககாலத்தில் நாகபட்டினத்திற்கு அருகான இடங்களில் சங்ககால மக்கள் பலர் வசித்துள்ளனர் எனக்கூறலாம். இக்கூற்றுக்கு வலுச் சேர்ப்பதாகச் சங்ககாலச் சோழர்களது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைநகரான காவிரிப்பூம்பட்டினம் (பூம்புகார்) நாகபட்டினத்திற்கு வடக்காக 50 கிலோமீற்றர் தூரத்தில் காணப்படுகின்றமையைக் குறிப்பிடலாம். நாகபட்டினம் பற்றிய முதற்குறிப்பானது கி.மு 3 ஆம் நூற்றாண்டில் வெளிக்காட்டப்படுவதாகக் கூறப்படுகிறது. பர்மா நாட்டின் பௌத்த விவரணச் சுவடியின் இறுதியில் அசோக மன்னன் அமைத்த விகாரை பற்றிக் கூறப்பட்டுள்ளது. இவ்விகாரை பற்றிய குறிப்புக்களை மார்க்கோ போலா, யுவான் சுவாங் போன்ற வெளிநாட்டுப் பயணிகளது பயணக் குறிப்புக்கள் மூலம் அறியமுடிகிறது. பர்மா நாட்டுச் சுவடியானது "படரித்த விகாரை"என அவ்விகாரையை குறிப்பிடுகிறது. இதிலிருந்து நாகபட்டினம் முதலில் படரித்த என அழைக்கப்பட்டுப் பின்னர் படரித்த எனும் சொல்லானது"அவுரித்திடல்"எனத் திரிபடைந்து இருக்கலாம் எனக் கூறுவாருளர். ஆகவே படரித்த என்னும் இடம் நாகபட்டினம்தான் எனப் பல அறிஞர்கள் இன்று ஏற்றுக்கொண்டு உள்ளனர். இதன் பின்னணியில் இப்பட்டினத்தில் அசோகன் விகாரை அமைத்தமையானது அக்காலத்தில் பௌத்தச் செல்வாக்கு இங்கு காணப்பட்டமையைப் புலப்படுத்துகிறது எனலாம்.

கி.பி 1 ஆம் 2 ஆம் நூற்றாண்டுகளில் இந்நாகப்பட்டினம் பற்றிய குறிப்புக்களை வானியல் அறிஞராகிய KladiosPtolemaios என்பவர் தனது குறிப்பில் பாட்டோய் (Batoi) என்ற நாட்டைப் பற்றியும் நிகமா (Nikama) என்ற நகரம் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். இதில் பாட்டோய் - இந்தியா எனவும் நிகமா–நாகப்பட்டினம் எனவும் கேர்னல் ஹென்றியூல் (Kernel HentryJule) எனும் அறிஞர் எடுத்துக்காட்டியுள்ளார். இதற்கு வலுச்சேர்ப்பதாகப் பிராமிக் எழுத்தில் "நிகமா" எனப் பொறிக்கப்பட்ட மட்பாண்டம் ஒன்று அகழ்வாய்வில் கிடைத்துள்ளதாக கோகுல் சேஷாதிரி என்பவர் குறிப்பிட்டுள்ளார்.

கி.பி 6 ஆம் நூற்றாண்டின் மத்தியில் காவிரிப்பூம்பட்டினம் அழிவடைந்ததாகவும் இதனால் நாகபட்டினம் அச்செல்வாக்கைப் பெற்றது எனவும் கூறப்படுவது கவனிக்கத்தக்கது. இதேகாலப்பகுதியில் நாகபட்டினத்தில் இருந்த காசிபதேரர் எனும் பௌத்தமதகுரு படரித்த விகாரையை நாகர்களது உதவியுடன் புனரமைத்தமையை செப்பேட்டுச் சாசனம் வெளிக்காட்டுகிறது. இதன் பின்னர் இவ்விகாரை நாகானனம் விகாரை என அழைக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. நாகபட்டினத்தின் வெளிப்பாளையம் என்னும் பகுதியில் 300புத்தர் சிலைகளும் தூபிகளும் மீட்கப்பட்டுள்ளன. அவ்வாறு மீட்கப்பட்ட புத்தர் சிலையொன்றில் நெகமா, நாகானை என்ற சொற்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறிக்கப்பட்டுள்ளன. இது இவ்விடத்துடன் நாகர் தொடர்புபட்டிருந்தமையை எடுத்துக்காட்டுவதுடன் நாகப்பட்டினத்திற்கு அருகில் உள்ள இடத்திற்கு"நாகர் தோப்பு"எனும் பெயர் காணப்படுகின்றமையும் மேலும் இக்கூற்றை உறுதிப்படுத்துகின்றது.

இதே நூற்றாண்டு காலப்பகுதியில் ஆச்சார்யாதம்மபாலா (கி.பி 528 – 560) என்பவர் தேரவாத பௌத்தப் பங்காளராகவும், நாலந்தா பல்கலைக்கழகத் தலைவராகவும் விளங்கியவர் என்பதுடன்"நெட்டிபக்கரானா அட்டகதா"என்னும் விளக்கவுரையை எழுதியவராகவும் காணப்படுகின்றார். இவ்விளக்கவுரையின் இறுதி மூன்றாவது வரியில் "தம்மசொகா–மகாராஜா விஹாரபட்டனேநாகசாவாயே"எனக் குறிப்பிட்டுள்ளார். இப் "பட்டனேநாகசாவாயே"எனும் பதம் நாகபட்டினத்தையே குறிப்பதாகக் கூறப்படுகிறது.

கி.பி7ஆம் நூற்றாண்டில் நாகபட்டினம் பெரியதுறைமுகப் பட்டினமாக மாற்றம் பெற்று விளங்கியமையை திருநாவுக்கரசநாயனார் (அப்பர்) பாடிய தேவாரத்தினூடாக அறியமுடிகின்றது. இவர் பல்லவ மன்னன் மகேந்திரவர்மன் (கி.பி 604 – 630) காலத்தைச் சேர்ந்தவர். இவர் தனது 4.108 ஆவது பாடல்களில் "வங்கமலிகடல்நாகை"எனப் பாடியுள்ளார். இதில் நாகை எனக் குறிப்பிட்டுள்ள நாகபட்டினத் துறைமுகத்தில் பெரிய கடற்கலங்கள் இருந்தமையை இப்பாடல் வரிபுலப்படுத்திக் காட்டுகிறது. இவரைப் போலவே திருஞானசம்பந்தரும் நாகபட்டினம் பற்றித் தனது 1.84.7ஆவது பாடலில் "வரையார்வனபோல வளரும் வங்கங்கள் கரையார் கடல் நாகை" எனப் பாடியுள்ளார். பொதுவாக இவர்களது பல பாடல்களில் நாகையாகிய நாகபட்டினத் துறைமுகத்தின் வளர்ச்சி,கடற்கலங்களின் பருமன், அவற்றின் வருகை, கோட்டைச்சுவர்கள், சாலையமைப்பு போன்ற பல செய்திகளை அறியமுடிகிறது. தொடர்ந்து பல்லவ மன்னாகிய நரசிம்மவர்மன் (கி.பி 61 – 729) காலத்தில் நாகபட்டினத்தில் உள்ள காயாரோஹணசாமி என்ற கோயிலின் மூலஸ்தானத்திற்குப் பின்பாக உள்ள சோமஸ்கந்தர் சிற்பம் இம்மன்னனால் அமைக்கப்பட்டது எனக்கூறப்படுகிறது. இதேகாலப்பகுதியில் இராஜசிம்மவர்மன் சீனாவுக்குத் தூதுவக்குழுவை அனுப்பிச் சீனர்களின் உதவியுடன் "சீனக்கோபுரம்"ஒன்றை நாகபட்டினத்தில் அமைத்ததாக சீன ஆதாரங்களான Siku Quanshu, Wenxian Tongkao போன்றன குறிப்பிடுகின்றன. இதனூடாக இராஜசிம்ம மன்னன் காலத்தில் பல்லவர்களது செல்வாக்கு நாகபட்டினத்தில் இருந்தது என்பது தெளிவாகின்றது. இதேகாலப்பகுதியைச் சேர்ந்த வைணவ ஆழ்வாராகிய திருமங்கை ஆழ்வார் நாகபட்டினத்தில் உள்ள மகாவிஷ்ணுவைப் பற்றிப் பாடியுள்ளார். அத்துடன் இவர் ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோயிலைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனரமைக்க பணம் தேவைப்பட்டதால் நாகப்பட்டினத்தில் இருந்த விகாரையின் தங்கத்திலான புத்தவிக்கிரகங்களைக் களவாடியதாக"ஆராயிரம் படி குரு பரம்பரபிரபவ"எனும் நூலில் கூறப்பட்டுள்ளமையிலிருந்து இங்கிருந்த விகாரையின் நிலையையும் நாகபட்டினத்தின் செல்வச் செழிப்புநிலையும் ஓரளவு அறியமுடிகின்றது.

கி.பி 9 ஆம் நூற்றாண்டில் சுந்தரரும் தமது தேவாரப்பாடல்களில் காயாரோஹணம் சிவன் குறித்துப்பாடும்போது நாகபட்டினம் குறித்துப்பல தகவல்களை வெளிப்படுத்துகின்றார். சான்றாக 7.101.1 – 7.101.10 வரையான பாடல்களைக் குறிப்பிடலாம். இப்பாடல்களில் அதிகமான கப்பல்கள் அங்குவந்து தரித்துச் சென்றமையானது வணிக நடவடிக்கைக்காகப் பயன்படுத்திய பொருட்கள், நகரின் சிறப்பு என்பன தொடர்பாகத் தனது பாடல்களில் பாடியுள்ளார். இத்தேவாரப் பாடல்கள் மூலமாக அக்காலத்தில் நாகப்பட்டினத்தின் நிலை தொடர்பாக அறியக் கூடியதாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கி.பி 10 ஆம் நூற்றாண்டானது சோழர் காலம் எனத் தென்னிந்திய வரலாற்றில் சிறப்பித்துக் கூறப்படுகிறது. இச்சோழர்களில் முக்கிய மன்னராகிய முதலாம் இராஜராஜ சோழன் (கி.பி 985 – 1014) காலத்துக் கல்வெட்டு நாகப்பட்டினத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இக்காலத்தில் (கி.பி 1006) ஸ்ரீ விஜய கடாரத்து மன்னன் மாறவிஜயதுங்கவர்மன் தனது தந்தையின் நினைவாக நாகப்பட்டினத்தில் ஒரு பௌத்தவிஹாரம் நிறுவ இம்மன்னரிடம் அனுமதிகேட்டுப் பெற்றுக்கொண்டார் சூளாமணிவர்மன் நினைவாக சூளாமணிவர்ம பௌத்த விஹாரம் அமைக்கப்பட்டுப் பராமரிப்புக்காக ஆனை மங்கலக் கிராமத்தை முதலாம் இராஜராஜ சோழன் மானியமாக வழங்கியமையை அவரது மகனாகிய முதலாம் இராஜேந்திரசோழன் செயற்படுத்தி உறுதிப்படுத்தினார் என்னும் செய்தியை ஆனைமங்கலச் செப்பேட்டினூடாக அறியமுடிகிறது. இதில் காணப்படுகின்ற "களிப்பூட்டும் திலகம் போன்றுள்ள நாகப்பட்டினத்தில்" என்ற வரிகள் நாகப்பட்டினத்தின் சிறப்புக்களை வெளிப்படுத்துகின்றது. அத்துடன் பெரிய லெய்டன் செப்போட்டுச் சாசனம் இச்செய்தியை"கடாரத்ரையன் ஷத்திரிய பட்டிணக் கூற்றத்துநாகபட்டனத் தெடுப்பிக்கின்ற சூளாமணி பன்மவிஹரத்துப் பள்ளிக்கு இருப்பதாக.........." எனக் குறிப்பிட்டுள்ளது. இதில் நாகபட்டினம் எந்தெந்த நிர்வாக அலகின்கீழ் சோழர் காலத்தில் காணப்பட்டது என்பதும் எடுத்துக்காட்டப்படுகிறது.

வரலாற்றுக்கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி.பி 11 ஆம் நூற்றாண்டில் நாகபட்டினத்திலிருந்த விஹாரத்தை முதலாம் குலோத்துங்கன் (கி.பி 1070 – 1120) புனரமைத்தான். இதனால் இவ்விடம் இம்மன்னரது பட்டத்து அரசியின் பெயரால் "சோழகுலவல்லிப்பட்டினம்"என அழைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. கி.பி 15 ஆம் நூற்றாண்டின் பின்னரான காலப்பகுதியில் ஐரோப்பியர்களது செல்வாக்கின் தன்மையை இப்பட்டினமும் உணரத்தொடங்கியது. கி.பி 17 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இப்பகுதி போர்த்துக்கேயரின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது. கி.பி 1660 இல் ஒல்லாந்தர் வசமாகிய நாகபட்டினம் சிறந்த வணிகநகரமாகக் காணப்பட்டது. இதனைப் பூநகரியில் கிடைத்த ஒல்லாந்த நாணயங்கள் வெளியிடப்பட்ட இடங்களில் ஒன்றாக நாகபட்டினம் காணப்படுகிறது எனப் ப.புஸ்பரட்ணம் குறிப்பிட்டுள்ளார்.

கி.பி 18 ஆம் நூற்றாண்டில் அதாவது கி.பி 1781 இல் ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டின்கீழ் நாகபட்டினம் வந்தது. ஆங்கிலேயர் ஆட்சியிலும் நாகபட்டினம் சிறப்புப் பெற்றுக் காணப்பட்டதை அவர்களது குறிப்புக்கள் மூலமாக அறியமுடிகிறது. எடுத்துக்காட்டாக ஹூலே (Hoole) என்பவர் கி.பி 1844 இல் நாகபட்டினம் குறித்தும் அங்கிருந்த கோபுரம் குறித்தும் பௌத்தமதநிலை குறித்தும் தனது குறிப்பில் குறிப்பிட்டுள்ளார்.

கி.பி 20 ஆம் நூற்றாண்டின் மத்திய காலத்தின் பின்னர் (கி.பி 1947) அதாவது சுதந்திரம் பெற்ற இந்தியாவில் நாகை மாவட்டத்தின் தலைநகராவும் சிறந்ததுறைமுகப்பட்டினமாகவும் நாகபட்டினம் வரலாற்றுடன் இணைந்தவகையில் விளங்கிவருகிறது எனலாம்.

நிறைவுரை

இந்திய வரலாற்றில் சிறப்புப்பெற்ற தென்னிந்திய இடங்களில் ஒன்றாகக் காணப்படும் நாகபட்டினம் கி.மு 3 ஆம் நூற்றாண்டிலிருந்து வரலாற்றில் இடம்பெறத் தொடங்கினாலும் காவிரிப்பூம்பட்டினத்தின் பெரும்பகுதி அழிந்தமையைத் தொடர்ந்து வரலாற்றில் செல்வாக்குமிக்க இடமாக இந்நாகபட்டினம் விளங்கத் தொடங்கியது. கிறிஸ்துவிற்கு முற்பட்ட சகாப்தம் தொடக்கம் தற்காலம் வரையிலும் நாகபட்டினம் வரலாற்றில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய இடங்களில் ஒன்றாகக் காணப்படுகின்றமையும் தொடர்ச்சியாக வரலாற்றில் இடம்பெற்றுத் துறைமுக நகராகவும், வர்த்தக நகராகவும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதவழிபாடுகளில் சிறப்புப் பெற்ற நகராகவும் நாகபட்டினம் தற்காலத்திலும் விளங்கிவருகின்றமை குறிப்பிட்டுக்கூறக்கூடியவிடயம் எனலாம்.

உசாத்துணை

1. தங்கவேலு,கோ., (2003) *இந்தியவரலாறு–I*, பழனியப்பாபிரதர்ஸ்,சென்னை.

2. சுப்பிரமணியம், ந., (2009) *இந்தியவரலாறு*,நியூ செஞ்சுரிபுக் கவுஸ், சென்னை.

3. புஸ்பரட்ணம்,ப.,(1993) *பூநகரித் தொல்பொருளாய்வு*, யாழ்ப்பாண பல்கலைக்கழக வெளியீடு.

4. கோகுல்சேஷாதிரி, (2001) *நாகபட்டினம் பற்றிய புதியபார்வைகள், (நாகபட்டினம் முதல் சுவர்ணதீபம் வரை)*, தென்கிழக்காசிய வாழ்வியற்கழகம், சிங்கப்பூர்.

*வாழ்வியற் களஞ்சியம்* தொகுதி *13*, தஞ்சாவூர் பல்கலைக்கழகவெளியீடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12



# கந்தரோடை – தென்னாசிய சமாதான சகவாழ்விற்கான ஒரு தொல்லியல் மையம்

பேராசிரியர் செல்லையா
கிருஸ்ணராசா

தலைவர்,

வரலாற்றுத்துறை
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்.

## அறிமுகவுரை

இனத்துவரீதியிலான பகைமையுணர்வு மேலோங்கி இருந்த சிவில் யுத்தம் நடைபெற்ற காலகட்டங்களில் யாழ்ப்பாணக் குடாநாடு இருந்த நிலைமைக்கும், சிவில்யுத்தத்திற்குப் பின்னர் - அரசியலடிப்படையிலான ஜனநாயகம் நோக்கிய மாற்றங்களினூடாக, தமிழ் மக்கள் மத்தியில் முனைப்புடன் முன்னெடுக்கப்படுகின்ற சமாதான சகவாழ்விற்கான நிலமைகளை சட்டநடைமுறைகளுடாக உருவாக்க எத்தனிக்கப்படும் இக்காலகட்டத்திலும், இந்தப் பிராந்தியத்துப் பண்பாட்டு ஆய்வுகளிலும் தொல்லியல், வரலாற்று ஆய்வுகளிலும் கனமானதும் பெரும்பான்மை நோக்கியதுமான மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு பலரும் முனைப்புடன் செயற்படுவதனை இன்று காணக் கூடியதாகவுள்ளது. இந்த முனைப்பிற்குரிய செயற்பாடுகள் வடக்கிலும் கிழக்கிலும் நேரடியாகவும் மறைமுகமாகவும் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் இவ்வேளையில், இலங்கைத் தொல்லியற் திணைக்களமானது யாழ்ப்பாணக்குடாநாடு பொறுத்து கந்தரோடைமீதான ஆய்வுச்செயற்பாடுகளை சிவில் நடைமுறைகளுக்குப் புறம்பாக, சுதந்திரமான ஆய்வு முயற்சிகளை முடக்கிய நிலையில், மந்தநிலையில் வைத்திருக்கின்ற ஒரு நிலமையைக்காண்கின்றோம். அதாவது தனித்துவமான பன்மொழிப் பன்மைப்பண்பாட்டுக்குரிய ஒரு தொல்லியல் மையமான கந்தரோடையை குட்டி/ சின்ன அனுராதபுரமாக கற்பித்துக்கொண்டு அதனூடாக சிங்கள-பௌத்த மையமாக மட்டும் அதன் தொல்லியல் வீச்சினை மட்டுப்படுத்திய நிலையில் அதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னிலங்கைக்கும், வெளியுலகிற்கும் சிங்கள-பௌத்த மையம் எனக் காட்டிவருவதனைக் கண்டுகொள்ள முடிகின்றது.

### கந்தரோடையின் சிறப்பு

யதார்த்தத்தில் கந்தரோடை என்ற மையம் தென்னாசியவியற் பண்பாட்டின் ஒரு சங்கமப்புலமாகவே விளங்கி வந்திருந்தமையை வழுக்கியாற்றின் இரு கரைகளிலிருந்தும் கிடைத்துக் கொண்டிருக்கின்ற தொல்லியல் எச்சங்களை ஆதாரம் காட்டி குறிப்பிட்டுக் கொள்ளலாம். உண்மையில் கந்தரோடை என்றழைக்கப்படும் தொல்லியல் மையத்தின் பண்பாட்டு முக்கியத்துவத்தினை பல நிலைகளினின்றும் காணக்கூடியதாகவுள்ளது. ஈழத்தமிழரது மகாயானப் பௌத்தப் பண்பாட்டு வாழ்வின் தொட்டிலாகக் கந்தரோடை திகழ்ந்து வந்திருந்தது என்பதே அதன் பண்பாட்டு வரலாற்று வளர்ச்சியில் நாம் காண்கின்ற யதார்த்தமாகும். அந்த வரலாறு எங்கேயோவொரு இடத்தில் மறைக்கப்பட்டு, உருவழிக்கப்பட்டுவிட்ட நிலையில் இலங்கை வரலாற்றினைக் கூறிச்செல்கின்ற பாளி – பௌத்த இலக்கியங்களினூடாகவே அவற்றைத் தேடிப் பார்க்கின்ற துர்ப்பாக்கிய நிலை எமக்கு ஏற்பட்டுவிட்டது. அநுராதபுரத்தினை மகாவம்சம் என்ற பாளிமொழி இலக்கியத்தினூடாகப் பார்த்ததுபோல், அதே இலக்கியத்தினூடாகவே கந்தரோடையையும் நாம் பார்த்துப் பார்த்துப் பழக்கப்பட்டுவிட்டோம். ஆனால் யதார்த்தம் என்பது இன்னொன்றாகவுள்ளது . சிலப்பதிகாரம், மணிமேகலையூடாகக் கந்தரோடையை ஆராய முற்படும்போது இந்தப்பிராந்தியம் கண்ணகி வழிபாட்டுடனும் அம்மரபுகளுடனும் பிணைக்கப்பட்டிருப்பதனைக் காணலாம். முதலாம் கஜபாகு – சேரன் செங்குட்டுவன் பண்பாட்டுத் தொடர்புகளின் பின்னணியில் கயல்கண்ணியான கந்தரோடை முக்கிய பங்கினைச் செலுத்தியுள்ளது. கண்ணகிமரபு இலங்கையில் பத்தினி வழிபாடாகிய செயற்பாடு நிகழ்ந்த மையம் கந்தரோடையே. இதனை விரிவாக எதிர்காலத்தில் ஆராயவேண்டிய பொறுப்பு எமது ஆய்வாளருக்குண்டு. அப்போதுதான் இழந்துபோன ஈழத்தமிழர் வரலாற்றுப் பக்கங்கள் கந்தரோடையிலிருந்து துலக்கம் பெறும். கயல்கண்ணி கபாடபுரமாகிப் பின் கந்தரோடையாகிய செய்தியை மறந்து, கதிரகொட கந்தரோடையான செய்தியையே நாங்கள் கைகளில் தூக்கிவைத்துக் கொண்டு, கந்தரோடைக்கு சிங்கள – பௌத்த சாயலையும் பூசிவிட்டோம். ஆனால் கந்தரோடையின் பண்பாட்டுப் பாதையூடாக வந்த புதை மண்படையடுக்குகளை விஞ்ஞானரீதியில் உரித்துரித்து ஆழத்திற்கு எடுத்தோமாயின், பழந்தமிழர் பண்பாட்டுத் தளத்தின் காலத்தால் முந்திய நாகரிக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகர மையமொன்றினைக் கந்தரோடை தாங்கியிருந்த வகையைக் கண்டு கொள்வதற்கு வாய்ப்பு ஏற்படும். Sir ஐராவதம் மகாதேவன்கூட கந்தரோடையின் படிந்துபோன மண்படையடுக்கினுள் கபாடபுரத்தின் எச்சங்கள் புதையுண்டுபோன வரன்முறையை மீட்டெடுக்க முடியும் என நம்புகின்றார். அவருடைய நம்பிக்கை வீண் போகாது என்பதனையே எமது அண்மைக்காலக் கண்டுபிடிப்புகள் கந்தரோடையுடன் இணைக்கப்பட்டிருந்த நகரமயமாக்கம் தொடர்பான இருப்பினை உறுதிப்படுத்தியுள்ளன. கந்தரோடை என்ற வரலாற்று ஆக்க கால நகரமையத்திலிருந்து விஞ்ஞானரீதியாக தொல்லியல் சான்றுகளை பெறமுற்படும் போது ஈழ – தமிழக வரலாற்றையே மாற்றியமைக்கக்கூடிய நிலை நிச்சயம் உருவாகும்.

மிகத்துல்லியமான முறையில் புராதன பழம்பெரும் நாகரிகமொன்றின் ஓர் இருப்பு பண்பாட்டு எச்சங்களைத் தேடும் மனிதர்களின் கண்களுக்குத் தெரிந்திருந்தும்கூட அதனை எம்மால் முறைப்படி வெளிக்கொண்டுவர முடியாதநிலை இன்று வரைக்கும் தொடர்கிறது. அந்நாகரிகத்தின் சான்றுகள் அழிவுக்குள்ளாக்கப்பட்டும், அழிவடையும் நிலமையை உருவாக்கியுமுள்ள நிலையிலும்கூட அதனை எம்மால் பாதுகாத்துக்கொள்ளமுடியாத நிலையில் நாம் வாழ்ந்து கொண்டிருப்பது என்றே சொல்ல வேண்டும். மிகத் துர்ப்பாக்கியமான நிலை அது யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள வழுக்கையாற்றுப் பள்ளத்தாக்கின் முத்துப்போல் காணப்பட்ட கந்தரோடையில் நிகழ்ந்தது என்பதனை இன்று யாருமே கண்டு கொள்வதுமில்லை. அந்தளவிற்கு ஒரு புறம்போக்கான அரசியல் வரலாற்று-சமூக-பண்பாட்டு எல்லைக்குள்ளே அதாவது யாழ்ப்பாணக்குடாநாடு என்ற புவியியல் எல்லைக்குள் மிகவும் தனித்துவமான பண்பாட்டு நிலப்பரப்பினுள் கந்தரோடையின் அமைவிடம் காணப்பட்ட தன்மையின் காரணத்தினாலோ என்னவோ கந்தரோடை கைவிடப்பட்டு நீண்ட காலமாயிற்று. ஆனால் காலம் மிகவும் தாழ்த்தியே சிங்கள மற்றும் தமிழ் இலக்கியங்களில் கந்தரோடை பற்றிய குறிப்புக்கள் இடம்பிடித்துள்ளமையையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். ஒரு காகக்குடும்பத்தின் கதை கந்தரோடையை சிங்கள இலக்கியத்தினுள் சேர்ப்பித்தது. மாருதப்புரவீகவல்லி என்ற இளவரசியின் கதை கந்தரோடையை தமிழ் இலக்கியத்தினுள் சேர்ப்பித்தது. கி.பி.14ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சிங்கள நூலான நம்பொத்த காகக்குடும்பத்தின் கதையைக் கதிரகொடவுடன் இணைத்துக் கூறுகின்றது. கி.பி. 17 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட யாழ்ப்பாண வைபவமாலை மாருதப்புரவீக வல்லியின் கதையைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிரமலையுடன் இணைத்துக் கூறுகின்றது. ஆனால் கந்தரோடையின் தொல்லியல் முக்கியத்துவம் 1917 ஆம் ஆண்டில் தற்செயலாக வெளியரும்பிய புத்தர் சிலை ஒன்றினூடாக போல் இ.பீரிஸ் என்பவரால் கண்டுகொள்ளப்பட்ட நாட்களிலிருந்து உணரப்பட்டு, பௌத்த சிங்கள தேசத்திற்கு கந்தரோடையின் இருப்பு வெளிக்காட்டப்பட்டது. அன்றிலிருந்து இற்றைவரைக்கும் கந்தரோடை வெறுமனே ஒரு பௌத்த மையம் மட்டும்தான் என்று உணரப்பட்ட நிலையில், யாழ்ப்பாணக் கச்சேரியை நிர்வகித்த சிங்கள G.A.க்கள் தொடக்கம் இலங்கைத் தொல்லியற் திணைக்களமும் பௌத்தப்பண்பாட்டு ஆய்வாளர்களும் தமது நடவடிக்கைகளை முன்னெடுத்து வந்திருந்ததனைக் காண்கின்றோம். அதன்விளைவே கந்தரோடை தமிழ் மக்களது கவனத்தினை மிகநீண்டகாலம் ஈர்க்காது போனமைக்கான காரணமாக அமைந்தது. ஆனால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினுடைய ஸ்தாபிதத்துடன் கந்தரோடை பற்றிய நோக்கில் பலமாற்றங்கள் நிகழ்ந்து வந்திருந்தமையை நாம் இப்பொழுது நன்றாக அறிகின்றோம்.

இந்தக் கந்தரோடை என்ற மையம் தொடர்பான பிரக்ஞை தென்னிலங்கை மக்களுக்கு கி.பி. 14 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட **"நம்போத்த"** என்ற சிங்கள நூலில் கொடுக்கப்பட்ட கதை ஒன்றின் அடிப்படையில் உள்வாங்கப்பட்டிருக்கிறது. அக்கதையின்படி, வட இலங்கையில் கந்தரோடையைச் சேர்ந்த **ஒரு பெண் காக்கைக்கும்**, தென்னிலங்கையில் மகாகமையை (கதிர்காமத்தைச்) சேர்ந்த **ஓர் ஆண் காக்கைக்கும்** இடையிலான **திருமண ஊர்வல நிகழ்வின்பொழுது**, கதிர்காமத்தில் இருந்து திருமண ஊர்வலம் நடைபெற்றதாகவும், வட இலங்கையில் கந்தரோடையைநோக்கி அந்தஊர்வலம் கோட்டை இராசதானியூடாக வந்து கொண்டிருந்தபோது, வரும் வழியில் காணப்பட்ட இடங்களைப் பற்றியும், வரும்வழியில் தரிசித்த பௌத்த தலங்களினுடைய வழிபாட்டு முக்கியத்துவங்கள் பற்றியும் இந்துக்கோயில்கள் பற்றியும் **"நம்பொத்த"** என்ற சிங்கள இலக்கியத்தில் சுவையான பல செய்திகள் எடுத்துக்கூறப்பட்டுள்ளன.

இந்தப் பின்னணியிலேதான் **வட இந்திய - இலங்கைப்** பௌத்த நிகழ்வுகளுக்குரிய வரலாற்று முக்கியத்துவத்தினையும், தென்னிலங்கை வரலாற்றாசிரியர்கள் கந்தரோடையுடன் இணைத்து, கந்தரோடையில் காணப்படுகின்ற பௌத்த எச்சங்களை, **சிங்கள பௌத்த எச்சங்களாகக்** காட்டி வந்துள்ளனர். **S.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பரணவிதானாவினைப்** பின்பற்றிவந்த சிங்கள ஆய்வாளர்கள் பலரும் இம்மையத்தினைப் பெரும்பான்மை இனத்தினரது குடியிருப்பின் செல்வாக்கின் அடிப்படையில் ஏற்பட்ட ஓர் சான்றாகக்கொண்டே நூல்களை எழுதிவந்துள்ளனர். இவர்கள் வடஇலங்கையில் சிங்கள இனத்தின் தேசியத்தின் இருப்பிற்கான அல்லது இந்தத் தீவு முழுவதனுடைய அவர்களது உரிமைக் கோரலுக்கான நியாயப்பாடாகவும் அதனைத் தமது ஆய்வுகளிலேயோ அல்லது அரசியல் ரீதியிலான வாதப்பிரதிவாதங்களிலேயோ, முன்னெடுத்து வைத்திருப்பதனையும் காண்கின்றோம். அது இனப்பிரச்சினையுடன் கூடிய நீண்டகால வழக்கமாகியும்விட்டது.

**இன்றைய நிலையில் எம்மவர்கள்கூட கந்தரோடையை, அது சிங்கள பௌத்த மக்களுக்கு மட்டுமேயுரிய ஒரு மையமென்ற தப்பான எண்ணக்கருவோடு வாழ்ந்து கொண்டிருப்பதனையும் நாம் காண்கின்றோம்.**

இந்தப்பின்னணியே கந்தரோடை என்ற தொல்லியல் மையத்தை தமிழ் பண்பாட்டுப்பரப்பிலிருந்து **அந்நியப்படுத்துவதற்குரிய** உந்துசக்தியாகவும் அமைந்திருந்ததென்றால் அது மிகையில்லை.

**ஆனால், நடந்தது என்ன? உண்மையிலேயே வரலாற்றுக் காலத்தில் அல்லது வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் கந்தரோடை எந்தப் பெயரால் அழைக்கப்பட்டது? எந்தெந்தப் பண்பாட்டு அலகுகளினால் அதனுடைய மேல் கட்டுமானம் உருவாக்கிக் கட்டப்பட்டிருந்தது? கயற்கண்ணி** என்று திராவிட மரபில் அழைக்கப்பட்ட அந்தப்புராதன நகரத்திலே வாழ்ந்த மக்கள் எவ்வெவ் மொழிகளைப் பேசினார்கள்? அந்த மொழிகளைப் பேசிய மக்கள் அந்த நகரத்திலே ஆற்றிய பல்தொழில் முறைகள் பற்றிய விபரங்கள் யாவை? என்பன பற்றியெல்லாம் வட இலங்கைத் தொல்லியலாளர்களோ அல்லது தென்னிலங்கைத் தொல்லியல் ஆசிரியர்களோ அல்லது வரலாற்று ஆசிரியர்களோ அக்கறை கொண்டு அல்லது அவற்றைப் பற்றிய சிரத்தையோடு இதுவரை ஆராயவில்லை.

அந்தவகையிலேதான் வட இலங்கையில் **பாராமுகமாக** இதுவரையில் இருந்து வந்த இந்தக் கந்தரோடைமீது, தற்போதைய **ஓருபக்கச்சமாதான** நிலைமையை நன்கு பயன்படுத்திக் கொண்டு, அரசாங்கம் இராணுவம் மற்றும் **ஓரினச்சார்புடைய** தொல்லியற்திணைக்களத்தின் முகாமைத்துவத்தை தமது பின்னணியாகவும் கொண்டு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரம்பரிய வடஇலங்கைத் **தமிழ்மரபுகளை சின்னாபின்னம்** செய்து கொண்டிருப்பதனைக்காண்கின்றோம். சிங்கள பௌத்த குருமார்கள், அதனைச் சிங்கள பௌத்த தேசியத்தின் முக்கியமான மையமாக வெளிக்காட்டுவதற்காக, அந்தத் தொல்லியல் மையத்தில் தமது வழிபாட்டுக்குரிய தெய்வமான **ஒரு சமாதி புத்தரையும்** இருத்தி, புராதன **திஸமகாரஜமகா விகாரை** அங்கு இருந்ததாக ஒரு அறிவித்தல் பலகையையும் **சிங்களமொழியில் மட்டும் தொங்கவிட்டுக் கொண்டு**, power உடன் இருந்து கொண்டிருக்கிற நிலைமையைக்காணலாம். இது உண்மையிலே கவலைக்கிடமான நிகழ்வாகவே, **சமாதானத்தினை விரும்பும் இலங்கைவாழ் தமிழ் மக்களுக்கும்**, யதார்த்தமாகச் சிந்திக்கத் தெரிந்த அத்தனை உள்ளங்களுக்கும் தென்படுகின்றது. உண்மையில் இம்மையமானது சர்வதேச வாணிப மார்க்கத்தினூடாக உள்ளீர்த்த பண்பாட்டுப்புதையல்களை வட இலங்கையில் ஒருங்கே கொண்டிருக்கும் தொல்லியற்கூடமாகும் எனக்குறிப்பிடலாம்.



உண்மையில் இந்த **சமாதான அபிவிருத்திக் காலத்தை** என்ன நோக்கத்துக்காக இரு சாராரும் ஒற்றுமையுடன் உருவாக்கினார்களோ, அந்த நோக்கவிதானத்தைத் ஏற்கத் தவறிய அல்லது அந்தச் **சமாதான அபிவிருத்திக்கு** குந்தகம் ஏற்படுத்துகின்ற ஒரு முறையிலே, இவ்வாறான **உணர்வுபூர்வமான** தொல்லியல் மையங்களில் சிலர், அதாவது சமாதானத்தை விரும்பாதவர்கள், அமைதியின் எதிரிகள் - தமது மேலாதிக்கத்தைக் காட்ட எத்தனிக்கின்ற தன்மையை தற்போது இலங்கையில் காண்கின்றோம். அறிவியல் பின்னணியில் தொல்லியலை ஒரு விஞ்ஞான பூர்வமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராய்கின்ற எவருமே இவ்வாறு **சிங்கள-பௌத்த மதத்தை** மேலாதிக்கமாகக் கொண்டு ஒரு தொல்லியல் மையத்தைப் பார்க்கின்ற, கட்டுப்படுத்துகின்ற வகையை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். **அவ்வாறான நிலைக்குள் இருந்து எப்பொழுது இலங்கையினுடைய அறிவியல் ரீதியிலான ஆய்வுகள் விடுபடுகின்றதோ, அன்றிலிருந்தே இந்தத் தீவானது – ஒரு பல்தேசிய, பலமதம் செழிக்கின்ற ஒரு புண்ணிய பூமியாகத் திகழும் என்பதில் ஐயமில்லை.**

**அந்த வகையில் நாம் அண்மைக் காலங்களில் கந்தரோடையில் ஏற்பட்டிருக்கின்ற இராணுவ ரீதியிலான ஆக்கிரமிப்பை, அதாவது தொல்லியல் திணைக்களத்துக்குரிய பிரதேசத்தை, இராணுவ பலத்தின் பின்னணியில் பௌத்த குருமார்கள் - நாகவிகாரையைச் சேர்ந்த பௌத்த தேரர்கள் தக்கவைத்துக் கொண்டிருப்பதை – தொல்லியல் என்ற அறிவியலுக்குச் செய்கின்ற மாபெரும் துரோகமாகவே காணமுடியும்.**

கயற்கண்ணி கந்தரோடையானதா?

**தோம்பு ஓலைச்சுவடிகளிலிருந்து உறுதியாக்கப்பட்ட பத்திரங்களிலிருந்தே (DEEDS) கயற்கண்ணி என்ற இடப்பெயர் அறிந்துகொள்ளப்பட்டது. அப்பெயரே கந்தரோடையில் இன்றைய பௌத்த எச்சங்கள் காணப்படுகின்ற நிலப்பரப்பினைக் குறித்து நிற்பதனைக் கண்டுகொள்ளலாம்.** அங்கண்ணம்மைக்கடவை (அங்கணாவைக்கடவை), சங்கம்புலவு, கற்பொக்கணை, சங்குவேலி, திரும்புதுறை போன்ற கிராமப்பெயர்கள் கந்தரோடையைச் சூழ்ந்துள்ள நிலையிலிருந்து **கண்ணகி வழிபாட்டு மரபொன்றின் பின்னணியில்** கயற்கண்ணி என்ற பெயர்த்தோற்றம் உருவாகியிருந்த தன்மையினையினையும், **பௌத்தப்பாரம்பரியமொன்று கண்ணகி வழிபாட்டு** மரபினூடாக **(சேரநாட்டுச் செல்வாக்குடன்)** கந்தரோடைக்குள் நிலை கொண்டிருந்த தன்மையினையும் **அறிவியல் நோக்கில் சிந்திக்கத் தெரிந்தவர்கள்** உணர்வர்.

அறிவியல் ரீதியாக நாம் அம்மையத்தினுடைய இருக்கையை, அந்த மையத்தினுள்ளே இருக்கின்ற தொல்லியல் எச்சங்களினுடைய **கிடக்கையை** அறிய விளைந்தோமாயின் - அந்தப் புராதன நகரமானது, **பௌத்த சிங்கள மக்களுக்கு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மட்டும் உரியதாகவோ அல்லது இந்துத் திராவிட மக்களுக்குமட்டும் உரியதாகவோ அல்லது வெளிநாட்டிலிருந்து வந்த பல்தேசிய வர்த்தக சமூகங்களுக்குரியதாகவோ கொள்ள முடியாத ஒரு நிலையில்** - சர்வதேச ரீதியான **வியாபகப்படுத்தப்பட்ட ஒரு நகரமாக**, அது கிறிஸ்துவுக்கு முற்பட்ட சகாப்த காலத்திலிருந்து **கி.பி. நான்காம் நூற்றாண்டு வரைக்கும்** விளங்கி இருந்து வந்த வரலாற்றையே அண்மைக்காலத்தில் எம்மால் அங்கிருந்து சேகரிக்கப்பட்டதும், அகழ்ந்து **(Rescue Excavation)** பெற்றுக்கொள்ளப்பட்டதுமான தொல்லியல் சான்றுகள் வாயிலாகக் கண்டுகொள்ள முடிகிறது.

**கந்தரோடை பற்றிய ஆய்வினைத் தொடக்கி வைத்தவர்கள்**

கந்தரோடை மீதான ஆய்வுகளை முதன்முதலில் முனைப்பாக முன்னெடுத்தவர்கள் தெற்கிலிருந்து வந்த சிங்கள ஆய்வாளர்கள் என்பதில் சந்தேகமேயில்லை. அவ்வாறான ஆய்வாளர்களுள் குறிப்பிடத்தக்கவராக விளங்கியவர் **போல் இ. பீரிஸ்** என்பவராவார். இவர் 1917 ஆம் ஆண்டிலிருந்து தென்னிலங்கையிலிருந்து அடிக்கடி கந்தரோடைக்கு வருகை தந்து, கந்தரோடையின் மேற்பரப்பிலும் மண் மேடுகளிலும் காணப்பட்டிருக்கக்கூடிய பௌத்த சின்ன எச்சங்களைச் சேகரித்துச் சென்றதுமன்றி, காலத்துக்குக் காலம் கந்தரோடை வாழ் மக்களால் சேகரித்துக் கொடுக்கப்படுகின்ற நாணயங்கள் போன்ற அருமையான சான்றுகளையும் தென்னிலங்கைக்கு எடுத்துச் சென்று அந்தநாணயங்களிலே காணப்படுகின்ற வடிவங்கள், எழுத்துக்கள் போன்றவற்றை அடிப்படையாகக்கொண்டு அது பௌத்த சிங்கள மக்களின் குடியிருப்புக்களை உறுதிப்படுத்துகின்ற தொல்லியல் எச்சங்களாக பல ஆய்வுக்கட்டுரைகளிலே எழுதியிருந்தமையை நாம் காண்கிறோம். அவ்வாறு எழுதும்பொழுது சிங்கள – பௌத்தம் என்ற கோட்பாட்டை மட்டும் கருத்தில் எடுத்தவராக அத்தொல்பொருட்களை கையாண்டுள்ளமையைக் காண்கின்றோம்.

அவருடைய ஞாபகார்த்தமாக வெளியிடப்பட்ட **Poul E.Peiris இன் Felicitation Volume** இலும் கூட கந்தரோடையிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட எழுத்துப் பொறிக்காத இரு **சங்ககாலத்துப் பாண்டிய** நாணயங்களை **Buddhist Chakkara coins** என்ற தலைப்பிலே ஒரு கட்டுரையாக வெளியிடப்பட்டுள்ளதைக் காண்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கந்தரோடையிலிருந்து மீட்கப்பட்ட அச்சுக்குட்படுத்தப்பட்ட நாணயங்களிலே காணப்படுகின்ற குறியீடுகள் யாவற்றையும் **பௌத்த எச்சங்களாகக்** கொண்டு அதனை சிங்கள மக்களினுடைய இருப்பிற்கான ஆதாரமாக போல் இ. பீரிஸ் எழுதியுள்ளார்.

**உண்மையிலே முதலில் குறிப்பிட்ட அந்த இரண்டு நாணயங்களும் சங்க காலத்து பாண்டிய மரபுக்குரிய நாணயங்கள் என்பதனை அறியும்பொழுது, அந்த நாணயம் தொடர்பாக கொடுக்கப்பட்ட விளக்கம் திரிபுபடுத்தப்பட்டு, எவ்வாறு அந்தக்காலகட்டத்திலே பௌத்த, சிங்கள தேசியவாதத்தினை வளர்த்தெடுக்கும் நோக்குடன் அக்கட்டுரை எழுதப்பட்டிருப்பதனை நாம் காணலாம்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1974 இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஸ்தாபிக்கப்பட்டதைத் தொடர்ந்து அண்மைக்காலங்களாக கந்தரோடையில் எம்மால் மேற்கொள்ளப்பட்ட மேலாய்வுகளின் பயனாகவும், தொல்லியல் அகழ்வாய்வுகளின் பயனாகவும் பலதரப்பட்ட தொல்லியல் எச்சங்களை மீட்டெடுக்க முடிந்தது.

அவற்றிலே குறிப்பாக பெருங்கற்கால பண்பாட்டு இருப்பினை உறுதிப்படுத்தும் தொல்லியல் எச்சங்களை நீக்கிப் பார்ப்போமானால் எமக்கு கிடைத்த நாணய வகைகளுள் **அச்சுக்குத்தப்பட்ட நாணயங்கள்** அதிகமாகக் காணப்படுவதும், **வெள்ளியிலான அச்சுக்குத்தப்பட்ட நாணயங்களைத்** தொடர்ந்து **தமிழகத்து பாண்டியர் நாணயங்கள்** பலவும், **சங்ககாலத்து சோழர்** மரபுக்குரிய செம்பினாலான அச்சுக் குத்தப்பட்ட நாணயங்கள் சிலவும் கிடைத்திருக்கின்ற வகையை இங்கு குறிப்பிடலாம்.

இவற்றைவிட நாணய ஆதாரமென்று பார்க்கும்போது சுடுமண்ணிலான சூலம் வரையப்பட்ட சதுரமானதும் வட்டமானதுமான நாணய வகைகள் பல எமக்குக் கிடைத்திருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. வட்ட வடிவமானதும் சதுரமானதும் சற்சதுரமானதுமான நாணயங்கள் கந்தரோடையினுடைய நகரத்தின் வாணிப இருக்கையின் புராதன தன்மையை வெளிப்படுத்துவதாக இருப்பதை இங்கு குறிப்பிடலாம்.

இந்த ஒரு பின்னணியில் **எமது பிரதேசத்து தொல்லியல் வளத்தில்** கந்தரோடை பெறுகின்ற முக்கியத்துவத்தை **நீண்டகாலமாக (22 வருடங்கள்)** சேகரித்துப் பெற்றுக்கொண்டதை அடிப்படையாகக்கொண்டு, அதன் தொல்லியல் - வரலாற்று முக்கியத்துவத்தை ஆராயும்போது, பெருங்கற்கால (வரலாற்றுக்கு முற்பட்ட காலம்) பண்பாட்டுக்குரிய எச்சங்களிலிருந்து ஆங்கிலேயர் ஆட்சிக்கால எச்சங்கள் வரைக்கும் தொடர்ச்சியான வகையில் பலதரப்பட்ட தொல்லியல் மூலங்களைச் சேகரிக்க முடிந்தது. வரலாற்றுக்கு முற்பட்டகாலத் தொல்லியல் எச்சங்கள் என்ற வகையில் பெருங்கற்காலப் பண்பாட்டு இருப்பினை நன்கு உறுதிப்படுத்தக்கூடிய வகையிலான, இரும்பினால் செய்யப்பட்ட வேல் ஆயுதங்கள், கறுப்பு சிவப்பு மட்பாண்டத்தினால் செய்யப்பட்ட தாழிகள், பெருங்கற்கால மக்களால் பயன்படுத்தப்பட்டதாகக் கருதப்படுகின்ற மோதிரங்கள் (நாகர் மோதிரங்கள்), காப்புகள், சங்கு வளையல்கள், விலையுயர்ந்த மணிகளுடன் கி.மு. 8ஆம் நூற்றாண்டுக்கும் கி.மு. 1ஆம் நூற்றாண்டுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரியதாகக் கருதப்படுகின்ற **சாணைக்கல் அம்மியும், குழவியும்** பெற்றுக் கொள்ளப்பட்டன.

உண்மையில் கந்தரோடை என்ற புராதன நகரத்தினுடைய அடித்தளத்தில் சிதறிக் காணப்படுகின்ற எச்சங்களுள் பெரும்பாலானவை **கறுப்பு-சிவப்பு** மட்பாண்டங்களை உபயோகித்த **பெருங்கற்கால மக்களினுடைய** பண்பாட்டுச் சிதறல்களாகவே காணப்படுகின்றன. தற்போது சர்ச்சைக்குள்ளாகியிருக்கின்ற தொல்லியல் திணைக்களத்தினுடைய காணிப்பரப்பான **"கயற்கண்ணி"** என்றழைக்கப்படுகின்ற அந்த இடத்தில் அகழ்ந்து வெளிப்படுத்தப்பட்டுள்ள வட்டமானதும், சதுரமானதும், நீள்சதுரமானதுமானதும், **ஒன்றுக்குள் ஒன்று செருகப்பட்ட** வட்டவடிவமான நிலையில் **ஈமப்புதையல் சின்னங்கள்** கொண்டுள்ள அடித்தளத்தில்கூட பெருங்கற்கால எச்சங்கள் சிதறிக் காணப்படுகின்றன.

ஆனால் துரதிர்ஷ்டவசமாக அரசாங்கத்தினால் (**தொல்லியல் திணைக்களத்தினால்** ) மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வின்போது, குறிப்பாக வட்டவடிவமாக அமைந்துள்ள அத்திவாரக் கட்டடத்துக்குக் கீழே **திட்டவட்டமாக எப்பொருட்களையும் அகழக்கூடாது** என்ற **கட்டுப்பாடு** விதிக்கப்பட்டதன் அடிப்படையில், அந்த பௌத்த ஈமச்சின்னங்கள் புதைக்கப்பட்ட **அந்தமையத்துக்கு கீழே என்ன இருக்கின்றதென்பதை எவருமே அறிந்துகொள்ளாதவாறு தடுக்கப்பட்டன.**



இத்தகையநோக்கு இலங்கைத் தொல்லியல் திணைக்களத்தினுடைய பொதுவான நோக்கமாக இருந்தாலும்கூட, வளர்ந்து வருகின்ற **தென்னாசிய தொல்லியல் பண்பாட்டு அறிவியல்துறைக்கு** இவர்களால் **ஒரு சாவுமணி அடித்தது போன்றே** இருப்பதனை நாம் இங்கு காண்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னாசியாவில், குறிப்பாக, இந்தியாவைப் பொறுத்தவரையும் சரி, பாகிஸ்தானைப் பொறுத்த வரையிலும் சரி, இலங்கையைப் பொறுத்தவரையிலும் சரி. **Fundamentalism** என்று குறிப்பிடப்படுகின்ற **மத அடிப்படைவாதக் கருத்துக்களினால்** தொல்லியல் ஆய்வுகள் **சிதிலமடைந்துபோய்** இருந்ததற்கு கந்தரோடையும் ஓர் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகின்றது.

1980 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாறு மற்றும் தொல்லியல் கற்கைநெறி மாணவர்களாலும் இணைந்து நடாத்திய ஒரு மாபெரும் அகழ்வாராய்ச்சி ஆனைக்கோட்டையில் நடந்தது. இங்கு மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி யாழ்ப்பாணக்



குடாநாட்டினுடைய புராதன குடியிருப்பு பற்றிய தொல்லியல் எச்சத்தை மட்டுமல்லாது, யாழ்ப்பாணத்து தமிழ் மக்களுக்குரிய **அரச பாரம்பரியம்** தொடர்பான புதிய செய்தியைக்கூட அகழ்வாராய்ச்சிச் சான்றுகள் உலகுக்கு வெளிப்படுத்த உதவியது. அதற்குப் பின்னர் யாழ்ப்பாண ஆய்வாளர்கள் எவரும், இலங்கைத தொல்லியல் திணைக்களத்தின் அனுமதியின்றி எங்கும் அகழ்ந்து, வெட்டிப் புராதன தொல்பொருட்களை மீட்டெடுத்து அவற்றுக்கு விளக்கம்கண்டு, அவற்றைப் பிரசுரித்து மக்களினுடைய இருப்பை வெளிப்படுத்துவதற்கு **உரிமை அற்றவர்கள்** என்ற நிலையில் **தமிழ்ப்பிரதேசத்துத் தொல்லியல் ஆய்வாளர்களுக்குத் தடைகள் விதிக்கப்பட்டிருந்தது.** அந்த நிலைமை இப்பொழுதும் தொடர்கின்றது. தொல்லியல் திணைக்களத்தில் விசேட அனுமதி பெற்றுத்தான் எமது துறை அகழ்வுப் பணிகளிலேயோ அல்லது மேலாய்வுப் பணிகளிலேயோ ஈடுபடவேண்டிய சூழல் இன்றும் இருந்து கொண்டிருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1971 ஆம் ஆண்டில் பென்சில்வேனியப பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விமலா பெக்லி **'விளா மரத்தடியில்'** ஒரு பரீட்சார்த்த அகழ்வுக்குழி ஒன்றினைத் தோண்டி விஞ்ஞானபூர்வமாக முதன்முதலில் பெருங்கற்கால மண்படையடுக்குகளை இனம் கண்டுகொண்டார். அவர் அவ்விளாமரத்தடிக்குழியிலிருந்தே **செம்பிலாலான முச்சூலம்** ஒன்றையும் அகழ்ந்தெடுத்தமை குறிப்பிடத்தக்கது.

பேராசிரியர் பொ. ரகுபதியின் தொல்லியல் மேலாய்வே வழுக்கியாற்றுப் பள்ளத்தாக்கில் காணப்பட்ட பெருங்கற்காலப் பண்பாட்டின் சிறப்புக்களை இனங்காண உதவியது எனலாம். வழுக்கையாற்றுப் பள்ளத்தாக்கின்மீதான தொல்லியல் மேலாய்வின்போது ஆனைக்கோட்டையில் உள்ள கரையாம்பிட்டி ஈடுகாட்டு மையம் அடையாளம் காணப்பட்டு அகழ்வாய்வுக்கு உட்படுத்தப்பட்டது. 1980 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட இவ்வகழ்வாய்வினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத் துறையினர் கா.இந்திரபாலாவின் தலைமையில் மேற்கொண்டிருந்தனர். இங்கு மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வின் விளைவாக பெருங்கற்கால மண்படையடுக்கு களிலிருந்து இரு மனித எழும்புக்கூடுகளும் உணவு எச்சங்களும் பண்பாட்டுச் சான்றுகளும் சேகரிக்கப்பட்டன. அவற்றுள் ஓர் எழும்புக்கூட்டின் தலைப்பாகத்துக்கு அண்மித்த வகையில் கறுப்பு – சிவப்பு மண்பாண்டச் சட்டி ஒன்றுக்குள் முத்திரை மோதிரம் ஒன்று வைக்கப்பட்டிருந்தமையை அடையாளம் காண முடிந்தது. ஆண் எலும்புக்கூட்டுக்குரிய தலைப்பாகத்திலேயே இச்செம்பிலாலான முத்திரை காணப்பட்டது.

கந்தரோடை மிகநீண்ட காலமாகவே சிங்கள – பௌத்த மக்களினுடைய மையம் என்று சொல்லப்பட்டு வந்ததன் பின்னணியில், தமிழ் மக்கள் இன்றும் அதனை அவ்வாறே சிந்தித்துக் கொண்டிருப்பதன் காரணத்தினால், அந்த மையம் கைவிடப்பட்ட மையமாகவே இருந்து வந்துகொண்டிருந்ததனை நாம் காண்கின்றோம்.

தென்னிந்திய - ஈழத் தொடர்புகளைப் பண்பாட்டு அடிப்படையில் ஊடகப்படுத்திய முக்கியமான அலகுகளில் (Units) மகாயான பௌத்த மதமும் ஒன்றாகும். சிலப்பதிகாரம், மணிமேகலை தொடக்கம், வீரசோழியம், கண்ணகி கதாவ வரைக்கும் ஈழத்திலும், தமிழகத்திலும் மகாயான பௌத்தம் தமிழரது பண்பாட்டுச் செய்திகளைத் தொடர்ச்சியான வகையில் காவிச் சென்றிருந்தன. தமிழ் இலக்கிய இலக்கண மரபுகள்கூட மகாயான பௌத்த சமயத்தினூடாகப் பேணப்பட்டுக் கிடைத்துள்ள நிலையில், ஈழத்தமிழரது புராதன-மத்தியகால வாழ்க்கைமுறை பற்றிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கண - இலக்கிய மரபுகளுக்கு என்ன நேர்ந்தது என்பதையிட்டு நீங்கள் யாராவது சிந்தித்தது உண்டா? அவ்வாறு சிந்தித்திருந்தால் கந்தரோடையை உங்கள் சிந்தனையிலிருந்து நீங்கள் கைவிட்டிருக்கவே மாட்டீர்கள்.

ஈழத்தமிழரது மகாயானப் பௌத்தப் பண்பாட்டு வாழ்வின் தொட்டிலாகக் கந்தரோடை திகழ்ந்து வந்திருந்தது என்பதே வரலாற்று வளர்ச்சியில் நாம் காண்கின்ற யதார்த்தமாகும். அந்த வரலாறு எங்கேயோவொரு இடத்தில் மறைக்கப்பட்டு, உருவழிக்கப்பட்டுவிட்ட நிலையில் இலங்கையிலுள்ள பாளி – பௌத்த இலக்கியங்களினூடாகவே அவற்றைத் தேடிப் பார்க்கின்ற துர்ப்பாக்கிய நிலை எமக்கு ஏற்பட்டுவிட்டது. அநுராதபுரத்தினை மகாவம்சம் என்ற பாளிமொழி இலக்கியத்தினூடாகப் பார்த்ததுபோல், அதே இலக்கியத்தினூடாக கந்தரோடையையும் நாம் பார்த்துப் பார்த்துப் பழக்கப்பட்டுவிட்டோம் இல்லை இல்லை பழக்கப்படுத்தப்பட்டுவிட்டோம் என்பதே யதார்த்தம். இந்நிலை ஒழியவேண்டும். பதிலாகச் சிலப்பதிகாரம், மணிமேகலையூடாகக் கந்தரோடையைப் பார்க்கப் பழகிக்கொள்ளுங்கள். அப்போதுதான் இழந்துபோன ஈழத்தமிழர் வரலாறு துலக்கம் பெறும். **கபாடபுரம் கந்தரோடையாகிய** செய்தியை மறந்து, **கதிரகொட கந்தரோடையான** செய்தியையே நீங்கள் உங்கள் கைகளில் தூக்கி வைத்துக் கொண்டு, கந்தரோடைக்கு சிங்கள – பௌத்த சாயலையும் பூசிவிட்டீர்கள் - பூசவைக்கப்பட்டு விட்டீர்கள். ஆனால் கந்தரோடையின் புதை மண்படையடுக்குகளை விஞ்ஞான ரீதியில் உரித்துரித்து எடுத்தோமாயின், பழந்தமிழர் பண்பாட்டுத் தளத்தின் காலத்தால் முந்திய மையமென கந்தரோடையை இனங்காணமுடியும். இதனை உறுதிப்படுத்துமாப்போல் நாகதுவீபத்திற்கும்(நாகதீபம் - யாழ்ப்பாணக் குடாநாடு) நாகபட்டினத்திற்கும் இடையே இருந்த பண்பாட்டுத் தொடர்புகளை அடையாளம் காணும் விதத்தில் எமக்குப் பண்பாட்டுச் சான்றுகள் பல கிடைத்துள்ளன. அவற்றுள் மிகவும் குறிப்பிடத்தக்கதாயுள்ள அம்சம் யாதெனில், சோழர்காலத் தமிழக – வடஇலங்கை உறவுப்பாலத்தை மேலும் மெருகூட்டும் வகையில் எமக்குக் கிடைத்துள்ள **ஒரு வெண்கலச் சமாதி புத்தர் சிற்பம்** என்றால் உங்களில் பலரும் ஆச்சரியம் அடைய நேரிடும். **தங்கமுலாம் பூசப்பெற்ற அவ்வரிய பொக்கிஷமே மகாயான பௌத்தத்திற்கும் - ஈழத்தமிழருக்கும் இடையே இருந்திருக்கக்கூடிய இறுக்கமான தொடர்பினைக் கந்தரோடையூடாக வெளிப்படுத்தியுள்ளது.** இதுவே தமிழ்ப் பௌத்தத்தின் உச்சமான காலகட்டத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தரோடையைப் பிரதிநிதித்துவம் செய்த வரலாற்றுச் சின்னமாகவும் அமைந்தது என்றால் அது மிகையில்லை. இச்செய்திக்குப் பின்னராவது கந்தரோடையைத் தமிழ்ப் பௌத்தப் பாரம்பரியத்தின் ஒரு தொட்டிலாக இலங்கை வாழ் தமிழ் மக்களும் பாளி – பௌத்த மத ஜீவிகளான – சிங்கள மக்களும் ஏற்றுக்கொள்வர் என நாம் திடமாக நம்புகின்றோம். இதற்குப் பின்னும் கந்தரோடை மீதான எமது பண்பாட்டிருக்கைமீது அவநம்பிக்கை உங்களில் யாராவது ஒருவருக்கு ஏற்படும் பட்சத்தில் **அவர் சித்தசுவாதீனம்** அற்றவர் என்றே முடிவுகட்ட வேண்டும்.




தென்னிந்திய - ஈழத் தொடர்புகளைப் பண்பாட்டு அடிப்படையில் ஊடகப்படுத்திய முக்கியமான அலகுகளில் (Units) **மகாயான பௌத்த மதமும்** ஒன்றாகும் என்பதனை எவருமே மறைக்க முடியாது. **சிலப்பதிகாரம், மணிமேகலை தொடக்கம், வீரசோழியம், கண்ணகி கதாவ வரைக்கும் ஈழத்திலும், தமிழகத்திலும் மகாயான பௌத்தம் தமிழரது பண்பாட்டுச் செய்திகளைத் தொடர்ச்சியான வகையில் காவிச் சென்றிருந்தன**. தமிழ் இலக்கிய இலக்கண மரபுகள்கூட மகாயான பௌத்த சமயத்தினூடாகப் பேணப்பட்டுக கிடைத்துள்ள நிலையில், ஈழத்தமிழரது வாழ்க்கை பற்றிய இலக்கண - இலக்கிய மரபுகளுக்கு என்ன நேர்ந்தது என்பதையிட்டு நீங்கள் யாராவது சிந்தித்தது உண்டா? அவ்வாறு சிந்தித்திருந்தால் கந்தரோடையை உங்கள் சிந்தனையிலிருந்து நீங்கள் கைவிட்டிருக்கவே மாட்டீர்கள்.

**ஈழத்தமிழரது மகாயானப் பௌத்தப பண்பாட்டு வாழ்வின் தொட்டிலாகக் கந்தரோடை திகழ்ந்து வந்திருந்தது என்பதே வரலாற்று வளர்ச்சியில் நாம் காண்கின்ற யதார்த்தமாகும்**. அந்தவரலாறு எங்கேயோவொரு இடத்தில் மறைக்கப்பட்டு, உருவழிக்கப்பட்டுவிட்ட நிலையில் இலங்கையிலுள்ள பாளி – பௌத்த இலக்கியங்களினூடாகவே அவற்றைத் தேடிப் பார்க்கின்ற துர்ப்பாக்கிய நிலை எமக்கு ஏற்பட்டுவிட்டது. அநுராதபுரத்தினை மகாவம்சம் என்ற பாளிமொழி இலக்கியத்தினூடாகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்ததுபோல், அதே இலக்கியத்தினூடாக கந்தரோடையையும் பார்த்துப் பார்த்துப் பழக்கப்பட்டுவிட்டோம். ஆனால் கந்தரோடையின் புதை மண்படையடுக்குகளை விஞ்ஞான ரீதியில் உரித்துரித்து எடுத்துப்பார்த்தோமாயின், **பழந்தமிழர் பண்பாட்டுத் தளத்தின் காலத்தால் முந்திய மையமொன்றினைக் கந்தரோடை தாங்கியிருந்த முறைமையைக் கண்டு கொள்வதற்கு வாய்ப்பு ஏற்படும். Sir ஐராவதம் மகாதேவன்கூட கந்தரோடையின் மட்படைப் படிமானத்தினுள் கபாடபுரத்தின் எச்சங்கள் புதையுண்டுபோன வரன்முறையை மீட்டெடுக்க முடியும் என நம்புகின்றார்.** அவருடைய நம்பிக்கை வீண்போகாது என்பதனையே எமது அண்மைக்காலக் கண்டுபிடிப்புகள் **கந்தரோடை மீதான சமுத்திரவியவியல் நாகரிகம்** தொடர்பான இருப்பினை உறுதிப்படுத்தியுள்ளன.



**வழுக்கையாற்றுப் பள்ளத்தாக்கில் பெருங்கற்காலப் படிமங்கள்:**

தென்னாசிய நாகரிக வரலாற்றில் ஒரு மாபெரும் திருப்புமுனையை ஏற்படுத்தியிருந்த சம்பவமானது சிந்து மாகாணத்திலுள்ள லார்க்கான மாவட்டத்தில் **பௌத்த ஸ்தூபி** ஒன்றின் கண்டுபிடிப்புடன் நிகழ்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது. அதன் விளைவாக **சிந்துவெளிநாகரிகம்** வெளிவந்தது. அதேபோன்று கந்தரோடையில் கண்டுபிடிக்கப்பட்ட **பௌத்த எச்சங்களே** கந்தரோடையில் ஒரு **மாபெரும் வாணிப சர்வதேச நாகரிகம்** மறைந்துள்ளது என்பதனைக் காட்டிக்கொடுத்துள்ளது. அன்று இந்த மையமானது **(பெரு)வழுதி ஆற்றின்** இரு புறங்களிலும் சமத்துவமான முறையில் கட்டட, நிறுவன அலகுகளைக் கொண்டு வளர்ச்சிபெற்று இருந்தமையை தொல்லியல் மேலாய்வுகளின்போது அவதானிக்க முடிந்தது. றோமானிய வாணிபக்கிடங்கு ஒன்று வழுக்கையாற்றுக்கும் தற்போதைய உடுவில் குளத்திற்கும் **(திரும்பு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**துறைக்கும்)** இடையே காணப்பட்டிருந்தது என்பதற்கான சான்றுகள் அண்மையில் கிடைத்துள்ளன.

புராதன **தோணித்துறை** ஒன்றினை **'திரும்புதுறை'** என்ற பரப்புக் கொண்டிருந்தது. இப்பிராந்தியம் தற்போதைய உடுவில் குளத்தின் ஒரு முனையைக் குறிப்பிட்டு நின்றதெனலாம். புதைந்துபோன மரத்தோணியின் பல பாகங்கள் இங்கிருந்து மீட்கப்பட்டிருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது.

**தனித்துவம் வாய்ந்த பல்வேறு பண்பாட்டுக் கூறுகளைத் தாங்கிய தளங்களில் தென்னிந்தியாவிலிருந்து கிளர்ந்தெழுந்த திராவிடமொழிக் குழுமங்களையும் மதக் குழுக்களையும் கொண்டு, பிராந்திய சூழலுக்கேற்ப பண்பாட்டுக் கோலங்களை உருவாக்கித் தத்தம் பண்பாட்டுப் பகைபுலங்களில் பண்பாட்டு வேரினை நன்றாகப் பாய்ச்சி, வரலாற்றுக்காலச் சமூக உருவாக்கத்திற்கு வித்திட்டு நின்ற ஒரு காலப்பகுதியாகவே இலங்கையிலும் பண்பாடு தோற்றுவிக்கப்பட்டது என்பது பேராசிரியர் சிற்றம்பலம் அவர்களின் கருத்தாகும்.** அவ்வகையில் உருவான இனக் குழுமங்களுள் நாகர் வம்சத்தினரே குறுணிக் கற்காலப் பண்பாட்டினை முற்றுவித்து வரலாற்று உதய காலத்தினை இலங்கையில் தொடக்கிவைத்த முதன் மக்களாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளமையைக் காணலாம். அவ்வகையில் நாகர் வம்சத்தவரே இலங்கையின் முதல் வரலாற்றுக் குடிகள் என்பதும், இவர்களே முதன்முதலாக குளம்கட்டி வளம் பெருக்கிய நீர்ப்பாசனவியல் நிறுவனங்களை உருவாக்கிய மக்கள் கூட்டம் என்பதும், இரும்பின் உபயோகத்தினையும், சில்லின் (Wheel) பாவனையையும் தமது வாழ்வில் இணைத்து வைத்தவர்கள் என்பதும் அண்மைக்காலத் தொல்லியல் ஆய்வுகளின் அடிப்படையில் நிறுவப்பட்ட அம்சங்களாகும். இதேபோன்று கந்தரோடையில் மேற்பரப்பிற் காணப்பட்ட பௌத்த கலாசார அழிபாடுகளின் எச்சங்களே வழுக்கையாற்றுப் பரப்பில் உள்ள வண்டல் மண்படிவுகளுக்குள் மறைந்திருந்த பெருங்கற்காலத் திராவிடக் கலாசாரத்தை வெளிக்கொணர உதவியிருந்ததென்றால் அதில் சந்தேகம் எழமுடியாது.

வழுக்கையாற்றுப் பள்ளத்தாக்கில் மிகவும் அண்மைக் காலத்தில் எமக்குக் கிடைத்த தொல்லியற் கருவூலமான **சாணைக்கல் அம்மியும் குழவியும்** திராவிடப் பண்பாட்டு ரீதியாக வரலாற்று முக்கியத்துவம் பெற்றுக் காணப்படுகின்றன. அதாவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பெருங்கற்கால மிருக வடிவங்களுள்** ஒன்றான **பன்றியின்** உருவவியலை அடிப்படையாகக் கொண்ட இச்சாணைக்கல் அம்மியானது நான்கு கால்களைக் கொண்டு ஒரு விளிம்பில் வரைபு ஒன்றினையும் கொண்டும் முச்சூழக் குறியீடு ஒன்றினைக் கொண்டும் காணப்படுவது ஆதித்திராவிடப் பண்பாட்டின் அடிப்படை மூலத்தினை எமக்குக் கோடிட்டுக் காட்டுகின்றது.



சிந்துநதிப் பள்ளத்தாக்கு நாகரிகம் ஒன்றில் **பயிலப்பட்ட வரைபுமுறை** ஒன்று மிக நீண்ட பிரதேசங்களையும் காலத்தினையும் கடந்து வந்து **வழுக்கையாற்றுப் பள்ளத்தாக்கிலுள்ள** கந்தரோடையில் உள்ள **'கற்பொக்கணை'** என்ற மையத்தில் புதைந்திருந்த **சாணைக்கல் அம்மியில்** பதியப்பட்டிருந்தமையே ஆதித்திராவிட பண்பாட்டு மூலமொன்றில் சிறந்த வெளிப்பாடாக அமைந்தது எனலாம். அவ்வரைபினை நிலைக்குத்தாக நோக்கும்போது **படகு** ஒன்று பாய்மரத்துடன் காணப்படும் தோற்றத்தினையும், பக்க்வாட்டாக நோக்கும்போது **மீன்** தலையொன்றின் தோற்றத்தினையும் கொண்டுள்ளது. இவ்வரைபு சிந்துவெளி முத்திரைகளில் பெருமளவிற்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளவையாகவும் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

வழுக்கையாற்றுப் பள்ளத்தாக்கிற்கு மேற்குப் புறமாக மாசியப்பிட்டி பொதுச் சந்தைக்கு அருகில் மிகப் புராதனமான சிவன்கோயில் ஒன்றின் அழிபாடுகள் காணப்படுகின்றன். அருகே, அங்கண்ணம்மைக் கடவை (அங்கணாவைக்கடவை) கண்ணகியம்மன் ஆலயம் அமைந்திருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கந்தரோடை ஆபதி தமிழ்ப் பிராமிச் சாசனம்:**

மிகவும் அண்மைக் காலத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட ஒரு தொல்லியற் சான்று என்ற வகையில் கந்தரோடையிலிருந்து மீட்டெடுத்த 'ஆபதி' மட்பாண்டத் தமிழ்ப் பிராமிச் சாசனம் ஈழத்தமிழர் வரலாற்றிற்கு மேலும் உதவுவதாக உள்ளது. கறுப்பு – சிவப்பு மட்கலத்தில் பொறிக்கப்பட்ட இச்சாசனம் சங்ககால வாழ்வியல் முறையை எமது அறிவிற்கு தெளிவாகின்றது. அதாவது ஈழத்தமிழர் பண்பாட்டுப் பகைப்புலமானது தென்னிந்தியத் தமிழகப் பண்பாட்டுப் பகைப்புலத்துடனான தொடர்புகளையும் சமாந்தரமான உறவுகளையும் காலாதிகாலமாகக் கொண்டிருந்திருப்பினும் ஈழத்துக்கெனத் தனித்துவமான வெளிப்பாட்டினை தமிழகத்திலிருந்தும் சிறப்புக் கூறாக வேறுபடுத்திய நிலையில் தாங்கிக் கொண்டிருப்பதனை இச்சாசனத்தினூடாக இப்போது காணமுடிகிறது. தற்கால நிலையில் தமிழ்மொழி வழக்காறானது யாழ்ப்பாணத்தில் இதன் தனித்துவத்தினையும் இலக்கிய வழமைகளையும் இலக்கணச் செழுமைகளையும் கொண்டு எவ்வாறு தமிழக மொழிப் பயன்பாட்டின் விழுமியங்களிலிருந்து தனித்துவப்பட்டு வாழ்ந்து கொண்டிருக்கின்றதோ அவ்வாறே புராதன ஈழத்தமிழர் பண்பாட்டு மரபுகளில் மட்பாண்ட சாசன வழக்காறும் குடாநாட்டினுள் பரவலாக மக்களது தனித்துவமான பாவனையிலிருந்து வந்தமையைக் காண்கின்றோம்.



இச்சாசனம் பொறிக்கப்பட்டுக்கிடைத்த மட்பாண்டத்துண்டில் சாசனம் தொடர்ச்சியானதாக பொறிக்கப்பட்டிருந்தும் எமக்கு ஆபதிள ...... என மட்டுமேயுள்ள வாசகம் மாத்திரம் கிடைத்துள்ளது. தென்தமிழ்ப்பிராமி முறையிலமைந்த வாசகத்தினைக் கொண்டுள்ள இச்சாசனம் கி.பி. முதலாம் நூற்றாண்டுக்கும் முற்பட்டது என்பதனை அதன் வரிவடிவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையிலிருந்து கண்டு கொள்ள முடிகிறது. பழந்தமிழ் வழக்கில் 'ஆ' என்பது பசுவினையும் 'பதி' என்பது தலைவனையும் குறித்து நிற்கின்றமையால் 'ஆபதி' என்பது பசுக்களின் தலைவன் என்ற பொருளில் கொள்ள முடியும். அவ்வாறாயின் அதுவும் 'கோன்மை' தொடர்பாகவே சங்ககால வாழ்வு மரபில் கையாளப்பட்டிருந்த தன்மையை சங்க இலக்கியங்கள் வாயிலாகக் கண்டுகொள்ள முடிகிறது. ஆநிரை கவர்தல் ஆநிரை மீட்டல் என்பன சங்ககாலத்து அரச முறையோடு தொடர்புபட்டதாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. பசுககளைச் செல்வமாக உடையவனே அரசன் என்பது இதனாற் பெறப்படும். அவ்வகையில் குடாநாட்டுப் பரப்பினுள் கந்தரோடையிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட 'ஆபதி' என்ற தமிழ்ப் பிராமிச் சாசனமானது ஈழத்தமிழர் வரலாற்றின் கோன்மையை எடுத்துக் காட்டியுள்ளது. ஆழத்திலுள்ள வரலாற்று இலக்கிய மூலாதாரங்களில் குறிப்பிடப்படாத இச்செய்தியை கந்தரோடை தமிழ்ப் பிராமி மட்பாண்டச் சாசனம் தருவதிலிருந்து அம்மக்கட் கூட்டத்தின் தொன்மையான பண்பாட்டு எல்லையை கிறிஸ்தவ சகாப்த காலத்திற்கும் முற்பட்ட நூற்றாண்டுகளுக்கு எடுத்துச்செல்ல முடிகின்றது.

வரிவடிவ அமைதிக்குரிய சாசனமாக **"ஆபதி"** என்று எழுதப்பட்ட தமிழ் பிராமி சாசனம் ஒன்று கந்தரோடையினுடைய திராவிட பண்பாட்டினுடைய வளர்ச்சிக்கு வேண்டிய ஆவணமாக அமைவதை நாம் காண்கின்றோம். ஆபதி என்பது சங்ககால தமிழ் இலக்கியங்களிலே அடிக்கடி இடம்பெறுகின்ற ஒரு சொற்தொடராக இருப்பதனைக் காணலாம். பசுக்களுக்கு ஒரு கூட்டத்தினுடைய தலைவன் என்ற கருத்திலே, ஒரு ஊரினுடைய தலைவன் என்ற கருத்திலே, ஆபதி என்ற சொற்பிரயோகத்துக்குரிய பொருள் கொள்ளப்படுகின்றது. எவ்வாறாக அது பொருள் கொண்டாலும் ஆபதி என்பது தமிழ் பிராமி ஓசையைக் கொண்ட ஒரு சாசனம் என்பதை எந்த ஆய்வாளருமே மறுக்க முடியாது.

இந்தவகையில் கறுப்பு, சிவப்பு மண்பாண்டத்தில் வரையப்பட்ட வரிவடிவம் கந்தரோடை மீது திராவிடர் கொண்டிருந்த பங்கும், பணியும் பற்றி எடுத்துரைக்க வல்லதாகக் காணப்படுவதை அவதானிக்கின்றோம்.

இரண்டாவது தமிழ் பிராமி சாசனம் ஒன்று **"குணி"** என்ற ஒரு வாசகத்தைக் கொண்டு விளங்குவதனை நாம் காண்கின்றோம். அதனுடைய முற்பாகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடைந்துவிட்டதினால், அதனுடைய பிற்பாகம் தான் எமக்குக் கிடைத்திருக்கிறது. அந்தக் **குணி** என்ற சொல்லு அதனுடைய முன்னொட்டுப் பலவற்றுடன் இணைந்து வந்திருப்பதாக எடுத்துக் காட்டப்படுகின்றது. நாங்கள் உதாரணமாக "அம்மணி" என்று சொல்கின்றோம். அம்மணி என்பதில் வருகின்ற மணிபோல, **குணி** என்ற சொல்லுக்கும் பல முன்னொட்டுக்கள் இருந்திருக்கக்கூடிய வாய்ப்புக்கள் இருந்தாலும் கூட, நாம் ஒரு வரலாற்று தொல்லியல் ஆய்வாளர் என்ற அடிப்படையில் அது **"பிக்குணி"** என்ற சொல்லினுடைய இறுதிப்பக்கமாக இருந்திருக்கும் என்ற ஓர் அனுமானத்தில், கந்தரோடையில் தமிழர்கள், பௌத்தர்களாக இருந்ததற்கான ஓர் ஆதாரமாக அதனைக் கொள்ள முடிகிறதென்பது குறிப்பிடத்தக்கது. ஏனென்றால் பிக்குனி என்ற சொற்றொடர் சிலப்பதிகாரத்தில் குறிப்பாக மணிமேகலையில் இடம்பெறுகின்ற சொற்றொடராக இருந்து கொண்டிருப்பதன் அடிப்படையில், பெண்கள் கந்தரோடையில் பௌத்த துறவிகளாக இருந்துள்ளார்களா? என்ற ஐயத்தை எழுப்பக் கூடிய சாசனமாகவும் அமைந்துவிட்டதென்றால் அது மிகையல்ல.



இதேபோன்று **"அபிசிதன்"** என்று வாசிக்கக்கூடிய வகையில் அன்விகுதியுடன் முடிவடைகின்ற ஒரு கறுப்பு, சிவப்பு மட்பாண்ட சாசனம் எமக்குக் கிடைத்திருக்கிறது. அபி என்ற சொல் தமிழ் நாட்டிலும், இலங்கையிலும் கிறிஸ்துவுக்கு முற்பட்ட தசாப்த காலங்களில் பொதுவழக்காக இருந்திருப்பினும் அல்லது ஈழத்து பிராமிக் கல்வெட்டுக்களில் **அபி** என்ற பெயர் ஒரு பொதுநடைமுறையாக இருந்திருக்கின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நடைமுறையையும் நாம் காணும்பொழுது அது கந்தரோடையிலும் **அபி** என்ற அடியுடன் தொடர்புபடக் கூடிய பெயரை நாம் காண்கின்றோம்.



**பூநகரி வேளிர் சாசனம்:**

திராவிடப் பண்பாட்டுப் பாரம்பரிய இருக்கையை யாழ்ப்பாணக்குடாநாட்டில் தமிழ்ப் பிராமி மட்பாண்ட சாசனங்கள் திட்டவட்டமாகவே உறுதிப்படுத்தியுள்ளன. அவற்றுள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்குவது **'வேளிர்'** என்ற குலப் பெயர் பொறிக்கப்பட்டுக் கிடைத்த ஒரு மட்பாண்ட சாசனம் ஆகும். ஈழத்தினதும் தென்னிந்தியத் தொல்லியலாளரதும் கவனத்தினை ஒருங்கே ஈர்த்த இச்சாசனமானது சங்ககால வாழ்க்கை முறையை ஒத்த பண்பாடும், குலமுறையும் "ஈழத்தின் வடபகுதியில் பூநகரியில் இருந்தது என்பதனைத் திட்டவட்டமாகவே உறுதிப்படுத்தியுள்ளது.

சங்ககால இலக்கியங்களில் **வேளிர் மரபு** பற்றி பல அரிய வரலாற்றுச் செய்திகளை நாம் காண்கிறோம். **சிற்றரச மரபு** ஒன்று **வேளிர் குலமக்களிடம்** காணப்பட்டிருந்த தன்மையை அச்சான்றுகள் எமக்கு எடுத்துக் காட்டுகின்றன. எனவே இப்பின்னணியில் **பூநகரி வேளிர் தமிழ்ப் பிராமி மட்பாண்ட சாசனத்தையும்** அதன் வரலாற்று முக்கியத்துவத்தையும் நோக்கும்போது கி.பி. முதலாம் நூற்றாண்டளவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பூநகரியில் கோன்மை முறையைத் தழுவிய அரச குடும்பம் ஒன்று ஆட்சி புரிந்திருக்க வேண்டும் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.** இதனை அங்கிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட சங்ககால நாணயங்களும் உறுதிப்படுத்தி நிற்கின்றன. பூநகரியில் கிடைத்த பெருங்கற் பண்பாட்டுத் தடயங்களும் அவ்வாறான **ஒரு கோன்மை** முறையை மேலும் உறுதிப்படுத்துகின்றன.குடாநாட்டினுள் பரவலாக மக்களது, தனித்துவமான பாவனையிலிருந்து வந்தமையைக் காண்கின்றோம்.

இவற்றைவிட நாணய ஆதாரமென்று பார்க்கும்போது – சுடுமண்ணிலான சூலம் வரையப்பட்ட சதுரமானதும், வட்டமானதுமான நாணய வகைகள் எமக்குக் கிடைத்திருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இந்த வட்டவடிவமானதும், சதுரமானதும், சற்சதுரமானதுமான நாணயங்கள் கந்தரோடை நகரத்தின் புராதனத் தன்மையை வெளிப்படுத்துவதாக இருப்பதை இங்கு குறிப்பிடலாம். ஏனென்றால் சுடுமண் நாணயங்களினுடைய உபயோகமானது, உலோக நாணயங்களின் பரிமாற்றம் அல்லது உபயோகம் அறிமுகப்படுத்துவதற்கு முன்னதாக இருந்து வந்ததென்பது குறிப்பிடத்தக்கது. எனவே நாணய ஆதாரங்கள் மூலம் கந்தரோடை என்ற புராதன நகரினுடைய தோற்றத்தைக் காலவரையறை செய்ய முடியுமென்பது எனது திடமான நம்பிக்கை. குறிப்பாகச் சுடுமண் நாணயங்களை அடிப்படையாகக் கொண்டு அந்த நாணயங்களை வெப்ப இயக்கவியல் முறைக்கு உட்படுத்துவோமானால் கந்தரோடையினுடைய நகர உருவாக்கத்தின் தொடக்கத்தின்னை நன்கு கண்டுகொள்ள முடியும்.



**தாதுகோபம் அல்லது தூபி பௌத்தருக்கு மட்டும் உரிய வழிபாட்டுச் சின்னம் அல்ல!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் ஆப்கானிஸ்தானில் தலிபான்களின் ஆட்சிக்காலத்தில் பழம்பெருமை வாய்ந்த புத்தர் சிலைகள் குண்டு வைத்து தகர்க்கப்பட்டன. வரலாற்றுப் பெருமை வாய்ந்ததும், உலகத்திலேயே பழைமையானதுமான புத்தர் சிலைகள் உடைத்து அழிக்கப்பட்டன. கலைப் பொக்கிசங்களாக விளங்கிய புத்தர் சிலைகள் சிதைந்து சீரழிந்து போயின.

புத்தர் சிலைகளின் வரலாற்றுப் பெருமையோ, பௌத்த சமயத்தின் கொள்கைகளோ, புத்தர் சிலைகளின் கலை வெளிப்பாடுகளோ அங்கு நோக்கப்பட வில்லை. தற்கால வாழ்வியல் மாற்றங்களினூடாகத் தமது சமயக் கொள்கைக்கு இவை மாறானவை என்பது மட்டுமே நோக்க்கப்பட்டது. கணத்தில் அவை சுக்கு நூறாக உடைக்கப்பட்டன.

புத்தரின் உருவச்சிலைகள் சாந்தமும், கருணையும், அமைதியும் கொண்ட முகத்தை உடையதாகவே அமைக்கப்படுகின்றன. கண்கள் மூடிய நிலையில் தியானத்தில் அமர்ந்திருப்பதுபோல் காணப்படும். பெரும்பாலான உருவச் சிலைகள் பெரிய அளவிலேயே அமைக்கப்பட்டிருக்கும். இவை பார்ப்பவர்களின் உள்ளத்திலும் அமைதியையும், சாந்தத்தையும் ஏற்படுத்தவல்லன. அப்படியிருக்கும்போது தமது சமயக் கொள்கைக்கு மாறானது என்னும் ஒரே நோக்கில் தலிபான்களால் ஆப்கானிஸ்தானில் கலைப் பொக்கிஷங்களாக விளங்கிய பல புத்தர்சிலைகள் சில மணி நேரத்தில் உடைக்கப்பட்டன.

யாழ்ப்பாணம் பழைமை வாய்ந்த கலைப் பொக்கிஷங்களைக் கொண்டுவிளங்கும் பல பகுதிகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. கந்தரோடை அப்பகுதிகளில் ஒன்று. அங்கே வியத்தகு அரிய கலைப்பொக்கிஷங்கள் கடந்த 60 வருடங்களுக்கு மேலாக மண்படைகளுக்கு அடியில்இருந்து எடுக்கப்பட்டு வருகின்றன. நாணயங்கள், சுடுமண்சிற்பங்கள், தந்தத்தாலான கலைவேலைப்பாடுகள், மட்பாண்டத்தினாலான பாவனைப் பொருள்கள் என அவை பலப்பல. இவை அனைத்திலும் சிறந்த கலை வேலைப்பாடுகளைக் காணமுடிவது குறிப்பிடத்தக்கது.

எடுக்கப்பட்ட சிற்பங்களில் சுடுமண் சிற்பங்கள், ஆண், பெண், உருவங்கள், உலோகத்தாலான ஆஞ்சநேயர் சிற்பம், புத்தரின் உலோகப்படிமம் என்பன மிகுந்த கலை அமைதியும் அழகும் கொண்டனவாக வடிவமைக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

 

இதனைவிட அங்கு விகாரை போன்ற அமைப்பில் காணப்படும் ஒரு குறிப்பிட்ட பகுதிக்குள் நெருக்கமாக அமைகப்பட்டுள்ள சிறிய அளவிலான வட்டவடிவ கட்டடங்கள்.

இதனைப் பார்ப்பவர்கள் பௌத்த சமயக் கட்டடங்களைப் பார்த்துப் பழகியதால் அதனைப் பௌத்த சமயத்தோடு தொடர்புபடுத்தி நோக்குகின்றார்கள். அங்கே விகாரை அமைக்கப்பட்டுள்ளதாகவும் அவை பழைமை வாய்ந்த விகாரை எனவும் பௌத்த சமயம் நிலை பெற்றிருந்த இடம் எனவும் முத்திரை குத்திவிட்டுள்ளனர். கந்தரோடையில் காணப்படும் வட்டவடிவ அடித்தளப் பரிதிவிட்டத்தின் கட்டடத் தொகுதியின் மேல் அமைக்கப்பட்டுள்ள வளைந்த கும்மட்ட மேற்பரப்புகள் யாவும் மிகஅண்மையில் அமைக்கப்பட்டவை. பரிதிவட்டத்திற்குக் கீழே காணப்பட்டவை அவை அஸ்திகளாகவோ அல்லது தாதுக்களாகவோ இருக்ககூடும் என்பதும் நிரூபிக்கக்கூடியது. ஏனெனில், புத்த பகவானின் அல்லது அவரது அடியார்களது தாதுக்கள் அடக்கம் செய்யப்பட்ட தாதுகோபம் அல்லது தூபி விகாரைக்கு அவசியமானது. அவையே ஃங்கு முக்கிய உறுப்பாகவும் விளங்குகின்றன. ஆனாலும், அது பௌத்தர்களுக்கு மட்டுமே உரித்தான ஒரு வழிபாட்டுச் சின்னமல்ல. பல நிலைகளில், பல்வேறு பண்பாட்டுத்தட்டுக்களில் அஞ்ஞாபகார்த்தச் சின்னம் சீராக்கப்பட்டபோதே பௌத்தமதத்திற்குரிய கும்மட்ட வடிவம் கொடுக்கப்பட்டது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவுரை

தென்னிந்திய - ஈழத்தொடர்புகளைப் பண்பாட்டு அடிப்படையில் ஊடகப்படுத்திய முக்கியமான நிறுவனங்களில் **மகாயான பௌத்த மதமும்** ஒன்றாகும் என்பதனை ஏற்கனவே பார்த்தோம். சிலப்பதிகாரம், மணிமேகலை தொடக்கம், வீரசோழியம், **கண்ணகி கதாவ** வரைக்கும் ஈழத்திலும், தமிழகத்திலும் யாழ்ப்பாணத்திலும் மகாயான பௌத்தம் தமிழரது பண்பாட்டுச் செய்திகளைத் தொடர்ச்சியான வகையில் காவிச் சென்றிருந்தன. **தமிழ் இலக்கிய, இலக்கண மரபுகள்** கூட மகாயான பௌத்த சமயத்தினூடாகப் பேணப்பட்டுக் கிடைத்துள்ள நிலையில், **பூர்வீக ஈழத்தமிழரது** வாழ்க்கை பற்றிய இலக்கண - இலக்கிய மரபுகளுக்கு என்ன நேர்ந்தது என்பதையிட்டு இன்னும் ஆராயவேண்டியுள்ளது. அதேநேரத்தில் **கந்தரோடையை** எங்கள் கல்வியியல் சிந்தனையிலிருந்தும் பண்பாட்டுத் தொன்மங்களினூடாகவும் இன்னும் காப்பாற்றிக்கொண்டிருக்கின்ற ஒரேயொரு ஐதீகமாகக் காணப்படுவது **உக்கிரசிங்கன் - மாருதப்புரவீகவல்லி** பற்றிய கதைத்தொகுப்பொன்றாகவே காணப்படுகின்றது. **இக்கதைப்பின்னணியிலே மகாயான திராவிட பௌத்தப்பண்பாட்டின் செல்வாக்கினையும் யாழ்ப்பாணத்தில் கண்டுகொள்ளமுடிகின்றது.**

ஈழத் தமிழரது மகாயானப் பௌத்தப் பண்பாட்டு வாழ்வின் தொட்டிலாகத் திகழ்ந்து வந்திருந்திருந்த கந்தரோடையின் திராவிட இலக்கிய மரபுகள் **எங்கேயோவொரு இடத்தில் மறைக்கப்பட்டு, உருவழிக்கப்பட்டுவிட்ட நிலையில்** தென்னிலங்கையிலுள்ள இன்னொரு இனத்தினருக்குரிய **பாளி – பௌத்த இலக்கியங்களினூடாகவே** அந்த வரலாற்றைத் தேடிப் பார்க்கின்ற துர்ப்பாக்கியநிலை எமக்கு ஏற்பட்டுவிட்டது. அனுராதபுரத்தினை மகாவம்சம் என்ற பாளிமொழி இலக்கியத்தினூடாகப் பார்த்ததுபோல், **தமிழ் இலக்கியத்தினூடாக கந்தரோடையை நாம் பார்க்கமுடியாதுள்ளது.** கிடைக்கின்ற தொல்லியல் எச்சங்கள் ஊடாகவே இழந்த தொன்மையை மீள்நிர்மாணம் செய்யவேண்டியவர்களாக உள்ளோம். **ஆதலால் கந்தரோடைக்குரிய அகழ்வாராய்ச்சியாளர்களாக நாம் மாறவேண்டும். அப்போதுதான் தென்னாசியப் பண்பாட்டிருப்பிற்குரிய அடிப்படைகளை நாம் கண்டுகொள்வதற்குச் சந்தர்ப்பம் கிட்டுமென எதிர்பார்க்கலாம். இம்மையத்தினை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் தவறவிடும் பட்சத்தில் சமூகங்களுக்கிடையிலான ஒற்றுமை நிலைபெறப்போவதில்லை என்பது யதார்த்தமே.

**உசாத்துணை**

**தமிழ்**


1. குருமூர்த்தி,சா., (1974) *தொல்பொருளாய்வும் தமிழர் தம் பண்பாடும்,* சென்னை பல்கலைக்கழகம்.
2. சிவசாமி, வி., *வல்லிபுரத் தாழி தரும் தமிழர் நாகரிகம்,* ஈழநாடு
3. சிவசாமி,வி., (1975) *வல்லிபுரம் - ஒரு தொல்பொருட் களஞ்சியம்,* சங்கமம்.
4. சிவசாமி,வி., *நல்லூரும் தொல்பொருளும்* ஒளி (நல்லை நகர்ச் சிறப்பிதழ்) 1972.
5. சிவசாமி,வி., (1973) *காலத்தால் முந்திய நல்லூர்ச் சிலைகள்,* யாழ்ப்பாண கலைக்கண.
6. சிவசாமி,வி., (1974) *யாழ்ப்பாணக் காசுகள்,* வட்டுக்கோட்டை.
7. 1975 *தெல்லிப்பளையிற் கிடைத்த மத்திய கால நாணயங்கள்,* பூர்வகலா.
8. சிவகாமி (1973),*யாழ்ப்பாணத்தில் 1972ஆம் ஆண்டு கிடைத்த சில நாணயங்கள்,* பூர்வகலா.
9. 1972 *தொல்பொருளியல் - ஓர் அறிமுகம்,* ஈழநாடு,
10. செல்வரத்தினம், அ., (1979,) *கந்தரோடை* சங்கமம்.
11. சேயோன், வே., *ஈழத்துப் புராதன நாணயங்கள்,* 24.11.1975 மாலை யாழ்ப்பாணத் தொல்பொருளியற் கழகத்தில் நிகழ்த்திய சிறப்பு சொற்பொழிவின் சுருக்கம்.
12. பொன்னம்பலம், சி., (1973) :*கந்தரோடைத் தொல்பொருட்களும் யான் பெற்ற அனுபவங்களும்,* பூர்வகலா, யாழ்ப்பாணத் தொல்லியற் கழக சஞ்சிகை.


**English**


1. Gnanaprakasar, S ., (1920) *The forgotten coinage of the kings of Jaffna,* C.L.A.R., , April, p. 172.
2. Gnanaprakasar, S., (1917) *Sankily's fortress at Kopay,* C.A.L.R. 2(3).
3. Gnanaprakasar, S., (1910) *Sinhalese place name in the Jaffna peninsula,* C.A.L.R.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. Godakumbura, C.E., (1968) *Kanterodai* J.R.A.S.C.B

5. Iravatham Mahadevan *Some Rare coins of Jaffna*, Damilica, Vol.I Journal of the department of Archaeology, Governmnet of Tamil Nadu.

6. Indrapala, K., (1971 )(Editor), *Epigraphia Tamilica*, Jaffna Archaeological Society Publication Series, No.I Jaffna,.

7. Katirresu, S., (1905) *A Hand Book of Jaffna Peninsula*, A Suvenir of Northern Railway Opening in,Jaffna.

8. Rasanayagam, C., (1926). *Ancient Jaffna*, Every mans Publishers, Madras.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13



# ஆங்கிலேயர்கள் அமெரிக்காவில் குடியேற்றங்களை அமைத்தமைக்கான சூழ்நிலைகளும், காரணிகளுமம

த.விமல்றாஜ்

வரலாறு (சிறப்புக்கலை)

மூன்றாம் வருடம்

**அறிமுகவுரை**

தற்காலத்தில் உலக வல்லரசுகள் வரிசையில் பிரதான இடத்தினை வகிக்கின்ற அமெரிக்கா ஒரு காலத்தில் ஐரோப்பியர்களின் அடிமைப்பட்ட பிரதேசமாகக் காணப்பட்டது. குறிப்பாக போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், பிரான்சியர், ஆங்கிலேயர் போன்றவர்களின்கீழ் அடிமைப்பட்டிருந்து தமது சுதந்திரத்தை இழந்த நிலையில் காணப்பட்டது. இவர்கள் ஏனைய ஐரோப்பியர்களை ஓரங்கட்டிவிட்டு அமெரிக்காவில் அமைத்த 13 குடியேற்றங்கள் மிகவும் சிறப்புடன் விளங்கின. காலப்போக்கில் இத்தகைய குடியேற்றங்களில் வசித்த குடியேற்றவாசிகள் தமது சுதந்திரத்தைப் போராடிப் பெற்றுக்கொண்டனர்.

வடஅமெரிக்கா கண்டத்திலே அத்திலாந்திக் மற்றும் பசுபிக் சமுத்திரங்களுக்கு இடையில் ஐக்கிய அமெரிக்காவானது அமைந்துள்ளது. மேலும் இந்நாடானது வடக்கே கனடாவையும் கிழக்கே அத்திலாந்திக் சமுத்திரத்தையும் தெற்கே மெக்சிக்கோவையும் மேற்கே பசுபிக் சமுத்திரத்தையும் எல்லைகளாகக்கொண்டு விளங்குகின்றது. அமெரிக்க நாட்டின் சிறப்புமிக்க நிலமைகளை எதிர்பார்த்த ஐரோப்பியர்கள் அங்கே அதிகமான உரிமையினையும் மிகுந்த செல்வத்தினையும் தகுந்த சமூகப் பொருளாதார பாதுகாப்பினையும் நிலையான அமைதியினையும் விரும்பி குடியேற ஆரம்பித்தார்கள். ஐரோப்பிய பகுதிகளில் வாழ்ந்தவர்களுக்கு ஏறத்தாழ கி.பி 15 ஆம் நூற்றாண்டு வரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்கக் கண்டம் இருப்பதே தெரியாது. இவர்கள் தமது புதிய நாடுகளைத் தேடியே பயணத்தின்போதே அமெரிக்கக் கண்டத்தினைக் கண்டுபிடித்தார்களென்பது குறிப்பிடத்தக்கது. அமெரிக்காவில் காணப்பட்ட புவியியல் அமைப்பு, காலநிலை, வளங்களின் பரம்பல் என்பவற்றை அறிந்த இவர்கள் இப்பிரதேசத்தைத் தமதாக்க நினைத்தார்கள்.

## சூழ்நிலைகளும் காரணிகளும்

இத்தாலி நாட்டவரான கொலம்பஸ் புதிய நாடுகளைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் 1492 இல் புறப்பட்டு ஒரு தீவுக் கூட்டத்தைக்கண்டு அதை இந்தியா என நம்பினார். எனினும் அது கரீபியன் தீவுகளை உள்ளடக்கிய மேற்கிந்தியத்தீவு என பின்னாளில் அறியப்பட்டது. அந்நேரத்தில் கொலம்பஸ் தான் கண்டுபிடித்த தீவுகளுடன் இணைந்த நிலப்பரப்பு அமெரிக்காக் கண்டமென அறியவில்லை. சேர்.தோமஸ்மூர் எழுதிய உட்டோப்பியா (Utopia) என்ற நூலில் அக்கால அமெரிக்கா பற்றி பின்வருமாறு விபரணப்படுத்தப்பட்டுள்ளது.

> *"இங்கு வாழ்ந்த மக்கள் மனிதாபிமான உணர்ச்சியுடன் சமூகத்தில் ஒரு நல்ல சூழ்நிலையினை உருவாக்கினர்...... சமூகத்தில் எல்லாப் பகுதியினரும் நசுக்கப்படவில்லை..... தாங்கமுடியாத அளவுக்கு எவரும் வேலை செய்யவில்லை........ சிந்தனை செய்யும் சுதந்திரம் அங்கு காணப்பட்டது".*

இதன் மூலமாக அமெரிக்கக் கண்டத்தின்மீதான எதிர்பார்ப்பு ஐரோப்பிய மக்களிடையே அதிகரித்தது. இதனைத் தொடர்ந்து அமெரிக்காவில் பல ஐரோப்பியர்களும் குடியேறத் தொடங்கினர். ஆரம்பத்தில் போர்த்துக்கல், ஸ்பெயின் போன்ற நாடுகள் அமெரிக்காவில் குடியேற்றங்களை ஏற்படுத்தியபோதும் கி.பி 1607 இல் பிரித்தானியா அமெரிக்காவின் கிழக்குக் கரையில் உள்ள வெர்ஜீனியா என்ற இடத்தில் குடியேற்றத்தினை அமைத்ததைத் தொடர்ந்தே அமெரிக்க வரலாற்றில் புதியதொரு அத்தியாயத்தினை அவர்கள் உருவாக்கினார்கள். இவர்களால் அமெரிக்காவில் ஏற்படுத்திய 13 குடியேற்றங்கள் பிற்காலத்தில் அமெரிக்க ஐக்கிய நாடாக உருவெடுத்தது. இக்குடியேற்றங்களை மேற்பார்வை செய்யும்பொருட்டு முதலாம் ஜேம்சினால் ஒரு குழுவொன்றும் அமைக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலத்தில் இங்கிலாந்தில் காணப்பட்ட சூழ்நிலைகள் அங்குள்ள மக்கள் குடியேற்ற நாடுகளைத் தேடிப் பயணம் செய்வதற்கு காரணமாக அமைந்தது. ஐரோப்பாவில் இங்கிலாந்தானது ஒரு தீவாகக் காணப்பட்டதன் காரணமாக கடல்வழிப் போக்குவரத்துத் தொடர்புகளே அதிகம் காணப்பட்டது. அதாவது ஐரோப்பாக் கண்டத்தின் மேற்குக் கரையில் ஒரு தீவாகப் பிரித்தானியா விளங்கியதன் காரணமாகவும் அது தனது தேவைகளைப் பூர்த்தி செய்யும்பொருட்டுக் கடற்பயணங்களை மேற்கொண்டிருந்தது. அந்தவகையில் பொதுப்படப்பார்த்தால் ஐரோப்பாவில ஏற்படுத்தப்பட்ட நாடுகாண் பயணங்கள் ஐரோப்பிய நாடுகள் மத்தியில் போட்டியினையும் முரண்பாடுகளையும் தோற்றுவித்தன எனலாம். இந்நிலையில் போர்த்துக்கல், ஸ்பானியா போன்ற நாடுகளும் நாடுகாண் பயணங்களில் ஆர்வம் செலுத்தின. இதனால் பொறாமை கொண்டு அந்நாடுகளை தோற்கடிக்க நினைத்த இங்கிலாந்தும் நாடுகாண் பயணங்களில் ஈடுபட்டது. பல இடங்கள் அவர்களால் கண்டுபிடிக்கப்பட்டு அங்கிருந்த வளங்கள் சுரண்டப்பட்டதுடன் அவை தமது நாட்டின் செல்வத்தைப் பெருக்குவதற்குப் பயன்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து தமது நாட்டை வளப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்ட இங்கிலாந்து ஏனைய நாடுகள் கைப்பற்றிய பிரதேசங்களில் தமது ஆதிக்கத்தை ஏற்படுத்தியது. இதன் அடிப்படையில்தான் இங்கிலாந்து நாடானது ஸ்பெயின் மற்றும் போர்த்துக்கல்லிடம் காணப்பட்ட அமெரிக்கப் பிரதேசங்களையும் கைப்பற்ற எண்ணம் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இங்கிலாந்தில் ஏற்பட்ட சமயக் குழப்பத்தினால் தொடர்ந்து ஏற்பட்ட சூழ்நிலைகள் அங்கிருந்த மக்களை வேறு இடங்களுக்கு நாடிச்செல்ல வைத்தது. இங்கிலாந்தில் ஏற்படுத்தப்பட்ட சமய சீர்திருத்தத்தின் விளைவாக கிறிஸ்தவ சமயமானது கத்தோலிக்கம், புரட்டஸ்தாநது என இரண்டாகப் பிரிந்தது. அங்கு ஆட்சியாளர்கள் கத்தோலிக்க மதத்ததையே ஆதரித்தனர். இதனால் தொடர்ந்து புரட்டஸ்தாந்தினர் மதச்சுதந்திரம், அரசியல் சுதந்திரம், பொருளாதாரப் பின்னடைவு என்பவற்றைச் சந்தித்தனர். புரட்டஸ்தாந்துக்கள் மாட்டின்லூதர், ஜோன்கல்வின் போன்றவர்களின் கொள்கைகளைப் பின்பற்றினார்கள். தேசியமதம் என்ற முறையைப் புரட்டஸ்தாந்தினர் எதிர்த்தனர். அவர்கள் தங்களுடைய சமய நடவடிக்கைகளில் அரசாங்கம் தலையிடுவதை விரும்பவில்லை. எனவே அவர்கள் தங்களுடைய உணர்வுகளின் அடிப்படையில் ஆண்டவனை வழிபட விரும்பினார்கள். இதனால் அவர்கள் சுதந்திரமான ஒரு மத நடவடிக்கைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொள்ளக்கூடிய இடத்தை விரும்பி நின்றார்கள். சிறுபான்மை இனமாகக் கருதப்பட்ட இவர்களுக்கு பல்வேறு பிரச்சினைகள் காணப்பட்டன. இதனால் இவர்கள் புதிய உலகிற்குச் சென்று தங்களின் விருப்பப்படி ஆண்டவனை வணங்க விரும்பினார்கள்.

இங்கிலாந்தில் காணப்பட்ட அரசியல் சூழ்நிலைகள் புதிய குடியேற்ற நாடுகளை வேண்டிநின்றன. குறிப்பாக ஸ்ரூவட் வம்சத்தாரின் ஆட்சியிலும், எலிசபெத்தின் ஆட்சியிலும் பல்வேறு குழப்பங்கள் காணப்பட்டன. பொருளாதாரம் உயர்ந்த நிலையில் காணப்பட்டபோதும் சமூகத்தில் அடிமட்ட ரீதயில் பல்வேறு பிரச்சினைகள் காணப்பட்டன. பொருட்களின் விலையுயர்வு, வேலையின்மை, சம்பளம் போதாமை, வரிவிதிப்பு போன்றன மக்களைப் பல்வேறு துன்பத்திற்குள்ளாக்கின. இதனால் சாதாரண மக்கள் பெரும் பாதிப்பை அடைந்தார்கள். போர்களினாலும் சமயம் தொடர்பாக ஏற்பட்ட உள்நாட்டுக் கலகங்களினாலும் போட்டியினாலும் ஏற்பட்ட பொருளாதார ஏற்ற இறக்கங்களினாலும் சாதாரண மக்கள் துன்புற்றார்கள். அரசியல் ரீதியில் பல்வேறு நிர்வாகச் சீர்கேடுகள் ஏற்பட்டிருந்தன. திறமையானவர்கள் ஆட்சிக்கு வந்தபோதும் உள்ளூர் நிர்வாகக் கட்டமைப்புக்களை அவர்களால் சீர்படுத்த முடியவில்லை. தொடர்ச்சியாக ஏற்பட்ட குழப்ப நிலைகள் மக்களை ஓர் அமைதியான இடத்தில் குடியேற வேண்டுமென்ற எண்ணத்தை ஏற்படுத்தின.

இடப்பற்றாக்குறையானது மக்களை வேறு இடங்களுக்கு இடம்பெயர வைத்தது. இங்கிலாந்தில் ஏற்பட்டுவந்த சனத்தொகைப் பெருக்கம் காரணமாக மக்களிடையே பல பிரச்சினைகள் ஏற்பட்டன. இது இடப்பற்றாக்குறையை ஏற்படுத்தியது. பெருமளவான மக்கள் சிறிய நிலப்பரப்புக்களில் வாழ்ந்ததால் நாட்டில் பல்வேறு சீர்கேடுகள் ஏற்பட்டன. கி.பி 1485 இல் மூன்று மில்லியனாக இருந்த மக்கள் தொகையானது கி.பி 1603 இல் நான்கு மில்லியனாக அதிகரித்தது. இவ்வாறு உயர்ந்த சனத்தொகை வளர்ச்சிக்கு ஏற்ப உணவு உற்பத்தி அதிகரிக்கப்படவில்லை. ஒரு காலத்தில் செர்புகள் என அழைக்கப்பட்ட குடியானவர்கள் விவசாயத்தின் மூலம் தங்களின் வாழ்க்கையை நடாத்தி வந்தார்கள். விவசாயம் மேற்கொள்வதற்கான நிலங்கள் போதாமையினாலும் அவை இல்லாமையினாலும் மக்கள் குத்தகைக்கு நிலங்களைப் பெற்றுப் பயிரிட்டனர். ஆனால் அக்காலத்தில் பயிர்ச்செய்கையினால் கிடைக்கும் இலாபத்தைவிடக் கம்பளி உற்பத்தி மூலம் அதிக இலாபம் கிடைத்தமையினால் விவசாய நிலங்கள் எல்லாம் பண்ணை நிலங்களாக மாற்றப்பட்டு அதில் மந்தை வளர்ப்பு மேற்கொள்ளப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குத்தகைக்காரர்களும் அதிகப்படியான குத்தகைக்கு நிலங்களை வழங்கியமையால் மக்கள் வேலையின்றிப் பொருளாதரப் பின்னடைவினைச் சந்தித்துத் துன்பப்பட்டனர். பலர் வீதிகளில் அலைந்து திரிந்தனர். கி.பி 16 ஆம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் நிலவிய இச்சூழ்நிலை மக்களை வாழத் தகுதியுள்ள வேறு இடங்களை நாடிச் செல்லத் தூண்டியதெனலாம்.

கடலாதிக்கத்தில் இங்கிலாந்து சிறந்த நிலையில் காணப்பட்டது. குறிப்பாக கி.பி 16 ஆம் நூற்றாண்டளவில் இங்கிலாந்தின் கடற்படையானது ஏனைய நாட்டுக் கடற்படைகளுக்கு அச்சுறுத்தலாக விளங்கியது. இவர்கள் நவீன கலன்களை உருவாக்குவதில் ஈடுபட்டனர். அதில் புதிய தொழில்நுட்பங்களையும் புகுத்தினார்கள். இக்காலத்தில் போர்த்துக்கல், ஸ்பானியா போன்ற நாடுகள் புதிய குடியேற்ற நாடுகளைக் கைப்பற்றி அங்குள்ள வளங்களைச் சுரண்டித் தமது நாட்டினை வளப்படுத்தினார்கள். இதேநிலைமையில் இங்கிலாந்து தானும் உயர நினைத்து. இதன் விளைவாக அந்நாடுகள் வெற்றிபெற்ற இடங்களையெல்லாம் கைப்பற்றியது. அந்நாடுகளின் படைகளைவிட இங்கிலாந்துக் கடற்படை வலுவானதாகக் காணப்பட்டதன் பின்னணியில் அவர்கள் “கடல் நாய்கள்” என அழைக்கப்பட்டனர். எனவே அந்நாடுகளின் குடியேற்றப் பிரதேசங்களைக் கைப்பற்றும் முகமாக அமெரிக்காவிலும் ஆதிக்கத்தைச் செலுத்தினார்கள்.

இக்காலத்தில் இங்கிலாந்தில் காணப்பட்ட சூழ்நிலைகள் மக்கள் பலரைக் குடியேற்ற நாடுகளை நாடிச்சென்று குடியேற வைத்தது. குடியேற்ற நாடுகளில் குடியேறும்படி வியாபாரக் கம்பனிகளும் தனிப்பட்டோரும் மக்களைத் தூண்டினர். சில வியாபாரக் கம்பனிகளினால் இளைஞர்கள் திருட்டுத்தனமாகக் கடத்தப்பட்டு அமெரிக்காவிற்கு அனுப்பிவைக்கப்படார்கள். அரசின் கட்டாயத்தின்பேரிலும் சுயவிருப்பமின்றியும் அவர்கள் அங்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள். இங்கிலாந்தின் கைதிகள் பலரும் அமெரிக்காவில் சிறை வைக்கப்பட்டனர். குற்றம் இழைப்போர் அமெரிக்காவிற்கு நாடு கடத்தப்படும் நடைமுறையும் காணப்பட்டது. மக்களுக்கு இலவசமாக அமெரிக்காவில் நிலங்கள் வழங்கப்படுமென அரசினால் ஆசை வார்த்தைகள் கூறப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கிலாந்தில் ஏற்பட்ட சமயப் புரட்சியின் காரணமாகப் புரட்டஸ்தாந்து மற்றும் கத்தோலிக்கர்களிடையே சமய முரண்பாடுகள் ஏற்பட்டன. கத்தோலிக்கம் ஆட்சியாளரின் மதமாக விளங்கியமையால் புரட்டஸ்தாந்தினர் பல்வேறு இன்னல்களைச் சந்தித்தனர். தமது சமயத்தைப் பரப்புவதற்கு பல்வேறு தடைகள் அவர்களுக்குக் காணப்பட்டன. இதனால் தொடர்ந்து புதிய இடங்களை அவர்கள் நாடிச் சென்றார்கள். மேலும் அவர்கள் அமெரிக்காவிற்குச் சென்று குடியேறித் தமது மதத்தைப் பரப்ப முற்பட்டனர். புரட்டஸ்தாந்துப் பிரிவினர் கடின உழைப்பிலும் சிக்கனமாக வாழ்வதிலும் அதிக நம்பிக்கை கொண்டிருந்தனர். இவர்கள் வட்டிக்குக் கடன் வழங்கும் வேலையைச் செய்து வந்தார்கள். எனினும் இது கத்தோலிக்க மதக் கருத்துப்படி பாவச்செயலாகக் கருதப்பட்டது. இதனால் இவர்கள் இத்தொழிலைத் தொடர்ந்து அங்கே செய்யமுடியாமல் இருந்தது. மேலும் இவர்கள் கடல் வாணிப நடவடிக்கையிலும் ஈடுபட்டிருந்தனர். இதற்கும் பல தடைகள் காணப்பட்டன. ஐரோப்பாவில் தேசிய மதங்களின் வளர்ச்சியால் தேசிய அரசுகள் தோன்றின. இதனால் இந்நாடுகளின் திருச்சபையானது அரசின் கீழ்ப்பட்டதாகவே காணப்பட்டது. புதிய செயற்பாடுகளை மேற்கொள்வதற்கும் தனிநபர் வணிகத்தின் மூலமாக மிகுந்த இலாபத்தினை அடையவும் விரும்பிய மாற்று மதத்தினர் பலரும் அமெரிக்காவில் சென்று புதிய காலனிகளை உருவாக்கினார்கள்.

அமெரிக்காவில் குடியேற்றங்களின் உருவாக்கத்திற்கு தனிநபர்களின் வணிக முயற்சிகளும், தேசிய அரசுகளும் காரணமாக அமைந்தனவென்றாலும் அங்கே கிறிஸ்தவ சமயத்தைப் பரப்புவதே அவர்களுக்கு அடிப்படைக் காரணமாக அமைந்தது. இம்முயற்சியில் புரட்டஸ்தாந்து சமயத்தினரும், எதிர்மறை இயக்கத்தினரும் மிகுந்த உற்சாகத்துடன் செயற்பட்டனர். கத்தோலிக்கம் ஆட்சி மதமாகக் காணப்பட்டதால் இவர்கள் தமது சமயத்தைப் பரப்புவதில் சிக்கல்கள் பலவற்றினை எதிர்கொண்டனர். கத்தோலிக்கர் தமது ஆதிக்கத்தை அமெரிக்காவிலும் செலுத்த முற்பட்டனர். புரட்டஸ்தாந்தினர் உரோமபுரியின் ஆதிக்கத்தை அகற்றி புரட்டஸ்தாந்து அமெரிக்காவை உருவாக்கத் துடித்தனர். இதனால் பலர் தமது சமயத்தை விரிவுபடுத்தும் நோக்கத்தை அடிப்படையாகக்கொண்டு அமெரிக்காவில் சென்று குடியேறினர்.

பிரபுக்களும், வியாபாரிகளும் தங்கள் செல்வத்தைப் பெருக்கக் குடியேற்ற நாடுகள் உதவுமென நினைத்தார்கள். அத்திலாந்திக் கரைக்கு அப்பால் வியாபார நிறுவனங்களை ஏற்படுத்துவது ஆங்கிலேயரின் நோக்கமாக இருந்தது. மேலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்கப் பகுதிகளில் பயிரிடப்பட்ட புகையிலைகளுக்கு இங்கிலாந்தில் நல்ல விலை கிடைத்தது. இதனால் வியாபார நோக்கை மையமாகக் கொண்டும் அமெரிக்காவில் இவர்கள் குடியேறினார்கள். கி.பி 16 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவிலல் ஏற்பட்ட மறுமலர்ச்சி காரணமாகப் பிரபுக்களின் செல்வாக்குக் குறைந்ததோடு அவர்களின் நிலங்களும் பறிபோயின. இதனால் பிரபுக்கள் தங்கள் அதிகார நிலையிலிருந்து தாழ்வுற்றார்கள். தொடர்ச்சியாக அங்கு வசிக்க முடியாத பிரபுக்கள் புதிய கண்டமான அமெரிக்காவில் சென்று குடியேறித் தாம் இழந்த வாழ்க்கையைப் பெற முற்பட்டனர்.

குடியேற்றங்களை தோற்றுவித்த கம்பனிகள் அங்கு செல்வோருக்கு நிலம் இலவசமாக வழங்கப்படும் என அறிவித்தன. இங்கிலாந்தின் சட்டப்படி தந்தையின் சொத்திலிருந்து குறிப்பாக தந்தையின் நிலத்தின் பங்கு மூத்த மகனுக்கே சென்றடையும். இதன் காரணமாக இளைய புதல்வார்கள் பலர் நிலமின்றித் துன்பப்பட்டனர். மேலும் இதேகாலப்பகுதியில் குத்தகைக்காரர்கள் நிலத்திற்கான குத்தகையினை அதிகரித்தமையினால் எல்லோரும் நிலத்தைப் பெறமுடியவில்லை. தொடர்ந்து பலர் வேலையற்று இருக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். புதிய வாழ்க்கையினையும் வசதியான நிலையினையும் விரும்பிய பலர் புதிய இடங்களை நாடிச்சென்றனர். இவ்வாறு சென்றவர்களில் ஒரு பகுதியினர் அமெரிக்காவில் குடியேற்றங்களை அமைத்தனர்.

கண்டுபிடிக்கப்பட்ட புதிய கண்டமானது வளம் மிகுந்ததாகக் காணப்பட்டது. ஆரம்பத்தில் தமது ஆதிக்கத்தைச் செலுத்திய போர்த்துக்கல், ஸ்பானியா போன்ற நாடுகள் தேசிய அரசுகளாகவும் செல்வம்மிக்க நாடுகளாகவும் எழுச்சி பெற்றன. இதனருகில் காணப்பட்ட இங்கிலாந்து தானும் ஒரு தேசிய அரசாக எழுச்சிபெற வேண்டுமென நினைத்தது. ஜோன்ஸ்மித் என்பவர் "சொர்க்கமும் பூமியும் இணைந்த மனிதர்கள் வாழ்வதற்கு ஏற்ற இடமாக….." அமெரிக்காவை இனங்கண்டனர். அங்கிருந்த பெருமளவிலான தங்கம் மற்றும் உற்பத்திப் பொருட்கள் என்பவற்றைப் பெறுவதற்குப் போட்டிகள் காணப்பட்ட நிலையில் இங்கிலாந்து அமெரிக்காவின் கிழக்குக் கரையோரமாகக் குடியேற்றங்களை அமைத்தது.

**நிறைவுரை**

இவ்வாறான பல சூழ்நிலைகளும் காரணங்களும் அமெரிக்காவில் இங்கிலாந்து தமது குடியேற்றங்கள் அமைப்பதற்குத் துணையாக நின்றன. முக்கியமாக இங்கிலாந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலநிலையோடு பெருமளவிற்கு ஒத்துப்போகின்ற காலநிலையாக அமெரிக்கக் காலநிலை காணப்பட்டதால் ஒரே காலநிலையை விரும்பும் மக்களுக்கு அங்கு வாழ்க்கையையும் வளத்தினையும் அமெரிக்கா வழங்கியதால் அங்கு சென்று அவர்கள் குடியேற்றங்களை அமைத்தார்கள். மேலும் குடியேற்றங்களை அமைப்பதற்கு முக்கிய காரணமாக அமைந்தது ஐரோப்பாவில் கி.பி 16 ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட மத வேறுபாடே. இது மக்களைப் புதிய இடங்களை நாடிச்செல்ல வைத்தது. அத்தோடு நாடுகாண் பயணங்கள்மூலமாகக் கிடைத்த வளங்கள் தேசிய அரசுகளை தோற்றுவித்தன. எல்லாவற்றிற்கும் மேலாக இங்கிலாந்தில் ஏற்பட்ட வம்சப்போராட்டங்கள் இதற்குப் பின்னணியாக அமைந்துகொள்ள அமெரிக்காவில் ஆங்கிலேயர் குடியேற்றங்களை ஏற்படுத்தினார்கள். இவர்கள் அமைத்த 13குடியேற்றங்களுமே தற்கால ஐக்கிய அமெரிக்கா என்ற நாடு உருவாகக் காரணமாயின எனலாம்.

**உசாத்துணை**

1. அருந்தவராஜா,க., (2012) *ஐக்கிய அமெரிக்க வரலாறு (1775 – 1945)*, அஞ்சு வெளியீட்டகம், நல்லூர்.

2. அனுமந்தன்,கி.ர., (1978) *பிரிட்டன் வரலாறு (கி.பி 1714 – 1837)*, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை.

3. டிரவெலியன்,ஜி.எம்., (1968) *ஆங்கிலேயர் சமுதாய வரலாறு – II*, தமிழ் வெளியீட்டகம், தமிழ்நாடு.

4. பாலசுப்பிரமணியம்,டி., (1978) *அமெரிக்க ஐக்கியநாட்டின் வரலாறு*, தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



14

# முதலாம் பராக்கிரமபாகுகால இலங்கைப் பண்பாடு

வே.நீறஜா

வரலாறு (சிறப்புக்கலை)

நான்காம் வருடம்

## அறிமுகவுரை

இலங்கைப் பண்பாட்டு வரலாற்றில் முதலாம் பராக்கிரமபாகுகால இலங்கைப் பண்பாடானது தனித்துவமானதாகக் கொள்ளப்படுகின்றது. மானாபரணன் மற்றும் இரத்தினாவலி என்பவர்களுக்கு இடையிலே மகனாகப் பிறந்த முதலாம் பராக்கிரமபாகு கி.பி 1153 இல் ஆட்சியினைப் பொறுப்பேற்றுப் பின்னர் இலங்கை முழுவதனையும் ஏறத்தாழ 33 வருடங்கள் ஆண்டானென்பது குறிப்பிடத்தக்கது. பொலநறுவையை எழில்மிக்க நகராக்கிய இவன் நாட்டு மக்களின் சுபீட்சத்திற்கும், சமய முன்னேற்றத்திற்கும் பெரும்பணிகளையாற்றி நாட்டுக்குப் பெருமை சேர்த்த சிறப்புக்குரியவன். இவன் காலத்தில் இலங்கைப் பண்பாட்டினைப் பொறுத்தவரை குறிப்பாக அரசியல், பொருளாதாரம், சமயம் கட்டிடம், சிற்பம், ஓவியம் இலக்கியம் ஆகிய துறைகளைப் பொறுத்தவரை இலங்கை இதுவரை கண்டிராத ஓர் உன்னத வளர்ச்சியினைப் பெற்றிருந்ததெனலாம். இவற்றினை அறிவதற்கு உதவுகின்ற சான்றுகளாக சங்கமுவிகாரைக் கல்வெட்டு, ஆர்ப்பாக்கம் கல்வெட்டு, பல்லவராஜன் பேட்டைக்கல்வெட்டு, திருவாலங்காட்டுச் சாசனம், பர்மிய சாசனம், தீவுமுழுவதும் கண்டெடுக்கப்பட்ட இவனது நாணயங்கள், சூளவம்சத்தின் 62-79 வரையான 17அத்தியாயங்கள் என்பன உதவுகின்றன.

## அரசியற் பண்பாடு

முதலாம் விஜயபாகுவின் இறப்பின் பின் சீர்குலைந்திருந்த இலங்கையினை ஐக்கியப்படுத்தியமை, நிர்வாக முறைகளை ஒழுங்குபடுத்தியமை, அயல்நாட்டுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்புகளின் வளர்ச்சி போன்றன இவனது அரசியற் பண்பாட்டு நடவடிக்கைகளில் முக்கியத்துவம் வாய்ந்தன.

அரசியற் பண்பாட்டு வரலாற்றில் முதலாம் பராக்கிரமபாகு மன்னனின் சாதனைகளுள் தலைசிறந்ததெனக் கருதப்படுவது இலங்கையினை ஐக்கியப்படுத்தியமையாகும். முதலாம் விஜயபாகு மன்னனால் ஒழுங்குபடுத்தப்பட்ட இலங்கையின் அசியல் தலைமைத்துவம் விஜயபாகு இறப்பின் பின் விஜயபாகுவின் மைந்தன் விக்கிரமபாகுவிற்கும் விஜயபாகுவின் தங்கையின் புதல்வர்களாகிய மானாபரணன், கீர்த்திசிறிமேவன், சிறீ வல்லவன் ஆகியோருக்கும் இடையே நடந்த பிணக்குகளின் பயனால் பல பிரதேசங்களாகப் பிரிக்கப்பட்டன. விக்கிரமபாகு இராஜரட்டையையும் மனாபரணன் தக்கிணதேசத்தையும் கீர்த்திசிறீமேவன் தொளஸ்தகஸ்ரட்டையையும் பெற்றனர். தக்கிணதேச ஆட்சியாளனாகிய மானாபரணின் புதல்வனாக அவதரித்தவனே இப்பராக்கிரமபாகு.

பராக்கிரமபாகு பதின்னான்கு வயதுப் பராயத்தில் இருந்தபோதே இலங்கை முழுவதையும் கைப்பற்றித் தான் அதற்குத் தலைவனாக வேண்டும் என்ற எண்ணத்தினைக் கொண்டவனாகக் காணப்பட்டான். சிறிய தந்தையின் பொறுப்பிலிருந்த தக்கிணதேசத்துடன் இராசரட்டையை இணைப்பதே ஐக்கியத்தின் முதல்படி என்று இவன் கருதினான். விக்கிரமபாகுவின் இறப்பின்பின் இராசரட்டை அரசனாகிய கஜபாகுவை உளவறிய எண்ணி இரகசியமாக வெளியேறினான். தடுத்த சிறிய தந்தையின் படைவீரர்களைக் கொன்றுவிட்டு இராசரட்டைக்குச் சென்றான். கஜபாகுவின் வருவாய், தானியக்கிடங்கு, ஆயுதக்கிடங்கு, படைவீரர் எண்ணிக்கை, தளபதிகள், நிர்வாக அமைப்பு போன்றவற்றை உளவறிந்த நிலையில் கஜபாகு அவனைச் சந்தேகித்ததும் அங்கிருந்து தப்பிச் சென்றான்.

முதலாம் பராக்கிரமபாகு அவனது தாயின் விருப்பத்தின் பிரகாரம் சிறியதந்தையுடன் மீண்டும் சேர்ந்தான். பின்னர் 1140 இல் அவன் இறக்கத் தக்கிணதேச அரசனாகினான். தொடர்ந்து தீவின் பேரரசனாகும் தனது குறிக்கோளை நிறைவேற்ற எண்ணி அதற்கான பணிகளில் இறங்கினான். எல்லைப்புறத்தை நன்கு அரண்செய்து காவல்படைகளை பலப்படுத்தினான். தக்கிணத்தின் ஜீவநதியாகிய ஜஜ்ர நதியினை 3இடங்களில் அணைகட்டி மறித்து முப்பெரும் நீர்ப்பாசனத் திட்டங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்படுத்தினான். பஸ்துன்கோரனை எனப்படும் இடத்திலுள்ள சேற்று நிலத்தை விளைநிலமாக்கினான். 53க்கும் மேற்பட்ட குளங்களைத் திருத்தி பொருளாதாரச் செழிப்பை ஏற்படுத்தினான்.

அநுராதபுரம், பொலநறுவை என்பனவற்றை முறையே தக்கிணதேச எல்லையிலும் மலையரட்டை எல்லையிலும் சிறந்த தளபதிகள் தலைமையில் சுற்றி வளைத்துத் தோற்கடிக்கப் போட்ட திட்டம் ஆரம்பத்தில் மானாபரணன் தலையீட்டால் சிறிது பின்னடைவைக் கண்டபோதும் இறுதியில் வெற்றியை அவனுக்கு அளித்தது. மானாபரணனனை முறியடித்துப் பொலநறுவையுள் புகுந்தபோது வயோதிபனும் வாரிசற்றவனுமாகிய கஜபாகுவின் சார்பில் சங்கம் தலையிட்டு அவன் இறக்கும் வரை அவனை ஆளவிடுமாறு கோர, பராக்கிரமபாகு பெருந்தன்மையுடன் இசைந்தான் என சங்கமுவிகாரை கல்வெட்டுக் கூறுகின்றது.

1153 இல் கஜபாகு மரித்தபோது அவன் மந்திரிகள் உடன்படிக்கையை மீறி மானாபரணனனை அழைத்ததால் முதலாம் பராக்கிரமபாகு ஆத்திரமடைந்து மகாவலிகங்கைக் கரையோரமாக இராசரட்டையுள் புகுந்து மானாபரணனனை புறமுதுகிடச் செய்து 1153 இல் பொலநறுவையின் அரசனாக முடிசூடினான். 1157 இல் மானாபரணனின் தாய் சுகலாதேவி தலைமையில் உருகுணையில் புரட்சி எழுந்தது. அதை அடக்கவும் உருகுணையிலிருந்த புத்தரின் தந்ததாதுவைப் பெறவும் இலங்கையின் நிகரில்லாப் பேரரசனாகவும் எண்ணி உள்நாட்டில் தன் கடைசிப்போரை உருகுணைக்கெதிராக நிகழ்த்தினான்.

கலகக்காரர்களின் கோட்டையாக விளங்கிய உருகுணையினைத் தாக்க கலகக்காரரின் திடீர்த்தாக்குதல்கள் மத்தியிலும் பராக்கிரமபாகுவின் சேனையின் ஒரு பகுதி விபிலை வழியாகவும் மறுபகுதி பசறைவழியாகவும் சென்று உடுத்துறையில் கலகக்காரரைத் தோற்கடித்தது. எனினும் கலகக்காரர் கெரில்லாப் போரை நடத்திப் பாதிப்பை ஏற்படுத்த மற்றுமொரு படையணி தக்கிணதேசமூடாக ஹிந்தோட்டை தெவிநுவரை வழியாகவும் அதன் மறுபகுதி இறக்குவானை வழியாகவும் முன்னேறி மகாநாககுலம், மகாகமம் ஆகிய இடங்களைக் கைப்பற்றின. எல்லாப்படையணிகளும் சேர்ந்து சுகலாதேவியைக் கைதுசெய்து பொலநறுவைக்குக் கொண்டுவந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறாக பராக்கிரமபாகு விஜயபாகுவின் மறைவின் பின் நாட்டில் உருவாகிய பல்வேறு பிரதேச அரசுகளாலும் சிதைவடைந்துபோன ஐக்கியத்தையும் உறுதிப்பாட்டையும் மீளவும் நிறுவிக்கொள்ளவும், சிறந்த அரசியல் ஒற்றுமையையும் ஸ்திரத்தன்மையையும் ஏற்படுத்தி மக்கள் அமைதிவாழ்வு வாழப் பாடுபட்டுத் தனது நோக்கத்தை நிறைவேற்றியமை இலங்கையின் அரசியற் பண்பாட்டு வரலாற்றில் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

முதலாம் பராக்கிரமபாகுவின் காலப்பகுதியில் நிர்வாக முறைகளும் ஒழுங்குபடுத்தப்பட்டு நாடு சிறப்பாக ஆளப்பட்டது. தக்கிணதேச ஆட்சியாளனாக இருந்தபோதே முதலாம் பராக்கிரமபாகுவிடம் நிர்வாகத்திறன் மிகுந்திருந்தது. சேனாதிபதியிடம் படையியல் சிவில் நிர்வாக அதிகாரங்கள் குவிந்திருந்ததால் அவன் தன்னிச்சையாக செயற்படுவதுகண்டு சிவில் நிர்வாகத்தை தன் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ்க்கொண்டு வந்து எல்லா விடயங்களையும் சிறப்பாகக் கண்காணித்தான். பராக்கிரமபாகுவின் மேற்பார்வையில் சிறந்த மத்திய ஒழுங்கின்கீழ் தக்கிணதேசம் இயங்கியது.

தீவின் பிரதான நீர்ப்பாசனத் திட்டங்களை அழியாது இயங்கவைப்பதன் மூலம் அவனால் அரசைச் சிறப்பாக செயற்படுத்த முடிந்தது. அநுராதபுரத்தை அண்டியே அனேக நீர்ப்பாசன அமைப்புகள் இருந்ததால் அநுராதபுர அரசர்கள் அவற்றைச் சிறப்பாக நிர்வகிக்க முடிந்தது. எனினும் அநுராதபுரம், பொலநறுவை, தக்கிணதேசம் முதலிய இராச்சியப் பிரதேசங்களிலும் தூர மாவட்டங்களிலும் இருந்து நீர்ப்பாசன அமைப்புகளை பராக்கிரமபாகு சிறந்த முறையில் நிர்வகித்தான். அவனுக்கு விசுவாசம்மிக்க குலீனர் என்ற பிரமாணிக்கம்மிக்க வகுப்பினர் மூலமும் நேர்மையான அதிகாரிகள் மூலமும் நாடு முழுவதுமுள்ள நீர்ப்பாசன அமைப்புக்கள் பொலநறுவை முகாமையின்கீழ் நிர்வகிக்கப்பட்டது.

அநுரா்தபுரக் காலத்தில் தலைநகருக்கு இருந்த செல்வாக்கு யுவராஜா ஆண்ட உருகுணைக்கும் இருந்தது. விஜயபாகுவுக்கு பின்னரான நிலமையில் றுகுணரட்டை, மாயரட்டை, பிகிற்றிரட்டை என்பவற்றிற்கும் அதிகாரம் பரவலாக்கப்பட்டிருந்தது. மாமன்னர் பிகிற்றி அரசராகவும் நாடு முழுவதற்கும் அரசராகவும் இருந்தார். யுவராஜா பதவியை வகுத்தவருக்கு அடுத்த அரசர் பொறுப்பு வழங்கப்பட்டது. ஏனைய மாநிலங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளவரசரின் பொறுப்பிலிருந்தன. இது பல குழப்பங்களுக்கு வழிவகுத்தது. யுவராஜாவும் இளவரசர்களும் தன்னிச்சையான முடிவுகளை எடுக்கும்போது அப்பிரதேசங்களில் மத்திய அரசின் அதிகாரம் செல்லாது போனது. பராக்கிரமபாகு இப்பிரிவினைகளை நீக்கி அரசனின் நிர்வாகத்தின்கீழ் எல்லாப் பகுதிகளையும் கொண்டுவந்தான். இராணுவபலத்தைப் பெருக்கியும் அதன் உதவியோடு குழப்பமின்றி நாட்டை ஆண்டான்.

தென்னிந்தியாவில் பாண்டிய, சோழ வம்சங்களுக்கிடையிலான போருக்கு உதவி செய்தபோதும் அவன் இலங்கேஸ்வரனாக முடிசூடிய பிறகு தமிழ், சிங்கள மக்களிடையிலான கலாசார உறவுகளையும் தொடர்புகளையும் முன்னெடுத்துச் சென்றான். பிராமணர் சாந்திக்கிரியை செய்ய கட்டடம் ஒன்றையும் அமைத்தான். ரோகணையிலிருந்த 75 ஆலயங்களைப் புனரமைத்தான். ஜேதவனதூபிக்கு ஆராமையையும் தாமரைவடிவத் தடாகமும் அமைத்தான். ஒருநாளில் நான்கு நாளிகைகளே இவன் தூங்கினான் எனச் சூளவம்சம் குறிப்பிடுவதன்மூலம் சிறந்த நிர்வாகியாக முதலாம் பராக்கிரமபாகு விளங்கினான் என்பது கண்கூடு.

பராக்கிரமபாகு தனது ஆட்சிக்காலத்தில் அயல்நாடுகளுடனும் தொடர்புகளை ஏற்படுத்தித் தனது ஆற்றலை காட்டவிளைந்தான். குறிப்பாக பர்மா மற்றும் பாண்டிநாட்டுடனும் கம்போடியா, தென்கிழக்காசியா ஆகிய நாடுகளுடனும் தொடர்புகளை ஏற்படுத்தியிருந்தான். இலங்கையிலிருந்து பர்மாவிற்குச் செல்லும் கப்பல்களுக்கு ஒரு யானை பரிசளிப்பது பர்மிய நாட்டு வழக்கம். பர்மிய அரசன் அலோங்கிது இவ்வழக்கத்தை நிறுத்தி வர்த்தகக் குழுவிற்கு இன்னல்களை விளைவித்ததால் கோபங்கொண்ட பராக்கிரமபாகு பர்மாவுக்கு எதிராக கிண்ணுபாலகீர்த்தி என்பவன் தலைமையில் படையொன்றை அனுப்பி அந்நாட்டை நிர்மூலமாக்கினான். இவனது தெவனகலக் கல்வெட்டு இப்போர் பற்றிக் குறிப்பிடுகிறது.

பராக்கிரமபாகுவின் காலப்பகுதியில் பாண்டி நாட்டிற்கு எதிராகவும் போர் இடம்பெற்றது. திருநெல்வேலி பர்ண்டிய மன்னன் குலசேகரனுக்கும், மதுரை பாண்டியமன்னன் பராக்கிரம பாண்டினுக்கும் இடையில் எழுந்த வாரிசுரிமைத் தகராற்றில் பராக்கிரமபாகுவிடம் உதவி கோரப்பட்டது. பராக்கிரமபாகுவால் அனுப்பப்பட்ட சேனை மதுரையை அடையும் முன்னர் பராக்கிரம பாண்டியன் குலசேகரனால் கொல்லப்பட்டான். எனினும் இலங்காபுரன் தலைமையில் பராக்கிரமபாகுவால் அனுப்பப்பட்ட படை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குலசேகரனைக் கலைத்துவிட்டு பராக்கிரமபாகுவின் மகன் வீரபாண்டியனைச் சிம்மாசனம் ஏற்றியது. குலசேகரன் அடைந்த தோல்வியால் சினம்கொண்ட சோழர் பெரும்படையைத் திரட்டி இலங்காபுரனைக் கொலைசெய்ததாக ஆர்ப்பாக்கம் கல்வெட்டு, திருவாலங்காட்டுக் கல்வெட்டு, பல்லவராஜன் பேட்டைச் சாசனம் என்பன அறிவிக்கின்றன.

இவ்வாறாக இலங்கையின் அரசியற் பண்பாட்டு வரலாறு பொறுத்து முதலாம் பராக்கிரமபாகு மன்னன் காலப்பகுதியில் பொலநறுவையை மையமாகக் கொண்ட சிறந்தவொரு மையஆட்சி ஏற்படுத்தப்பட்டு, அரசியல் நிர்வாக இராணுவ ரீதியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, அவற்றில் வெற்றியும் பெறப்பட்டமையை முதலாம் பராக்கிரமபாகுகாலச் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன.

**பொருளியற் பண்பாடு**

முதலாம் பராக்கிரமபாகுகால இலங்கைப் பண்பாட்டு வரலாற்றில் பொருளாதார ரீதியாகவும் உயர் வளர்ச்சிகள் ஈட்டப்பட்டது. இம்மன்னனின் நீர்ப்பாசனம் மற்றும் வர்த்தக நடவடிக்கைகள் மூலம் பொருளாதாரப் பலத்தை பெருக்கினான். இவனது சமய, கலை, கலாசாரப் பணிகளுக்கும் இது அடித்தளமாக அமைந்தது.

இவன்கால நீர்ப்பாசன வளரச்சியினால் இலங்கை கிழக்குலகின் தானியக் களஞ்சியம் என்று புகழப்பட்டது. பராக்கிரமபாகு தன் சிறுபராயத்திலே சிறுதுளி மழைநீரும் வீணே கடலில் சேரலாகாது என்ற எண்ணத்தை மனதில் நிறுத்தி அதன்படி செயற்பட்டிருந்தமை இவனது வெற்றிகளுக்கெல்லாம் அடிப்படைக்காரணமாக அமைந்தது. இவன் 1153 இல் பொலநறுவையை கைப்பற்றிய காலம் முதல் 1186இல் அவன் இறக்கும் வரை இராசரட்டையில் மிகச்சிறந்த நீர்ப்பாசனச் சாதனைகளை செய்துமுடித்தான். சூளவம்சம் 165அணைகளைக் கட்டியும், 39கால்வாய்களை வெட்டியும், 165பெருங்குளங்களை அமைத்தும் 2376 சிறுகுளங்களை அமைத்தும் இவன் பொருளாதாரப் பணிபுரிந்தான் எனக்கூறுகின்றது. இவை யாவற்றிலும் சிறந்தது வேந்தனின் களஞ்சியம் எனப்படும் பராக்கிரமசமுத்திரம் ஆகும். மகாவலியின் முக்கிய ஆறான அம்பன் கங்கையை அங்கமடிமல்ல என்ற இடத்தில் மறித்து அங்கமடிமல்ல எல கால்வாய் மூலம் இக்குளத்துடன் இணைத்தான். 8.5 கிலோமீற்றர் நீளமும் 40அடி உயரமும் கொண்ட ஒரு வலுவான அணைமூலம் இக்குளம் பாதுகாக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பராக்கிரமபாகு கால நீர்ப்பாசனப் பணிகள் தொழில்நுட்ப முகாமைத்துவத்தையும் கொண்டிருந்தன. இவன் நிறுவிய அணைகள் தற்கால அறிஞர்களால் அபூர்வமான படைப்புகள் எனப் புகழப்படுகின்றன. இவை சீமந்தையொத்த ஒரு வன்பொருளால் உருவாக்கப்பட்டது. ஒரு அணையின்மூலம் நீரை இரு திசையாகத் திருப்பிவிடல், ஒரு குளத்திற்கு பல மார்க்கங்களாலும் நீர்பெறல், நீண்டகாலம் நிலைத்திருக்கக்கூடிய வலுவான படைப்புக்களை ஆக்கல் என்பன இவனது சாதனைகளாகும். பராக்கிரமசமுத்திரம், பராக்கிரமதவக்க, பராக்கிரமசாகர உட்பட ஏராளமான குளங்கள் இவனால் நிறுவப்பட்டதுடன் விஜயபாகு மறைவின் பின் ஏற்பட்ட உள்நாட்டுப் போர்களால் சிதைவடைந்திருந்த அனேக குளங்களும் இவனால் திருத்தியமைக்கப்பட்டன. மாகல்கடவாவி, கவுடுலுவாவி, கணதரவாவி, நாச்சதுவவாவி, குருகலவாவி என்பன இவனால் திருத்தியமைக்கப்பட்டன. சூளவம்சத்தின் 68ஆவது அத்தியாயத்தின்படி கனியச்சுரங்கங்களும் காடுகளும் தவிர்த்த ஏனைய நிலமெல்லாம் கழனிகளாக்கப்பட வேண்டும் என்று தன் மந்திரிகளுக்கு கட்டளையிட்டான் எனக் கூறுவதன் மூலம் நிலத்தை இவன் மகத்துவமாக பயன்படுத்தியமை தெரிகிறது.

இலங்கை அரசர்களில் வர்த்தகத்திற்கு முக்கிய இடம் வழங்கியவன் இவனேயாவான். தக்கிணதேச அரசனாக இருந்தபோதும் அதிகாரிகளை நியமித்து வர்த்தகத்தை அவர்களது மேற்பார்வையில் விட்டான். அயல்நாடுகளுடன் வர்த்தகத்தைப் பெருக்கினான். தீவு முழுவதும் காணப்பட்ட இவனது நாணயங்கள், நயினாதீவுக் கல்வெட்டு என்பன இவன்கால உள்நாட்டு வர்த்தகத்தின் சிறப்பினை அறிவிக்கின்றன. எனவே இவன் காலம் நீர்ப்பாசனத் துறையில் பிரம்மாண்டமானதும், பிரமிக்கத்தக்கதும், உயர்தொழில்நுட்பம் உடையதும், நீண்டகாலம் நிலைத்திருக்கக் கூடியதுமான ஆக்கங்கள் மேற்கொள்ளப்பட்டன மட்டுமன்றி வர்த்தகமும் வளர்க்கப்பட்டு இலங்கை அபிவிருத்தியில் இவன்காலம் உச்சவளர்ச்சியும் அடைந்தது.

**சமயப் பண்பாடு**

இவன் காலம் பிக்குமாருக்கான ஒழுக்கம் எனக் குறிப்பிடப்படும் கதிகாவ ஒழுக்கங்கள் கல்வெட்டில் பொறிக்கப்பட்டன. முதலாம் பராக்கிரமபாகு பிக்குமாருக்கான சுகாதார ஒழுக்கங்களை கல்விகாரைக் கதிகாவடு என்ற பெயருடன் கல்விகாரை பாறைச்சுவரில் பொறித்திருந்தான். ஏராளமான சமயக்கட்டிடங்களை நிறுவுவதிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விகாரைக்கு நிறைய மானியங்களை வழங்குவதிலும் அவன் மிகுந்த செலவுகளைச் செய்திருந்தான். சமயத்துறையில் பராக்கிரமபாகு எடுத்த நடவடிக்கைகள் நாட்டிற்கும் சங்கத்திற்கும் பர்மா, கம்போடியா போன்ற பிற பௌத்த நாடுகளிடையேயும் பெருமதிப்பை உண்டாக்கின. அந்நாடுகளுக்கும் இலங்கைக்குமிடையே சமயத்தொடர்புகளும் ஏற்படுத்தப்பட்டன.

**கலைப் பண்பாடு**

முதலாம் பராக்கிரம்பாகுவின் காலப்பகுதியில் கலைப்பண்பாடு அதாவது இலக்கியம் மற்றும், கட்டட, சிற்ப, ஓவியம் போன்ற கலைத்துறைகளிலும் வளர்ச்சி ஏற்பட்டது. பராக்கிரமபாகுவின் பெருமுயற்சியால் இலக்கிய முயற்சிகளும் அவனது காலத்தில் பெருமளவில் நடைபெற்றுவந்தன. இவனது காலத்தில் வாழ்ந்த மகாகாசியப்பதேரர், மொகல்லான சாரிபுத்ததேரர் போன்றோர் சமயத்துறையில் பெற்ற புகழுக்கு இணையாக இலக்கியத்துறையிலும் பல நூல்களை எழுதிப்பெருமை பெற்றனர். பர்மா முதலான நாடுகளிலிருந்து வந்த அறிஞர்களும் பராக்கிரமபாகுவின் காலத்தில் இலங்கை வந்து நூல்கள் இயற்றுவதில் ஈடுபட்டனர். இவ்வாறாக இவனது ஆட்சிக்காலத்தில் இலக்கியத்துறையிலும் வளர்ச்சி ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கட்டடக்கலை பொறுத்தும் பராக்கிரமபாகுவின் ஆட்சிக்காலம் சிறப்புப் பெறுகிறது. தமிழ்க் கைதிகளைக் கொண்டு இவன் அமைத்த தெமிழமகாசாய பொலநறுவையின் மகாகிரி எனப் புகழப்படுகிறது. இது மிகப்பெரிய அத்திவாரத்தின் மேல் கட்டப்பட்டதாகும். இதைப்போன்று வேறு இரு பெரிய கட்டடங்களும் புத்தனைக்கு அண்மையில் காணப்படுகிறது.

முதலாம் பராக்கிரமபாகு ஈட்டிய வெற்றிகளுக்கு மிகச்சிறந்த எடுத்துக்காட்டு செங்கல்லால் அமைக்கப்பட்ட கல் மாடங்களைக் கொண்ட விக்கிர அறைகளுடன் சிலைமனைகளை நிறுவியதாகும். லங்காதிலக சிலைமனை, திவங்கசிலைமனை என்பன அக்கால கட்டடவியல் சாதனைகளாகும். பராக்கிரமபாகு தன் சொந்த இராச்சியத்தில் நிறுவிய பண்வெல்நுவரமாளிகை பொலநறுவையில் 700 அறைகளுடன் நிறுவியதாகக் கருதப்படுகின்றது. பராக்கிரமபாகு தன் சொந்த இராச்சியத்தில் நிறுவிய வசந்தமாளிகை, ஜேதவன எல்லைக்குள் நிறுவிய தாமரை வடிவப்பொய்கை, ஆலாபனக் கட்டிடத்தொகுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பன கட்டடக்கலையில் இவன்காலம் ஏற்பட்ட பிரமிக்கத்தக்க வளர்ச்சிக்கு எடுத்துக்காட்டுகளாகும்.

தெமிழ மகாசாயகிரிவிகாரை, கல்விகாரை, வட்டத்தாககேவிகாரை, போதிகர சைத்தியம், லங்காதிலக விகாரை, பத்மசீமாபாஷாத, ஆலாஹன மருத்துவமனைத் தொகுதி முதலிய சமயக்கட்டடங்களைத் திருத்தியமைத்தும் இருந்தான். அரண்மனைகளையும் அரசமாளிகைகளையும் அழகுபடுத்துவதற்கு நந்தவனங்களையும் சோலைகளையும் அமைத்ததும் இவனது சிறப்பாகும். மங்குல்சோலை, ஆனந்தத்தடாகம், குமாரதடாகம், நெலுந்தடாகம் என்பனவும் இவனால் அமைக்கப்பட்டன. இவை சிறந்த ஸ்நானத் தடாகங்களாகும். இவ்வாறாக கட்டிடக்கலையும் அவன் காலம் வளர்ச்சி பெற்றிருந்தது.

சிற்பக்கலை பொறுத்தும் இவன் காலம் உயர் வளர்ச்சிகள் அடைந்திருந்தது. புத்தபிரானது சிலைகளை விகாரைக் கற்பாறைகளில் செதுக்கும்முறை நன்கு வளர்ச்சியடைந்திருந்தது. இக்காலச் சிலைப்படைப்புக்கள் எல்லாவற்றிலும் மிகச்சிறந்த கலைப்படைப்பாகக் கல்விகாரை சிலைகள் காணப்படுகின்றன. அமராவதிமரபை பின்பற்றி 46அடிநீள சயனசிலையும் 15அடி உயரமான சமாதிசிலையும் கல்விகாரைப் பாறைகளில் செதுக்கப்பட்டிருந்தன. இவை மட்டுமன்றி பொலநறுவை நகரில் காணப்படும் பராக்கிரமபாகு சிலை எனப் புகழப்படும் சிலையும் இக்கால சிற்பக்கலைச் சிறப்பிற்கு மிகச்சிறந்த எடுத்துக்காட்டாகும்.

ஓவியக்கலையும் இவன் காலம் மிகச்சிறப்புப் பெற்றது. உலகியல், இறையியல் ஓவியங்கள் பல தீட்டப்பட்டன. பொலநறுவை அரசமாளிகையில் கல்வித் தெய்வம் சரஸ்வதிக்கென அமைத்த மண்டபத்தில் அதன் வாழ்க்கை வரலாற்றை விளக்கும் ஓவியங்களைத் தீட்டினான். அரச நந்தவனச் சுவரிலும் ஓவியங்கள் தீட்டப்பட்டன. ஆனந்தத்தடாகம் ஓவியங்களால் நிறைந்தது.

இவ்வாறாக கலைப்பண்பாடு பொறுத்து முதலாம் பராக்கிரமபாகு காலம் உயர்வளர்ச்சிகள் ஈட்டப்பட்டது. புதிய கட்டடங்கள் நிறுவியது மட்டுமன்றி பிரமிக்கத்தக்க கட்டிட நிர்மானத்தை ஆக்கியதும் எல்லா வகைக் கட்டிடங்களை கட்டியதும் சிற்ப. ஓவியக் கலையுடன் பொலநறுவையை அழகிய நகரமாக மிளிரச் செய்ததும் இவனது கலாசாரச் சாதனையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நிறைவுரை**

தொகுத்து நோக்கும்போது முதலாம் பராக்கிரமபாகுகால இலங்கைப் பண்பாடானது தனித்துவமானது. அரசியல், பொருளாதார, சமய கலை கலாசாரப் பண்பாடுகளில் இவன் காலம் உயர் வளர்ச்சிகள் பெற்றிருந்தது. அரசியற் பண்பாடு பொறுத்து இலங்கையை ஐக்கியப்படுத்தும் வகையிலும், ஒழுங்குபடுத்தப்பட்ட நிர்வாக அம்சங்களை ஏற்படுத்திய வகையிலும் மற்றும் பொருளாதார, சமயக்கலை, கலாசார சாதனைகள், வெளிநாட்டுத் தொடர்புகள் என்பன பொறுத்தும், இலங்கை முழுவதையும் ஒரு குடையின் கீழ்க் கொண்டுவந்த வகையிலும் முதலாம் பராக்கிரமபாகுகால இலங்கைப் பண்பாடு சிறப்புப்பெறுகின்றது.

**உசாத்துணை**


**தமிழ்**

1. இந்திரபாலா,கா., (2006) *இலங்கையில் தமிழர் ஓர் இனக்குழு ஆக்கம் பெற்ற வரலாறு,* பொ.ஆ.மு 300 பொ.ஆ.1200, குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

2. கிருஸ்ணராசா,செ., (1999) *இலங்கைவரலாறு* பாகம் I, பிறைநில வெளியீடு, கொக்குவில்.

3. கொட்றிங்ரன் ,எச்.டபிள்யூ., (1939) *இலங்கையின் சுருக்கவரலாறு,* இலங்கை அரசாங்க அச்சகம்.

4. சுப்பிரமணியம், செ., (2012) *இலங்கைப் பண்பாட்டுப் பரிணாமத்தின் அடிப்படைகள் (கி.பி 1500 ஆண்டுகள் வரை),* AB Creator & Publishers, கொழும்பு.

5. நடராசா,வே., (1973) *பண்டைய ஈழம்,* பாகம் II, தமிழ்ப்பூங்கா அச்சகம்.

**English**

1. Silva,K.M.D., (2005) *A History of Sri Lanka,* Vijitha Yapa Publication, Colombo.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15



# மக்கியவல்லியின் "இளவரசன்" - ஒரு பார்வை

ம.கௌசிகா
வரலாறு (சிறப்புக்கலை)
நான்காம் வருடம்

## அறிமுகவுரை

ஐரோப்பிய அரசியல் சிந்தனையாளர்கள் வரிசையில் வேறுபட்ட அடிப்படை அரசியலைப் பற்றி விளக்கியவர் மக்கியவல்லி. இவர் இத்தாலி நாட்டில் கி.பி 1459 தொடக்கம் 1527வரை வாழ்ந்து பல அரிய அரசியல் கருத்துக்களை வெளிப்படுத்தச் சென்றுள்ளார். இவரது கருத்துக்கள் யாவும் சூழ்நிலையை முதன்மைப்படுத்துவதாக அமைந்து காணப்பட்டது. ஓர் அரசன் தன் அதிகாரத்தை நிலைநாட்டவும் மென்மேலும் பெருக்கவும் அவன் வஞ்சகம், சூழ்ச்சி, பொய்மை ஆகியவற்றை ஈவிரக்கமற்ற அடக்கு முறையுடன் இணைத்துக் கையாள வேண்டும் எனக் கூறியதுடன் அக்கொடூரமான ஆலோசனையைக் கூறியதற்காக வசைப்பெயர் எடுத்தவராகவும் இவர் கருதப்படுகின்றார். இவரை ஒரு சாரார் பழிபாவங்களுக்கு அஞ்சாத பாதகன் என்று பழித்தனர். இன்னொரு சாரார் கூர்மதி கொண்ட உலகியல் உண்மையைத் துணிவுடன் உள்ளவாறே கூறிய உலகியல் வாதி எனப் போற்றினர். இவரது எழுத்துப்பணி "கஸியானோ" என்ற இடத்திற்குச் சென்றதும் ஆரம்பமானது. இவரது நூல்களுள் "இளவரசன்" (1513), "டைட்டயஸ் லிவியசின் முதல் பத்து ஏடுகளின் மீதான ஆய்வுரை" ஆகிய இரண்டும் மிகவும் புகழ் பெற்றவை. "போர்க்கலை", "புளோரன்ஸ் வரலாறு", "லா மாண்ட்ராகவோலா (இன்றும் நடிக்கப்படும் ஒரு சிறந்த நாடகம்)" ஆகியவை அவருடைய வேறு முக்கிய படைப்புக்களில் குறிப்பிடத்தக்கனவாகும். இந்நூல்கள் அனைத்திலும் இவருக்குப் பெரும் புகழைத் தேடித்தந்தது "இளவரசன்" என்ற நூலேயாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளவரசன் என்ற இவரது நூலை நோக்கும்போது அதில் இத்தாலியை உலகில் உயர்ந்த அந்தஸ்துடைய நாடாக மாற்ற விரும்பினாரே தவிர இவர் உலகிற்கு ஒரு அரசியல் கோட்பாட்டைத் தர முயலவில்லை என்பது விளங்கும். இவரது மனதில் ஏற்பட்ட சிந்தனைகளை இளவரசன் விபரமாகச் சித்தரிக்கின்றது. மிகத்துல்லியமான அரசியல் எண்ணக் கருத்துக்களை இதன்மூலமாக இவர் வெளிப்படுத்தியுள்ளமையைக் காணலாம். அரசுத் தலைவருக்கு நடைமுறைக்கு உகந்த அறிவுரைகளைக்கூறும் ஒரு பாடநூலாக இளவரசன் என்ற நூலைக் கொள்ளலாம்.

இத்தாலியில் உள்ள புளோரன்சில் 1496 இல் மக்கியவல்லி பிறந்தார். இவருடைய தந்தை ஓர் வழக்கறிஞர். அவர் ஓர் உயர் குடியினராயினும் இவர் செல்வ நிலையில் சீராக இருக்கவில்லை. இத்தாலிய மறுமலர்ச்சி இயக்கம் உச்சக்கட்டத்தில் இருந்தபோது மக்கியவல்லி வாழ்ந்தவர். இவருடைய ஆயுட்காலம் முழுவதிலும் இத்தாலி பல சிறிய சிற்றரசுகளாகப் பிளவுபட்டுக் கிடந்தது. அதேசமயம் பிரான்ஸ், ஸ்பெயின், இங்கிலாந்து போன்றவை ஒருங்கிணைந்த நாடுகளாக விளங்கின. எனவே மக்கியவல்லியின் காலத்தில் இத்தாலி பண்பாட்டில் உயர்ந்திருந்தபோதிலும் இராணுவ வலிமையில் மிகவும் ஆற்றல் குன்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவரது இளமைப் பருவத்தில் வீறார்ந்த லோரன்சோ என்ற புகழ்பெற்ற மெடிசி அரசர் புளோரான்சை ஆண்டு வந்தார். ஆனால் 1492 இல் லோரன்சோ இறந்துவிடவே சில ஆண்டுகளுக்குப் பிறகு மெடிசி குடும்பத்தினர் புளோரன்சிலிருந்து விரட்டியடிக்கப்பட்டனர். தொடர்ந்து புளோரன்ஸ் குடியரசானது. 1498 இல் 29 வயதான மக்கியவல்லி புளோரன்ஸ் ஆட்சிப் பணியில் ஓர் உயர் பதவியைப் பெற்றார். அன்றுமுதல் 14ஆண்டுகள் அவர் புளோரன்ஸ் குடியரசுக்காகப் பணிபுரிந்தார். அக்குடியரசின் சார்பில் தூதுப்பணியாளராக பிரான்ஸ், ஜேர்மனி போன்ற நாடுகளுக்குச் சென்று வந்தார். இத்தாலியிலும் விரிவாகச் சுற்றுப் பயணங்கள் மேற்கொண்டார்.

புளோரான்ஸ் குடியரசு 1512 இல் கவிழ்க்கப்பட்டது. மெடிசி மரபினர் மீண்டும் ஆட்சிக்கு வந்தனர். மக்கியவல்லியும் அவரது பதவியிலிருந்து நீக்கப்பட்டார். பின்னர் கஸியானோ என்ற பண்ணையில் தனிமையில் வாழ்ந்தார். இக்காலத்திலேயே ஏராளமான நூல்களை இவர் எழுதினார். அவற்றுள் "இளவரசன்" என்ற நூல் மிகவும் முக்கியத்துவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுகின்றது. இந்நூலில் அரசு, அரசன் பற்றிய செய்திகளே உள்ளடக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

இத்தாலியில் ஓர் வலுவான ஆட்சி தேவை எனச் சிந்திக்க வைத்த முதலாவது நிகழ்வு 1494 இல் இத்தாலிமீது பிரான்ஸ் மன்னன் 8 ஆம் சார்லஸ் படையெடுத்தமையாகும். அவ்வேளை இத்தாலி ஐரோப்பாவின் போர்க்களமாக மாறியது. இதனால் பல உயிரிழப்புகள் தோன்றின. இத்தாலி முழுவதுமே பிரான்சின் ஆதிக்கத்தினுள் சென்று விடுமோ என்ற அச்சம் உருவாகியது. இந்நிலையில் பிரிந்துகிடந்த இத்தாலியின் ஆட்சிப்பகுதிகள் சில ஒன்று சேர்ந்தன. இதன் மூலம் பிரான்சியரை எதிர்க்க முடிந்தது.

பிரான்ஸ், ஸ்பெயின் போன்ற நாடுகள் சிதறிக்கிடந்த இராட்சியங்களை ஒன்றிணைத்து வலுமிக்க ஆட்சியை நிறுவியதால் அவை பெரும் வல்லரசுகளாக அன்றைய காலகட்டத்தில் விளங்கின. இதனைக் கண்ணுற்ற மக்கியவல்லியும் "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" என்னும் உண்மையை உணர்த்த முயன்றார். சிதறிக் கிடக்கும் இராட்சியங்கள் அனைத்தும் ஒரேதலைமைத்துவத்தின்கீழ் அணிதிரண்டு இத்தாலியை வல்லரசாக்க வேண்டும் என வலியுறுத்தினார். இதனை "இளவரசன்" என்னும் நூல் கூறுகையில் "வல்லமை மிக்க ஒருவன் வலிய படையையும் தீர்த்து விடாத செல்வத்தையும் கொண்டிருக்கும்போது அச்சமுடைய மக்கள் அந்நியரை அஞ்சாது போரிட்டு வெற்றிகொண்டு வாழ்வார்கள்" என்கின்றது. இதனைக் கொண்டு வலிமை மிக்க ஓர் அரச கட்டமைப்பை இத்தாலியில் உருவாக்க மக்கியவல்லி விரும்பியுள்ளார் என்பதனை அறியமுடிகின்றது. இத்தாலியை வல்லரசாக்கும் முயற்சியே இளவரசனில் கூறப்பட்டுள்ளது. இதில் காணப்பட்ட அரசு பற்றிய செய்திகளை நோக்கும்போது பல்வேறுபட்ட புத்திமதிகளையும் எச்சரிக்கைகளையும் கூறுவதாக உள்ளது.

இந்நூலில் வலியுறுத்தப்படும் கருத்து இதுதான் "ஆட்சியைப் பிடிக்க விழையும் ஓர் இளவரசன், அறநெறிக் கொள்கைகளை அடியோடு புறக்கணித்து விடவேண்டும். வலிமை, சூழ்ச்சி ஆகிய இரண்டையுமே முற்றிலுமாக நம்பவேண்டும். அனைத்திற்கும் மேலாக ஓர் அரசு மிகுந்த ஆயுத பலம்கொண்டதாக இருக்கவேண்டும். தன் சொந்த நாட்டுக் குடிமக்களிலிருந்து திரட்டப்பட்ட இராணுவம் மட்டுமே நம்பத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூலிப்படைகளை அல்லது மற்ற அரசுகளில் படைகளை நம்பியிருக்கும் அரசு எப்போதும் ஆற்றலற்றதாகவும், ஆபத்துக்குள்ளாகக் கூடியதாகவுமே இருக்கும்".

ஓர் இளவரசனானவன் தன் குடிமக்களின் ஆதரவினைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என மக்கியவல்லி அறிவுறுத்துகிறார். இல்லையெனில் ஆபத்துக் காலங்களில் அவனுக்குப் புகலிடம் இருக்காது. சில சமயம் ஒரு புதிய அரசன் தன் அதிகாரத்தைப் பாதுகாத்துக்கொள்வதற்காகக் குடிமக்கள் விரும்பாத சில செயல்களைச் செய்ய வேண்டியிருக்கும் என்பததை மக்கியவல்லி உணர்த்துகிறார். எனினும் ஆட்சியைப் பிடித்ததும் ஓர் அரசன் எல்லாக் கொடுமைகளையும் உடனடியாகச்செய்து முடித்துவிடவேண்டும். அன்றாடம் நிகழும்படி செய்யலாகாது. குடிமக்களுக்கான நன்மைகளை அவர்கள் கொஞ்சம் கொஞ்சமாக அனுபவிக்கும் வகையில் சிறிது சிறிதாக அளிக்க வேண்டும் என்று அவர் ஆலோசனை கூறுகிறார்.

மேலும் ஓர் இளவரசன் வெற்றிகரமாக ஆட்சிபுரிய வேண்டுமானால், தன்னைச் சுற்றித் திறமையும் பற்றுறுதியும் வாய்ந்த அமைச்சர்களை வைத்துக்கொள்ள வேண்டும். அதேசமயம் முகப் புகழ்ச்சி செய்பவர்களைத் தவிர்த்து ஒதுக்கிவிட வேண்டும் என்று மக்கியவல்லி எச்சரிக்கை செய்கிறார். நாடு விரிவுபடுத்தப்படுவதனை ஆதரித்தார். அரசனது அதிகார எல்லையினை அதிகரிப்பது தொடர்பான விடயங்களே இவரது நூலில் காணப்படுகின்றன. அரசு தன்னுடைய எல்லைகளைப் பெருக்க வேண்டும் அல்லது அழித்துவிட வேண்டுமென்பது இவருடைய எண்ணமாகும். உரோமின் கொள்கையினை இவர் பாராட்டினார். தந்திரமும் அறிவுடைமையும் அரசியலுக்கு இன்றியமையாதன என்பது மக்கியவல்லியின் வாதமாகும்.

பழைய நாட்டினை ஆட்சி செய்வது இலகுவானதாகவும் அதேநேரத்தில் புதிதாகச் சேர்த்துக்கொள்ளப்பட்ட பிரதேசங்களை நிர்வாகம் செய்துகொள்வது சிரமமானதெனவும் குறிப்பிடுகின்றார். புதிய பகுதிகளை அரசன் போர் செய்து கொள்வதன் மூலமாகவே பெருமளவுக்கு இணைத்திருப்பான். இதனால் அப்பகுதிகளில் அவனுக்குப் புதியதாக பல எதிரிகள் தோன்றியிருப்பர். அரசனது ஆதரவாளர்கள் மத்தியிலும் தகுந்த பரிசில்கள் மற்றும் வெகுமதிகள் பெற்றுக் கொள்ளாமையினால் அதிருப்தியான நிலையும் காணப்படும். தான் கைப்பற்றிக் கொண்ட பிரதேசங்களில் அரசனே நேரடியாகச் சென்று சில காலத்திற்காவது சட்டம் ஒழுங்கினை மேற்பார்வை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து கொள்ளுதல் வேண்டும். பல காலமாக ஒரு குறிக்கப்பட்ட சட்டதிட்டங்களின் கீழ் இயங்கி வந்த ஒரு பகுதியினைத் தான் கைப்பற்றி அதனைத் தன்னுடைய கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்து இயக்க வேண்டுமாயின் அற்கு மக்கியவல்லி சில ஆலோசனைகளைக் கூறுகின்றார். அதாவது

* அங்கு ஏற்கனவே நடைமுறையில் காணப்படுகின்ற சட்டதிட்டங்களை முற்றாக ஒழித்தல் வேண்டும்.
* அரசன் அப்பகுதிகளுக்குச் சென்று சிலகாலம் ஆட்சி நடாத்த வேண்டும்.
* கைப்பற்றப்பட்ட பிரதேசத்தினை அவர்கள்பால் விட்டுவிட்டு அவற்றிடமிருந்து திறையோ அல்லது வரிகளையோ அறவிட்டுக் கொண்டு அவற்றுடன் சுமூகமான உறவினை ஏற்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

இவற்றில் இறுதியாக அவரால் பரிந்துரை செய்யப்பட்ட நடவடிக்கையே சிறந்ததாகக் கருதுகின்றார். ஏனெனில் முதலிரண்டு வழிமுறைகளும் பெருமளவிற்குச் சாத்தியப்படாத தன்மைகள் கொண்டவைகளாகக் காணப்படுகின்றன. இதற்கு எடுத்துக்காட்டாக ஸ்பார்ட்டன்களையும், உரோமானியர்களையும் **இவர் கொண்டுள்ளார்.** கிரேக்க இனத்தவர்களில் ஒரு பிரிவினரான ஸ்பார்ட்டா நகரத்தினர் எதென்ஸ், தீப்ஸ் போன்றவற்றினைக் கைப்பற்றி அங்கு அதிகார வர்க்க ஆட்சியினை ஏற்படுத்தியிருந்தனர். இறுதியில் அவற்றினை அவர்கள் இழந்தனர். உரோமானியர்களும் காபுவா, கார்தேஜ், நூமாண்டியா போன்ற நகரங்களைக் கைப்பற்றி அப்பகுதிகளில் அழிவினை உண்டாக்கினர். இறுதியில் அந்நகரத்தினை அவர்கள் இழக்க வேண்டியவரானார்கள். கிறீஸினைக் கைப்பற்றிய உரோமானியர்கள் அப்பகுதிகளில் காணப்பட்ட நடைமுறைகளையும் சுதந்திரங்களையும் சட்டதிட்டங்களையும் மாற்றாமல் ஆட்சி மேற்கொண்டபோதும் அவர்களால் வெற்றி பெறமுடியவில்லை.

7 ஆவது அத்தியாயத்தில் அதிஷ்ரத்தினால் சாதாரண நிலையிலிருந்து அரசர் பதவியை அடைந்தவர்கள் மிகவும் சுலபமாக முன்னேறிய நிலையினை அடைந்துவிடுவார்கள் அதேநேரத்தில் அவ்விடத்தில் அவர்களால் நிலைத்து நிற்பதென்பது வினாவுக்குரியதே. அவர்கள் விரைவில் காணாமல் போய்விடுவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்காகக் கிரேக்க நாட்டின் வரலாற்றில் சிலவற்றனை ஆதாரமாக எடுத்துக்காட்டுகின்றார். எதிர்பாராத விதமாக தலைதூக்குகின்ற செடிகொடிகளைப் போன்றவை. இவை புயலில் சாயாதபடி துணை உறவுகளை ஏற்படுத்திக்கொள்ள முடியாமல் போகின்றன. இவற்றுக்கு விதிவிலக்கான சம்பவங்களும் உள்ளன. சிலர் அதிஷ்ரத்தின் பிரகாரம் வந்ததை நழுவவிடாது பார்த்துக்கொள்வர்.

10 ஆவது அத்தியாயத்தில் அரசனின் ஆற்றலினை அளவீடு செய்கின்ற வழிமுறைகள் தொடர்பாகக் கூறுகின்றார். அரசன் தன்னுடைய சொந்த வள ஆதாரங்களினைக்கொண்டு சுயமாக நிலைத்து நிற்கக்கூடிய வலிமை உள்ளதா? அல்லது எப்போதும் பிறரது துணை தேவையா? என்பதனை அவதானிக்க வேண்டும். படையெடுத்து வருகின்ற எதிரிகளைப் போதுமான படைகளைத் திரட்டிப் போர்க்களத்தில் எதிர்க்கக்கூடிய அரசர்களே தற்சார்பு படைத்த தன்னிறைவாளராக உள்ளனர். எதிர்க்க முடியாதவர்கள் கோட்டைக்குள் பதுங்கிக் கொள்வர். இவர்கள் பிறரது துணையினை நாடுபவர்களாக உள்ளனர். பழமையான அரசர்களுக்கும் புதிய அரசர்களுக்கும் முக்கியமான அடிப்படைகளாக விளங்குபவை சிறந்த சட்டங்களும், அரசனது படைகளுமே. அரசில் சிறந்த படைப்பலம் காணப்படாத நிலையில் நல்ல சட்டங்கள் இருப்பதற்கான சந்தர்ப்பங்கள் இல்லை. இதனால் எங்கு படைபலம் சிறந்த முறையில் உள்ளதோ அந்த நாட்டில் நல்ல சட்டங்கள் காணப்படும். அரசனுக்குரிய தற்காப்புப் படைகளை சொந்தப்படைகள் எனவும் துணைப்படையினர், கூலிப்படையினர், இரண்டும் கலந்த படையினர் எனவும் வகைப்படுத்துகின்றனர். இரண்டாவது பிரிவினரை நம்பி அரசன் ஆட்சியினை மேற்கொள்ள முடியாது அவ்வாறு செய்வது ஆபத்தானது. அவர்கள் கட்டுப்பாடற்றவர்கள், விசுவாசமற்றவர்கள், பகைவர்களைக் கண்டவுடன் பதுங்கிவிடுவார்கள். இத்தாலிய அரசு அழிந்தமைக்கு இதுவே காரணமென எண்ணுகின்றார். இவை பற்றித் தன்னுடைய நூலின் 12 ஆவது அத்தியாயத்தில் குறிப்பிடுகின்றார்.

சமயத்தின் பின்னணியில் இயங்குகின்ற அரசுகள் எப்போதும் நிலைத்திருக்க மாட்டாது. சிறந்த அரசுகள் உறுதித்தன்மையற்றவை. இறுதியில் இவை சர்வதிகாரிகளிடம் சென்றுவிடும். மதச்சார்பான அரசுகளின் குறைபாடுகள் பலவற்றினை விபரிக்கின்றார். ஒற்றுமையின்மை, பேராசை, நன்னடத்தைக் கட்டுப்பாடுகள் இருக்கமாட்டாது போன்ற இயல்புகளை அவை கொண்டிருக்கும். கடவுளிடம் பயமோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்தியோ இருக்கமாட்டாது. பலம் வாய்ந்த படைகளைக் கொண்டிருக்கமாட்டாது. சோம்பேறிகளாகக் காணப்படுவர். அந்நியப்படைகளிடம் தங்களது வீரத்தினைக் காட்டி தோற்கடிக்கப்படுவார்கள். இத்தகைய பண்புகள் இருப்பதன் காரணமாகவே இத்தாலி தோற்கடிக்கப்பட்டது எனக் கூறுகின்றார்.

அடுத்து அரசனானவன் எல்லாவற்றிலும் சிறந்தவனாக விளங்குதல் வேண்டும். அவன் போர்க்கலையில் வல்லவனாக இருத்தல் வேண்டும். அவன் தன்னுடைய படைகளையும் மக்களையும் நம்புதல் வேண்டும். சிறந்த அரசனாக இல்லாதவனை வீரர்களே ஒதுக்கிவிடுவார்கள். அரசன் வேட்டைக்குச் செல்லுவதன் முக்கியத்துத்தையும் மக்கியவல்லி குறிப்பிடுகின்றார். ஓய்வு காலங்களில் அவன் வேட்டைக்குச் செல்லும்போதுதான் அவனால் தன்னுடைய எல்லைகளின் அளவினை அறிந்துகொள்ள முடிவதுடன் அவனால் சிறப்பாகவும் இயங்க முடிகின்றது என்று இவருடைய இளவரசன் என்ற நூலில் குறிப்பிடுவதைக் காணலாம்.

இளவரசன் என்ற நூலானது அரசன் மக்களுடனும் தன்னுடைய நண்பர்களுடனும் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமெனக் கூறுகின்றது. மன்னன் ஒழுக்கமற்றவனாக இருந்தாலும்கூட அவனுடைய அப்பண்பு மக்களிடம் தெரியவராமல் நடந்துகொள்ள வேண்டும். வரிக்கொடுமையினால் மக்கள் பாதிக்கப்படுவதனை அரசன் விரும்புதல் கூடாது. இதனால் அவன் மக்களிடம் குறைந்தளவான வரியையே விதித்தல் வேண்டும். தன்னுடைய நாட்டினது செல்வத்தினைக் கொண்டும் அரசன் தான் அடிமைப்படுத்திய நாட்டின் செல்வத்தைக் கொண்டும் மக்களின் முன்னேற்றத்திற்காகச் செலவிடலாம். அரசன் சிக்கனமாக நடந்துகொள்ளுதல் வேண்டும். இவ்வாறான நன்மைகள் கொண்ட ஆட்சியாளர்களே அரசினைச் சிறப்பாக நடத்தியுள்ளனரென்பது மக்கியவல்லியின் கருத்து. நாடுகள் இரண்டு சமபலமான நிலையில் மோதுகின்ற சமயத்தில் அரசன் எந்த நாடு வெற்றி பெறுகின்றதென அறிந்துகொண்டு அவற்றுடன் சேர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

16 ஆவது அத்தியாயத்தில் அரசன் வள்ளல் என்ற பெயரினைப் பெற்றுக் கொள்வதென்பது சிறப்பானது எனத் தெரிவிக்கப்படுகின்றது. ஆனால் பேரும் புகழும் ஈட்டித்தர முடியாத முறையில் மேற்கொள்ளப்படுகின்ற கொடை அரசனுக்குத் தீங்காக அமைந்துவிடும். அரசன் கொடைகளை வெளியுலகிற்குத் தெரியாதபடி கொடுத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லதல்ல ஏனெனில் அது பிறருக்கு அவனைப் பற்றித் தெரியவராது. மேலும் அவனை உலோபி எனக் காட்டிவிடும்.

அரசன் மக்களிடம் வெறுப்பினைச் சம்பாதித்துக் கொள்ளாமல் நடந்துகொள்கின்ற முறை பற்றிப் பிறிதொரு அத்தியாயத்தில் மக்கியவல்லி குறிப்பிடுகின்றார். குறிப்பாக மக்களுடைய சொத்துக்கள், பெண்கள் ஆகியவற்றினை அவன் கவர்ந்து கொள்ளுதல் கூடாது. அரசன் மக்களது மனநிலையினை நன்கு புரிந்து கொள்ளுதல் வேண்டும். தகுதியும் திறமையும் கொண்டவர்களை அரசன் தனக்கு ஆதரவாளர்களாக இணைத்துக் கொள்ளுதல் அவசியம். புகழ்ச்சிக்கு அரசன் அடிமைப்படுதல் கூடாது. அதிகமான அரசர்கள் அழிவதற்கு இதுவே முக்கியமான காரணமாகும். மன்னன் மக்கள் தன்னை எவ்வாறு எண்ணவேண்டும் என்பதனையும் இளவரசன் குறிப்பிடுகின்றது. அரசன் விருப்பமானவராக இருப்பதுடன் அவன் அச்ச உணர்வினை ஏற்படுத்தக்கூடியவனாகவும் இருக்க வேண்டும். "குள்ள நரியின் தந்திரத்தினையும் சிங்கத்தின் வலிமையினையும்" அவன் பெற்றிருக்க வேண்டுமென பதினேழாவது அத்தியாயத்தில் குறிப்பிடுகின்றார். அத்துடன் அரசன் மக்களிடம் பரிவு, உண்மையான அன்பு கொண்டவன் என்ற தோற்றத்தினை ஏற்படுத்துதல் வேண்டும். மேலும் 23 ஆவது அத்தியாயத்தில் பொய்யான புகழ்ச்சிக்கு அரசன் அடிமைப்படக்கூடாது. விவேகமான முறையில் அரசர்கள் செயற்பட்டாலன்றி இதனைத் தடுக்க முடியாது எனக் கூறப்படுகின்றது.

25 ஆவது அத்தியாயத்தில் எல்லாவற்றுக்கும் விதியே காரணமெனக் குறிப்பிடுகின்றார். இருப்பினும் முழுமையாக விதியினை நம்பாமல் சில விடயங்களை நாமே தீர்மானித்துக் கொள்ளலாம் என்ற முடிவுக்கும் வருகின்றார். "இளவரசன்" என்ற நூலின் கடைசிப்பகுதி இத்தாலியினைக் காட்டுமிராண்டிகளிடமிருந்து காப்பாற்ற வேண்டுமென்று கூறுகின்றது. இவ்"இளவரசன" என்ற நூலானது மதம், பொருளாதாரம் போன்ற சில விடயங்கள் தொடர்பாகப் பெருமளவு குறிப்பிடவில்லை. அரசியல் ஒன்றுதான் நாட்டினைக் காக்குமென்ற இவருடைய கருத்தானது இவருடைய அரசியல் அனுபவத்திற்கும் பொருத்தமற்றதாகக் காணப்படுகின்றது. அதேநேரத்தில் அரசியல்துறை சார்ந்தவர்களுக்கு இளவரசன் வழிகாட்டியாக உள்ளான் என்பதனையும் மறுக்கமுடியாது. இவருடைய கருத்துக்கள் பல அன்றாட வாழ்க்கைக்குப் பொருந்தும் வகையில் அமைந்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ் **"இளவரசன்"** என்ற நூலை சர்வாதிகாரிகளுக்கு வழிகாட்டி என்றும் அழைப்பதுண்டு. மக்கியவல்லி பொதுவாகச் சர்வதிகாரத்தைவிடக் குடியரசுமுறை அரசாங்கத்தையே ஆதரித்தார் என்பது அவருடைய வாழ்க்கையிலிருந்தும் மற்ற நூல்களில் இருந்தும் தெரிகின்றது. ஆனால் இத்தாலியின் அரசியல், இராணுவம் போன்றவற்றின் கையாலாகாத்தனத்தைக் கண்டு ஆத்திரமடைந்து நாட்டை ஒற்றுமைப்படுத்த ஓர் வல்லமை வாய்ந்த இளவரசன் தேவை என்பதை உணர்ந்து "இளவரசனை" எழுதினார். இதில் அரசியல் கருத்துக்களே முக்கியம் பெறுகின்றன. அரசு பற்றி பல்வேறு செய்திகளை பல்வேறு பாகங்களில் குறிப்பிட்டுள்ளமையைக் காணலாம். இவரைப் பலர் தூற்றியபோதும் பலர் இவரையும் இவரது கருத்துக்களையும் புகழ்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. குறிப்பாக இத்தாலிய சர்வதிகாரியான முசோலினி இவரைப் புகழ்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. ஏராளமான பல அரசியல் தலைவர்கள் இந்நூலைத் தமது தலையணைக்கு அடியில் வைத்தே உறங்கினர் எனலாம். இன்றும் கூட பல அரசியல் தலைவர்களுக்கு மக்கியவல்லியின் **"இளவரசன்"** என்ற நூல் இன்றியமையாத ஒன்றாகவே உள்ளது. ஓர் அரசனானவன் எவ்வாறு இருக்கவேண்டும் எனவும் ஓர் அரசு எவ்வாறு இருக்கவேண்டும் என்பதையும் இந்நூலில் இவர் விளக்கியுள்ளார் என்பதில் ஐயமில்லை.

**நிறைவுரை**

ஒட்டுமொத்தமாகத் தொகுத்து நோக்கும்போது மக்கியவல்லியின் **"இளவரசன்"** என்னும் நூலானது கிரேக்க உரோம சிந்தனைகளைவிட மாறுபட்ட தனித்துவம் மிக்க சிந்தனைகளை முன்வைப்பதாக விளங்கும் தன்மையை வெளிக்காட்டி நிற்கும் அதேவேளை அரசியலை இறையாண்மை மிக்கதாகவும், தத்துவார்த்தம் மிக்கதாகவும் விளக்கி, சமய நம்பிக்கைக்கும் அரசியலுக்கும் உள்ள வேறுபாட்டையும் பாதுகாப்பு மிக்க அரசை அரசன் உருவாக்க வழி செய்த நூலாகவும் விளங்குகின்றது. இதனை அரசியல் கோட்பாட்டுக்கு அப்பால் நின்று தன்னாதிக்க அரசினை வலியுறுத்தும் பொருட்டு மக்கியவல்லி உருவாக்கியிருப்பதனைக் காணமுடிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உசாத்துணை

1. அம்பலவாணர் சிவராஜா, (2008) *அரசறிவியல் மூலதத்துவங்கள்*, குமரன் புத்தக இல்லம், கொழும்பு, சென்னை.

2. அருந்தவராஜா,க., (2013) *அரசியல் சிந்தனையாளர்கள்*, அஞ்சு வெளியீட்டகம், நல்லூர்.

3. குருவிக்கரம்பை, சு.வேலு., (2004) *உலகைக் கவர்ந்த படைப்பாளிகள்*, பொன்னி அச்சக வெளியீடு, சென்னை.

4. மைக்கேல் ஹெச், ஹார்ட், (1998) *புதிய வரலாறு படைத்தோரின் வரிசை முறை*, மீரா பப்ளிகேசன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16



# கர்நாடகப்போர்கள் - ஒரு நோக்கு

ப.ரஜீவனா

வரலாறு (பொதுக்கலை)

மூன்றாம் வருடம்

## அறிமுகவுரை

கிறிஸ்தவ சகாப்தத்தின் ஆரம்ப காலங்களிலிருந்தே ஐரோப்பியர்கள் இந்தியாவுடன் பல்வேறு வகையான தொடர்புகளை கொண்டிருந்தனர். அவ்வாறு இந்தியாவுடன் தொடர்புகளை ஏற்படுத்தியவர்களில் போர்த்துக்கேயர்கள், ஒல்லாந்தர்கள், ஆங்கிலேயர்கள் என்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களில் ஆங்கிலேயர்களின் இந்திய வருகையானது அங்கே புதியதொரு அத்தியாயத்தினை ஆரம்பித்து வைத்தது எனலாம். இந்தியாவில் ஏற்பட்ட மொகலாய அரசின் வீழ்ச்சி, மராத்திய இந்து அரசின் பின்னடைவு ஆகிய சூழ்நிலைகளின் பின்னணியில் வணிகம் செய்வதற்காக மட்டுமே இந்தியாவுக்கு வந்த ஆங்கிலேயர்கள் தங்களது பேரரசை அங்கு உருவாக்கினார்கள். காலப்போக்கில் இந்தியாவைக் கைப்பற்றுவதற்குப் போர்க்களங்களின் மூலமே ஆங்கிலேயர்கள் பாதையமைத்துக் கொண்டனர்.

கர்நாடக தேசமென ஆங்கிலேயர்களால் அழைக்கப்பட்ட பகுதிகளில் ஆங்கிலேயர்களும் பிரெஞ்சுக்காரர்களும் போட்டியிட்டுக்கொண்டு வர்த்தக நிலையங்களினை அமைத்திருந்தனர். இரண்டு பிரிவினர்களும் கர்நாடக அரசுடன் நட்புப் பாராட்டி வந்தனர். இத்தகைய பின்னணியில் ஆங்கிலேயர்களும் பிரெஞ்சுக்காரர்களும் மோதிக்கொள்ள வேண்டிய சூழ்நிலைகளுக்கு ஆளாகினர். பொதுவாக இவர்களுக்கிடையிலே நடைபெற்ற போர்கள் சென்னை மற்றும் பாண்டிச்சேரியினை அண்டிய பகுதிகளிலேயே நடைபெற்றன. 18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்தியாவை அடக்கி ஆளப்போவது நீயா? நானா? என்ற போட்டி ஆங்கிலேயர்களுக்கும் பிரெஞ்சுக்காரர்களுக்குமிடையே ஏற்பட்டது. ஐரோப்பாவிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்விரு நாடுகளுக்குமிடையே பல்வேறு களங்களில் ஏற்பட்ட போர்களின் சாரல் இந்தியாவிலும் அடித்தது. அப்போர்களில் கி.பி 1746 முதல் கி.பி 1763 வரை இந்தியாவில் நடைபெற்ற மூன்று கர்நாடகப் போர்கள் பிரெஞ்சு செல்வாக்கை ஒழித்துவிட்டு ஆங்கிலேயர்கள் இந்தியாவில் தங்கப்போகிறார்கள் என்பதை உறுதி செய்ததுடன் இப்போர்கள் மூன்றும் ஏதோ ஒரு வகையில் முக்கியத்துவம் பெறுகின்றன.

முதலாவது கர்நாடகப்போர் (1746 – 1748)

ஐரோப்பாவில் நடைபெற்ற ஆஸ்திரிய வாரிசுரிமைப் போரின் வெளிப்பாடாக முதலாவது கர்நாடகப் போர் ஆங்கிலேயர்களுக்கும், பிரெஞ்சுக்காரர்களுக்கும் இடையில் தமிழக எல்லையில் நடைபெற்றது. ஆங்கிலேய அரசாங்கம் தளபதி பேர்ணாட் (Burnte) என்பவரை ஓர் போர்க் கப்பலுடன் சென்னைக்கு உதவி செய்கின்ற நோக்குடன் அனுப்பியது. ஆங்கிலேய முற்றுகையை எதிர்த்து ஓர் அறிக்கை விடுமாறு பிரெஞ்சு ஆளுனரான டியூப்ளே கர்நாடக நவாப்பிடம் கேட்டதற்கு இணங்க அன்வாருதீனும் அவ்வாறே செய்தமையால் பாண்டிச்சேரியைத் தாக்காமல் பேர்ணாட் திரும்பினார். 1746 இல் தக்கணம் வந்தடைந்த பிரெஞ்சுப்படை சென்னையினை முற்றுகையிட்டு அதனைக் கைப்பற்றியது. இருப்பினும் பிரெஞ்சுப்படைத் தளபதி லாபேர்ட்ன்னே பெருமளவு தொகையினை இலஞ்சமாகப் பெற்றுக்கொண்டு சென்னையை ஆங்கிலேயரிடம் ஒப்படைத்தார். இக்கட்டத்தில் டியூப்ளே சென்னையைக் கைப்பற்றுவதற்கு தனக்கு அனுமதி அளித்தால் அதனைக் கைப்பற்றி அன்வாருதீனிடம் ஒப்படைப்பதாக வாக்குறுதியளித்தார். தொடர்ந்து சென்னையினை டியூப்ளே கைப்பற்றிக் கொண்டபோதிலும் அதனை நவாப்பிடம் ஒப்படைக்கத் தவறியமையால் அன்வாருதீன் கோபமடைந்தார். உடனே சென்னையை நோக்கித் தனது மகன் மாபஸ்கான் தலைமையில் படையினை அனுப்பினார். ஆனால் பிரெஞ்சுப்படை சாந்தோமில் அடையாறு ஆற்றங்கரையில் மாபஸ்கான் படையைத் தோல்வியுறச் செய்தது.

சென்னையை ஆங்கிலேயர்கள் இழந்து விட்ட செய்தி இங்கிலாந்துக்கு எட்டியது. 1748 ஆம் ஆண்டு தளபதி பாஸ்கவென் (Boscawen) 13 கப்பல்களுடன் கர்நாடகத்திற்கு அனுப்பப்பட்டார். இவர்கள் பாண்டிச்சேரியினை முற்றுகையிட்டுக்கொண்டபோதும் அவர்களால் அப்பகுதியைக் கைப்பற்றிகொள்ள முடியவில்லை. அதேபோன்று டியூப்ளே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்னை புனித டேவிற் கோட்டையினைக் கைப்பற்ற 18மாதங்கள் வரை போராடிய போதும் அவரால் அதனைக் கைப்பற்றிக் கொள்ள முடியவில்லை.

மேலும் ஐரோப்பாவில் நடைபெற்ற ஆஸ்திரிய வாரிசுரிமைப் போர் முடிவுற்றது. இறுதியில் அதாவது 1748 இல் செய்து கொள்ளப்பட்ட எய்க்-லமடிா-சப்பேல் (Treaty of Aix-La-Chapelle) உடன்படிக்கையின் மூலம் இந்தியாவிலும் இப்போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. இதன்பிரகாரம் சென்னை ஆங்கிலேயர்களுக்குத் திருப்பிக் கொடுக்கப்பட்டது. வடஅமெரிக்காவிலுள்ள லூயிஸ்பர்க் பிரெஞ்சுக்காரர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இதுவே முதலாவது கர்நாடகப் போராகும். இந்த வாரிசுரிமைப் போரானது ஐரோப்பா, ஆசியா மற்றும் அமெரிக்க கண்டங்களில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. இந்தியாவிலும் அமெரிக்காவிலும் இப்போர் ஆங்கில - பிரெஞ்சு ஆதிக்கப் போராக நடைபெற்றது.

முதலாவது கரர்நாடகப் போரானது பல்வேறு விளைவுகளை ஏற்படுத்தியது. இப்போரினால் ஆங்கிலேயருக்கோ பிரெஞ்சுகாரருக்கோ எவ்விதப் பலனும் ஏற்படவில்லை. சென்னையை ஆங்கிலேயர்களுக்குக் கொடுத்துவிட்டு லூயிஸ்பர்க்கை பிரெஞ்சுக்காரர்கள் பெற்றுக்கொண்டனர். இந்தியப் படைகளின் பலவீனத்தையும் பிரெஞ்சுப்படைகளின் பலத்தையும் பறைசாற்றியது. ஆங்கிலேயர்கள் பக்கமாக நவாப்புக்கள் சேர்ந்துகொண்டனர். ஆங்கிலேயர்களின் கடற்படை வலிமை நன்கு வெளிப்பட்டது. அன்வாருதீனுடைய புகழ் குன்றியது. டியூப்ளேயின் சிறந்த அணுகுமுறைக்குக் கிடைத்த வெற்றியாகக்கூட இப்போரினைக் குறிப்பிடலாம். இந்தியாவின் நிலப்பகுதிகள் பொறுத்து மாற்றங்கள் எவையும் ஏற்படவில்லை. உண்மையில் இப்போரானது இந்தியாவினை அந்நியர்கள் கைப்பற்றுவதற்கான வாய்ப்பினை வழங்குவதற்கான வெளிப்படையான அழைப்பாகும். அந்நிய சக்திகள் இரண்டினதும் பகைமையுணர்வினை மென்மேலும் அதிகரிக்கும் வண்ணமாகவும் காணப்பட்டது. முதலாவது கர்நாடகப்போரால் அந்நியர் இந்நாட்டில் தம் ஆட்சியை ஏற்படுத்தும் நம்பிக்கையைப் பெற்றனர். இந்த நம்பிக்கையின் முதிர்ச்சியே இரண்டாம் கர்நாடகப்போராக மாறியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இரண்டாவது கர்நாடகப்போர் (1749 - 1759)**

முதலாவது கர்நாடகப் போரின் தொடர்ச்சியாக 1749 – 1759 வரையான காலப்பகுதியில் இந்தியாவில் நடைபெற்ற போரே இரண்டாம் கர்நாடகப் போராகும். முதலாம் கர்நாடகப் போரின் பின்னர்கூட இரண்டு பிரிவினர்களுக்கிடையிலும் பகைமையுணர்வானது குறைந்தபாடில்லை. இப்போரின் வெற்றிகள் இந்தியாவில் தத்தம் ஆட்சியை ஏற்படுத்தும் எண்ணத்தை ஏற்படுத்தியது. மேலும் உள்நாட்டு அரசியற் குழப்பங்கள் அந்நியரை கலங்கிய நீரில் மீன்பிடிக்கத் தூண்டியது. அவ்வகையில் ஆங்கில மற்றும் பிரெஞ்சுக்காரர்களுக்கு ஹைதரபாத் மற்றும் ஆற்காட்டு சிம்மாசனம் தொடர்பான உள்நாட்டு பிரச்சினைகள் மற்றொரு போருக்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தியது.

ஐரோப்பாவில் அமைதி நிறுவப்பட்டபோதிலும் இந்தியாவில் அது முடிவு பெறவில்லை. மொகலாய இராட்சியம் சிறிது சிறிதாக வீழ்ச்சியடையத் தொடங்கிற்று. 1748 இல் ஹைதரபாத் அரசரான நிஜாம் உல் முல்க் என்பவர் இறந்தார். அவருடைய புதல்வாரன நாசர்ஜங்கிற்கும் அவருடைய பேரனான முஸபர்ஜங்கிற்கும் பட்டத்தகராறு ஏற்பட்டது. அதேசமயத்தில் கர்நாடகத்திலும் நவாப்புப் பதவிக்கு போட்டியேற்பட்டது. சந்தாசாகிபு என்பவர் ஆர்க்காட்டு நவாப்பான அன்வாருதீனை விலக்கி விட்டுத் தாமே பட்டம் வகிக்க எண்ணினார். சந்தாசாகிபும் முஸபர்ஜங்கும் நண்பர்கள். இருவரும் ஒன்று சேர்ந்து டியூப்ளேயின் உதவியை நாடினர். எனவே ஹைதரபாத் சிம்மாசனத்திற்கு முஸபர்ஜங்கினையும், ஆற்காட்டின் நவாப் பதவிக்கு சந்தாசாகிபினையும் பிரெஞ்சுக்காரர்கள் ஆதரித்தனர். இறுதியில் இவர்கள் மூவரும் இணைந்து ஆங்கிலேயர்களுக்கெதிராக ஒரு உடன்பாட்டினைச் செய்து கொண்டதுடன் பொதுவான கூட்டுப்படையொன்றினையும் அமைத்திருந்தனர். இந்நிலையில் ஆங்கிலேயர்கள் நஸீர்ஜங்கினையும், அன்வாருதீனையும் ஆதரிக்க முற்பட்டனர். இத்தகைய சூழ்நிலைகள் இரண்டாம் கர்நாடகப்போருக்கு இட்டுச்சென்றது.

ஆற்காடு, ஹைதரபாத் அரசியல் குழப்பங்கள் அந்நியருக்கு கர்நாடகத்திலும், தக்கிணத்திலும் போரில் ஈடுபட வாய்ப்பளித்தன. கூட்டுப்படைகள் இராஜாசாகிபின் தலைமையில் அன்வாருதீன் படைகளை 1749 இல் வேலூருக்கு அருகிலுள்ள ஆம்பூரில் தாக்கின. இதன் போது அன்வாருதீன் கொல்லப்பட்டார். தொடர்ந்து முஸபர்ஜங் தன்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தக்கினத்தின் ஆட்சியாளராக அறிவித்தார். சந்தாசாகிபு ஆற்காட்டு நவாப்பனார். தொடர்ந்து 1750 இல் நஸீர்ஜங் முஸபர்ஜங்குடன் செஞ்சி என்ற இடத்தில் மோதினார். இதில் முஸபர்ஜங் சரணடைந்தார். இந்நிலையைச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்ட டியூப்ளே விழுப்புரம், செஞ்சி, கடப்பை, கர்னூல், சாவனூர் ஆகிய சிற்றரசர்களை நஸீர்ஜங்கிடமிருந்து பிரித்துக்கொண்டனர். பிரெஞ்சுப் படைகளின் தளபதி புஸ்ஸி (Bussy) 1750 இல் செஞ்சிக் கோட்டையினை கைப்பற்றிக் கொண்டார். நஸீர்ஜங் கொல்லப்பட்டார். முஸபர்ஜங் தக்கணத்தின் நிஜாமானார்.

முஸபர்ஜங் நிஜாமான நிகழ்வும், சந்தாசாகிபு நவாப்பான நிகழ்வும் பிரெஞ்சுக்காரர்களுக்குக் கிடைத்த வெற்றியாகும். இதற்காக வடசர்க்கார் பிரதேசங்கள், ஒரிஸாவின் கடற்கரைப் பகுதிகள், பாண்டிச்சேரிக்கு அருகாமையிலுள்ள சில பிரதேசங்கள், வழுதாவூர் ஜாஹீரும் பிரெஞ்சுக்காரர்களுக்கு நன்கொடையாக வழங்கப்பட்டது. தொடர்ந்து ஹைதரபாத் நிஜாமின் கீழ் டியூப்ளே இதனைக் கொண்டு வந்தார். இதனால் பிரெஞ்சு செல்வாக்கு ஹைதரபாத்தில் ஓங்கிற்று. 1751 இல் முஸபர்ஜங் புஸ்ஸியுடன் பாண்டிச்சேரியிலிருந்து ஹைதரபாத் செல்கின்ற வழியில் கொலை செய்யப்பட, ஹைதரபாத்தின் நிஜாமாக நிஜாம் உல் முல்கின் மூன்றாவது மகனான சலபத்ஜங்கினை நியமித்து விட்டு சிலகாலம் புஸ்ஸி அங்கு தங்கியிருந்தார்.

அன்வாருதீனுக்குத் தப்பான வழியில் பிறந்து திருச்சியில் தஞ்சமடைந்திருந்த முகமது அலிக்கு ஆங்கிலேயர்கள் தமது ஆதரவினை வழங்குவதன் மூலமாக பிரெஞ்சுக்காரர்களை எதிர்க்க முற்பட்டனர். இக்கட்டத்தில் சந்தாசாகிபு முகமது அலியை முறியடிப்பதற்கு திருச்சியை நோக்கிப் படையெடுத்துச் சென்றார். ஆனால் முகமது அலி திருச்சிக் கோட்டையைத் தருவதாகக் கூறி மைசூர் நஞ்சன்ராஜாவின் உதவியினைப் பெற்றார். இதில் முகமது அலி தோல்வியடைந்திருந்தால் தென்னிந்தியாவில் ஆங்கிலேயரின் செல்வாக்கு முடிவடைந்திருக்கும். ஆனால் ஆங்கிலேயரின் ஏக்கத்தையும் கவலையையும் நீக்கியவர் றொபேர்ட்கிளைவ் என்பவராவார். ஆங்கிலேயருக்கு ஏற்படவிருந்த தோல்வி இவருடைய அரிய செயல்களால் பெரிய வெற்றியாக மாறியது.

றொபேர்ட் கிளைவ் கி.பி 1725 இல் இங்கிலாந்தில் பிறந்தவர். ஆங்கிலக் கிழக்கிந்திய கம்பனியில் ஒரு சாதாரண எழுதுனராகத் தன்னை இணைத்துக்கொண்ட கிளைவ் பிற்பட்ட காலங்களில் ஆங்கில இராணுவத்தில் சேர்ந்துகொண்டார். திருச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீதான ஆங்கிலேயர்களின் கவனத்தினைத் திசைதிருப்பி ஆட்காட்டினைத் தாக்குமாறு அறிவுரை கூறிய அவரிடமே அதற்கான பொறுப்பும் வழங்கப்பட்டது. இதன்படி 1751 இல் கிளைவ் திடீரென்று ஆட்காட்டைத் தாக்கிக் கைப்பற்றினார். எதிர்பார்த்தபடியே சந்தாசாகிபு தன் மகன் இராஜாசாகிபு தலைமையில் ஒரு பெரும் படையை அனுப்பினார். இப்படையை கிளைவ் காவிரிப்பக்கம், ஆரணி என்னுமிடங்களில் தாக்கி முற்றிலும் தோற்கடித்தார்.

திருச்சியைக் கைப்பற்ற சந்தாசாகிபும் பிரெஞ்சுத் தளபதி லோவும் மிகவும் முயன்றனர். ஆனால் அவர்களுடைய முயற்சி நிறைவேறவில்லை. மேஜர் லோரன்ஸ் என்பவரும் கிளைவும் ஒரு படையும் சென்று திருச்சியில் பிரெஞ்சுக்காரரை தோற்கடித்தனர். இதற்குப் பின்னர் சந்தாசாகிபு தஞ்சாவூர் படைத்தலைவரால் கொல்லப்பட்டார். முகமது அலி கர்நாடக நவாப்பானார். கர்நாடகத்தில் பிரெஞ்சுக்காரர்களின் செல்வாக்கு வீழ்ச்சியுற்று ஆங்கிலேயர்களின் செல்வாக்கு உயர்ந்தது. இக்கட்டத்தில் டியூப்ளேயின் செயற்பாடுகள் பிரெஞ்சு அரசிற்குத் திருப்திதராத நிலையில் அவர் திருப்பி அழைக்கப்பட்டார். இவரது இடத்திற்கு கோதயூ என்பவர் அனுப்பப்பட்டார். இவர் ஆங்கிலேயருடன் 1755 இல் "பாண்டிசேரி ஒப்பந்தம்" என்ற உடன்படிக்கையை செய்து கொண்டதன் மூலம் இப்போர் முடிவுக்கு வந்தது. இதன்படி இரு நாடுகளின் கம்பனிகளும் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதில்லையெனவும் ஆங்கிலேயர்களின் ஆதரவு பெற்ற முகமது அலி கர்நாடகத்தின் நவாப்பாகவும் நிஜமிக்கப்பட உடன்பாடு வழிவகை செய்தது. அவ்வாறே பிரெஞ்சுக்காரர்களின் ஆதரவுபெற்ற சலபத்ஜங் ஹைதராபாத் நிஜாமாக தொடர்ந்து கடமையாற்றவும், இரு நாடுகளின் எல்லைப் பகுதிகளும் தெளிவாக வரையறுக்கப்பட்டன எனலாம்.

இரண்டாவது கர்நாடகப்போரும் பல விளைவுகளை ஏற்படுத்தியது. பிரெஞ்சுக்காரர்களின் நிலையானது மோசமாகியது. டியூப்ளே தாயகத்திற்குத் திருப்பி அழைக்கப்பட்டார். றொபேர்ட்கிளைவின் புகழ் உயர்ந்தது. ஆங்கிலேயர் சுதேச அரசர்களின் உதவியினைப் பெறுகின்ற நிலை காணப்பட்டது. அழிந்துகொண்டிருந்த பிரெஞ்சுச் செல்வாக்கானது கோதயூவின் இந்திய வரலாற்றில் ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்திற்கு மற்றுமொரு மைல்கல்லாக அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்றாவது கர்நாடகப்போர் (1758 – 1763)

மூன்றாவது கர்நாடகப் போர் 1758 முதல் 1763 ஆம் ஆண்டு வரை இந்தியாவில் இடம்பெற்றது. வங்காளத்தில் வளர்ச்சியடைந்துவந்த ஆங்கிலேயர்களின் செல்வாக்கினைக்கண்டு பிரெஞ்சுக்காரர்கள் அச்சங்கொண்டனர். 1756 இல் ஆங்கிலேயர்கள் சந்திரநாகூரினைக் கைப்பற்றிக்கொண்ட சம்பமானது மேலும் நெருக்கடியினை அவர்களுக்கு வழங்கியது. இக்காலப்பகுதியில் ஐரோப்பாவில் ஆரம்பமான ஏழாண்டுப் போரின் தாக்கம் மூன்றாவது கர்நாடகப்போர் ஏற்படுவதற்குக் காரணமாக அமைந்திருந்தது. கோதயூ கர்நாடகத்தில் பின்பற்றிவந்த அமைதிக் கொள்கைக்கு முற்றுப்புள்ளி வைக்கின்ற வகையில் மேற்கூறப்பட்ட சம்பவங்கள் அமைந்திருந்தன.

இந்தியாவிலுள்ள பிரெஞ்சுக்காரர்களுக்கு ஆதரவாக 1758 இல் கவுண்ட் லோலி என்பவர் பெரும் படையுடன் புதுச்சேரிக்கு வந்தார். அவ்வாண்டே மே மாதம் புனித டேவிற் கோட்டையினைத் தாக்கி அதனைக் கைப்பற்றிக்கொண்டார். டிசெம்பரில் சென்னையினைத் தாக்குவதற்கான முயற்சிகளையும் மேற்கொண்டார். இதற்காக ஹைதரபாத்திலிருந்து புஸ்ஸியை வரவழைத்தார். இந்நிலைமையக் கிளைவ் பயன்படுத்திக்கொண்டு கேர்னல் போர்ட் என்பவரை வடசர்க்காருக்கு அனுப்பி அப்பிரதேசத்தினைக் கைப்பற்றினார். அத்தோடு சலபத்ஜங் ஆங்கிலேயர்களுடன் உடன்பாடு செய்துகொண்டார். இதனால் ஹைதராபாத்தில் பிரெஞ்சுக்காரர்களின் செல்வாக்கு மறைந்து ஆங்கிலேயர்களின் ஆதிக்கம் ஏற்பட்டது.

ஆங்கிலக் கடற்படை சென்னைக்கு வந்தபடியால் லோலியின் சென்னை முற்றுகை பயனற்றுப்போயிற்று. 1760 ஜனவரி 22 இல் அயர்கூட் என்ற ஆங்கிலத் தளபதியின் படைகள் வந்தவாசி என்ற இடத்தில் பிரெஞ்சுப்படைகளைத் தோற்கடித்து புஸ்ஸியை சிறைப்பிடித்தது. 1760 இல் தென்னகத்தில் புதுச்சேரி, செஞ்சி, மாஹி, காரைக்கால் ஆகிய நான்கு இடங்களைத் தவிர மற்ற இடங்கள் ஆங்கிலேயர்களால் கைப்பற்றப்பட்டுவிட்டன. லோலி மைசூர் அரசன் ஹைதர்அலியுடன் சேர்ந்து படையணியைப் பெற்றுக்கொண்ட போதிலும் அப்படைகளால் ஆங்கிலப்படைகளை எதிர்கொள்ள முடியவில்லை. 1761 ஜனவரி 16 இல் பாண்டிச்சேரியும் தொடர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாஹி, செஞ்சி, காரைக்கால் போன்றனவும் ஆங்கிலேயர்களிடம் சென்றன. இவ்வாறு கர்நாடகத்தில் நடைபெற்ற போர்களில் பிரெஞ்சுக்காரர்கள் தோல்வியுற்றார்கள்.

1765 இல் ஐரோப்பாவில் ஏழாண்டுப் போர் முடிவுற்று செய்துகொள்ளப்பட்ட பரீஸ் உடன்பாட்டின்படி இந்தியாவில் மூன்றாவது கர்நாடகப் போரும் முடிவுக்கு வந்தது. இவ்வுடன்படிக்கையின்படி பாண்டிச்சேரி, மாஹி, சந்திரநாகூர் பிரெஞ்சுக்காரர்களுக்கு திருப்பிக் கொடுக்கப்பட்டது. வடசர்க்கார் பகுதிகளில் ஆங்கிலேயர்களின் செல்வாக்கும் பலமும் அதிகரித்தன. பிரெஞ்சுக்காரர்கள் கோட்டைகள் கட்டுவதற்கு நிபந்தனைகள் விதிக்கப்பட்டன.

மூன்றாவது கர்நாடகப்போரும் பல விளைவுகளை ஏற்படுத்தியது. ஆங்கிலக் கடற்படையின் மதிப்பு உயர்ந்தது. பிரெஞ்சு ஆதிக்கம் இந்தியாவில் மறைந்தது. இப்போர் இரு பகுதியினருக்குமான மோதல்களின் உச்சக்கட்டத்தினைப் பிரதிபலிப்பதாக அமைந்தது. ஆங்கிலேயர்களின் இந்த வெற்றியானது பின் வரப்போகின்ற வெற்றிகளுக்கு அடிப்படையாக அமைந்துகொண்டது. இதன் பின்னர் ஆங்கிலேயர்களின் ஆதிக்கம் இந்தியாவில் ஆழமாய் வேரூன்றிக் கொண்டது எனலாம்.

கர்நாடகப் போர்களின் மூலம் பிரெஞ்சு ஆதிக்கம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு ஆங்கிலேய ஆதிக்கம் இந்தியாவில் ஏற்படுத்தப்பட்டது. சுதேச அரசுகள் பல ஆங்கிலேயர்களுடன் நட்புப் பாராட்ட முன்வந்தன. மூன்று கர்நாடகப் போர்களிலும் ஆங்கிலேயர்களே வெற்றி பெற்றுக்கொண்டனர். இவ்வாறு ஆங்கிலேயர் வெற்றிபெற்றுக் கொள்வதற்கும் பிரெஞ்சுக்காரர்கள் தோல்வியடைந்து கொள்வதற்கும் பல்வேறு காரணங்கள் கூறப்படுகின்றன. அவ்வகையில் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பனியின் நடவடிக்கைகளில் அரசாங்கத்தின் தலையீடுகள் குறைவாகக் காணப்பட்டன. கிட்டத்தட்ட சுதந்திரமான முறையிலே அக்கம்பனி இயங்கியது. ஆனால் பிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பனி அரசாங்கத்தால் நிறுவப்பட்டதனால் சுதந்திரமாக இயங்கக் கூடிய நிலையில் அது காணப்படவில்லை. அதன் செயற்பாடுகள் ஒவ்வொன்றிலும் அரச தலையீடுகள் காணப்பட்டன. எக்காரியத்தைச் செய்வதற்கும் அராசாங்கத்தின் அனுமதியைப் பெறவேண்டியிருந்தது. வணிகத்துறையிலும் ஆங்கிலக் கம்பனியைப்போல் அது வளர்ச்சியடையவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரெஞ்சுக்காரர்களின் அளவுக்குமீறிய நாடு பிடிக்கின்ற ஆசை அவர்களை நடுக்கடலில் தள்ளிவிட்டது. தொடர்ச்சியாக பிரெஞ்சுக்காரர்கள் செய்துவந்த போர்கள் காரணமாகப் பல்வேறு பிரச்சினைகளுக்கு அவர்கள் முகங்கொடுக்க வேண்டியிருந்தது. இதனால் பிற்பட்ட காலங்களில் இந்தியாவில் நடைபெற்ற நிகழ்வுகளுக்கு அதிக முக்கியத்துவத்தை வழங்காமல் அமெரிக்கக் குடியேற்றங்களை அமைப்பதிலே அதிகளவில் அக்கறை செலுத்தியமையை அவதானிக்க முடிகின்றது. அத்துடன் இவர்களுடைய நிதிநிலமையானது மோசமானதாகக் காணப்பட்டது. இதற்கு அவர்கள் அடிக்கடி செய்துகொண்ட போர்கள் காரணமாக இருந்தாலும் ஆங்கிலக் கம்பனிக்கு கிடைத்தளவிற்கு அரசாங்கத்திடமிருந்து உதவிகளோ ஆலோசனைகளோ பிரெஞ்சுக் கம்பனிக்குக் கிடைக்கவில்லை. வர்த்தக முயற்சிகளிலும் அது தோல்வியைக் கண்டது. படைவீரர்களுக்கு அதிகளவு நிதி தேவைப்பட்டது. ஆனால் ஆங்கிலக் கம்பனிக்கு இத்தகைய நெருக்கடிகள் காணப்படவில்லை.

ஆங்கிலேயர்கள் பிரெஞ்சுக்காரர்களை விடச்சிறந்த கடலதிக்கம் உடையவராயிருந்தனர். ஐரோப்பாவில் நடைபெற்ற ஏழாண்டுப் போராலும், ஆஸ்திரிய வாரிசுரிமைப் போராலும் ஆங்கிலேயர்களின் கப்பல் கட்டும் தொழில் வளர்ந்தது. அத்துடன் அவர்களிடமிருந்த பம்பாய்த் துறைமுகத்தின் மூலமாக பிரெஞ்சுக்காரர்களுடனான போராட்டத்தில் பல்வேறு வசதிகளைச் செய்யக்கூடியதாகக் காணப்பட்டது. பழுதடைந்த கப்பல்களை பழுது பார்க்கவும் தேவையானபோது கப்பல்களை நிறுத்தி வைப்பதற்கும் பம்பாய்த் துறைமுகம் அவர்களுக்கு உதவியது. அத்துடன் 18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதிக்குள் பிரான்ஸ் ஐரோப்பாவில் ஆதிக்கம் இழந்துவிட்டது. தாய் நாட்டில் ஆதிக்கம் இழந்துவிட்டதால் குடியேற்ற நாட்டிலும் தன் செல்வாக்கை இழக்கவேண்டியநிலை ஏற்பட்டது. தொடர்ந்து ஆங்கிலேயர்கள் செல்வாக்கு ஏற்பட்டமையும் தவிர்க்க முடியாததாயிற்று.

ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பனிகளின் படைகள் வலிமையானதாகவும் கிளைவ், பேர்ட், கூட் போன்ற சிறந்த படைத்தளபதிகளையும் கொண்டு காணப்பட்டது. அவர்கள் ஒற்றுமையுடனும் உற்சாகத்துடனும் அரசியலிலும், போர்களிலும் ஈடுபட்டனர் பாடுபட்டனர். ஆனால் அந்தளவிற்குப் பிரெஞ்சுப்படைகள், தளபதிகள் காணப்படவில்லை. இவர்களது படையின் பெரும்பகுதி ஆஸ்திரிய வாரிசுரிமைப் போரில் ஈடுபடுத்தப்பட்டமையினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவில் படைப்பலம் குறைவாகவே காணப்பட்டது. அத்துடன் இவர்களால் சிறப்பான திட்டங்களைத் தீட்டி அவற்றினைச் செயற்படுத்தவும் முடியவில்லை.

ஆங்கிலக் கம்பனியில் போதுமான ஊழியர்கள் காணப்பட்டதுடன் நிர்வாகத்திறன், ஒற்றுமைத்தன்மை உடையவர்களாகவும் அவர்கள் காணப்பட்டனர். மேலும் ஆங்கிலக்கம்பனி சிறந்த கட்டமைப்பினைக் கொண்டிருந்ததுடன் ஊழியர்களும் அக்கறையுடன் செயற்பட்டனர். இவர்களுடன் ஒப்பிடுகின்றபோது பிரெஞ்சு அதிகாரிகள் நிர்வாகத்திறன் கொண்டவர்களாகக் காணப்படவில்லை. ஒற்றுமையின்றி அதிகமானவர்கள் சுயநல நோக்குடன் செயற்பட்டனர்.

வங்கத்தில் ஆங்கிலேயர்கள் பெற்றுக்கொண்ட வெற்றியானது இந்தியாவில் அவர்கள் வேரூன்றக் காரணமாகியது. இதனால் வங்கத்திலிருந்து கர்நாடகத்திற்கு படையுதவிகள் கிடைக்கக்கூடியதாக இருந்தது. பிரெஞ்சுக்காரர்கள் ஆதிக்கத்தை கர்நாடகத்திலிருந்து தொடங்கியது தவறாகும். டியூப்ளேயின் சில தனிப்பட்ட குணநலன்களும்கூட பிரெஞ்சுக்காரர்களின் வீழ்ச்சிக்குக் காரணமாக அமைந்திருந்தன. தனது அதிகாரிகளுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளவில்லை. சிறந்த முடிவுகளை இவரால் விரைவாக எடுத்துக்கொள்ள முடியவில்லை. சுதேச அரசுகளின் உதவிகளைப் பெற்றுக்கொள்ளாமல் அவர்களது எதிரியாக மாறினார். இதனைச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்ட ஆங்கிலேயர்கள் மராட்டிய மற்றும் மைசூர் பகுதிகளின் ஆட்சியாளர்களின் ஆதரவினைப் பெற்றுத் தமது ஆதிக்க விஸ்தரிப்புக்கொள்கையினைப் படிப்படியாக மேற்கொண்டனர். அத்துடன் கிளைவின் அரிய செயல்களும், சாதனைகளும் ஆங்கிலேயர்களின் செல்வாக்கும் அதிகாரமும் ஓங்குவதற்குக் காரணமாக விளங்கினார்.

கி.பி 1746 – 1763 வரை கர்நாடகத்தில் நடைபெற்ற மூன்று போர்களிலும் ஆங்கிலேயரே வெற்றி பெற்றனர். இதன் காரணமாக இம் மூன்று கர்நாடகப் போர்களும் இந்தியாவிலிருந்து பிரெஞ்சுக்காரர்களை வெளியேற்றிவிட்டு ஆங்கிலேயர்கள் தமது ஆதிக்கத்தை ஏற்படுத்துவதற்கான அடிப்படையினை ஏற்படுத்திக் கொடுத்தது எனலாம்.

**உசாத்துணை**

1. அருந்தவராஜா.க., (2011) *நவீன இந்திய வரலாறு*, அஞ்சு வெளியீட்டகம், நல்லூர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. சண்முகநாதன், ஐ., (2005) *உலக வரலாறு*, பூம்புகார் பதிப்பகம்.

3. சிங்காரவேலு, டீ., ராஜமோகன், சு., (2002) *இந்திய வரலாறு*, சாந்தா பப்ளிஷர்ஸ்.

4. சுப்ரமண்யம், ந., (2004) *இந்திய வரலாறு*, நியூசெஞ்சரி புக் ஹவுஸ்.

5. தங்கவேலு, கோ., (2007) *இந்திய வரலாறு*, பழனியப்பா பிரதர்ஸ்.

6. ராம்குமார், (2002) *வாஸ்கொடகாமா துமல் வாஜ்பாஜ் வரை (இந்தியவரலாறு 500 ஆண்டுகள்)*, மெய்யப்பன் தமிழாய்வகம்

7. ஜவகர்லால் நேரு, (2002) *உலகசரித்திரம் பாகம் I*, அலைகள் வெளியீட்டகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17



# அடால்ஃப் ஹிட்லர் - சில குறிப்புக்கள்

க.லோஜினி
வரலாறு (சிறப்புக்கலை)
நான்காம் வருடம

தான் நினைப்பதே சரி, தான் சொல்வதை மட்டுமே மற்றவர்கள் கேட்டு நடக்கவேண்டும் என்று எவன் கருதுகிறானோ அவன் தான் சர்வாதிகாரி. தற்காலம் வரை வீடு, நாடு, அலுவலகம், மதம் அனைத்திலும் சர்வாதிகாரப்போக்கு இருந்து கொண்டுதான் இருக்கிறது. அரசியலில் எவ்வகை ஆட்சியிலும் சர்வதிகாரம் தலைகாட்டுவதுண்டு. உலகில் மிகப்பெரிய சர்வதிகாரிகள் என்று நினைத்தவுடனே முதலில் நினைவிற்கு வருபவர்கள் ஹிட்லர், முசோலினி, இடியமின் ஆகியோரே. அந்தவகையில் ஒரு தனிமனிதனால் உலகையே அச்சுறுத்தமுடியும். உலக சரித்திரத்தையே புரட்டிப்போட முடியும் என்பதை நிருபித்துக்காட்டியவர் ஹிட்லர். இரண்டாம் உலகப்போரை ரிப்பன் வெட்டி ஆரம்பித்து வைத்தவர் ஹிட்லர் தான். கண்மூடித்திறப்பதற்குள் ஐரோப்பாவை சுருட்டித் தன் பாக்கெட்டில் போட்டுக்கொண்டவர். குரூரத்தின் உச்சக்கட்டத்தை தொட்டுச்சென்றவர். கரப்பான்பூச்சிகளை அடித்துக்கொல்வதைப்போல் மக்களைக் கொன்று குவித்தவர். இவரது உத்தரவின்படி நாசிப்படைகள் மொத்தமாக 11மில்லியன் மக்களை விதம் விதமான முறையில் சாகடித்தனர். கொல்லப்பட்டவர்களில் யூதர்கள் மட்டும் 6மில்லியன். உலகை ஆளப்பிறந்தவர்கள் ஜேர்மானியர்கள் தான். மற்றவர்கள் அனைவரும் அவர்களிற்கு அடங்கி அடிமைகளாக வாழப்பிறந்தவர்கள் என்று கூறி 50இலட்சத்திற்கும் மேற்பட்ட ஆண்கள்,பெண்கள்,குழந்தைகள் என அனைவரையும் அரக்கத்தனமாக நச்சுப்புகை கூண்டுக்குள் தள்ளி யூதர் இனத்தையே துடிக்க துடிக்கச் சாகடித்தான். வார்த்தைகளால் விபரிக்கமுடியாத பெரும் சோகம் அது.

எல்லாக் கொடுமைக்கார தகப்பன்களின் மகன்களும் சர்வாதிகாரிகள் ஆவதில்லை. ஆனால் பெரும்பாலான சர்வாதிகாரிகளின் தந்தைமார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுமைக்காரர்களாகவே இருந்திருக்கிறார்கள். 1889 ஏப்ரல் 20 இல் வடக்கு ஆஸ்திரியாவில் பிரானல் என்ற ஊரில் ஹிட்லர் பிறந்தார். ஹிட்லரின் தந்தை அலாயிஸ், தாய் கிளாரா. எந்த யூதக்குலத்தை வேரோடு அழிக்க ஹிட்லர் தம் வாழ்நாள் முழுவதும் உழைத்தாரோ அதே யூத வம்சத்தின் வழி வந்தவர்தான் ஹிட்லரது தந்தை. ஹிட்லருக்கு ஆரம்பத்திலிருந்தே தந்தை விசயத்தில் மகிழ்ச்சியில்லாமல் போய்விட்டது. அலாயிசும் தன் மகன் எந்தவகையிலும் சந்தோசப்படுவதற்கான சந்தர்ப்பங்களை தரவில்லை. அடி அடி அடி என்று 24மணித்தியாலமும் அடித்துக்கொண்டேயிருக்கும் மனிதர் அவர். இதற்குத்தான் அடிப்பார், இதற்கு அடிக்கமாட்டார் என்று கூறமுடியாது. நின்றால் அடி, அமர்ந்தால் அடி, படுத்தால் அடி. இளம் ஹிட்லரின் உடலில் அந்த அடிகள் உருவாக்கிய தழும்புகளிற்கு கணக்கில்லை. அப்பா என்றால் அடிப்பவர் என்பதே இளம் வயதில் ஹிட்லரின் மனதில் பதிந்த விம்பம்.

நியத்திலும் மனதினுள்ளும் தன்னை அடிக்காத, தனக்காக வாழ்கிற ஒரே உயிர் தன் அம்மாதான் என்று ஹிட்லர் நினைத்தார். எத்தனை நல்லவள், புத்திசாலி ஆனாலும் ஏன் இந்தப் பாவிக்கு 3ஆவது மனைவியானாள்? விதி என்று தான் ஹிட்லரின் தாய் கிளாரா பதில் சொன்னாள். அந்தச் சொல் ஹிட்லரின் மனதில் ஆழமாகப் பதிந்தது. வாழ்நாள் முழுவதும் பல்வேறு சந்தர்ப்பங்களில் ஹிட்லர் மிக அதிகமாக பயன்படுத்திய ஒரு சொல் விதி. நல்ல விதி, கெட்ட விதி. ஒட்டுமொத்த ஐரோப்பாவும் ஜேர்மானிய படையெடுப்பிற்கு அடிபணிந்த போது ஹிட்லர் சொன்னது அது அவர்களின் விதி. இறுதியில் சோவியத் ஆக்கிரமிப்பின்போது ஜேர்மனி வீழ நேர்ந்த நேரத்தில் அவர் சொன்னது இது நம்ம விதி. சந்தேகமில்லாமல் அவர் அம்மா பிள்ளை. ஒரு சமூக பாதுகாப்பிற்காக தந்தையின் வம்சப் பெயரை தன்பெயருடன் இணைத்த போதும் மனதளவில் அவர் தாயின் குழந்தையாக மட்டுமே இருந்தார்.

12வருட ஆட்சி, 60இலட்சம் கொலைகள், ஓர் உலக யுத்தத்தின் சூத்திரதாரியாகவும் வர்ணிக்கப்படும் ஹிட்லரிடம் சில ஆளுமைப் பண்புகளும் சில நற்பண்புகளும் இருந்து வந்துள்ளன. பொதுவாக விருந்துகளில் மது அருந்துகின்ற வழக்கம் ஹிட்லரிடம் இருக்கவில்லை. தொடக்க காலத்தில் முதல் உலகயுத்த சமயத்தில் ஹிட்லர் இறைச்சி சாப்பிட்டிருக்கிறார். பிறகு உலகிலேயே மிக உயர்ந்த இனத்தை சேர்ந்தவன் நான். என் இரத்தம் பரிசுத்தமானது என்று அவருக்கு தோன்றிவிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரே நாளில் அவர் மாமிசத்தை மறந்தார். ஏகப்பட்ட காய்கறிகளும் பழங்களும் தான் அவரது உணவில் முக்கிய இடம்பெறும்.

ஒருபோதும் சோர்ந்து உட்காராதவர் ஹிட்லர். மணிக்கணக்கில் சொற்பொழிவாற்றும்போதுகூட ஓரிடத்தில் நிலைகொள்ளாமல் அவரது கால்கள் அலைபாய்ந்து கொண்டேயிருக்கும். உடல் இப்படியும் அப்படியும் ஆடிக்கொண்டேயிருக்கும். குரல் ஏற்ற இறக்கங்களில் மாபெரும் விற்பன்னர். எந்தச் சொல்லிற்கு அழுத்தம் கொடுக்கவேண்டும், எந்தச் சொல்லை வருடிக்கொடுக்க வேண்டும், எப்போது குரலை உயர்த்த வேண்டும், எப்போது சொற்பொழிவை சங்கீதமாக்கவேண்டும் என்பதையெல்லாம் ஹிட்லரிடமிருந்து தான் உலகத்தலைவர்கள் இரகசியமாகக் கற்றுக்கொண்டார்கள். இலட்சம்பேர் கூடியிருக்கும் பொதுக்கூட்டம் என்றால் கூட அத்தனை பேரும் தங்களை மட்டுமே அவர் பார்த்துப் பேசுகின்றார் என்று நினைக்கும் வண்ணம் தன் பார்வையை அமைத்துக்கொள்ளக்கூடியவர் ஹிட்லர். பிறவிப்பேச்சாளர், பிறவித்தலைவர், பிறவிச்சர்வாதிகாரி ஹிட்லர். ஒட்டு மொத்த ஜேர்மன் சாம்ராஜ்யத்தையும் தனது குட்டி மீசைக்குள் பாதுகாப்பாக ஒழித்து வைக்கும் திறமை அவரிடம் இருந்தது.

ஜேர்மனி வீழ்ச்சியின் இறுதி நாட்களில் விசுவாசம்மிக்க அதிகாரிகள் ஹிட்லரை பெர்லினை விட்டு வெளியேறுமாறு சொல்லிப்பார்த்தார்கள். ஆனால் ஹிட்லர் மறுத்துவிட்டார். அது மக்களிற்கு செய்யும் துரோகம். இறுதி வினாடிவரை ஜேர்மனிய படைகள் எதிரிகளுடன் யுத்தம் செய்யும். வெல்வதோ வீழ்வதோ பொருட்டல்ல. போரிடுவது முக்கியம். எதிர்த்து நிற்பதே ஆண்மை. வீரர்கள் போர்முனையில் இருக்கும்போது தலைநகரை விட்டு தான் மட்டும் வெளியேறுவது கோழைத்தனம் என்றார். அதன்படி இறுதிக்கணம்வரை அவர் அசையவே இல்லை.

பெர்லின் சோவியத் படைகளின் வசமானபோதும் தோல்வியை ஹிட்லர் வாய்திறந்து சொல்லவில்லை. "விடைபெறுகிறேன் நண்பர்களே, இத்தனை நாள் எனக்காக விசுவாசம் காத்ததற்கும், உழைத்ததற்கும் என் மனமார்ந்த நன்றி" என்று கூறி உள்ளே சென்றார். அதன் பிறகு ஹிட்லர் தன் நெற்றிப்பொட்டில் வைத்து அழுத்திய துப்பாக்கியின் சத்தம் தான் கேட்டது. 30 ஏப்ரல் 1945 அன்று ஹிட்லர் இறந்து போனார். தன்னைத்தானே சுட்டுக்கொண்டபோதுகூட அவருடைய வருத்தம் மேலும் 5நாட்கள் மே மாதம் 5ஆம் தேதி தன் வாழ்கையை முடித்துக் கொள்ளவில்லையே என்பதைப் பற்றித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணம் ஹிட்லர் மாவீரன் நெப்போலியன்மீது மிகுந்த பிரியம் வைத்திருந்தான். மே மாதம் 5 ஆம் திகதி தான் நெப்போலியன் மறைந்த நாள். அதே நாளில் தனக்கும் முடிவைத் தேடிக்கொள்ளவே ஹிட்லரும் விரும்பியிருந்தான். எனினும் அவனது நம்பிக்கைக்குரிய சக்தியான விதி முந்திவிட்டது என்றே சொல்லவேண்டும்.

ஹிட்லர் படிப்பை இடையில் நிறுத்திவிட்டு 1906இல் வியன்னா நகருக்கு சென்றார். 1907இல் அவனது அன்னை கிளாரா போர்வீச்சில் இறந்ததும் வியன்னாவில் ஓவியம் வரைந்து வாழ்க்கை நடாத்தி வந்தார். அச்சமயத்தில் சிந்தியா என்ற பெண்ணுடன் ஹிட்லருக்கு காதல் ஏற்பட்டது. ஆனால் அது தோல்வியில் முடிவடைந்ததால் மனம் வெறுத்து இராணுவத்தில் போய் சேர்ந்தார். 1ஆம் உலக மகாயுத்தத்தில் போர்வீரனாக பணியாற்றி அப்போரில் படுகாயமுற்று கிடந்தபோது டான்டே இராணுவ வீரனால் காப்பற்றப்பட்ட ஹிட்லர் யுத்தத்தின் பின் அரசியல் கிளர்ச்சிகாரனாகத் தனது வாழ்க்கையை தொடங்கினார். 1923 இல் நாட்டின் குழப்பமான சூழ்நிலை: மக்களிடம் வெறுப்பையும் விரக்தியையும் ஜனநாயக ஆட்சிமுறையிலே நம்பிக்கையின்மையையும் ஏற்படுத்தியிருந்தது. இதனால் நாட்டில் பல கட்சிகள் தோன்றி வளர்ந்தன. அதில் ஜேர்மன் தொழிலாளர்கள் கட்சியில் 7வது உறுப்பினராக சேர்ந்து விரைவிலேயே தனது நாக்கு வன்மையால் அக்கட்சியின் தலைவராக உயர்ந்தார்.

1923 இல் வசரப்பட்டு செய்யப்பட்ட கிளர்ச்சியின் போது ஹிட்லர் அதிகாரிகளுடன் மோதவேண்டி ஏற்பட்டது. உடனே ஜேர்மன் அரசு ஹிட்லரை கைதுசெய்து லேண்ட்ஸ்பார்க் கோட்டைக்குள் காவலில் வைத்தது. சிறையிலிருந்த காலத்தில் "மெயின்காம்ப்" எனும் நூலை எழுதினார். இந்நூலே நாசிசக் கோட்பாடுகளுக்கு அடிப்படையாயிற்று. மேலும் தன்னுடைய சித்தாந்தம், அதனை அடைவதற்கு தான் வகுத்த செயற்திட்டம், இறுதி இலட்சியம் ஆகியவற்றையும் விரிவாக சொல்லியிருந்தார். "படுமோசமான நிகழ்ச்சிகள் விரைந்து நடைபெறுமாயின் அவை வீழ்ச்சியேற்படும் காலத்தைக் குறிப்பதாகும்" என்று எழுதினார்.

வேர்செயில்ஸ் உடன்படிக்கையில் விதிக்கப்பட்ட நிபந்தனைகள் ஜேர்மனுக்கு பெரும் அவமானத்தை விளைவித்ததுடன் எதிரிகள்மீது பகைமை உணர்ச்சியை வளரச்செய்தன. ஜேர்மனிமீது இத்தண்டனையை சுமத்திய ஜனநாயக நாடுகளை வெறுத்ததோடு ஜனநாயகத்தின்மீதும் மக்கள் வெறுப்பு கொண்டனர். வேர்செயில்ஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்பந்தம் ஜேர்மனியின் அவமானச்சின்னம் என நாசிக்கட்சியினூடே ஹிட்லர் பிரச்சாரம் செய்து கிளர்ச்சிகளை மேற்கொண்டார். ஏற்கனவே வேர்செயில்ஸ் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட ஜேர்மானிய அரசாங்கத்தின்மீது வெறுப்புற்றிருந்த மக்கள் ஹிட்லரை கண்மூடித்தனமாக பின்பற்றி நாசிக்கட்சியினரை வளர்ச்சியுறச் செய்தனர்.

மேலும் ஜேர்மானிய மக்களை கவரவும், நாசிசத்தை வளர்க்கவும் ஹிட்லர் யூத எதிர்ப்புக் கொள்கையை பிரதானமாக கையாண்டார். ஜேர்மனிக்கு வந்துள்ள எல்லாத் துன்பங்களிற்கும் தங்கள் நாட்டில் வாழும் யூத இனத்தை சார்ந்தவர்களே காரணமென பழி சுமத்தி இனவாதத்தை முன்வைத்தார். இனவாதம் மக்களை ஈர்க்கும் ஒரு சிறந்த ஆயுதமாகும். இதனால் ஜேர்மானிய நாசிசத்திற்கு ஆதரவு பெருகியது. ஜேர்மானியர் தூய ஆரிய இனத்தவர், அவர்கள் உலகை ஆளப் பிறந்தவர்கள். எனவே எமது இனத் தூய்மை பேணப்படவேண்டும் என பிரச்சாரம் செய்தமையும், ஜேர்மானிய மக்களை இக்கட்சியின்பால் ஈர்த்தது. இதுவே பின்னர் ஆரியர் இல்லாதோருக்கு குடியுரிமை மறுக்கப்படும் அளவிற்கு சென்றது. அந்தவகையில் யூதர்களை பழிவாங்குதல் நாசிசத்தின் முக்கியமான கொள்கையாக இருந்தது.

1929 இல் உண்டான உலகப் பொருளாதார நெருக்கடியில் ஜேர்மனி மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்தது. இதனை நிவர்த்தி செய்வதற்குரிய வழிவகைகளை ஜேர்மானிய வைமார் அரசால் கண்டுபிடிக்கமுடியாத நிலையைப் பயன்படுத்திய ஹிட்லர் ஜேர்மானியை 1914இற்கு முன்பு இருந்த நிலைக்கு கொண்டுவருவதாக உறுதி கூறினார். அதுமட்டுமல்லாமல் வேர்செயில்ஸ் உடன்படிக்கையை இரத்துச் செய்யும் அனுமதியையும் மக்களிடம் வேண்டி நின்றமை ஏற்கனவே வெறுப்புற்றிருந்த மக்களை கவர இலகுவான வழியாக அமைந்தது. 1983 இல் ஹிட்லரையே பிரதமராக நியமனம் செய்து அமைச்சரவையை அமைக்குமாறு குடியரசு தலைவராக இருந்த பால்வான் ஹிண்டன்பேர்க் கேட்டுக்கொண்டார். உடனே பிரதமரான ஹிட்லர் அமைச்சரவையை அமைத்து விறுவிறுப்பாக பணியாற்றத் தொடங்கினார். அடுத்த 18மாதங்களில் ஜேர்மனியின் சர்வவல்லமை படைத்த சர்வாதிகாரியாகவே ஹிட்லர் மாறிவிட்டார்.

1ஆம் உலக மகாயுத்தத்தில் ஜேர்மனி சார்பில் போரிட்ட ஹிட்லர் மக்களது விருப்பு வெறுப்புக்களை நன்கு விளங்கிக் கொண்டு செயற்பட்டான். ஒரு தலைவனுக்கு இருக்கவேண்டிய மனவுறுதி, தளராத நம்பிக்கை, வசீகரம், பேச்சுவன்மை, சாதுரியம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழ்ச்சிகள், தந்திரங்கள் இருந்தன. எனவேதான் இவரது பேச்சை அனைவரும் செவிமடுத்தனர். அவர் கூறியவை அனைத்தும் நடக்குமென நம்பினர். இதன் விளைவாகவே சர்வதிகாரியான ஹிட்லர் மக்கள் தலைவரானார்.

"சுதந்திரமாக செயற்படும் தலைவனைக் கொண்டதே குடியாட்சி" என்பது நாசிசம் குடியரசு பற்றிக் கொண்டிருந்த கொள்கையாகும். தேசப்பிரச்சினை தொடர்பில் தீர்வுகாண பெரும்பான்மையானோர் சம்மதம் பெறுதல் என்பது நாசிக்கட்சியில் நிராகரிக்கப்பட்டது. நாட்டுத்தலைவனே அனைத்துப் பிரச்சினைகளிற்கும் தீர்வு காண்பதற்கான அதிகாரம் உடையவன். அதற்காகவே நாசிக்கட்சி உருவாகியுள்ளது என்பதே இதன் விளக்கமாகும். ஹிட்லரது நாசிசத்தின் மூலம் ஜேர்மனியில் கைத்தொழில், விவசாயத்துறைகள் பிரமாண்டமாக வளர்ச்சியடைந்தது. ஆனாலும் இது 2ஆம் உலக மகாயுத்தத்திற்கு காரணமாகியதுடன் உலக அமைதி அச்சுறுத்தலாக அமைந்தது.

2ஆம் உலகமகாயுத்தத்தின் இறுதிக்காலகட்டத்தில் ஜேர்மனி வீழ்ச்சியுறும் நிலையை அடைந்தபோதும் ஹிட்லர் "என்னை நான் மாய்த்துக்கொள்வனே தவிர எதிரியிடம் சிக்கமாட்டேன். நாட்டின் வெற்றிக்கு பாடுபடுவதில் அனைவரும் இணைந்து நிற்போம்" என்று வீரமுழக்கம் செய்தான். அதுமட்டுமல்லாமல் தன்னுடன் இறுதிவரை கூடவேயிருந்த மனைவி ஈவாவின் மூலம் ஒரு உயில் எழுதியிருந்தான். அதில் "நான் இறந்த பின்னர் எந்த ஜேர்மன் மண்ணுக்காகக் கடந்த 12ஆண்டுகளாக பாடுபட்டு வந்தேனோ அந்த ஜேர்மன் மண்ணிலேயே என்னையும் ஈவாவையும் எரித்துவிடவேண்டும் என்பதே என் இறுதி விருப்பம்"என்று அதில் ஹிட்லர் குறிப்பிட்டிருந்தார்.

ஹிட்லர் இறந்தபின்னும் அவர் உயிரோடு இருப்பதாகச் சில ஐரோப்பியநாடுகள் கருதின. உலகெங்கும் தேடினர். அந்த விவாதம் இன்றுவரை முடியவில்லை. ஜேர்மனியர்களுக்கு நிலப்பரப்பு போதாது என்று கூறி உலகையே ஒரு குடைகீழ் ஆட்டிப்படைக்க கிளம்பிய உலகமகாசர்வாதிகாரியான அடால்ஃப் ஹிட்லர் கனவு 2ம்உலகப்போரில் சுக்குநூறாக உடைந்தது.

**உசாத்துணை**

1. அடால்ஃப் ஹிட்லர், (2001) *எனது போராட்டம், மெயின் காம்ப்*, சாந்தி *பதிப்பகம்*, சென்னை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. ஆச்சா, செவல்குளம், (2007) *உலகத்தை கலக்கிய சர்வாதிகாரிகள்*, சுரா பதிப்பகம் ,சென்னை.

3. ஆனந்தமணியன், (1989), *உலகப்புகழ் பெற்ற போர்கள்* ,சென்னை.

4. இளையதம்பி,மு., (1962), *உலகசரித்திரம்* , ஸ்ரீலங்கா அச்சகம் ,யாழ்ப்பாணம்.

5. கமலா கந்தசாமி, (2001) *உலக சரித்திரம் படைத்த சாதனையாளர்கள்*, நற்பவி பிரசுரம், சென்னை.

6. திலகவதி ஜெகதீசன், (1971), ஐரோப்பிய வரலாறு தமிழ்நாட்டுப்பாடநூல் நிறுவனம், சென்னை.

7. மருதன், (2000) *இரண்டாம் உலகப்போர்* , சென்னை.

8. ஜெகாதா, (2005) *ஹிட்லரின் யுத்தக்களங்கள்*, அறிவு நிலையம் பதிப்பகம் ,சென்னை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18



# டச்சுக்காரர்கால யாழ்ப்பாண நிர்வாகம் - ஒரு வரலாற்றுப் பார்வை

கலாநிதி க. அருந்தவராஜா
சிரேஸ்ட விரிவுரையாளர் தரம் I
வரலாற்றுத்துறை

## அறிமுகவுரை

போர்த்துக்கேயர்களின் இலங்கை வருகைக்கு முன்னதாக யாழ்ப்பாண இராச்சியம் சுதந்திரமானதொரு அரசாக இயங்கி வந்தது. அக்கால மன்னர்கள் தமக்கென ஒரு ஆட்சியமைப்பினையும் நிர்வாகத்தினையும் ஏற்படுத்திக்கொண்டு எவருக்கும் அடிபணியாதவொரு அரசினைத் தோற்றுவித்திருந்தனர். ஆனால் போர்த்துக்கேயர்கள் இலங்கையினைக் கைப்பற்றியதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தின் சுதந்திரம் பறிபோனதுடன் அவர்கள் தங்களுக்கேற்ற வகையிலான ஒரு நிர்வாகத்தினையும் ஏற்படுத்திக்கொண்டனர். தொடர்ந்து வந்த டச்சுக்காரர்களின் காலத்திலும் இத்தகையதொரு நிலைதான் காணப்பட்டது. டச்சுக்காரர்கள் யாழ்ப்பாணத்தில் முடியுமானவரை சிக்கனத்தினைக் கடைப்பிடித்துக்கொண்டதுடன் யாழ்ப்பாணத்தின் பொருளாதாரத்தினைச் சுரண்டுகின்ற வகையில் அதற்கேற்றபடியான ஆட்சியமைப்புக்கான கொள்கையினையும் வகுத்திருந்தனர். அதுமட்டுமன்றி இவர்கள் போர்த்துக்கேயர்களைப் போன்று யாழ்ப்பாணத்தரசர்கள் காலத்தில் காணப்பட்டுவந்த நிர்வாகமுறையினையும் வசதிக்கேற்ற வகையில் பயன்படுத்தியுமிருந்தனர்.

இக்கட்டுரையானது யாழ்ப்பாணத்தில் டச்சக்காரர்களினால் அறிமுகப்படுத்தப்பட்ட நிர்வாகமுறையின் தன்மைகளையும், இதனை அறிமுகப்படுத்தியபோது யாழ்ப்பாணத்தில் அவர்கள் எதிர்நோக்கிய பல்வேறு பிரச்சினைகள் பற்றியும், அவற்றினை அவர்கள் எவ்வாறு சவாலாக எடுத்துக் கொண்டு யாழ்ப்பாணத்தில் தங்களது நிர்வாகமுறையினை அறிமுகப்படுத்தியதன் மூலமாக எவ்வாறு வெற்றி அடைந்தார்கள் என்பது பற்றியும் ஆராய்வதனைப் பிரதான நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும் டச்சுக்காரர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகைக்கு முன்னதாக காணப்பட்ட யாழ்ப்பாணத்தரசர்காலம் மற்றும் போர்த்துக்கேயர்களது காலங்களில் நிலவிய நிர்வாகமுறைகளுடன் ஒப்பிட்டு ஆராய்ந்து ஆவணப்படுத்துவதனையும் இக்கட்டுரை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**யாழ்பாணத்தரசர்காலம்**

இலங்கையில் முதல் செல்வாக்குச் செலுத்திய அன்னியரான போர்த்துக்கேயர்கள் வந்த சமயத்தில் இலங்கையானது கோட்டை, கண்டி, யாழ்ப்பாணம் என்ற மூன்று நிர்வாகப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுக் காணப்பட்டது. இவை மூன்றும் தமக்கிடையிலே முரண்பட்டுக்கொண்டிருந்த அதேநேரத்தில் இவை சுதந்திர அரசுகளாகவும் இயங்கிவந்தன. இவற்றில் வடஇலங்கையில் காணப்பட்ட யாழ்ப்பாண இராச்சியமானது நல்லூரினைத் தலைநகராகக்கொண்டு சைவத் தமிழ் மன்னர்களால் நிர்வாகம் செய்யப்பட்டு வந்தது. அக்காலப்பகுதியில் யாழ்ப்பாணக்குடாநாடு, அதன் அயலில் காணப்பட்ட தீவுகள், மேற்கே மன்னார் தொடக்கம் கிழக்கே திருகோணமலை வரை யாழ்ப்பாண அரசு பரந்திருந்ததாக குவைறோஸ் சுவாமிகளது நூல் குறிப்பிடுகின்றது.

யாழ்ப்பாண இராச்சியத்தினை ஆட்சிசெய்த மன்னர்கள் சிங்கையாரியன் குலத்தினைச் சேர்ந்தவர்களாகக் காணப்பட்டனர். இதற்கு யாழ்ப்பாணத்தரசர்களின் காலத்தில் தோன்றிய இலக்கியங்களும் சாசனங்களும் தக்க சான்றுகளாக அமைகின்றன. இவ்வாறே சிங்கை என்பது சிங்கை நகர் என்பதனையும் ஆரியன் என்பது ஆரியச் சக்கரவர்த்தி என்ற பெயரின் சுருக்கமாகவும் காணப்பட்டன. ஆரியச்சக்கரவர்த்தியின் தலைமையில் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட படையெடுப்பின் விளைவாகவே யாழ்ப்பாணத்தில் ஆரியச்சக்கரவர்த்திகளது ஆட்சியேற்பட்டது. அதுமட்டுமன்றி யாழ்ப்பாண இராச்சியத்திற்குரிய நிர்வாகமுறையும் ஆரியச்சக்கரவர்த்திகளாலேயே உருவாக்கப்பட்டது. யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் இவர்களால் நிர்வாகத்தின் பொருட்டு அதிகாரிகளும் பலர் நியமிக்கப்பட்டிருந்தனர். இவை தொடர்பான குறிப்புக்கள் கைலாயமாலையில் காணப்படுகின்றன. மேலும் இவர்களது ஆட்சியமைப்பு முறையானது தந்தைக்குப் பின்னர் மகன் என்ற அடிப்படையில் அமைந்திருந்தது. அதிகாரிகள், முதலியார்கள், கண்காணி, தலையாரி போன்றவர்களது சேவைகள் யாழ்ப்பாணத்தின் நிர்வாக அமைப்பில் பயன்படுத்தப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காலப்பகுதியில் வன்னிப்பற்றுக்கள் சுயாட்சி அமைப்புக்களாகச் செயற்பட்டு வந்தன. ஆட்சியமைப்பினைச் சிறப்பான வகையில் கொண்டு நடாத்துகின்ற நோக்கில் நிலவரி, தலைவரி, அதிகாரிவரி போன்ற வரிகளும் விதிக்கப்பட்டன.

**போர்த்துக்கேயர்களின்காலம்**

16 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் ஏற்பட்ட மறுமலர்ச்சியின் காரணமாக அறிவுத்துறையில் மாற்றங்கள் பல ஏற்பட்டமையினைத் தொடர்ந்து சில ஐரோப்பிய நாடுகள் நாடுகாண் பயணங்களில் தங்களை ஈடுபடுத்திக்கொண்டன. இத்தகைய நடவடிக்கையின்போது ஏகாதிபத்திய நோக்குக்கொண்ட சில அரசுகள் ஆதிக்க விஸ்தரிப்புக்கான முயற்சிகளில் இறங்கிக்கொண்டன. இவ்வாறான முயற்சிகளில் ஈடுபட்டுக்கொண்ட நாடுகளில் போர்த்துக்கல், ஸ்பெயின், ஒல்லாந்து, இங்கிலாந்து மற்றும் பிரான்ஸ் போன்ற நாடுகள் குறிப்பிடத்தக்கன. இவை ஆசிய, ஆபிரிக்க, வடஅமெரிக்க, தென்அமெரிக்க மற்றும் அவுஸ்ரேலிய நாடுகளைத் தங்களது குடியேற்றங்களாகக் கொண்டிருந்ததுடன் கைப்பற்றப்பட்ட பிரதேசங்களில் காணப்பட்ட பௌதீக மற்றும் மனிதவளங்களை தங்களது நாட்டின் நலன்களுக்காக பயன்படுத்தியும் கொண்டன மேலும் இந்நாடுகள் தங்களது நிர்வாக முறைகளை கைப்பற்றிக்கொண்ட நாடுகளில் அறிமுகப்படுத்திக்கொண்டதன் மூலமாக அப்பகுதிகளின் மக்களைத் தங்களது விசுவாசிகளாக மாற்றிக்கொள்வதற்கான செயற்பாடுகளிலும் குறுகிய காலப்பகுதியில் ஈடுபட்டன. அந்தவகையில் 1505 இல் இலங்கையில் வந்திறங்கிய ஐரோப்பியர்களான போர்த்துக்கேயர்களின் வருகையுடன் இலங்கையின் அரசியல், பொருளாதாரப், பண்பாட்டுத்துறைகளில் மாற்றங்கள் பல ஏற்பட்டன.

கோட்டை அரசுடன் முதன் முதலாகத் தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்ட போர்த்துக்கேயர்கள் அங்கு நிலவிய அரசியல் சூழ்நிலையினைத் தங்களுக்குச் சாதகமான வகையில் பயன்படுத்திக்கொண்டதுடன் இறுதியில் அதனைத் தங்கள் வசப்படுத்திக் கொண்டதுடன் அடுத்த நிலையில் தங்களது கவனத்தினை யாழ்ப்பாணத்தின்மீது செலுத்தவும் ஆரம்பித்தனர். 1619 இல் பிலிப் டி. ஒலிவேறா(Filipe de Oliveira) என்பவன் மேற்கொண்ட யாழ்ப்பாணத்தின் மீதான தாக்குதலைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் போர்த்துக்கேயர்களிடம் சென்றதுடன் அது தன்னுடைய சுதந்திரத்தினையும் இழந்துகொண்டது. தொடர்ந்து இலங்கையின் ஏனைய பகுதிகளைப் போன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமக்கேற்றதொரு நிர்வாகமுறையினைப் போர்த்துக்கேயர்கள் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் புகுத்தினர்.

அந்தவகையில் போர்த்துக்கேயர்கள் யாழ்ப்பாணத்தில் சிறந்ததொரு நிர்வாகமுறையினை ஏற்படுத்தியிருந்தனர். அரசனுக்குப் பதிலாக கப்டன் மேஜர் (Captain Mayor) என்பவனை யாழ்ப்பாணத்தில் பொறுப்பாக நியமித்தனர். நிர்வாக நடவடிக்கைகளை நிறைவேற்றும் பொருட்டு திசாவை என்ற பதவியினைப் பயன்படுத்தினர். இவர்கள் கோட்டையில் உள்ள அதிகாரியின் பொறுப்பில் காணப்பட்டபோதும் நடைமுறையில் இவர்களுடைய தொடர்புகள் பெருமளவுக்கு நேரடியாக கோவாவுடனேயே காணப்பட்டன. தங்களின் வசதிக்கேற்ற வகையிலே யாழ்ப்பாணத்தின் பாரம்பரிய நிர்வாகமுறை காணப்பட்டதனால் தொடர்ந்தும் அம்முறையினையே போர்த்துக்கேயர்களும் பயன்படுத்தி வந்தனர். இம்முறைக்கு ஏற்கனவே யாழ்ப்பாணத்தவர்கள் பழக்கப்பட்டிருந்தமையினாலும் இம்முறையானது அதிகளவான வருவாயினைப் பெற்றுக்கொள்ளக்கூடியதுமாகப் போர்த்துக்கேயர்களுக்குக் காணப்பட்டதனால் தொடர்ந்தும் அவர்கள் இந்த முறையினையே நடைமுறைப்படுத்தினர். யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி நாடு முழுவதிலுமே இத்தகைய முறையினையே தொடர்ந்தும் அவர்கள் கையாண்டனர்.

வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி என்ற நிர்வாகப் பிரிவுகள் தொடர்ந்தும் கைக்கொள்ளப்பட்டன. தீவுப்பகுதிகள், மற்றும் வன்னிப் பகுதிகளிலும் இதே நடைமுறைகளே பின்பற்றப்பட்டன. யாழ்ப்பாணக் குடாநாடு பல்வேறு கோயிற்பற்றுக்களாகப் பிரிக்கப்பட்டன. சாதிக்கட்டுப்பாடுகள் நிர்வாகத்தில் பிரதான இடத்தினைப் பெற்றுக்கொண்டன. மக்கள் பற்றிய தகவல்கள், நில விடயங்கள், தொழில் முறைகள் போன்றவை தோம்புகளில் எழுதப்பட்டன. ஏற்கனவே காணப்பட்ட முதலியார், கண்காணி, தலையாரி போன்றவர்களின் சேவைகளும் பெறப்பட்டு வந்தன. வரிகளைச் சேகரிப்பதற்கு இறைசுவதோர் என்ற பதவியும் போர்த்துக்கேயர்களால் புதிதாக உருவாக்கப்பட்டிருந்தன. நீதி, நிர்வாக விடயங்களைப் பொறுத்தும் போர்த்துக்கேயர்கள் தங்களது நாட்டு முறைகளை அறிமுகப்படுத்திக் கொள்ளவில்லை. ஏற்கனவே இருந்து வந்த நீதி நிர்வாக முறைகளிலும் பெரிதளவான கட்டுப்பாடுகள் மற்றும் மாற்றங்கள் எவற்றினையும் அவர்கள் கொண்டுவரவுமில்லை. தேசவழமை என்ற சட்டநிர்வாக முறமையானது தொடர்ந்தும் இவர்களின் காலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைக்கொள்ளப்பட்டது. இருப்பினும் போர்த்துக்கேயர்களால் தங்களது வருமானத்தினைப் பெருக்கிக்கொள்கின்ற நோக்கில் இலங்கையில் பின்பற்றப்பட்ட நிலவரிக் கொள்கையானது ஏனைய பகுதிகளிலிருந்து வேறுபட்ட வகையில் அமைந்திருந்தது. இதுவே யாழ்ப்பாணத்தில் வருவாயினைப் பெற்றுக்கொடுத்த பிரதான ஊடகமாகவும் யாழ்ப்பாணத்தரசர்களது காலத்தில் மட்டுமன்றி தொடர்ந்துவந்த போர்த்துக்கேயர்களின் காலத்திலும் காணப்பட்டது.

**டச்சுக்காரர்களின் இலங்கை வருகை**

நெதர்லாந்தின் வடபகுதியில் காணப்பட்ட சிறிய அரசுகள் இணைந்து 1581 இல் ஐக்கிய மாகாணக் குடியரசினைத் தாபித்துக்கொண்டன. ஸ்பெயினிடமிருந்து சுதந்திரத்தினைப் பெற்றுக்கொண்ட டச்சுக்காரர்கள் நாளடைவில் கைத்தொழில் மற்றும் வர்த்தகத்தில் முன்னேற்றங் கண்டனர். பட்டேவியாவினைத் தங்களது கீழைத்தேய நாடுகளின் தலைமையகமாக ஆக்கிக் கொண்ட டச்சுக்காரர்கள் பின்னர் இலங்கையில் காணப்பட்ட கறுவாவினால் கவரப்பட்டனர். அதுமட்டுமன்றித் தென்னிந்தியத் துறைமுகங்களைத் தங்களது கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருப்பதன் மூலமாகத் தங்களின் ஆதிக்கச் செயற்பாடுகளை விஸ்தரித்துக் கொள்ளலாமென்ற எண்ணமும் டச்சுக்காரர்கள் இலங்கைமீது கவனத்தினைத் திருப்புவதற்கான காரணங்களிலொன்றாகும்.[17] 1602 இல் முதன் முதலாக இலங்கையுடன் தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்ட டச்சுக்காரர்களுக்கு கண்டி மன்னர்கள் அனுசரணை வழங்கினர். குறிப்பாக அக்காலப்பகுதியில் கண்டியரசன் இரண்டாம் இராஜசிங்கன் போர்த்துக்கேயர்களை இந்நாட்டிலிருந்து விரட்டுவதற்கு டச்சுக்காரர்களின் உள்நோக்கத்தினை ஆராய்வதனை விடுத்து அவர்களது உதவியினைப் பெற்றுக்கொள்வதிலேதான் அதிகளவுக்கு அக்கறை காட்டியிருந்தான்.

1652 இல் ஐரோப்பாவில் போர்த்துக்கேயர்களுக்கும் டச்சுக்காரர்களுக்குமிடையிலே சமாதானம் நீங்கிய நிலையில் இலங்கையில் முழுமையான அளவில் தங்களது ஆதிக்க விஸ்தரிப்பு நடவடிக்கையினை மேற்கொள்வதற்கு டச்சுக்காரர்களுக்குச் சந்தர்ப்பம் கிட்டியது. தொடர்ந்து இலங்கையின் கரையோரப் பகுதிகளை ஒவ்வொன்றாகக் கைப்பற்றி வந்த இவர்கள் 1658 இல் வான்கோன்ஸ் (Van Goens) தலைமையில் பெரிய படையொன்றுடன் புறப்பட்டு முதலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னாரையும் நான்கு நாட்களின் பின்பாக யாழ்ப்பாணத்தினையும் போர்த்துக்கேயர்களிடமிருந்து மீட்டுத் தங்களது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்தனர். மன்னாரில் விளைந்த முத்துக்களும் யாழ்ப்பாணத்தின் யானை வர்த்தகமும் டச்சுக்காரர்களை இலங்கையின் வடக்குநோக்கி நகர்வதற்கு அடிப்படையான காரணமாக இருந்திருக்குமென்பதில் இருவேறுபட்ட கருத்துக்களுக்கு இடமில்லை.

யாழ்ப்பாணத்தில் டச்சுக்காரர்களது நிர்வாக நடவடிக்கைகள்

போர்த்துக்கேயர்கள் இலங்கையில் கடைப்பிடித்து வந்தநிர்வாக முறையிலும் பார்க்கச் சற்றுத் தளர்வு கொண்டதாகவே டச்சுக்காரர்களது நிர்வாகமுறை காணப்பட்டது. டச்சுக்கார்களும்கூட சில விடையங்களைப் பொறுத்துப் பாரம்பரிய நிர்வாகமுறையினை இலங்கையில் ஏற்றுக்கொண்டவர்களாகவே காணப்பட்டனர். அந்தவகையில் ஆங்கிலேயர் காலம் வரையான இவர்களது காலத்தில் யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி இலங்கை முழுவதிலும் ஒரு சீரான நிர்வாகமுறையினை இவர்கள் ஏற்படுத்தியிருந்தனரெனலாம். கீழைத்தேய நாடுகளது அரசியல் மற்றும் வர்த்தகச் செயற்பாடுகளுக்கான தலைமையகமாகப் பட்டேவியாவினைக் கொண்டிருந்த டச்சுக்காரர்கள் பட்டேவிய அரசாங்கத்தின் நேரடியான நிர்வாகத்தின் கீழ் இலங்கையினைக் கொண்டுவந்தனர். அங்கிருந்த ஆள்பதியின் பணிப்புரைகளுக்கு அமைவாகவே இலங்கையிலிருந்த அதிகாரிகள் ஆட்சிபுரிந்தனர். மேலும் இலங்கையிலிருந்த ஆள்பதிக்கு ஆலோசனை வழங்குவதற்கு பொலிற்றிக்ராட் எனப்பட்ட ஒரு ஆலோசனைக் குழுவொன்று அமைக்கப்பட்டது.

டச்சுக்காரர்கள் தமது கட்டுப்பாட்டின்கீழ் காணப்பட்ட பகுதிகளைக் கொழும்பு, காலி, யாழ்ப்பாணக் கொமாண்டரிகளாகப் பிரிக்கப்பட்டு நிர்வாகச் செயற்பாடுகளை டச்சுக்காரர்கள் மேற்கொண்டனர். தற்காலத்தில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் எனப்படுபவை அக்காலப்பகுதியில் யாழ்ப்பாணக் கொமாண்டரிக்குள் அடங்கியிருந்தன. யாழ்ப்பாணம் மற்றும் காலிக் கொமாண்டரிகள் டச்சுக்காரர்களது பிரதான தளபதிகளாலும் ஆலோசனைச் சபையினாலும் நிர்வாகம் செய்யப்பட்டு வந்தன. நிர்வாகத்தில் உள்நாட்டு அதிகாரிகளுக்குப் பங்கு வழங்கப்பட்டிருந்தாலும் டச்சு அதிகாரிகளே உயர் பதவிகளில் அதிகாரம் பெற்றவர்களாகக் காணப்பட்டனர். குறிப்பாக உள்ளூர் மக்களுக்கெனத் திசாவைகள், கோறளைகள்(முதலியார்கள்), அத்துக்கோறளைகள்(உடையார்கள்),



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதானைகள் முதலான பதவிகள் ஒதுக்கப்பட்டிருந்தன. இப்பதவிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் புரட்டஸ்தாந்து சமயத்தினைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டுமென்பது டச்சுக்காரர்களது நோக்கமாகக் காணப்பட்டது. இலங்கையில் டச்சுக்காரர்களின் நிர்வாகத்தின் மையமாகக் காலி காணப்பட்டது. 1658 இல் கொழும்பு இவர்களால் கைப்பற்றப்பட்டமையினைத் தொடர்ந்து தமது நிலையான அலுவலகத்தினைக் கொழும்புக்கு மாற்றிக்கொண்டனர்.

யாழ்ப்பாணத்தில் டச்சுக்காரர்கள் கடைப்பிடித்த நிர்வாகச் செயற்பாடுகளை அறிந்துகொள்வதன் மூலமாகவே, அவர்கள் இப்பகுதியில் தங்களுடைய பொருளாதாரக் கொள்கையினை வகுத்து அதனை நடைமுறைப்படுத்திக் கொண்டதன் வாயிலாக யாழ்ப்பாணத்தின் வளங்களை எவ்வாறு சுரண்டிக்கொண்டனர் என்பதனை அறிந்து கொள்ளலாம். 1658 இன் பின்பாக யாழ்ப்பாணத்தினைத் தங்களது முழுமையான கட்டுப்பாட்டுக்குள் போர்த்துக்கேயர்களிடமிருந்து கைப்பற்றிக் கொண்ட டச்சுக்காரர்கள் பொதுவாகவே தென்னிலங்கையில் அவர்கள் ஏற்கனவே கடைப்பித்து வந்த **இயன்றளவு செலவினைக் குறைத்து கூடிய அளவுக்கு வருமானத்தினை அதிகரித்தலென்ற கொள்கையினை** யாழ்ப்பாணத்திலும் கைக்கொள்கின்ற நோக்கத்துடன் அதற்கேற்றவகையானதொரு நிர்வாகக்கொள்கையினை யாழ்ப்பாணம் உள்ளடங்கலான இலங்கையின் வடபகுதியிலும் பின்பற்றினரெனலாம். இவர்கள் கடைப்பிடித்த நிர்வாகக் கொள்கையானது போர்த்துக்கேயர்கள் கடைப்பிடித்த கொள்கையினைப் போன்று மோசமானதாக இல்லாதுவிட்டாலும் கூட இதன் மூலமாக யாழ்ப்பாணத்தின் வளங்கள் சுரண்டப்பட்டன என்பதே உண்மை.

1659 இல் போல்டேயர்ஸ் பாதிரியார் யாழ்ப்பாணப்பகுதிகளில் புரட்டஸ்தாந்து சமயத்தினைப் பரப்புகின்ற நோக்குடன் டச்சுக்காரர்களினால் நியமிக்கப்பட்டிருந்தார். இவர் தன்னுடைய நூலில் இலங்கையின் வடக்கு, கிழக்கு, வடமேற்குப் பகுதிகள் யாவும் தமிழர்களால் நிர்வாகம் செய்யப்பட்டதாகக் குறிப்பிடுகின்றார். அதுமட்டுமன்றி கண்டியில் சிறைவைக்கப்பட்டிருந்த றொபேர்ட்நொக்ஸ் 17 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியளவில் அங்கிருந்து தப்பிச்சென்றிருந்தான். பின்னர் அவன் எழுதிய நூலில் இடம்பெற்ற வரைபடமொன்றில் இலங்கையின் வடக்கு, கிழக்கு, வடமேற்குப் பகுதிகள் யாவும் யாழ்ப்பாண இராச்சியத்தின் நிர்வாகப் பிரிவுகளாகக் காட்டப்பட்டுள்ளன. போலடேயர்ஸ் சுவாமிகளின் கூற்றினை இவ் வரைபடமானது நிரூபிக்கின்ற வகையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்துள்ளது. மேலும் நொக்ஸ் சிறையிலிருந்து தப்பி அனுராதபுரத்தினைச் சென்றடைந்ததாகவும் பின்னர் அவன் அங்கு கண்ட மக்களுடன் பேசமுற்பட்டபோது ஏற்கனவே சிங்களம் தெரிந்திருந்த அவன், தன்னால் சிங்களத்தில் உரையாட முடியவில்லையெனவும் அனுராதபுரத்தில் வாழ்ந்தவர்கள் மலபார் மொழியாகிய தமிழ் மொழியினைப் பேசியதாகவும் கூறுகின்றார். இதிலிருந்து அவர் அங்குசென்ற அக்காலப்பகுதியான 17 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் அனுராதபுரத்தில் தமிழ் மக்கள் அதிகளவில் வாழ்ந்ததனையும் அவர்களது செல்வாக்கு அங்கு அதிகம் காணப்பட்டதனையும் அறிந்துகொள்ள முடிகின்றதென்ற கலாநிதி மு. குணசிங்கத்தின் கூற்றில் எந்தளவுக்கு உண்மையுள்ளதென்பது ஆராயப்படவேண்டிய விடயமாகும்.

இலங்கையில் டச்சுக்காரர்கள் பற்றிய ஆய்வினை மேற்கொண்ட பேராசிரியர் அரசரட்ணம் மேற்கூறப்பட்ட பிரதேசங்களை யாழ்ப்பாணக்கொமாண்டரி உள்ளடக்கியிருந்ததென்பதனை ஏற்றுக்கொண்டுள்ளார். எனவே பொதுவாக யாழ்ப்பாணக் கொமாண்டரியினது பரப்பானது புத்தளத்தின் வடக்கிலிருந்து வடமேற்காக வளைந்து சென்று வடகிழக்கு இலங்கையின் கடற்கரைப் பரப்புக்களையும் உள்ளடக்கியவாறு சென்று மட்டக்களப்புக் கோட்டையின் தெற்குவரை சென்றிருந்தது. அதேநேரத்தில் தமிழர்கள் அதிகளவில் வாழ்ந்த பகுதிகளிலொன்றான கிழக்குப் பகுதியில் காணப்பட்ட மட்டக்களப்புப் பகுதியும் தனியான தளபதியொருவரால் நிர்வகிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. இருப்பினும் சில நடைமுறைச் சிக்கல் காரணமாக இம்முறையானது சில வருடங்களில் கைவிடப்பட்டது. அந்தவகையில் போர்த்துக்கேயர்கள் மற்றும் அவர்களைத் தொடர்ந்து வந்த டச்சுக்காரர்கள் நாட்டினைவிட்டு அகலும்வரை யாழ்ப்பாணம் உட்பட இலங்கையின் தமிழ்பிரதேசங்கள் யாவும் தனியான நிர்வாக அலகாக நிர்வாகம் செய்யப்பட்டதனை பல்வேறு போர்த்துக்கேய மற்றும் டச்சுக்காரர்களது ஆவணங்களிலிருந்தும் இவர்கள் தொடர்பாக ஆய்வுகளை மேற்கொண்ட அறிஞர்கள் பலரதும் கருத்துக்களிலிருந்தும் அறிந்துகொள்ள முடிகின்றது.

டச்சுக்காரர்களின் காலத்தில் காணப்பட்ட மூன்று கொமாண்டரிகளில் யாழ்ப்பாணமுமொன்று. இதற்கு கொமாண்டர் எனப்பட்ட படைத்தலைவன் உயர் அதிகாரியாக விளங்கியிருந்தான். தனது கட்டுப்பாட்டின்கீழ் காணப்பட்ட பகுதிகளது நிர்வாகம் மற்றும் பாதுகாப்பு போன்றவற்றுக்கு அவனே பொறுப்பானவனாக விளங்கினான். யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டிருந்த படைகளுக்கெல்லாம்கூட அவனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்பானவனாக விளங்கியிருந்தான். அவன் ஆட்சிக்குழுவினது (Political Council) உறுப்பினராகவும் செயற்பட்டான். இவனது இத்தகைய நிலையானது ஆளுனருக்கு அடுத்த நிலையில் காணப்பட்டது. அவர் கூட்டங்களுக்குச் சமூகந்தர முடியாத சந்தர்ப்பங்களில் கூட்டத்துக்குத் தலைமை தாங்குகின்ற பொறுப்பு கொமாண்டரிடமே காணப்பட்டது.

கொமாண்டருக்கு அடுத்த நிலையில் திசாவை என்ற பதவி காணப்பட்டது. தரத்தில் உயர்ந்த நிலையில் காணப்பட்ட இப்பதவிகளுக்கு டச்சுக்காரர்கள்தான் பொறுப்பாக நியமிக்கப்பட்டனர். காரணம் அவர்கள் அந்தளவுக்கு சுதேச மக்களை நம்பவில்லையென்பதுடன் தென்னிந்தியாவுடன் இவர்கள் வைத்திருந்த தொடர்புகள் பற்றியும் தெரிந்திருந்தனர். கொமாண்டர் இல்லாத நேரங்களில் அவருடைய கடமைகளை இவரே மேற்கொள்ளுதல் வேண்டும். இலங்கையின் முழுமையான நிர்வாகத்துக்கும் கொழும்பே மையமாகக் காணப்பட்டபோதும் யாழ்ப்பாணம் மற்றும் காலிக்கொமாண்டரிகளின் நீதி, நிர்வாக அதிகாரமானது இவற்றிடம் அதிகரித்தே காணப்பட்டது. காலிக் கொமாண்டரியினைப் போன்று யாழ்ப்பாணமும் உயர் அதிகாரிகளைக் கொண்ட ஒரு பேரவையினால் நிர்வாகஞ் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### திசாவைகள்

உள்நாட்டு நிர்வாகத்தின் அச்சாணியாக திசாவைகள் காணப்பட்டன. ஆட்சியாளர்கள் சாதாரண மக்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்வதற்கான ஊடகமாகவும் இவை யாழ்ப்பாணத்தரசர்களின் காலங்களிலும் பின்வந்த போர்த்துக்கேயர்கள் மற்றும் டச்சுக்காரர்களது ஆட்சியிலும் காணப்பட்டன. ஆரம்பகாலத்தில் இலங்கையில் கொழும்பு, யாழ்ப்பாணம், மாத்தறை ஆகிய திசாவைகளே காணப்பட்டன. பின்னர் இம்முறை ஐரோப்பியர்களது ஆட்சியிலும் தொடர்ந்தது.

திசாவையின் பொறுப்புக்கள் மற்றும் அதிகாரங்கள் தொடர்பாக ஆளுனர் வான்கூன்சின் அறிக்கையில் பின்வரும் விடயங்கள் அடங்கியிருந்தன.

திசாவா அதிகாரி டச்சுக்கார்களது எல்லாவகையான சட்டங்களுக்கும் நடைமுறைகளுக்கும் சுதேச இராணுவத்தினது உருவாக்கத்துக்கும் முழுமையான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்பினைப் பெற்றவன். தன்னுடைய கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக ஆளுனர் மற்றும் ஆலோசனைச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கட்டளைகளின் பிரகாரம் அறிந்து கொள்ளுவார். சில வகையான குடியியல் வழக்குகளில் தீர்ப்பு வழங்குகின்ற அதிகாரம் இவ் அதிகாரிகளுக்கு உண்டு. யாழ்ப்பாணத்தில் நீதித்துறை சார்ந்த ஒருவரோடும் மக்களில் வயது முதிர்ந்த வயோதிபர்கள் இருவருடனும் ஆலோசித்த பின்னரே அவர் தீர்ப்புக்களை வழங்குதல் வேண்டும். அவ்வாறே மாதோட்டத்தில் அங்குள்ள அதிகாரிகள் மற்றும் பட்டங்கட்டிமார்கள் இருவரது ஆலோசனையின் பிரகாரமே தீர்ப்புக்கள் வழங்கப்பட்டன. தொலைவில் காணப்படுகின்ற ஊர்களாயின் தீர்ப்புக்களுக்கு மூத்த இரு வயோதிபர்களது ஆதரவினைப் பெற்றால் மட்டும் போதுமானது. இவையெல்லாம் 10 பர்தாக்களுக்கு குறைவானவை தொடர்பான குடியியல் வழக்குகளுக்குப் பொருந்தும். ஆனால் இத்தொகைக்கு அதிகமாகவுள்ள விடயங்களுக்கு கொமாண்டரினாலும் நீதித்துறையினாலும் மட்டுமே தீர்ப்புக்கள் வழங்கப்படும். உள்ளூர் சுதேச நிர்வாகிகளான முதலியார்கள், பட்டங்கட்டிமார்கள், பண்டாரப் பிள்ளைகள், தலையாரிகள், வன்னியர் போன்றவர்களை அழைத்து ஆணைகளை வழங்குவதற்கும் அவர்களுக்குத் தண்டனைகளை வழங்குவதற்கும் இவர் அதிகாரங்கொண்டிருந்தார்.

கிராமங்கள் தோறும் சென்று நிர்வாகத்தினை சீர்செய்வதற்கான நடவடிக்கையில் இறங்கினார். இவர்கள் மக்களிடம் நெருங்கிப் பழகவேண்டிய காரணத்தினால் அதற்கேற்ற வகையில் புத்திசாதுர்யமானவர்களாகவும் திறமையானவர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தனர். அப்பிரதேசங்களது மொழிகளிலும் தேர்ச்சி பெற்றவர்களைத் தேர்ந்தெடுப்பதிலும் டச்சு நிர்வாகம் அக்கறை கொண்டிருந்தது. மேலும் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்துக்கான நடவடிக்கைகளினை எடுப்பதிலும் இவர்களது பங்களிப்பு அதிகமானதே. மேலும் இவர்கள் விவசாய அபிவிருத்திக்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பர். 18 ஆம் நூற்றாண்டில் புதிய பயிர்களின் அறிமுகத்துக்கும் விருத்திக்கும் இத்தகைய அதிகாரிகளே காரணமாக அமைந்திருந்தனர். திசாவைகள் மக்கள் பற்றியும் கிராமங்கள், சேரிகள், நிலபுலங்கள் தொடர்பாகவும் பதிவேடுகளை வைத்திருத்தல் வேண்டும். நாட்டுமக்களது கல்வி வளர்ச்சிக்காகப் பாடுபடுதல் இவர்களது கடமைகளிலொன்றாகும். திசாவை எனப்பட்ட அதிகாரிகள் லஸ்கரின்கள் எனப்பட்ட தங்களது இராணுவத்தினைப் பராமரிப்பதற்கு உரிய பொறுப்பினையும் பெற்றுக்கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளுனர் உட்பட பல்வேறு அதிகாரிகளும் பட்டேவியா தலைமையகத்தினாலேயே நிர்வாகம் செய்யப்பட்டனர். இவர்களுடைய நிர்வாகத்தின் அதிகார மட்டமானது எழுதுவினைஞர்களிலிருந்து சிவில் அதிகாரிகளை உள்ளடக்கிய வகையில் அமைந்திருந்தது. கொழும்பு தலைமையகமாகவும் காலி, யாழ்ப்பாணம் போன்றன ஒவ்வொரு தளபதியின் கீழும் விடப்பட்டு நிர்வாகம் நடைபெற்றது. இவர்களின் கீழ் நியமிக்கப்பட்டிருந்த உதவித் திசாவைமார்கள் நிதி மற்றும் நிர்வாகத்துக்குப் பொறுப்பானவர்களாகக் காணப்பட்டனர். கேந்திரமுக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளுக்கு ஓவர்கூட் (Oppehoofed) எனப்பட்ட அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். இவரது பணிகள் திசாவைக்கு அடுத்த நிலையில் காணப்பட்ட உத்தியோகஸ்தர்களது பணியினை ஒத்தவகையில் அமைந்திருந்தன. மேலும் டச்சு நிர்வாகத்தில் உயர்மட்ட அதிகாரிகளும் மூன்று திசாவைமார்களும் கொழும்பு, யாழ்ப்பாணம், காலி, கற்பிட்டி மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு போன்ற பகுதிகளுக்கு இந்த நிர்வாகியினாலேயே நியமிக்கப்பட்டனர். அனுபவசாலியாகக் காணப்பட்ட இவர் சிறிய சபையொன்றின் உதவியுடன் தன்னுடைய பணிகளை மேற்கொண்டுவந்தமை குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாண இராச்சியத்தின் நிர்வாக நடவடிக்கைகளின் பொருட்டு டச்சுக்காரர்கள் பெருமளவுக்கு ஏற்கனவே குறிப்பிட்டது போன்று யாழ்ப்பாண அரசர்களின் காலத்திலும் பின்வந்த போர்த்துக்கேயர்களின் காலங்களிலும் பின்பற்றப்பட்டுவந்த நிர்வாகமுறையினைத் தொடர்ந்து பின்பற்றினர். டச்சுக்காரர்களைப் பொறுத்தவரை அவர்களுக்கு சுதேச நிர்வாகத்தில் அனுபவம் கொண்டவர்களது தேவையும் அனுபவமும் மொழியறிவும் அவசியமாகக் காணப்பட்டது. செலவீனங்களைக் குறைத்துக்கொள்வதும் அவர்களது இலக்காகக் காணப்பட்டதனால் குறைந்த கூலியில் இலங்கையர்களைப் பெற்றுக்கொள்வதற்கான தேவையும் அப்போது அவர்களுக்கிருந்தது. கீழ்மட்டத்திலான நிர்வாகச் சேவைகளுக்கு முதலியார்கள், விதானையாளர்களின் சேவைகள் பெறப்பட்டன. இவர்களின் சேவைகள் கிராம மற்றும் நகரப்பகுதிகளுக்கு அவசியப்பட்டன.

### அதிகாரிகள்

அதிகாரி எனப்பட்ட பதவியானது யாழ்ப்பாணத்தரசர்களது காலத்திலும் தொடர்ந்து வந்த போர்த்துக்கேயர்களது காலங்களிலும் பின்னர் டச்சுக்காரர்களது காலத்திலும் தொடர்ந்ததனை அறிந்துகொள்ள முடிகின்றது. யாழ்ப்பாணத்தரசர்களது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்திலும் போர்த்துக்கேயர்களது காலத்திலும் இவர்கள் மாகாணங்களை நிர்வாகம் செய்வதற்காக நியமிக்கப்பட்டிருந்தனர். சம்பளம் இவர்கள் பெறுவதில்லை. பதிலுக்கு மக்களே இவர்களுக்கு வேண்டியவற்றினை அளித்துவந்தனர். காலப்போக்கில் அதிகாரிகளது சம்பளத்துக்காக மக்கள் வரி செலுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. வெள்ளாளர், தனக்காரர், சண்டாளர் போன்ற சாதியினரே பெருமளவுக்கு இந்த வரியினைச் செலுத்தினர். இவர்கள் இருவகைப்பட்ட நிலையில் காணப்பட்டனர். ஒரு பிரிவினர் பிரதேசவாரியாக நிர்வாகத்தில் தலைமைப் பதவியினையும் பொறுப்புக்களையும் பெற்றிருந்தனர். மற்றைய பிரிவினர்கள் நளவர், தச்சர், வண்ணார், கைக்கோளர், கரையார் போன்ற பிரிவினர்களது தலைவர்களாகக் காணப்பட்டனர். வரிகள் மற்றும் சேவைகளை அரசாங்கத்துக்காக இவர்கள் பெற்றுக்கொடுத்தனர்.

முதலியார்கள்

யாழ்ப்பாண அரசர்களின் காலத்தில் இவர்கள் செல்வாக்குப் பெற்றவர்களாகக் காணப்பட்டனர். அரசனின் விசுவாசிகளாகவும் நிர்வாகத்தில் அனுபவங்கொண்டவர்களாகவும் இவர்கள் காணப்பட்டனர். அரசர்கள் முடிவுகள் பலவற்றினை இவர்களுடன் ஆலோசனை நடத்தியதன் பின்பாகவே எடுத்துக்கொள்ளுவார்கள். படைநிர்வாகம், பொதுநிர்வாகம், நீதிபரிபாலனம் போன்றவற்றுடன் தொடர்புபட்டவராகக் காணப்பட்டனர். தென்னிந்தியச் செல்வாக்கினால் ஏற்பட்ட விளைவுகளிலொன்றாகவும்கூட இதனைக் குறிப்பிடலாம். இத்தகைய செல்வாக்குடன் இருந்த இவர்களை ஒடுக்குவதற்கான முயற்சிகளில் போர்த்துக்கேயர்களும் டச்சுக்காரர்களும் ஈடுபட்டபோதும் இறுதியில் ஆட்சிக்குத் தேவையான ஆதரவினை அவர்களிடமிருந்து பெறவேண்டியவர்களாகக் காணப்பட்டனர். டச்சுக்காரர்கள் யாழ்ப்பாணத்தினைக் கைப்பற்றியதும் மக்களுக்குத் தேவையான நீதிமன்றங்களை நிறுவினர். இதில் முதலியார்கள் பலரையும் அங்கத்தவர்களாக நியமித்துக்கொண்டார். தங்களது பொறுப்பில் காணப்படுகின்ற மாகாணங்கள் பற்றிய விபரங்களை பற்றிய அறிக்கைகளைக் காலத்துக்குக் காலம் டச்சு அரசாங்கத்துக்கு இவரகள் சமர்ப்பித்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இறைசுவதோர்**

இந்தப் பதவிப்பெயரானது போர்த்துக்கேயர்களது காலப்பகுதியிலிருந்து வழக்கத்திலிருந்து வந்ததொன்றாகக் காணப்படுகின்றது. அரசாங்கத்தினுடைய வரிகளைச் சேகரிக்கின்ற பொறுப்பு இவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. யாழ்ப்பாணத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த குடும்பங்களைச் சேர்ந்தவர்களே இப்பதவியினை அலங்கரித்துக்கொண்டனர். 17 ஆம் நூற்றாண்டின் முடிவில் இப்பதவியிலிருந்தவர்கள் பலர் ஒரே குடும்பத்தினைச் சேர்ந்தவர்களாகக் காணப்பட்டனர். இவர்கள் நிர்வாகத்திலுள்ள பதவிகளைத் தங்களது உறவினர்களுக்குப் பெற்றுக்கொடுத்தார்களென்ற குற்றச்சாட்டுக்கள் இவர்கள்மீது முன்வைக்கப்படுகின்றன. இவர்கள் அரசாங்கத்துக்குரிய தலைவரி, நிலவரி, தொழில்வரி, அதிகாரிவரி போன்றவற்றினை வசூலித்துக்கொடுத்ததுடன் அரசாங்கத்துக்குச் செய்ய வேண்டிய ஊதியம் என்ற சேவையையும் செய்து வந்தனர். இவர்களுக்கு பண்டாரப்பிள்ளைகள், உடையார். தலையாரி போன்றவர்கள் கிராமங்களில் வரிகளைச் சேகரிப்பதற்கு உதவிகள் புரிந்தனர். மேலும் இறைசுவதோர், பண்டாரப்பிள்ளைகள் போன்றவர்களுக்கு மக்களிடமிருந்து பெறப்படுகின்ற வரிகளின் மூலமாகவே ஊதியம் வழங்கப்பட்டது.

**உடையார்**

நீண்டகாலமாக உடையார் என்ற சொல் இலங்கையில் புழக்கத்திலிருந்து வந்துள்ளது. யாழ்ப்பாணத்தினைப் பொறுத்தவரை இவர்களது நிலையானது கிராமத்தலைவரின் நிலையினை ஒத்ததாகக் காணப்பட்டது. இறைசுவதோர்களின் கீழ் இவர்கள் கடமையாற்றினர். இவர்கள் மக்களிடமிருந்து பெற்றுக்கொள்கின்ற வரிகளுக்குப் பதிலாக பட்டோலைகளை எழுதி வழங்கவேண்டும். பின்னர் இதனை இறைசுவதோரிடம் ஒப்படைத்துவிட்டு பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்வார். ஊர்களில் இடம்பெறுகின்ற களவு, கொள்ளை போன்றவற்றினைக் கட்டுப்படுத்துவதுடன் நாட்டில் அமைதியினையும் நிலைநாட்டுகின்ற பொறுப்பினையும் கொண்டிருந்தார்.

**தலையாரி**

ஊர்களின் தலைமைக்காரரைத் தலையாரியென அழைப்பது பொதுவான வழக்கமாக முற்பட்ட காலங்களில் காணப்பட்டது. மேலும் ஊர்மட்டத்திலுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைக்காரர்களின் மூலமாகவே அரசாங்க அதிகாரிகள் மக்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்வதென்பது வழக்கமானதாகக் காணப்பட்டது. வரிகள் சேகரித்தல், ஊரினைக் காத்தல் ஆகிய கடமைகள் அவருக்கே உரியன. சம்பளம் கொடுக்கப்படுவதில்லை. மாறாக வயற்காணிகள் அவர்களுக்கு வழங்கப்பட்டன.

**வன்னியனார்**

வன்னிப்பற்றுக்கள் எனப்பட்ட குறுநிலப் பிரிவுகளுக்கு இவர்கள் பொறுப்பாகக் காணப்பட்டனர். யாழ்ப்பாண இராச்சியத்துக்குள் பனங்காமம், கரிகட்டுமூலை, கருநாவல்பற்று, மேல்பற்று, முள்ளியவளை, தென்னைமரவடி, செட்டிகுளம் போன்ற வன்னிப்பிரிவுகள் யாழ்ப்பாண இராச்சியத்துக்குள் அடங்கியிருந்தன. இவை பெருமளவுக்குச் சுயாட்சி அமைப்புக்களாகக் காணப்பட்டன. மேலும் தங்களது பகுதிகளில் இவர்கள் சிற்றரசர்கள் போன்று செயற்பட்டனர். தங்களது பகுதிகளில் சுயாட்சியதிகாரங்களைக் கொண்டவர்களாகக் காணப்பட்டனர். யாழ்ப்பாண இராச்சியத்தில் வரிசை கூடுகின்ற சந்தர்ப்பங்களில் இவர்கள் கலந்துகொள்வார்கள். டச்சுக்காரர்களின் நிர்வாகத்திலும் இவை தொடர்ந்தன. வரிசை எனப்படுவது நிர்வாகப் பதவிகளில் அமைந்திருந்த தலைமைக்காரர்கள் ஆண்டுதோறும் இராசதானியில் கூடுவதனைக் குறிக்கும்.

டச்சுக்காரர்களது நிர்வாகத்தில் ஏற்கனவே இருந்துவந்ததனைப்போன்று ஊதியமின்றி ஊழியம் செய்ய வேண்டுமென்ற நிலமை தொடர்ந்தது. டச்சுக்காரர்களின் ஆவணங்களில் இவை தொடர்பான குறிப்புக்கள் காணப்படுகின்றன. வெள்ளாளர், மடப்பள்ளி எனும் சாதியரில் ஒவ்வொருவரும் மாதம் ஒரு நாளைக்குச் சேவை புரிதல் வேண்டும். வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, தீவுகள் ஆகிய பற்றுக்களிலிருந்து தினமும் 500பேர் வரையானவர்கள் வேலைசெய்ய வருகின்றனர். அவர்களில் 120 பேர் ஊர்காவற்றுறையிலுள்ள தென்னந்தோட்டத்துக்கும் 150பேர் பருத்தித்துறையிலே அமைக்கப்படுகின்ற இராணுவத்தளத்திலும் பணியாற்றுகின்றனர். ஏனையவர்கள் இதர வேலைகளில் ஈடுபடுவதாக ஆவணங்களில் கூறப்படுகின்றது. நளவர், பள்ளர், தச்சர், கம்மாளரும் சேவையில் ஈடுபடுத்தப்படுவதாகக் குறிப்புக்கள் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விதானைமார்கள்**

கிராமங்கள் ஒவ்வொன்றிலும் விதானை எனப்பட்ட அதிகாரிகள் முக்கியத்துவம் பெற்றிருந்தனர். இவர் கிராம அடிப்படையில் நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்பவராகக் காணப்பட்டார். கிராமங்களிலிருந்து கிடைக்கப்பெற்ற வருவாயினை அரசாங்கத்துக்கு அனுப்பி வைப்பார். இலவச அடிப்படையில் அரசுக்குச் செய்ய வேண்டிய சேவைகளையும் கிராம மட்டத்தில் பெற்று அதனை அரசாங்கத்துக்கு வழங்கவேண்டிய கடப்பாடு உடையவர். தங்களது பகுதியின் திசாவையின் மேற்பார்வையிலேதான் இவர் செயற்பட்டு வந்தார்.

**நிர்வாகம் வகுத்த பொருளாதாரக்கொள்கை**

டச்சுக்காரர்கள் யாழ்ப்பாணத்தில் கைக்கொண்ட நிர்வாக நடவடிக்கையில் யாழ்ப்பாணத்தின் பொருளாதார வளங்களும் சுரண்டப்பட்டன. யாழ்ப்பாணத்தவர்களது தொழில்களின்மீது பெருமளவிலான வரிகளை விதித்தமை ஒருபுறமிருக்க மறுபுறம் அவர்களது வருமானத்தினைத் தடைசெய்து சில தொழில்களை யாழ்ப்பாணத்தவர்களிடமிருந்து பறித்து அவற்றில் தனியுரிமை பெற்று அவற்றினைத் தாமே மேற்கொண்டனர். அதற்கேற்றவகையில் யாழ்ப்பாணத்தில் அவர்கள் வகுத்த நிர்வாகக் கொள்கையானது அமைந்திருந்தது. எடுத்துக்காட்டாக முத்துக்குளித்தல் மற்றும் யானை வர்த்தகத்தினைக் குறிப்பிடலாம். மேலும் அக்காலப்பகுதியில் யாழ்ப்பாணத்திலிருந்து பலர் வன்னிப்பகுதிகளுக்குத் தங்களது மாடுகளுடன் விவசாயத்துக்குச் சென்று வருவது வழக்கமாகக் காணப்பட்டது. பயிர்கள் அறுவடை செய்தமையின் பின்பாக அவர்கள் ஊர் திரும்புகின்றபோது சென்று வந்தமைக்காக டச்சுக்காரர்களுக்கு ஆனையிறவு போன்ற சில இடங்களில் பணம் செலுத்தி வருதல்வேண்டும். இவற்றின் மூலமாக டச்சுக்காரர்களுக்கு பெருமளவிலான வருவாய் சேர்ந்துகொண்டது.

தமிழர்களின் பகுதிகளில் உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்களுக்கு அதிக வரியினை அறவிட்டுவந்த டச்சுக்காரர்கள் தங்களின் வருமானத்தினை மேலும் பெருக்குவதற்கு உள்ளூர் உத்தியோகஸ்தர்களின் உதவியுடன் தோம்பினைப் புதுப்பித்து பல்வேறு உற்பத்திப்பொருட்களுக்கும் ஆட்களுக்கும் வரிகளை அறவிடுகின்ற முறையினை நடைமுறைப்படுத்தினர். அந்தவகையில் காணிமுகாமைத்தவமென்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டச்சுக்காரர்களின் நிர்வாகக்கொள்கையின் முக்கிய அம்சங்களிலொன்றாக அமைந்திருந்தது. 18 ஆம் நூற்றாண்டிலே இதுவே இவர்களது அரசகொள்கையின் பிரதான அம்சமாகக் காணப்பட்டதுடன் அவர்களுக்குத் தொடர்ச்சியான பிரச்சினையினைக் கொடுத்துவந்த விடயமாகவும் காணப்பட்டது. தோம்பு அல்லது காணிப்பதிவு அட்டவணையென்பது மக்களின் தொகையினையும் காணிகளையும் குறித்த பதிவு அட்டவணையாகும். இதன்மூலமாக மக்களது காணிகள், அவை அமைந்துள்ள பகுதிகள் என்பவை தனித்தனியாகப் பதியப்பட்டு ஒரே பார்வையில் கம்பனி சொத்துக்களையும் பரப்பினையும் அறிந்துகொள்ளக்கூடியதாக உள்ளது.

மேலும் அங்கு எத்தனைபேர்கள் வசிக்கின்றனர். கம்பனிக்கு அவர்கள் ஆற்றவேண்டிய சேவைகள், அதற்கு அவர்களுக்கான பராமரிப்புச்செலவுகள், சலுகைகள், குடியிருப்பாளர்கள் தங்களது தோட்டங்களுக்கும் வயல்களுக்கும் கட்டவேண்டிய தொகை, பயிர்ச்செய்கைக்கு உட்படாதிருக்கும் காணிகள், இவற்றினை குடியிருப்பாளர்கள் உடமையாகக் கொண்டுள்ள முறைகள், இதன்படி செலுத்தவேண்டிய தொகையினை அறவிடுதல் போன்றவற்றினை மேலும் இது எடுத்துக்கூறுகின்றது. இவற்றின்மூலமாக டச்சுக்காரர்கள் தங்களது வருமானத்தினை அதிகரிப்பதில் இலங்கையில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் காட்டிவந்த அக்கறையினை அறிந்துகொள்ள முடிகின்றது. யாழ்ப்பாணத்தில் தோம்புமுறையில் பதிவுகள் மேற்கொள்வதற்கான முயற்சிகள் 1674 இல் தான் முதலில் ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் சில கிராமங்களில் இதற்கான எதிர்ப்புக்கள் காணப்பட்டபோதும் 1697 இல் யாழ்ப்பாணம் முழுவதும் தோம்புப் பதிவு முறையானது வெற்றிகரமானமுறையில் நடைமுறைப்படுத்தப்பட்டதெனலாம். 15 வருடங்களுக்கொருமுறை இது மீளாய்வு செய்யப்பட்டுத் தேவைக்கேற்றவகையில் இவற்றில் மாற்றங்கள் செய்யப்பட்டன. குடியானவர்கள் காணிகளை வாங்கியதும் அவை அவர்களுக்கே பூரணமான உரிமையாகும் என்ற கொள்கையினையே டச்சுக்காரர்கள் தமது காணி விற்பனைகள் சம்மந்தமாகக் கடைப்பிடித்தனர். காணிகளைப் பலர் வாங்க விரும்பியதால் காணிகளின் விலையும் காலப்போக்கில் அதிகரித்தது வந்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிறைவுரை

போர்த்துக்கேயர்களிடமிருந்து ஆட்சியினைக் கைப்பற்றிக்கொண்ட டச்சுக்காரர்கள் தங்களது நாட்டில் காணப்பட்ட நிர்வாகமுறையினை அறிமுகப்படுத்தவில்லை. அவர்கள் யாழ்ப்பாணத்தவர்களுக்கு பழக்கப்பட்டமுறை ஏற்கனவே காணப்பட்டதனால் அதுவே அவர்களுக்கு இலகுவான மற்றும் வருவாயினைப் பிரச்சினை இல்லாமல் கொடுக்கக்கூடியதொரு துறையாகவும் காணப்பட்டதனால் தொடர்ந்தும் அம்முறையினையே பின்பற்றினர். யாழ்ப்பாணம் ஏனைய கொமாண்டரிகளில் காணப்பட்டதனைப் போன்று பல்வேறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு உள்ளூர் அதிகாரிகளின் உதவியுடன் நிர்வாகம் மேற்கொள்ளப்பட்டது. இருந்தபோதும் உயர் பதவிகளில் அவர்கள் டச்சுக்காரர்களையே தேர்வு செய்திருந்தனர். எது எவ்வாறாயினும் யாழ்ப்பாணத்தின் மனித வளமாயினும்சரி அல்லது பொருளாதார வளமாயினும்சரி சுரண்டுகின்ற தன்மைகள் கொண்டதாகவே யாழ்ப்பாணத்தின்மீது டச்சுக்காரர்கள் வகுத்த கொள்கை அமைந்தது.

## உசாத்துணை

தமிழ்

1. அரசரட்ணம். சி, (1958), "இலங்கையில் ஒல்லாந்தர் ஆட்சியின் வளர்ச்சியும் வீழ்ச்சியும்", *இளங்கதிர்,* தமிழ்ச் சங்கம் இலங்கைப் பல்கலைக்கழகம், கொழும்பு.

2. இராசநாயகம், செ., (1933) யாழ்ப்பாணச் சரித்திரம் யாழ்ப்பாணம்.

3. இளையதம்பி, மு., (1969) *இலங்கைச் சரித்திரமும் ஐரோப்பியச் சரித்திரமும்* , சிறிலங்கா புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

4. கணபதிப்பிள்ளை, க., "யாழ்ப்பாணத்தில் ஒல்லாந்தர்", *யாழ்ப்பாணம் : மொழியும் வாழ்வும்,* கோகுலம் வெளியீடு, யாழ்ப்பாணம்,

5. கிருஸ்ணராஜா, செ., (2000) *இலங்கைவரலாறு,* பாகம்.02, பிறைநிலா வெளியீடு, யாழ்ப்பாணம் .

6. குணசிங்கம். மு., (2008) *இலங்கையில் தமிழர்* எம்.வி. வெளியீடு, சிட்னி.

7. குணராசா, க., (2001) *யாழ்ப்பாண வைபவமாலை – ஒரு மீள்வாசிப்பு.* கமலம் பதிப்பகம், யாழ்ப்பாணம்.

8. குணராசா, க. கமலா,கு., (2008) *இலங்கைச்சுருக்கவரலாறு,* கமலம் பதிப்பகம், யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. சபாநாதன், குல., (1953) *யாழ்ப்பாண வைபவமாலை* , கொழும்பு.

10. பத்மநாதன, சி., *யாழ்ப்பாண இராச்சியம்.*

11. பத்மநாதன், சி., (2001) *இலங்கைத் தேசவழமைகளும் சமூக வழமைகளும்,* குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

12. பத்மநாதன், சி., (2011) *யாழ்ப்பாண இராச்சியம்* குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

13. ஜம்புலிங்கம்பிள்ளை, சா. வே., (1939 ) (ப.ஆ) *கைலாயமாலை* சென்னை.

**English**

1. Arasaratnam, S., (1958) "Dutch Sovereignty in Ceylon A Historical Survey of its Problems in Ceylon", *Journal of Historical and Social studies,* University of Peradeniya, Peradeniya.

2. Araaratnam, S., (1958) *The Dutch Power in Ceylon 1658 – 1687,* New Delhi.

3. Brohier, R.L., (1984) *Changing Face of Colombo,* Lake House Investments Ltd, Colombo.

4. Gunasingam, M., (2005) *Primay Sources for History of the Sri Lankan Tamils*, M.V. Publications, Sydney.

5. Jeffries, Charles., (1962) *Ceylon - The Path to Independence*, Pall mall Press, London.

6. Perera,S.G., (1948) *History of Ceylon, Lake house* ,Colombo.

7. Pieris,P.E., (1995) *Ceylon and the Hollanders (1658 – 1796),* New Delhi, Navrang.

8. Pieters, Sophia., (translated), (1908) *Instructions from the Governor General and Council of India to the Governor of Ceylong(1656 – 1665)* Colombo.

9. Raven – Hart,R., (1981) *Ceylon – History in Stone* , Lake House Investments Ltd, Colombo.

10. Raven – Hart.R., *Ceylon – History in Stone.*

11. Queyroz. Fernao de., (1930) *The Temporal and Spiritual Conquest of Ceylon*, trans, Perera.S.G, Colombo.

12. Silva. K.M.de., (1981) *A History of Sri Lanka*: C. Hurst & Co, London.

13. Silva, K.M.de., & Beumer, W.G.M., (1988) *Illustrations and Views of Dutch Ceylon (1602 – 1796)* , Serendib Publications, London.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14.Silva, K.M.de., & Beumer, W.G.M., *Illustrations and Views of Dutch Ceylon (1602 – 1796).*

15.Silva,K.M.de.,(1981) *A History of Sri Lanka* (Oxford University Press, Delhi.

16.Stein Van Gollenlsse, Julius., (1924) *Selections from the Dutch records of the government of Sri Lanka,* (Trans Arasaratnam, S.,), Dept of National Arch, Ceylon.

17.Tambiah,H.W., (2000) *The laws and Customs of the Tamil of Indian* Women's Education and research Centre, Colombo.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்றுக்கழகம் ஏற்பாடு செய்த கல்விச்சுற்றுலாவின் போது........................







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வரலாற்றுக்கழகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Mrs. Ushanthini

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அச்சுப்பதிப்பு : யாழில் கொழும்பு பிறிண்டேர்ஸ் தொ.பே : 0771974875

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org